Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.

வெளியீடு : 21-1-2012 Issued : 21-1-2012

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, செப்டம்பர் 12, 2011—தொகுதி 15—எண் 2**

**Monday the 12th September 2011—Volume 15—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

**12–9–2011**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 3) | 377-412 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| பரமக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் | 412-433 |
| *முனைவர் செ.கு. தமிழரசன் | 413-415,430 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 415-418 |
| திரு. அ. கணேஷ்குமார் | 419 |
| திரு. சு. குணசேகரன் | 419-421 |
| *திரு. அ. சவுந்தரராசன் | 421-423 |
| *திரு. ச. இராமச்சந்திரன் | 423-425 |
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 425-429,432 |
| செல்வி கே. பாலபாரதி | 431-432 |
| திரு. ரா. சரத்குமார் | 432-433 |
| **3. தகவல் கோரல்—** | |
| நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இலவச வேட்டி, சேலை தயாரித்து அளிக்கத் தேவையான நூல் மற்றும் முன்பணம் வழங்குதல் | 433-436, 438 |
| முனைவர் செ.கு. தமிழரசன் | 433-434 |
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 434-436 |
| திரு. எம். ஆறுமுகம் | 438 |

பக்கங்கள்

**4. விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்ட அறிக்கைகளின் நகல்களை உறுப்பினர்களுக்கு வழங்குதல்—** 437

*திரு. அ. சவுந்தரராசன் 437

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 437

**5. அறிக்கை அளித்தல்—**

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு 438

**6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்ற (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2011 439

மாண்புமிகு திரு. கே ஏ. செங்கோட்டையன் 439

**7. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—**

(அ) சத்துணவு, அங்கன்வாடி மையங்களை மேம்படுத்துதல் மற்றும் காலிப் பஉணியிடங்களை நிரப்புதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை 440-442

(ஆ) திரு. சிங்காரவேலர், திரு. ஜீவரத்தினம் ஆகியோருக்கு மணிமண்டபம் மற்றும் திரு. சிதம்பரநாதன் அவர்களுக்கு சிலை அமைத்தல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை 442-445

**8. விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அளித்த அறிக்கைகளுக்கு நன்றி தெரிவித்தல்** 445-455

முனைவர் செ.கு. தமிழரசன் 445-446

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 446

*திருமதி எஸ். விஜயதரணி 447

திரு. எம். ஆறுமுகம் 447-448





பக்கங்கள்

**8. விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அளித்த அறிக்கைகளுக்கு நன்றி தெரிவித்தல்**–*தொடர்ச்சி*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 449

*திரு. அ. சவுந்தரராசன் 449-451

*திரு. ச. இராமச்சந்திரன் 451-452

*மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால் 452

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால் 453

*மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம் 453

**9. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்**–*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 7–மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) தொடர்ச்சி 455-497

(இ) கோரிக்கை எண் 8–பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி 455-472

*மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால் 472-495

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் 495

பக்கங்கள்

**9. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்**–தொடர்ச்சி

(ஈ) கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை — 497-577

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய் — 497-498, 508, 525, 547-548, 549, 551, 554-555, 561-562, 571, 573

திரு. ஆர். சுந்தர்ராஜன் — 498-499, 508-514

*திரு. கடம்பூர் ராஜு — 514-523

திரு. ரா. சரத்குமார் — 523-527

திரு. ம. கலை அரசு — 501, 528-533

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி — 529

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் — 530

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா — 531

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் — 531-532, 574-575

*திரு. கே. தங்கவேல் — 505, 534-537

*திரு. வே. குணசீலன் — 537-544

*திரு. எஸ்.பி. முத்துக்குமரன் — 499-500, 545-550

செல்வி கே. பாலபாரதி — 548, 576

திரு. சு. குணசேகரன் — 504, 550-551

*டாக்டர் த. ஹரிதாஸ் — 551-557



பக்கங்கள்

**9. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்**–தொடர்ச்சி

(ஈ) கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை — 497-577

*திரு. து. முருகேசன் — 503, 557-568

*திரு. எஸ். ஜாண் ஜேக்கப் — 502-503, 568-571

*முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா — 571-575

*திருமதி எஸ். விஜயதரணி — 507,508, 575-576

*டாக்டர் நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் — 576-577

**10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 578

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆவணி 26

## 2011 செப்டம்பர் 12, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** அவர்கள் தலைமையில் முற்பகல் 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துஉண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு."*

*தன் உடலுக்கு ஏற்காத உணவை விலக்கி, அளவோடு உண்ண வேண்டும். அவ்வாறு பசி அறிந்து அளவோடு உண்டு வாழ்பவருடைய உடலில் உயிர் வாழ்வதற்குத் தடையாக இருக்கும் நோய்கள் உண்டாகாது.*

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 3)@

**1—**

### மின் கம்பிகளை ஒழுங்குபடுத்துதல்

**வினா எண் 1893—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றிய பகுதிகளில் தாழ்வாகத் தொங்கும் மின் கம்பிகளை ஒழுங்குபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

---

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியத்தில் வருந்தி, விசுவனூர், குறிச்சி, பரப்பனேந்தல், தாயமங்கலம், பஞ்சனூர் ஆகிய கிராமங்களில் தாழ்வாக தொங்கிய கம்பிகள் கடந்த மாதத்தில் இழுத்துக் கட்டப்பட்டு சரி செய்யப்பட்டன. மேலும், மேற்கண்ட ஒன்றியத்தில் தாழ்வாகச் செல்லும் மின்கம்பிகள் ஏதேனும் இருப்பின் கண்டறியப்பட்டு உடனடியாக சீரமைக்கப்படும்.

**2—**

**மின் வசதி**

**வினா எண் 197—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கறம்பக்குடி வட்டம், குளப்பெண்பட்டி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, கறம்பக்குடி வட்டம், குளப்பெண்பட்டி குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டமும், இங்குள்ள இரு ஆதி திராவிடர் குடியிருப்புகளிலும் முறையே 30,000 லிட்டர் மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டங்களும் பயன்பாட்டில் உள்ளன. இக்குடியிருப்புகளில் வாரிய திட்டங்கள் ஏதும் மின் இணைப்பு வழங்கப்படாமல் நிலுவையில் இல்லை.





**3—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 202—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, வெட்டன்விடுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், கணக்கன்காடு ஊராட்சி, வெட்டன்விடுதி குடியிருப்பில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதுபார்க்கும் நிலையைத் தாண்டி மிகவும் சிதிலமடைந்த காரணத்தால் 2008–2009 ஆம் ஆண்டு மக்கட்தொகைக்கேற்ப 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மாற்று குடிநீர்த் தொட்டி கட்டும் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு தொடர் பராமரிப்பிற்காக உள்ளாட்சி அமைப்பிடம் 20-01-2010 அன்று ஒப்படைக்கப்பட்டது. மேலும், பழுதுபார்க்கும் நிலையைத் தாண்டி மிகவும் சிதிலமடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை உள்ளாட்சி நிருவாகமே, உடன் அப்புறப்படுத்துமாறு ஊராட்சி மன்றத் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

[2011 செப்டம்பர் 12

4—

## இட வசதி

**வினா எண் 104—திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, சிறுமுகை பேரூராட்சி பகுதிகளில் உள்ள குப்பை கிடங்கிற்கு சொந்த இடவசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிறுமுகை பேரூராட்சியில் குப்பை கிடங்கு அமைக்க போதிய இடவசதியில்லாததால், தற்போது லிங்காபுரம், மூலத்துறை ஆகிய பகுதிகளில் உள்ள 25 சென்ட் புறம்போக்கு நிலத்தில் குப்பை கொட்டப்பட்டு வருகிறது. அந்த இடம் போதுமானதாக இல்லாததால், பேரூராட்சி மன்ற தீர்மான எண் 160/2010, நாள் 28–10–2010–இன்படி South India Viscose என்ற தனியார் நிறுவனத்திற்கு சொந்தமாக உள்ள காலியிடத்தில் 2.00 ஏக்கர் நிலம் சிறுமுகை பேரூராட்சி திடக்கழிவு பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்து வழங்கிடுமாறு வருவாய்த் துறையிடம் கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

5—

## குடிநீர் வசதி

**வினா எண் 573—திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2011 செப்டம்பர் 12]

(அ) சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை பேரூராட்சி, 3–வது வார்டு பசிரிமலை அடிவாரத்தில் உள்ள குடிசைவாழ் மக்களுக்கு குடிநீர் வசதி, மின் வசதி, கழிப்பிட வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை பேரூராட்சி, 3–வது வார்டு பசிரிமலை அடிவாரத்தில் 42 நபர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டு, தற்பொழுது 36 பட்டாதாரர்கள் மட்டும் குடிசைகள் போட்டு குடியிருந்து வருகின்றனர். இவர்களுக்கு பேரூராட்சி மூலம் சொத்து வரி இரசீது வழங்கப்பட்டுள்ளது. இங்கு சுமார் 120 நபர்கள் வசிக்கின்றனர். இப்பகுதி வாழ் மக்களுக்கு சுமார் 3 கி.மீ. தூரத்திற்கு பைப் லைன் அமைத்து குடிநீர் வசதி செய்து கொடுக்கவும் மற்றும் தெருவிளக்கு மற்றும் கழிப்பிட வசதிகள் அமைத்துக் கொடுக்கவும் மொத்தம் ரூ.14.00 இலட்சம் தேவைப்படுகிறது. பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாததால் வரும் நிதியாண்டில் அரசின் நிதியுதவியுடன் குடிநீர், தெருவிளக்கு மற்றும் கழிப்பிட வசதிகள் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6—

## கழிவுநீர்க் கால்வாய்

**வினா எண் 575—திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை பேரூராட்சி, 18–வது வார்டில் கழிப்பிட வசதி, கழிவுநீர்க் கால்வாய் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 செப்டம்பர் 12

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை பேரூராட்சியின் 18—வது வார்டு வெள்ளக்கல்பட்டி பகுதியில் வசிக்கும் 280 நபர்களுக்கு கழிப்பிட வசதியும் ஆழ்துளைக் கிணறு மூலம் தண்ணீர் வசதியும் செய்யப்பட்டு பயன்பாட்டில் இருந்து வந்தது. நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வறண்டு விட்டதால் மேற்படி கழிப்பிடம் தற்போது தண்ணீர் வசதியின்றி உள்ளது. பேரூராட்சியின் பொது நிதியிலிருந்து ஆழ்துளைக் கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்து மேற்சொன்ன கழிப்பிடத்தை மீண்டும் பயன்பாட்டிற்குக் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்சொன்ன பகுதிக்கு நடப்பு நிதியாண்டில் அரசின் மானியத்தில் கழிவுநீர்க் கால்வாய் வசதி செய்திட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**7—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 694—திரு. ஆர். சீனிவாசன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆற்காடு தொகுதி, ஆற்காடு ஒன்றியம், புன்னப்பாடி கிராமத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, ஆற்காடு ஒன்றியம், புன்னப்பாடி ஊராட்சியைச் சேர்ந்த புன்னப்பாடி குடியிருப்பில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு ஊராட்சிமூலம் கட்டப்பட்ட 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அதன் நீராதாரம் பொய்த்து விட்டதால், பயன்பாடு இல்லாமல் உள்ளது. ஆனால் இக்குடியிருப்பில் தற்போது ஆழ்துளைக் கிணற்று நீராதாரத்தைக் கொண்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் 1999 ஆம் ஆண்டு நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு போதுமான அளவு குடிநீர் (40* ipcd*) வழங்கப்பட்டு வருகிறது.*



2011 செப்டம்பர் 12]

**8—**

## சோடியம் விளக்கு

**வினா எண் 937—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*காஞ்சிபுரம் மாவட்டம், பழைய பெருங்களத்தூர், குறிஞ்சி நகர் இரண்டாவது மெயின் தெருவில் மூன்று சோடியம் ஆவி விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், பெருங்களத்தூர் பேரூராட்சி, குறிஞ்சி நகர் இரண்டாவது தெருவில் மூன்று கம்பங்களில் சி.எஃப்.எல். மூன்று பல்புகள் மற்றும் பெரிய பிட்டிங்குடன்கூடிய விளக்குகள் ரூ.16,230/– செலவில் பொது நிதியிலிருந்து விரைவில் அமைக்கப்படவுள்ளன.

**9—**

## குடிநீர்

**வினா எண் 1363—திரு. கு. லிங்கமுத்து:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை பேர்ணாம்பட்டு, குடியாத்தம் ஆகிய பகுதிகளில் செயல்படுத்த கால்வாய், குடிநீர்க் குழாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*[2011 செப்டம்பர் 12*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலுள்ள அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரகக் குடியிருப்புகளுக்கும், ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருவதால், இத்திட்டத்தினை பேர்ணாம்பட்டு மற்றும் குடியாத்தம் வரை நீட்டிக்க இயலாது. இருப்பினும், வேலூர் மாவட்டத்திலுள்ள வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 944 ஊரகக் குடியிருப்புகளுக்கும் சேர்த்து குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண, மேட்டூர் அருகே செக்கானூர் தடுப்பணையிலிருந்து, காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.1,295 கோடியில் செயல்படுத்த 31–12–2010 நாளிட்ட அரசாணை எண் 319 இல் அரசின் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், பேர்ணாம்பட்டு மற்றும் குடியாத்தம் நகராட்சிகளும், பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 59 குடியிருப்புகள் மற்றும் குடியாத்தம் ஒன்றியத்தைச் சார்ந்த 28 குடியிருப்புகளும் உள்ளடங்கும். இத்திட்டம் பயனுக்கு வரும்போது பேர்ணாம்பட்டு, குடியாத்தம் ஆகிய பகுதிகளும் பயனடையும். இத்திட்டத்தின்மூலம் 18.68 இலட்சம் மக்கள் பயன் பெறுவார்கள்.*

**10—**

## சேவை மையம்

**வினா எண் 1505—திரு. வி. முத்துக்குமார்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரசு பீங்கான் தொழிற்பேட்டைக்கு அரசால் வழங்கப்பட்ட சேவை மீண்டும் கிடைத்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



*2011 செப்டம்பர் 12]*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தை சுற்றியுள்ள சிறிய பீங்கான் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவைப்படும் பீங்கான் பொருட்கள் சுடும் வசதிக்காக சுரங்கச்சூளையும் மற்றும் மூலப்பொருட்கள் அளிக்கவும் தொழில் வணிகத் துறை பீங்கான் தொழிற்பேட்டையில் அரசினர் பீங்கான் சேவை மையத்தை 1978 ஆம் ஆண்டு முதல் இயக்கி வந்தது. பெட்ரோலியப் பொருளான டீசல் விலை ஏற்றத்தாலும், போதுமான அளவிற்கு பீங்கான் உற்பத்தியாளர்களிடமிருந்து சுடுவதற்குத் தேவையான பீங்கான் பொருட்கள் கிடைக்காததாலும், பெரும் நஷ்டத்தை சந்தித்ததால் 2001 நவம்பரில் சுரங்கச்சூளையின் பணி நிறுத்தப்பட்டது.*

*2. கீழ்க்கண்ட காரணங்களால் சுரங்கச்சூளை மற்றும் சேவை மையத்தின் பணிகளை மீண்டும் அரசால் எடுத்து நடத்த சாத்தியக்கூறுகள் இல்லை:*

*1. 1978 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த சுரங்கச்சூளை பழைய காலத்து தொழில்நுட்பத்துடன் கட்டப்பட்ட சூளையாகும்.*

*2. விருத்தாசலம் பீங்கான் தொழிற்பேட்டையைச் சுற்றிலும் 20–க்கும் மேற்பட்ட சிறிய மற்றும் 2 பெரிய சூளைகள் நவீன தொழில்நுட்பத்துடன் தனியார்களால் நடத்தப்படுகின்றன.*

*3. இந்தத் தனியார் சூளைகளை தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்நிறுவனங்கள் கடந்த பத்து வருடங்களாகப் பயன்படுத்தி வருகின்றன.*

*4. தற்போது நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய சுரங்கச்சூளையில் பீங்கான் இழைகள்* (Ceramic Fibre) *என்ற அரிதில் கடத்தி* (Insulating Material) *பயன்படுத்துவதால் எரிபொருள் செலவு குறைவாக உள்ளது. பழைய சுரங்கச்சூளையில் அத்தகைய தொழில்நுட்பத்துடன்கூடிய வசதிகள் இல்லை.*

*எனவே, அரசு ஏற்கெனவே நடத்தி வந்த பழைய சுரங்கச்சூளையை பொருளாதார ரீதியாக மற்றும் தொழில்நுட்ப ரீதியாக மீண்டும் அரசால் நடத்த சாத்தியக்கூறுகள் இல்லை.*

*(ஆ) பதில் எழவில்லை.*

[2011 செப்டம்பர் 12

**11—**

## மின் இணைப்பு

**வினா எண் 1631—திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் தொகுதி, பெரிய கண்டியாங்குப்பம், டி.கோபுராப்புரத்திலுள்ள பீங்கான் தொழிற்சாலைகளுக்குத் தடையில்லா மும்முனை இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தொகுதி, பெரிய கண்டியாங்குப்பம், டி. கோபுராப்புரத்திலுள்ள பீங்கான் தொழிற்சாலைக்குத் தடையில்லா மும்முனை இணைப்பு வழங்க வழிவகை உள்ளது. தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும் எனில் சுமார் 1 கி.மீ. தொலைவிலிருந்து தனி மின்தடம் (Separate Feeder) நிறுவன உரிமையாளர்களின் சம்மதத்தின் பேரில் அவர்களது சொந்த செலவில் அமைத்துக் கொடுக்கக் கோரினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**12—**

## கட்டடம்

**வினா எண் 1392—திரு. அ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

லால்குடியில் இயங்கி வரும் டாக்டர் கலைஞர் கலை, அறிவியல் கல்லூரிக்கு கட்டடங்கள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

டாக்டர் கலைஞர் அரசு கலைக் கல்லூரி (சட்டமன்ற பொன்விழா) குளித்தலையில்தான் இயங்கி வருகிறது. இக்கல்லூரிக்கு சொந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.



2011 செப்டம்பர் 12]

லால்குடியில் இயங்கி வரும் கல்லூரி, திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியாகும். இக்கல்லூரிக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு, லால்குடி வட்டம், லால்குடி–கல்லக்குடி பிரதான சாலையில் பெருவளநல்லூர் ஊராட்சிக்குட்பட்ட கிராமத்தில் சுமார் 11 ஏக்கர் நிலத்தினைப் பெற்றுத் தருமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக பதிவாளர், 05-08-2011 தேதியில் கடிதம் அனுப்பியுள்ளார். நிலம் பெற்ற பின்னர் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**13—**

## கட்டட வசதி

**வினா எண் 71—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கி கடன் உதவியுடன் அரசுப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் திட்டத்தின்கீழ் ரூ.229.96 இலட்சம் மதிப்பில் பகுதி X–'B'–ல் 36 வகுப்பறைகள், 1 ஆய்வுக்கூடம், 5 கழிவறைகள், 1 குடிநீர் வசதி மற்றும் 200 மீட்டர் சுற்றுச்சுவர் கட்ட நிதி ஒப்பளிக்கப்பட்டு பொதுப் பணித் துறையினரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**14—**

## கட்டட வசதி

**வினா எண் 371—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*[2011 செப்டம்பர் 12*

*புதுக்கோட்டை தொகுதி, மழையூர் மற்றும் வெட்டன் விடுதியில் உள்ள மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*புதுக்கோட்டை தொகுதி, மழையூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கித் திட்டம் பகுதி IV–ல், 12 வகுப்பறைகள், ஒரு ஆய்வுக்கூடம், 2 யூனிட் கழிவறைகள் ஆகிய அடிப்படை வசதிகள் ரூ.54.60 இலட்சத்தில் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும் இப்பள்ளிக்கு கூடுதலாக நான்கு வகுப்பறைகள் தேவைப்படுவதால் எஸ்.எஸ்.ஏ / ஆர்.எம்.எஸ்.ஏ / திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.*

*அதேபோல் புதுக்கோட்டை மாவட்டம், வெட்டன்விடுதி மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கி திட்டம் பகுதி IV–ல் 14 வகுப்பறைகள், 1 ஆய்வுக்கூடம், 2 யூனிட் கழிவறைகள் ஆகிய அடிப்படை வசதிகள் ரூ.60.90 இலட்சத்தில் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும், இப்பள்ளிக்கு கூடுதலாக 150 மீட்டர் சுற்றுச்சுவரும், 4 யூனிட் கழிவறையும் தேவைப்படுவதால் அவை எம்.பி. / எஸ்.எஸ்.ஏ / ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.*

**15—**

**சுற்றுச்சுவர்**

**வினா எண் 1414—திரு. இரா. குமரகுரு:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணம்பாக்கம் உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணம்பாக்கம் உயர்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கித் திட்டம்*



*2011 செப்டம்பர் 12]*

*பகுதி IV–ல் 480 மீட்டர் சுற்றுச்சுவர் கட்ட நபார்டு வங்கிக்கு நிதி ஒதுக்கீடு கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் பொதுப் பணித் துறையினரால் பணிகள் மேற்கொள்ளப்படும்.*

**16—**

**தார்ச் சாலை**

**வினா எண் 94—திரு. ஓ.கே. சின்னராஜ்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட வனத் துறைக்கு சொந்தமான கோபினாரி–மூனுகுட்டை சாலை, லிங்காபுரம்–காந்தையூர் சாலை, காலனிப்புதூர்–சீங்குழி சாலை ஆகிய சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மேற்காணும் வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வனப் பாதைகளின் மேம்பாடு குறித்த விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது:*

**1. கோபினாரி–மூனுகுட்டை சாலை**

*கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட தோலாம்பாளையம் – கோபினாரி சாலையிலிருந்து பிரிந்து செல்லும் கோபினாரி–மூனுகுட்டை சாலை காப்புக்காட்டின் ஊடே செல்லும் 4.50 கி.மீ. நீளமுடைய பாதையாகும். இச்சாலை முற்றிலும் மண் சாலையாகும். இதனை மூனுகுட்டை கிராமத்தில் வாழ்ந்து வரும் 46 குடும்பத்தைச் சார்ந்த 138 பேர் பயன்படுத்தி வருகின்றனர். இச்சாலை அமைந்துள்ள வனப் பகுதி முற்றிலும் யானைகள் வாழும் பகுதியாகும். இச்சாலைக்கு காப்புக்காடு அறிவிக்கையில் அனுமதிக்கப்பட்ட வழித்தட உரிமம் ஏதுமில்லை. ஆகவே, இச்சாலையை மேம்படுத்தவும், தார்ச் சாலையாக மாற்றி அமைக்கவும்*

[2011 செப்டம்பர் 12

வேண்டுமானால் வனப் பாதுகாப்புச் சட்டம் 1980—இன்படி மத்திய அரசின் முன் அனுமதி பெற வேண்டும். ஊரக வளர்ச்சித் துறை, மேற்படி சாலையை தார்ச் சாலையாக அமைக்க முன்வரும் பட்சத்தில், வனப் பாதுகாப்புச் சட்டம் 1980 இன்படி உரிய கருத்துரு அனுப்பி வைத்தால், அதனை விதிமுறைகள்படி பரிசீலனை செய்து மத்திய அரசின் முன் அனுமதி பெற உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**2. லிங்காபுரம்—காந்தையூர் சாலை**

இச்சாலை ஓடந்துறை காப்புக்காட்டின் ஊடே 500 மீட்டர் நீளத்திற்குச் செல்லும் சாலையாகும். இச்சாலையை உளியூர், காந்தையூர், மொக்கை மேடு குடியிருப்புகளில் வாழும் 272 குடும்பங்களைச் சார்ந்த 600 பேர் பயன்படுத்தி வருகின்றனர். இச்சாலைக்கு காப்புக்காடு அறிவிக்கையில் வழித்தட உரிமம் ஏதும் அனுமதிக்கப்படவில்லை. ஆகவே, இச்சாலையை தார்ச் சாலையாக அமைக்க வனப் பாதுகாப்புச் சட்டம் 1980 இன்படி மத்திய அரசின் முன் அனுமதி பெற வேண்டும். இருப்பினும் இச்சாலையை 500 மீ. நீளத்திற்கு 5 மீ. அகலத்திற்கு அமைக்க தேவைப்படும் வன நிலத்தின் பரப்பளவு 2,500 ச.மீ. மட்டுமே. பழங்குடியின மக்கள் நலன் கருதி ஒரு எக்டர் வன நிலத்திற்குள் அதிகபட்சமாக எக்டர் ஒன்றுக்கு 75 எண்ணிக்கை நட்டு வளர்க்கப்பட்ட மரங்கள் மட்டும் வெட்டி, வனம் அல்லாத பணிகள் மேற்கொள்ள உரிய அனுமதி வழங்க பழங்குடியினர் மற்றும் வனம் சார்ந்து வாழ்பவர்கள் (வன உரிமை அங்கீகாரச் சட்டம்) 2006 பிரிவு 3(2)—ல் வழிவகை உள்ளது.

மேற்கண்ட நேர்வுகளில் கிராமசபை ஒப்புதலின்கீழ் சம்பந்தப்பட்ட வனச்சரகரின் பரிந்துரைகளுடன் பெறப்படும் கருத்துருக்களுக்கு மாவட்ட வன அலுவலர் அனுமதி வழங்கலாம். ஆகவே, பொது மக்கள் நலன் கருதி ஊரக வளர்ச்சித் துறை மேற்படி சாலையை தார்ச் சாலையாக அமைக்க முன்வரும் பட்சத்தில் அவர்கள் பழங்குடியினர் மற்றும் வனம் சார்ந்து வாழ்பவர்கள் உரிமை அங்கீகாரச் சட்டம் 2006 இன்படி கருத்துரு அனுப்பி வைத்தால் விதிமுறைகள்படி அனுமதி வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.



2011 செப்டம்பர் 12]

**3. காலனிப்புதூர்—சீங்குழி சாலை**

இச்சாலை காப்புக்காட்டின் ஊடே செல்லும் வனச் சாலை அல்ல. இச்சாலையை தார்ச் சாலையாக அமைக்க வனத் துறை அனுமதி ஏதும் தேவையில்லை. இச்சாலையின் முன்னேற்றப் பணிகள் தோலாம்பாளையம் மற்றும் 24 வீரபாண்டி ஊராட்சியால் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் ஒதுக்கப்பட்ட நிதிமூலம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**17—**

## தடுப்பணை

**வினா எண் 97—திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட வனப்பகுதியில் மழைநீரை சேமிக்க தடுப்பணைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட வனப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு பணிக்காகவும், மழைநீரை சேமிக்கவும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், நீலகிரி உயிர்கோள் காப்பகத் திட்டம், யானைகள் பாதுகாப்புத் திட்டம், 12-வது நிதிக் குழு மானிய திட்டம், ஒருங்கிணைந்த வனப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் ரூ.10.86 இலட்சம் செலவில் 12 தடுப்பணைகளும், ரூ.23.22 இலட்சம் செலவில் 9 கசிவுநீர்க் குட்டைகளும் கோவை வனக்கோட்டத்தின் மூலமாகக் கட்டப்பட்டுள்ளன. 2011–12 ஆம் நிதியாண்டில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், 13-வது நிதிக் குழு மானிய திட்டம், யானைகள் பாதுகாப்புத் திட்டம், ஒருங்கிணைந்த வனப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டங்களின்மூலம் தடுப்பணைகளும், கசிவுநீர்க் குட்டைகளும் கட்ட தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

*[2011 செப்டம்பர் 12*

**18—**

**பாலம்**

**வினா எண் 1289—திரு. ந. நஞ்சப்பன்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், பென்னாகரத்தில் வனத் துறையின்மூலம் அமைக்கப்பட்ட கேரட்டி சாலையில் உள்ள பாலங்களை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*தருமபுரி மாவட்டம், பென்னாகரத்தில் வனத் துறைமூலம் அமைக்கப்பட்டுள்ள கேரட்டி சாலையும், அதிலுள்ள பாலங்களையும் 13–வது நிதிக் குழு மானிய திட்டத்தின்கீழ் 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2014–2015 ஆண்டுகளுக்குள், ரூ.161.50 இலட்சம் செலவில் செப்பனிட அரசாணை பிறப்பிக்கப்பட்டு, முன்னோடிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**19—**

**மின் வசதி**

**வினா எண் 1304—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தனியார் வனப் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வந்து, காடுகளைச் சார்ந்து வாழும் ஏழை, எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கவும், மின்சாரம், சாலை வசதி செய்யவும் அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*தற்போதைய உலக, தேசிய மற்றும் மாநிலங்களின் வனக் கொள்கையின்படி, வன நிலங்களைப் பகிர்ந்து கொடுத்து பட்டா கொடுக்கும் வாய்ப்பு மிகவும் அரிது ஆகும். வனங்களின் பாதுகாப்பு, மனித வாழ்வியலுக்கு அடிப்படையாக இருப்பதால் வனங்களின் பரப்பைக் குறையச் செய்யும் எந்தவொரு நடவடிக்கையும் அரசின்*



*2011 செப்டம்பர் 12]*

*வனக் கொள்கையைச் சார்ந்ததாக இருக்காது. எனவே, தனியார் வனப் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வந்து வீட்டுமனைப் பட்டாக்கள் மற்றும் இதர வசதிகள் செய்வது என்பது இயலாத ஒன்றாகும். இருப்பினும், தனியார் வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட காடுகளுக்குச் செல்வதற்கு ஏற்கெனவே அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட சாலைகளைப் பயன்படுத்துவதற்கும், பராமரிப்பதற்கும் தடையேதுமில்லை.*

**20—**

**சாலை வசதி**

**வினா எண் 1315—திருமதி ர. சுபா:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கங்கவல்லி தொகுதி, கடம்பூர் கிராமத்தில் சாலை வசதி மற்றும் கழிப்பிட வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*சேலம் மாவட்டம், கங்கவல்லி தொகுதிக்குட்பட்ட கடம்பூர் கிராமம் வருவாய்த் துறை ஆளுகைக்குட்பட்ட ஒரு வருவாய் கிராமமாகும். இக்கிராமம் காப்புக் காட்டிற்கு அதிக தூரத்தில் உள்ளது. ஆகவே, வனத் துறைக்கும் இக்கிராமத்தில் மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சிப் பணிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.*

*கடம்பூர் கிராமத்திற்கு கீழ்க்கண்ட சாலை வசதிகள் உள்ளன:*

(i) *ஆத்தூரிலிருந்து தம்மம்பட்டி செல்வதற்கு கடம்பூர் வழியாக தார்ச் சாலை (28 கி.மீ. தூரம்) வசதி உள்ளது.*

(ii) *கடம்பூரிலிருந்து பெரம்பலூர் செல்வதற்கு மஞ்சினி (6 கி.மீ.) மற்றும் கங்கவல்லி (6 கி.மீ.) வழியாக இணைப்பு தார்ச் சாலைகள் உள்ளன.*

(iii) *கடம்பூரிலிருந்து தவளப்பட்டி மலைக்கிராமத்திற்குச் செல்லச் ராமநாதபுரம் வரை தார்ச் சாலைகள் (4 கி.மீ.) மற்றும் பைத்தூர் காப்பு நிலம் அடிவாரத்திலிருந்து தவளப்பட்டிக்கு மண் சாலை (1 1/2கி.மீ.) உள்ளன.*

[2011 செப்டம்பர் 12

(ஈ) கங்கவல்லி முதல் கடம்பூர் வரை தார்ச் சாலை (6 கி.மீ.) உள்ளது.

எனவே, கடம்பூர் கிராமத்திற்கு மேற்கண்ட சாலை வசதிகள் இருப்பதால் மேற்கொண்டு சாலை வசதிகள் செய்து தரும் தேவை எழவில்லை. மேலும் கடம்பூர் கிராமத்திற்குத் தேவையான கழிப்பிட வசதிகள் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தால் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

**21—**

## கட்டடம்

**வினா எண் 663—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் தொல்பொருள் அருங்காட்சியகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்ட அரசு அருங்காட்சியகம் தற்பொழுது சேலம் பேர்லேண்ட்ஸ் (Fairlands) கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வருகிறது. சொந்தக் கட்டடம் கட்டுவது சம்பந்தமாக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சேலம் அருங்காட்சியகத்திற்கு ஏற்ற பார்வையாளர்கள் வந்து செல்லும் வகையில் ஒரு ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் அருங்காட்சியகத்திற்கு பெறப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டி சேலம் அருங்காட்சியகத்தை மேம்படுத்தலாம் எனத் தெரிவித்துள்ளார். அரசு நிலம் பெறுவதற்கு அருங்காட்சியகங்களின் ஆணையர்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசு நிலம் பெறப்பட்டவுடன் சேலம் அருங்காட்சியகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.



2011 செப்டம்பர் 12]

**22—**

## வெள்ள நீர்

**வினா எண் 127—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நொய்யல் ஆற்றில் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ள நீரை கோதவாடிகுளம், தேவம்பாடிகுளம் ஆகியவற்றிற்கு திருப்பிவிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

நொய்யல் ஆற்றில் நொய்யல் முறை சார்ந்த ஏரிகள் மற்றும் பாசனப் பரப்புகளுக்கே போதிய தண்ணீர் கிடைப்பதில்லை என்பதால் கோதவாடிகுளம் மற்றும் தேவம்பாடிகுளத்திற்கு நீரைக் திருப்பிவிடுவது தற்போது சாத்தியமற்றது.

**23—**

## தண்ணீர்

**வினா எண் 133—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், நொய்யல் ஆற்று தண்ணீரை பொள்ளாச்சி வட்டத்திலுள்ள கோதவாடிகுளத்திற்கு திருப்பிவிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், நொய்யல் ஆற்றில், நொய்யல் முறை சார்ந்த ஏரிகள் மற்றும் பாசனப் பரப்புகளுக்கே போதிய தண்ணீர் கிடைப்பதில்லை என்பதால், பொள்ளாச்சி வட்டத்திலுள்ள கோதவாடிகுளத்திற்கு நீரைத் திருப்பிவிடுவது தற்போது சாத்தியமற்றது.

[2011 செப்டம்பர் 12

**24—**

### படிக்கட்டு

**வினா எண் 953—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், லெவிஞ்சுபுரம் பகுதியிலுள்ள பிராந்தனேரி குளத்திற்கு தண்ணீர் செல்லும் கால்வாயில் படிக்கட்டு அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், லெவிஞ்சுபுரம் பகுதியிலுள்ள பிராந்தனேரி குளத்திற்கு தண்ணீர் செல்லும் கால்வாயில் படிக்கட்டு அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**25—**

### விரிவாக்கத் திட்டம்

**வினா எண் 1621—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் தொகுதி, விடத்தகுளம், விரிசங்குளம், பெரியஉலகானி, சின்னஉலகானி, கூடகோவில், கொத்தாலங்குளம், பெரிய ஆலங்குளம், கொம்பாடி, நெடுமதுரை ஆகிய கிராமங்களை நிலையூர்–கம்பிகுடி கால்வாய் விரிவாக்கத் திட்டத்தில் மீண்டும் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

திருமங்கலம் தொகுதி, விடத்தகுளம், விரிசங்குளம், பெரியஉலகானி, சின்னஉலகானி, கூடகோவில், கொத்தாலங்குளம்,



2011 செப்டம்பர் 12]

பெரிய ஆலங்குளம், கொம்பாடி மற்றும் நெடுமதுரை ஆகிய கிராமங்களை நிலையூர் கால்வாய் விரிவாக்கத் திட்டத்தில் இணைப்பது குறித்து ஆய்வு செய்து, சாத்தியக்கூறுகள் இருப்பின், நிலையூர் கால்வாய்த் திட்டத்தில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**26—**

### நீர் சேமிப்பு

**வினா எண் 1845—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், கள்ளிக்குடி ஒன்றியம், சிவரக்கோட்டைகவுண்டன் நதியில் வீணாகும் நீரினை, சென்னம்பட்டி பழைய டேம்–மை பழுது நீக்கி அதில் சேமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், சென்னம்பட்டி கிராமத்தில் கவுண்டா நதியின் குறுக்கே அமைந்துள்ள சென்னம்பட்டி அணைமூலம் கவுண்டா நதியில் வரும் நீர் மற்றும் வெள்ளநீர் 15.790 கி.மீட்டர் நீளமுள்ள வலது பிரதானக் கால்வாய்மூலம் 9 கண்மாய்களும், 746.62 ஏக்கர் நிலங்களும், 15.785 கி.மீட்டர் நீளமுள்ள இடது பிரதானக் கால்வாய்மூலம் 12 கண்மாய்களும் 1,686 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன. சென்னம்பட்டி அணை தற்போது பழுதுகள் ஏதுமின்றி நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. பருவமழைக் காலங்களில் அணைக்கட்டிலுள்ள மதகுகள் செப்பனிடப்பட்டு முறையாக பராமரிக்கப்பட்டு வருகின்றன.

[2011 செப்டம்பர் 12

**27—**

## அடைப்புப் பலகைகள்

**வினா எண் 1484—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, பாமினி ஆறு, கோரை ஆறு, முள்ளியாறு, அரிச்சந்திர ஆறு, வளவன் ஆறு ஆகிய ஆறுகளில் உள்ள செட்டர்களை மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

திருத்துறைப்பூண்டி தொகுதியில் பாமினி ஆற்றில் உள்ள அனைத்து அடைப்புப் பலகைகளும் நல்ல நிலையில் உள்ளன. வளவனார் கடைமடை நீரியக்கு அணைக்கு நடப்பாண்டில் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் அடைப்புப் பலகைகளை புதுப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கோரையாறு, முள்ளியாறு மற்றும் அரிச்சந்திர ஆறுகளில் உள்ள பழுதடைந்த அடைப்புப் பலகைகளை மாற்றிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**28—**

## காட்டாமணக்கு

**வினா எண் 1485—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, முள்ளியாற்றில் உள்ள நெய்வேலி காட்டாமணக்கு செடியை அகற்றிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

திருத்துறைப்பூண்டி தொகுதியில் முள்ளியாற்றில் உள்ள நெய்வேலி காட்டாமணக்கு செடிகளை வரும் அடைப்புக் காலத்தில் அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2011 செப்டம்பர் 12]

**29—**

## காட்டாமணக்கு

**வினா எண் 1487—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, அரிச்சந்திர நதியில் உள்ள ஆக்கிரமிப்பான நெய்வேலி காட்டாமணக்கை அகற்றிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

திருத்துறைப்பூண்டி தொகுதியில் அரிச்சந்திர நதியில் நெய்வேலி காட்டாமணக்கு செடிகளை வரும் அடைப்புக் காலத்தில் அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**30—**

## தூர் வாருதல்

**வினா எண் 1488—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, வளவன் ஆறு சிறப்பு பெரும் திட்டத்தில் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வெள்ள மேலாண்மை பெரும் திட்டத்தின்கீழ் திருத்துறைப்பூண்டி தொகுதி, வளவன் ஆற்றினை தூர் வாரி கரைகளைப் பலப்படுத்தும் பணி உள்ளடக்கிய திட்டம் ரூ.107.35 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தும்பொருட்டு தொழில்நுட்ப பரிசீலனையில் உள்ளது.

[2011 செப்டம்பர் 12

**31—**

## தூர் வாருதல்

**வினா எண் 1490—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை புதிய மற்றும் பழைய கிளை தாங்கி ஆறு தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வெள்ள மேலாண்மை பெரும் திட்டத்தின்கீழ், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை புதிய மற்றும் பழைய கிளை தாங்கி ஆற்றினை தூர் வாரி கரைகளைப் பலப்படுத்தும் பணி உள்ளடக்கிய திட்டம் ரூ.107.35 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தும்பொருட்டு தொழில்நுட்ப பரிசீலனையில் உள்ளது.

**32—**

## கழிவுநீர்

**வினா எண் 314—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, வெட்டன்விடுதியில் இயங்கும் நவீன அரிசி ஆலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை, அவர்களது சொந்த செலவில் டேங்கர் லாரிமூலம் எடுத்துச் செல்ல அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

இவ்வினத்தில் அரசு ஏதும் செய்ய இயலாது.



2011 செப்டம்பர் 12]

**33—**

## சுத்திகரிப்பு

**வினா எண் 1241—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, புதுவயல் பேரூராட்சியிலுள்ள தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர், நிலத்தடி நீருடன் கலப்பதால் விவசாய பயிர்கள் சேதம் அடைவதால் அக்கழிவுநீரை சுத்திகரித்து விவசாயத்திற்குப் பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) காரைக்குடி தொகுதி, புதுவயல் பேரூராட்சியில் நெல்லை ஊற வைத்து, உலர வைத்து, அரைத்து, அரிசி எடுக்கும் அரிசி ஆலைகளே இயக்கத்தில் உள்ளன. இவ்வரிசி ஆலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை சேகரித்து, பகுப்பாய்வு செய்ததில், நிலத்தடி நீரையோ, விவசாயத்தையோ பாதிக்கும் வகையில் எவ்வித வேதிப் பொருட்களோ, உப்புத் தன்மையோ இல்லை. மேற்கூறிய அரிசி ஆலைகளுக்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் வழங்கியுள்ள இசைவாணையில், ஒவ்வோர் அரிசி ஆலையும், தொழிற்சாலை கழிவுநீரை மணல் படுகைமூலம் வடித்து, பின்பு நிலங்களில் மரங்கள் வளர்க்க மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான தொழிற்சாலைகள் மேற்கண்ட நிபந்தனையின்படி கழிவுநீரை டிராக்டர்மூலம் சொந்த நிலங்களிலோ அல்லது அனுமதி பெற்ற நிலங்களிலோ உபயோகப்படுத்தி வருகின்றன.

(ஆ) காரைக்குடி தொகுதிக்குட்பட்ட புதுவயல் பேரூராட்சியானது பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றும்போது தொழிற்சாலைகளின் சங்கமும் இணைந்து திட்டம் நிறைவேற்றி, கழிவுநீரை சுத்திகரித்து, வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளும் பட்சத்தில் இப்பிரச்சினை தீர்க்கப்படும்.

[2011 செப்டம்பர் 12

**34—**

**பட்டா**

**வினா எண் 932—திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதியில் தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு மேல் அரசு புறம்போக்கு நிலங்களில் வசித்து வரும் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பல்லடம் பகுதியில் ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வரும் மக்களுக்கு அரசு விதிமுறைகளின் அடிப்படையில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**35—**

**பட்டா**

**வினா எண் 933—திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, ஆறுமுத்தாம்பாளையம் ஊராட்சியிலுள்ள மக்களுக்கு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் கடனை தள்ளுபடி செய்து இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) பல்லடம் தொகுதி, நாராணபுலம் கிராமம், புல எண் 103, 104, 105 ஆகிய நிலங்கள் ஆறுமுத்தாம்பாளையம்



2011 செப்டம்பர் 12]

ஊராட்சியில் உள்ள அறிவொளி நகர் பகுதி குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டு குடிசை மாற்று வாரியத்தின் பராமரிப்பில் உள்ளன.

(ஆ) மேற்கூறிய காரணத்தால் பட்டா வழங்க இயலாது.

**36—**

**பட்டா**

**வினா எண் 934—திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதியில் சுமார் 1,000 ஏக்கர் கோயில் நிலம், தனியார் ஆக்கிரமிப்பு மற்றும் தரிசு நிலமாக உள்ளதை, ஏழைகளுக்குப் பட்டாவுடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதியில் உள்ள கோயில் நிலங்கள் அனைத்தும், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வருவதால் கிரையமின்றி, மேற்படி நிலத்தில் பட்டா வழங்க இயலாது.

**37—**

**பட்டா**

**வினா எண் 964—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் பேரூராட்சி, கேசவனேரி பகுதி மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், வடக்கு வள்ளியூர் பகுதி–2 கிராமத்தில் மேய்க்கால் புறம்போக்கு நிலத்தில்

வீடு கட்டி குடியிருந்து வரும் நபர்களுக்கு தகுதியின் அடிப்படையில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க பரிசீலனை நடவடிக்கையில் உள்ளது.

**38—**

**பட்டா**

**வினா எண் 1649—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் பல ஆண்டுகளாக குடியிருந்து வரும் வீடுகளுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் பல ஆண்டுகளாக குடியிருந்து வரும் பொதுமக்கள் வீட்டுமனைப் பட்டா வழங்க கோரும் கிராமம், பகுதி, புல எண் ஆகியவற்றை குறிப்பிட்டு தெரிவித்தால் அந்த இடத்தின் தன்மைக்கேற்ப வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**39—**

**பட்டா**

**வினா எண் 1838—திரு. கே.பி. கந்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, உள்ளகரம்–புழுதிவாக்கம் நகராட்சிக்குட்பட்ட உள்ளகரம் கிராமத்தில் சர்வே எண் 90இல் வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், உள்ளகரம்–புழுதிவாக்கம் கிராமம், புல எண் 90, விஸ்தீரணம் 23.31.0 எக்டேர் பெரிய ஏரி நீர்நிலை புறம்போக்கு வகைப்பாட்டைச் சேர்ந்ததாகும். எனவே, உள்ளகரம் நகராட்சிக்குட்பட்ட கிராமத்தில் நீர்நிலை புறம்போக்கில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**40—**

**விழா**

**வினா எண் 1425—டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூக நீதிப் போராளி தியாகி இம்மானுவேல் சேகரன் நினைவு மற்றும் பிறந்த நாட்களை அரசு விழாவாகக் கொண்டாடும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன், செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சமூக நீதிப் போராளி தியாகி இம்மானுவேல் சேகரன் நினைவு மற்றும் பிறந்த நாட்களை அரசு விழாவாகக் கொண்டாடும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

**41—**

**நீதிமன்றம்**

**வினா எண் 1710—திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், பந்தலூரில் நீதித் துறை நடுவர், முன்சீப் நீதிமன்றம் மற்றும் கூடலூரில் சார்பு நீதிமன்றம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2011 செப்டம்பர் 12

**விடை—**

**மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன், செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

நீலகிரி மாவட்டம், பந்தலூரில் நீதித் துறை நடுவர் நீதிமன்றம், முன்சீப் நீதிமன்றம் மற்றும் கூடலூரில் சார்பு நீதிமன்றம் ஆகியவை ஏற்படுத்துவது தொடர்பான செயற்குறிப்பு, சென்னை உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளரிடமிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில் செயற்குறிப்பின் நிதிச் செலவினத்திற்கேற்ப அரசு பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

**42—**

**சுற்றுலாத் தலம்**

**வினா எண் 1117—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை பகுதியில் உள்ள மனோரா பகுதியையும், முத்துப்பேட்டை பகுதியில் உள்ள லகூன் பகுதியையும், சிறப்பு சுற்றுலாப் பகுதியாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தமிழக சுற்றுலாத் துறையின்மூலம் தமிழ்நாட்டிலுள்ள எந்த ஒரு பகுதியையும் சிறப்புச் சுற்றுலாப் பகுதியாக அறிவிப்பதில்லை. இருப்பினும் தமிழகத்திலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்கள் மற்றும் அதிகம் அறியப்படாத சுற்றுலா இடங்கள் ஆகிய பகுதிகளில் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, அங்கு தேவையான சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த அடிப்படையில், பட்டுக்கோட்டை அருகில் உள்ள மனோரா என்ற இடத்தில் மேம்பாட்டுப் பணிகளுக்காக மாநில அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் சுற்றுலாத் துறையின் நிதியிலிருந்து ரூ.31.95 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இத்தொகை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.



2011 செப்டம்பர் 12]

**43—**

**வழிகாட்டி**

**வினா எண் 1732—திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக திருக்கோயில் சுற்றுலா வழிகாட்டியை புத்தக வடிவில் வெளியிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:**

சுற்றுலாத் துறையின்மூலம் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்கள் மற்றும் அதிகம் அறியப்படாத சுற்றுலா இடங்கள் ஆகியன குறித்த விவரக் கையேடுகள், சிறிய வரைபடங்கள் மற்றும் மடிப்பேடுகள் மட்டும் வெளியிடப்பட்டு வருகின்றன.

திருக்கோயில்கள் பற்றிய விவரங்கள், தல வரலாறு, அதன் சிறப்புகள் பற்றிய கையேடுகள் இந்து சமய அறநிலையத் துறையால் தனியாக வெளியிடப்படுகின்றன.

சுற்றுலாத் துறையின்மூலம் தமிழக திருக்கோயில்கள் வழிகாட்டிப் புத்தகம் ஏதும் இதுவரை வெளியிடவில்லை. சுற்றுலாத் துறைமூலம் திருக்கோயில்கள் சுற்றுலா வழிகாட்டிப் புத்தகம் வெளியிட தகுந்த நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்.

**44—**

**கூட்டுறவுச் சங்கம்**

**வினா எண் 1919—டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி, குமரக்குடியிலுள்ள பட்டுத் தொழில் கூட்டுறவு சங்கத்தினை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

[2011 செப்டம்பர் 12

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

பரமக்குடி தொகுதி, குமரக்குடியில் 30–03–1981 முதல் செயல்பட்டு வந்த ஆர்.எச்.123 குமரக்குடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம், தொடர்ந்து 2 ஆண்டுகளுக்கு மேல் செயல்படாமலும், தொடர் நட்டத்திலும் இயங்கி வந்த காரணத்தால், 14–09–1990 இல் கலைக்கப்பட்டுவிட்டது. கலைக்கப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதால், மேற்படி சங்கத்தினை மீண்டும் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**45—**

## புதிய பேருந்து

**வினா எண் 358—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, வெட்டன் விடுதி, ஆலங்குடி, கருக்காக்குறிச்சி, நெடுவாசல் வழியாக இயக்கப்படும் பேருந்து மற்றும் புதுக்கோட்டையில் இருந்து பேராவூரணி வரை இயக்கப்படும் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வெட்டன் விடுதி, ஆலங்குடி, கருக்காக்குறிச்சி, நெடுவாசல் வழியாக இயக்கப்படும் பேருந்திற்குப் பதிலாக 6-7-2011 முதல் குறைந்த வயதுள்ள பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. வரும் நிதியாண்டில் புதிய பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



2011 செப்டம்பர் 12]

**46—**

## பேருந்து வசதி

**வினா எண் 363—டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி, இராம்நாடு–மதுரை செல்லும் விரைவுப் பேருந்தை பார்த்திபனூர் பேருந்து நிலையத்தினுள் சென்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, பார்த்திபனூர் பேருந்து நிலையத்திற்குள் இராம்நாடு–மதுரை செல்லும் விரைவுப் பேருந்துகள் உள்ளே சென்று வருகின்றன. அவ்வப்போது பயணச்சீட்டு ஆய்வாளரை நியமித்து, பேருந்துகள் உள்ளே சென்று வருவது கண்காணிக்கப்பட்டும் வருகிறது.

**47—**

## பேருந்து வசதி

**வினா எண் 436—திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதாசலம் தொகுதி, மங்கலம் பேட்டையிலிருந்து சின்னபரூர், எடசித்தூர் மற்றும் எம்.புதூர் கிராமங்களுக்கு புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மங்கலம்பேட்டையிலிருந்து எடசித்தூர் சென்று வர தடம் எண் 38 நகரப் பேருந்துமூலம் 6 நடைகளில் இயக்கப்படுகிறது. விருத்தாசலத்திலிருந்து தொட்டிக்குப்பம், எம்.பட்டி, முகாசபரூர்,

[2011 செப்டம்பர் 12

சின்னபரூர் வழியாக எம்.புதூர் வரையில் மூன்று நகரப் பேருந்துகளின் மூலமாக மொத்தத்தில் 14 நடைகளில் இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகளின் நடைகளில் மங்கலம்பேட்டை வழியாக எம்.புதூருக்கு சுற்று வழித்தடத்தில் இயக்கினால் இவ்வழித் தடத்திலுள்ள கிராம மக்கள் தற்பொழுது பெற்றுவரும் பேருந்து வசதியினை இழக்க நேரிடும் மற்றும் இப்பேருந்தின்மூலம் அடுத்துவரும் நடைகள் கால அட்டவணைப்படி முழுமையாக இயக்கிடவும் இயலாது. எனவே, புதிய நகரப் பேருந்து இயக்கிட வாய்ப்பு கிட்டும்போது இச்சுற்று வழித்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**48—**

## பேருந்து வசதி

**வினா எண் 443—திருமதி ர. சுபா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கங்கவல்லி தொகுதிக்குட்பட்ட ராசிபுரம்–ஊனத்தூர், மற்றும் ஜி1, வாழக்கோம்பை ஆகிய பகுதிகளுக்கு இயக்கப்பட்ட பேருந்தினை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ராசிபுரம்–ஆத்தூர் தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டத்தைச் சார்ந்த 25 புறநகர் பேருந்துகள்மூலம் தினசரி 88 நடைகள் இயக்கப்படுகின்றன. ஆத்தூர்–ஊனத்தூர் தடத்தில் 3 புறநகர் பேருந்துகள்மூலம் 6 நடைகளும், 5 நகரப் பேருந்துகள்மூலம் 30 நடைகளும் என மொத்தம் 36 நடைகள் தினசரி இயக்கப்படுகின்றன. இவ்வாறான பகுதி வாரியாக உள்ள பேருந்து வசதியே இவ்வழித்தட பகுதி மக்களுக்கு போதுமானதாக இருப்பதால் நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை. நகரப் பேருந்துகள் தடம் எண் டி1 மற்றும் டி2 வாழக்கோம்பை வழித்தடத்தில் நடைகுறைப்பு ஏதுமின்றி 10 நடைகள் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன.



2011 செப்டம்பர் 12]

**49—**

## சாலை விபத்து

**வினா எண் 1529—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாலை விபத்தினை முழுமையாகத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சாலை விபத்தினைத் தடுக்க வேண்டி வாகனங்களின் எண்ணிக்கை அடிப்படையிலும் போக்குவரத்து நிலைமையைக் கருத்திற் கொண்டும், 206 போக்குவரத்து காவல் நிலையங்கள் துவங்கப்பட்டு, சாலை விபத்தினை முழுமையாகத் தடுப்பதற்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**50—**

## தடை செய்தல்

**வினா எண் 175—திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுமங்கலித் திட்டம், திருமண உதவித் திட்டம் என்ற பெயரில் கேம்ப் கூலிகளாக குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளிட்ட பெண்களை பஞ்சாலை முதலாளிகள் நவீன கொத்தடிமைகள்போல் நடத்துவதை தடை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நிரந்தரத் தொழிலாளிகளாக அவர்கள் பணியமர்த்தப்படுவார்களா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாலைகளில் 15 முதல் 22 வயது வரையிலுள்ள பெண் தொழிலாளர்கள், திருமகள் திருமணத்

[2011 செப்டம்பர் 12

திட்டத்தின்கீழ் தொழிலாளர் இணை ஆணையரால் சான்றிடப்பட்ட நிலையாணையின்படி கம்பெனி அப்ரண்டிஸ் ஆக 3 ஆண்டுகளுக்கு பணியமர்த்தி பயற்சியளிக்கப்பட்டு வருகின்றனர். எனவே, இத்திட்டத்தின்கீழ் குழந்தைத் தொழிலாளர்கள் பணிபுரிய அனுமதிக்கப்படுவதில்லை. மேலும், அரசாணை (2டி) எண் 61, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 7–11–2008–ன்படி இப்பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி அரசாணை அமல்படுத்தப்பட்டு வருவதால் பெண் தொழிலாளர்கள் கொத்தடிமைகள்போல் நடத்தப்படும் நிலை ஏற்படவில்லை.

(ஆ) இப்பெண் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துவது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலுள்ளதால் அவ்வழக்கில் வழங்கப்படும் இறுதி தீர்ப்பு பெறப்பட்ட பின்னர் அதன் அடிப்படையில் முடிவு மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### பரமக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் நிகழ்ந்த கலவரத்தில் ஈடுபட்டவர்கள்மீது நடத்திய துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. இரா. அண்ணாதுரை, திரு. ப. டில்லி பாபு ஆகியோர் சட்டப் பேரவை விதி 55—ன்கீழும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. பி.எல். சுந்தரம், திரு. கு. லிங்கமுத்து, திரு. கே. உலகநாதன், திரு. டி. இராமச்சந்திரன், திரு. எஸ்பி. முத்துக்குமரன், திரு. வெ. பொன்னுப்பாண்டி ஆகியோர் சட்டப் பேரவை விதி



2011 செப்டம்பர் 12] [பேரவைத் தலைவர்]

56—ன்கீழும், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ம. கலை அரசு, திரு. அ. கணேஷ்குமார் ஆகியோர் சட்டப் பேரவை விதி 55—ன்கீழும், புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களும், முனைவர் செ.கு. தமிழரசன் அவர்களும் பேரவை விதி 55—ன்கீழும் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள்.

இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கின்றேன். இதுகுறித்து அறிவிப்பு கொடுத்தவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் பரமக்குடியிலே துர்பாக்கியவசமாக நிகழ்ந்திருக்கின்ற துப்பாக்கிச் சூட்டினால் அங்கே 6 அப்பாவி தலித்துகள் மறைவுற்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இதை மாண்புமிகு தமிழக முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு முன்னால், நான் ஒருசில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 1991–1996—லே முதலமைச்சராக இருந்தபொழுதும் சரி, 2001–2006—லே முதலமைச்சராக இருந்தபொழுதும் சரி, அவர்கள் ஒடுக்கப்பட்ட தலித் மக்களுக்காகச் செய்திருக்கின்ற சிறப்புகளும், அவர்களுடைய வளர்ச்சிக்காக, அவர்களுடைய மேம்பாட்டிற்காக அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற திட்டங்களும் மிகப் பெரிய அளவிலே, தலித் வரலாற்றிலே குறிப்பிடத்தகுந்த, பாராட்டத்தகுந்த (மேசையைத் தட்டும் ஒலி) பணிகளாகும். இப்பொழுது அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராக வந்திருக்கின்றபொழுதும், தலித் சமூகத்தைச் சார்ந்த, அதிலும், மிகக் குறிப்பாக தேவேந்திரகுல சமூகத்தைச் சார்ந்த அருமைச் சகோதரர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. அசோகன் அவர்களை டெல்லி சிறப்புப் பிரதிநிதியாகவே (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் நியமித்திருக்கின்றார்கள்.

அதைப்போலவே, இந்தச் சமூகத்திலே அவர்கள் மாறாத அன்பு வைத்திருக்கின்றார்கள் என்பதைப் புலப்படுத்துகின்ற வகையிலே, இன்றைக்கு அமைச்சராகப் பொறுப்பேற்று, மிகக் குறுகிய காலத்திலே உடல் நலம் குன்றி, நோய்வாய்ப்பட்டு அல்லலுற்றுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் திரு. சொ. கருப்பசாமி அவர்களை தாய் உள்ளத்தோடு, ஒரு சகோதர, சகோதரி மனப்பான்மையோடு, அவர்கள் விரைவில் நலம் தேறவேண்டுமென்று, ஒரு மாத காலத்திற்கும் மேலாக துறை இல்லாத அமைச்சராக வைத்திருந்தும், அவருடைய உடல் நலத்திற்காக அவர்கள் அக்கறைகாட்டி, அவர்கள்மீது அன்புகாட்டி, அதற்காக அர்ப்பணித்துக்கொண்டிருக்கின்ற அந்த சகோதர உணர்வு இருக்கிறதே, அந்த உணர்வு உண்மையாகவே வியக்கத்தக்க ஒரு உணர்வு.

அப்படிப்பட்ட முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு தலித் மக்களுடைய, தாழ்த்தப்பட்ட மக்களுடைய உற்ற தோழராக இருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்திலே, துர்பாக்கியவசமாக இப்படிப்பட்ட துப்பாக்கிச் சூடு நேற்று அங்கே நிகழ்ந்திருக்கின்றது. இனி அப்படிப்பட்ட நிலைமை வராமல், அமைதியை, சமூக நல்லிணக்கத்தை தென் பகுதிகளிலே உருவாக்குவதற்கு மிகக் கடுமையான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட, மறைவுற்றிருக்கிற அந்த 6 பேரின் குடும்பங்களுக்கும் ஒரு இலட்சம் ரூபாயை அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள், தாயுள்ளத்தோடு. அதைவிடக் கூடுதலாக, 3 இலட்சம் ரூபாய் என்ற வகையிலே அல்லது 5 இலட்சம் ரூபாய் என்ற வகையிலே, அதை உயர்த்தித் தருவது அவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

*முற்பகல் 10–05*

அதைவிட, ஒரு நீதி விசாரணையை உருவாக்கி, உண்மை நிலை நாட்டிற்குத் தெரிகிற வகையிலே ஒரு நீதி விசாரணையை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உருவாக்க வேண்டும் என்பதை இங்கே நான் ஒரு கோரிக்கையாக முன்வைக்கிறேன்.

நிகழ்ந்த துப்பாக்கிச் சூடு கவலைக்குரியது, வருத்தத்திற்குரியது, வேதனைக்குரியது. அம்மா அவர்கள் தூக்கு மர நிழலிலே இன்றைக்கு துயரமான இதயங்களோடு, தூங்காத விழிகளோடு தவித்துக்கொண்டிருக்கிற 3 பேருக்காகவே, அந்த மரணத்தைத் தடுக்க வேண்டுமென்பதற்காகவே, இந்த மாமன்றத்திலே தீர்மானம் கொண்டுவந்திருக்கிற அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயம்





இப்படிப்பட்ட துப்பாக்கிச் சூட்டிலே 6 பேர் மறைந்து போனார்கள் என்பதற்காக அதிலே அவர்கள் எவ்வளவு வருத்தப்படுவார்கள் என்பதை இந்த நாடு அறியும். ஆகவே, நிகழ்ந்த அந்த இனக் கலவரத்தை கட்டுக்குள் கொண்டுவருவதற்கு ஒரு நீதி விசாரணையை உருவாக்குவதற்கும், அந்த இழப்பீட்டுத் தொகையை உயர்த்தித் தருவதற்கும் அம்மா அவர்கள் அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, புதிய தமிழகம் கட்சியின் சார்பாக டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1957 ஆம் ஆண்டு சமூக நீதிக்காகப் போராடி உயிர்நீத்த தியாகி இம்மானுவேல் சேகரன் அவர்களுடைய நினைவு நாள் ஒவ்வொரு செப்டம்பர் 11 ஆம் தேதி தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்து அரசியல் கட்சிகளினுடைய தலைவர்களும் அவ்விடத்திற்குச் சென்று மரியாதை செலுத்தப்படக்கூடிய நாளாக இருந்து வருகிறது. தென் தமிழகத்திலேயிருந்து இலட்சக்கணக்கான தொண்டர்கள் அவருடைய நினைவிடமான பரமக்குடிக்குச் சென்று வரக்கூடிய சம்பவம் தொடர்ந்து நடந்து வருகிறது. நேற்றையதினம்கூட, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களும், டில்லி பிரதிநிதி திரு. அசோகன் அவர்களும் நம்முடைய அரசினுடைய சார்பாக காலையிலே சென்று மரியாதை செலுத்தி வந்திருக்கிறார்கள்.

தியாகி இம்மானுவேல் சேகரன் அவர்களுடைய நினைவு நாளை அரசு விழாவாக அறிவிக்க வேண்டுமென்று தொடர்ந்து குரல் எழுப்பப்பட்டு வருகிறது. நேற்றையதினம் இலட்சக்கணக்கான தொண்டர்கள் கூடக்கூடிய தினம். அந்த மகத்தான மறைந்த வீரனுக்கு அஞ்சலி செலுத்தக்கூடிய நாளில், 6 பேர் காவல் துறையினருடைய துப்பாக்கிச் சூட்டிற்கு ஆளாகி மரணம் எய்தியிருக்கிறார்கள். மரணம் எய்திய அந்த 6 பேரின் நினைவாக முதற்கண் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, அதிலே மரணம் எய்திய ஜெயபால், பன்னீர்செல்வம், கணேசன், தீர்ப்புக்கனி, வெள்ளைச்சாமி மற்றும் ஒருவர் பெயர் இன்னும் தெரியவில்லை. அந்த 6 பேர் சார்பாக என்னுடைய மன இரங்கலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2011 செப்டம்பர் 12

மிக, மிகச் சாதாரணமாக நேற்று காலை 10–00 மணி அளவிலே நெல்லை அருகிலே ஒருவர் கைது செய்யப்பட்டார் என்பதைக் கேள்வியுற்று, பரமக்குடி ஐந்து முக்கிலே முதலிலே 50 பேர் மட்டுமே கூடியிருப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, சிறப்புக் கவன ஈர்ப்பிலே சுருக்கமாகப் பேச வேண்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** சரி, சுருக்கமாகப் பேசுகிறேன். 50 பேர் மட்டுமே முதலில் கூடியிருக்கிறார்கள். அந்த 50 பேரை காவல் துறையினர் மிக எளிதாக அகற்றியிருக்கலாம். அங்கே சாலை மறியலிலே ஈடுபட்டவர்களைச் சமாளித்திருக்கலாம். ஆனால், 50 பேரை 100 பேர் ஆகவிட்டு, 100 பேரை 150 பேர் ஆகவிட்டு, 200 பேர் ஆகவிட்டு, அந்த இடத்திலே 5 பேர் பலியாகக்கூடிய அளவிற்கு துப்பாக்கிச் சூட்டை நடத்தியிருப்பது, எந்தவிதத்திலும் ஏற்புடையது ஆகாது. அந்தச் சம்பவத்தை, காவல் துறையினருடைய அத்துமீறலை, புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அங்கு மட்டுமல்ல, அங்கிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள இளையாங்குடியிலே ஒரு துப்பாக்கிச் சூடு, மதுரையிலே ஒரு துப்பாக்கிச் சூடு, அப்படியென்று சொன்னால், ஒரே நேரத்திலே ஆயிரக்கணக்கான பேர் வரக்கூடிய ஒரு நாளிலே 3 சம்பவங்களை நடத்த வேண்டிய அவசியம் எதற்காக வந்தது? இங்கே, சென்னை, அடையாறில் இருக்கக்கூடிய ஒரு காவல் துறை அதிகாரி செந்தில்வேலன் என்பவர் அங்கே பரமக்குடிக்கு மாற்றப்படுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நடந்த சம்பவங்கள் எல்லோருக்குமே தெரியும். என்ன சொல்ல வருகிறீர்கள் என்று சொல்லி முடியுங்கள்.

முற்பகல் 10–10

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இல்லை, அதாவது இது இனக் கலவரம் அல்ல என்பதை நான் இங்கே முதலிலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இரண்டு ஜாதிகளுக்கு இடையே பரமக்குடியிலோ, இராமநாதபுரத்திலோ, சிவகங்கையிலோ மோதல் நடைபெறவில்லை. நாங்கள் 2011–ல் சட்டமன்றத் தேர்தலில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை ஆதரித்தோமென்று



2011 செப்டம்பர் 12] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

சொன்னால், தமிழகத்திலே கடந்த 50 ஆண்டுக் காலமாக நடைபெறாத சமூக நல்லிணக்கம் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலைமையில் நிச்சயமாக நடைபெறுமென்ற ஒரே காரணத்திற்காகத்தான் நாங்கள் முழுமையாக ஆதரித்தோம். அதற்காகத்தான் தென் பகுதி மக்கள் முழுமையாக அவர்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். எனவே, நேற்று நடைபெற்றது இனக் கலவரம் அல்ல. இதற்கு இனக் கலவரம் என்று முத்திரை குத்த வேண்டியது அவசியமில்லை. முழுக்க முழுக்க, காவல் துறை, சட்டத்தை தன்னுடைய கையில் எடுத்துக்கொண்டு ஒருவித காழ்ப்புணர்வோடு நடந்துகொண்டதாக நான் கருதுகிறேன். இந்தச் சம்பவம் தாழ்த்தப்பட்ட மக்களை, ஏழையெளிய மக்களை காக்காய் குருவிகளைப்போல சுட்டுக்கொல்வது என்பது ஏற்றுக்கொள்ள இயலாதது. எனவே, இந்தச் சம்பவத்திற்குக் காரணமான காவல் துறை அதிகாரிகள் தண்டிக்கப்பட வேண்டும். என்ன காரணத்திற்காக 6 பேரை சுட்டுக் கொல்லக்கூடிய அளவுக்கு காவல் துறை அத்துமீறி நடந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர், சீக்கிரம் உங்கள் பேச்சை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி**: எனவே, இதுபோன்ற ஒட்டுமொத்தமான அத்துமீறல்கள் இனிமேல் வரலாற்றில் நடந்து விடக்கூடாது. எப்பொழுதெல்லாம் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெற்றாலும், அதிகமாக துப்பாக்கிச் சூட்டில் இறக்கக்கூடியவர்கள், காவல் துறையினுடைய தாக்குதலில் இறக்கிறவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களாக இருக்கிறார்கள். இந்தச் சம்பவங்கள் வரலாற்றில் தொடரக்கூடாது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய வகையிலே முதலில் இந்தச் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட, அடையாறிலிருந்து மாற்றப்பட்ட செந்தில்வேலன் அவர்கள் உடனடியாக பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும். அந்த துப்பாக்கிச் சூட்டிற்குக் காரணமான சந்தீப்மிட்டல் உடனடியாக பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும். மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் நடந்த இந்த துப்பாக்கிச் சூட்டிற்கு வேறு யாரோ பின்னணியாக இருந்து இருக்கிறார்கள். வேறு ஏதாவது அரசியல் கட்சி பின்னணியாக இருந்திருக்கிறதா என்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பா.ம.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் 5 நிமிடம் பேசியிருக்கிறீர்கள். சிறப்புக் கவன ஈர்ப்பிலே அதை, அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

[பேரவைத் தலைவர்] [2011 செப்டம்பர் 12

அந்தச் சம்பவம் பற்றி எல்லோருக்கும் தெரியும். அதுகுறித்து வரிவாகப் பேச முடியாது. Please sit down Doctor. (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் 5 நிமிடம் பேசியிருக்கிறீர்கள். நீங்கள் பேசியது போதும், உட்காருங்கள். உட்காருங்கள், please. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள். (குறுக்கீடு) Please sit down Doctor. நீங்கள் எல்லாவற்றையும் சொல்லிவிட்டீர்கள். உங்களுக்கு mike கொடுக்கவில்லை. உட்காருங்கள். அவருக்குத்தான் மைக் கொடுத்திருக்கிறேன். திரு. அ. கணேஷ்குமார், நீங்கள் பேசுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Please sit down Doctor.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்யைதினம். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Please sit down Doctor. (குறுக்கீடு) இல்லை, இல்லை. இப்போது அவருக்குத்தான் மைக் கொடுக்கப்பட்டிருக்கிறது. Please sit down. (குறுக்கீடு)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அந்தக் காவல் துறை அதிகாரிகள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். உயர் நீதிமன்ற அமர்வு நீதிபதி தலைமையில் விசாரணை கமிஷன் அமைக்க வேண்டும். அதேபோல 1989 ஆம் ஆண்டு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விசாரணை கமிஷன் அமைக்க வேண்டும் என்பதுதானே உங்கள் கோரிக்கை. அதேபோல, எந்தெந்த வருடம் அமைத்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் சொல்லி, அவையின் நேரத்தை வீணாக்க வேண்டாம். தயவுசெய்து உட்காருங்கள். என்ன prayer வைக்கிறீர்கள் அதைச் சொல்லுங்கள். உங்கள் வேண்டுதல் என்ன? (குறுக்கீடு)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அவர்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு அரசு வேலை கொடுக்க வேண்டும். முதலில், தியாகி இம்மானுவேல் சேகரன் அவர்களுடைய நினைவு நாளை அரசு விழாவாகக் கொண்டாடி, அந்த நாளுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்தால்தான் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்களுக்கு ஒரு பாதுகாப்பு ஏற்படும். அதேபோல நம்பிக்கை ஏற்படும்.



2011 செப்டம்பர் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் பரமக்குடியில் தியாகி இம்மானுவேல் சேகரன் அவர்களின் குரு பூஜையின் போது ஏற்பட்ட பதற்றத்தின் காரணமாக காவல் துறையினர் துப்பாக்கிச் சூட்டை நடத்தி 6 பேர் இறந்திருக்கிறார்கள். தொடர்ந்து பலர் படுகாயம் அடைந்திருக்கிறார்கள். மேலும் பல இடங்களில் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. மேலும் தென் மாவட்டங்களில் பதற்ற நிலை இன்னும் தணியாமல் இருப்பது வேதனை அளிப்பதாக பட்டாளி மக்கள் கட்சி கருதுகிறது. சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டும் என்பது மிக அவசியமாக இருந்தாலும் அதைவிட மனித உயிர்கள் விலைமதிப்பற்றது என்பதற்காகவும், எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சுமூகமாகத் தீர்ப்பதற்கான வழியைத் தவிர துப்பாக்கிச் சூடு நடத்துவது சரியாக இருக்காது என்று பாட்டாளி மக்கள் கட்சி கருதுகிறது. மேலும், இறந்தவர்கள் அனைவருமே ஏழையெளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எனவே, இறந்த அவர்களின் குடும்பத்திற்குத் தலா ரூபாய் 10 இலட்சமும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு தலா ரூபாய் 2 இலட்சமும் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், இது தொடர்பான உண்மை நிலையை வெளிச்சத்திற்குக் கொண்டுவருவதற்கு உயர் நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு ஒரு விசாரணை கமிஷன் அமைத்து உண்மை நிலையை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டு, இறந்தவர்கள் குடும்பத்திற்குப் பட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொண்டு, இது தொடர்பாக அவையின் கவனத்தை ஈர்க்கின்றேன்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் பரமக்குடியிலே காவல் துறையினர் துப்பாக்கிச்சூட்டில் பலியான ஜெயபால், பன்னீர்செல்வம், கணேசன், மாணிக்கம், தீர்ப்புக்கனி மற்றும் பெயர் குறிப்பிடப்படாத மற்றொரு நபர் ஆகியவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலும், என் சார்பிலும் முதலிலே அனுதாபத்தையும், அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*[திரு. சு. குணசேகரன்] [2011 செப்டம்பர் 12*

*நேற்றையதினம், தியாகி இம்மானுவேல் சேகரனுடைய நினைவு தினத்தை முன்னிட்டு இலட்சக்கணக்கான தொண்டர்கள் குவிந்திருக்கிற நேரத்தில் இத்தகைய சம்பவம் நடைபெற்றிருக்கிறது. பரமக்குடியில் மட்டுமல்ல, மதுரை சிந்தாமணியிலும் துப்பாக்கிச் சூடு நடைபெற்று இரண்டு நபர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள். இதனுடைய பின்னணி என்னவென்று பார்க்கிற நேரத்தில், கடந்த வாரம் பழனிக்குமார் என்ற மாணவன் கொலை செய்யப்பட்டிருக்கிறான். அதை முன்னிட்டு தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் திரு. ஜாண் பாண்டியன் அவர்கள் அந்த இடத்திற்கு வரக்கூடாது என்று காவல் துறை எடுத்த நடவடிக்கை, அவர் அன்றையதினம் கைது செய்யப்பட்டார் என்று பரவிய செய்தி, அதை முன்னிட்டு ஏற்பட்ட பதட்டம்தான் இத்தகைய நிலைமைகளுக்கு அடிப்படையான காரணமாக அமைந்திருக்கிறது. எனவே, இதை மேலோட்டமாக அல்லது ஆழ்ந்து பார்க்கிற நேரத்தில் காவல் துறையினுடைய நடவடிக்கை என்பது சற்று ராஜதந்திரமாக இல்லாத ஒரு நிலையாகவே தெரிகிறது. ஏனென்று சொன்னால், இலட்சக்கணக்கான தொண்டர்கள் கூடுகிற நேரத்தில், உணர்வுபூர்வமாக இருக்கிற நேரத்தில் இப்படிப்பட்ட தலைவர்களைக் கைது செய்வது என்பது பதட்டத்தை அல்லது கலவரத்தை உருவாக்குவதற்கான சூழ்நிலையை உருவாக்கிவிடும். அந்த அடிப்படையில்தான் பரமக்குடியிலே ஏற்பட்ட அந்த நிகழ்ச்சி கட்டுக்கடங்காமல் சென்று, கடைசியாக காவல் துறை துப்பாக்கிச்சூட்டில் 6 பேர்கள் பலியாக்கப்பட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே காவல் துறையினுடைய நடவடிக்கை என்பது கண்டிக்கத்தக்கது. எனவே, காவல் துறையினுடைய நடவடிக்கையின் உண்மையான நிலையைத் தெரிவித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது, அவர்கள் தவறு செய்திருந்தால் நடவடிக்கை எடுப்பதற்கு உதவியாக உயர் நீதிமன்ற நீதிபதியைக் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை அமைத்து விசாரிக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.*

*நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவியைச் செய்திருக்கிறார்கள். அது போதாது என்ற அடிப்படையில் கூடுதலாக 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி செய்வதோடு, அவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பிலும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.*



*2011 செப்டம்பர் 12] [திரு. சு. குணசேகரன்]*

*பொதுவாக, இன்றைக்கு தலைவர்களுடைய நினைவு நாள் அல்லது குரு பூஜை என்பது தென் மாவட்டங்களில் கூடுதலாக நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் தங்களுடைய தலைவர்களுடைய நினைவுநாள், குரு பூஜை என்று கொண்டாடுகிற நேரங்களில் எல்லாம் இப்படிப்பட்ட சமூகப் பதட்டங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதை நமது அரசு ஆழ்ந்து, உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். சட்டத்தின் ஆட்சி நடைபெறுகிற ஒரு நாட்டில் தலைவர்களுடைய புகழை, நினைவஞ்சலியைப் போற்றுவது தவறில்லை. ஆனால், அதுவே இன்றைக்கு ஒரு சமூகப் பதட்டத்தை உருவாக்குகிற நிகழ்வாக மாறி, தென் மாவட்டங்களில் ஒவ்வொரு நேரமும், எல்லோரும் ஜாதிக் கலவரங்கள் வந்து விடுமோ அல்லது வேறுவிதமான கலவரங்கள் ஏற்பட்டுவிடுமோ என்று பொதுவாக மக்கள் உயிரை கையிலே பிடித்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. எனவே, இந்த நினைவு தினங்களைப் எப்படிக் கொண்டாட வேண்டும் என்பதற்கான ஒரு பொதுவான நடைமுறையை உருவாக்குவது என்பதைப் பற்றி சமூக ஆர்வலர்களை வைத்து ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். தலைவர்களைப் போற்ற வேண்டும், அதே நேரத்தில் அது உணர்ச்சிகளுக்கும், உணர்வுகளுக்கும் இடமளிக்காத வகையில், சமூகப் பதட்டத்தை உருவாக்காத வகையில், அந்த நினைவு நாட்களை போற்றத்தக்க வகையில், அரசே அதற்கான ஒரு வடிவத்தைக் கொடுப்பதற்கான நடவடிக்கையை, ஒரு குழுவை அமைத்து உருவாக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11–9–2011 அன்று ஜாண் பாண்டியன் கைது செய்யப்பட்டார் என்ற தகவல் பரவ, அதையொட்டி ஏற்பட்ட பதட்டத்தில் ஆறு பேர்கள் துப்பாக்கிச் சூட்டிலே உயிரிழந்திருக்கிறார்கள். இன்னும் பலர் அபாயகரமான நிலையிலேயே இருக்கிறார்கள் என்ற தகவல் வந்தவண்ணம் இருக்கின்றன. ஒரு தலைவருடைய பிறந்த நாள் ஆறு பேருடைய இறந்த நாளாக ஆகிப் போனது பெரும் வேதனைக்குரியது. போலீஸ் நடவடிக்கை கடும் கண்டனத்திற்குரியது. இந்த நிகழ்வை போலீஸ் முதிர்ச்சியோடு கையாண்டிருக்க வேண்டும் என்பதை நான்*

[திரு. அ. சவுந்தரராசன்] [2011 செப்டம்பர் 12

வலுவாகப் பதிவு செய்ய விரும்புகிறேன். ஜாண் பாண்டியன் அவர்கள் அதற்கு முன்தினம் கொல்லப்பட்ட பழனிக்குமார் என்கிற மாணவனின் இல்லத்திற்குச் சென்று அங்குள்ளவர்களைச் சந்திக்க விரும்பினால் உரிய பாதுகாப்போடு, கட்டுப்பாடோடு அனுமதித்திருந்தாலே இந்தப் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது. அவரைத் தடுத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். அதற்குப் பிறகு உணர்ச்சிவயப்பட்ட ஒரு கும்பல் அந்தச் செயலிலே ஈடுபடுகிறபோது போலீஸ் சற்று அல்ல, மிகப் பெரிய அளவிற்கு நிதானத்தோடு இருந்திருக்க வேண்டும். அவர்கள் சில தவறுகளைச் செய்திருந்தாலும்கூட அதற்கு உரிய தண்டனையை நாம் வழக்கு மூலமாக வழங்கியிருக்க வேண்டும்.

*முற்பகல் 10–20*

துப்பாக்கி எடுத்தது பரமக்குடியில் மட்டுமல்ல, மதுரையிலும் என்பது இன்னும் அதிர்ச்சி அளிக்கிறது. ஆகவே, காவல் துறையினுடைய இந்த முதிர்ச்சியற்ற போக்கு கடுமையான கண்டனத்திற்குரியது. இதற்குப் பொறுப்பான அதிகாரிகள், செந்தில்வேலன் அவர்களோ அல்லது சந்தீப் மிட்டல் அவர்களோ அல்லது இன்னும் வேறு சிலரோ அவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டு, உயர் நீதிமன்ற நீதிபதியினுடைய விசாரணை நடத்தப்பட்டு, அவர்களுக்கு அதற்குரிய தண்டனை வழங்க வேண்டும். உண்மையை நாம் முழுமையாக அறிந்தாக வேண்டும். இப்போது இது ஒரு ஜாதிக் கலவரமாக இல்லையென்றாலும் அது மேற்கொண்டும் பரவாமல், இதை மற்றவர்கள் பயன்படுத்திக்கொள்ளாமல் தடுப்பதற்கு அரசாங்கம் மிகுந்த விழிப்புணர்வோடு, முன்னெச்சரிக்கையோடு நிறைய நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். இதே அவையிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், எப்படி காவலர்கள் சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்கப்பட வேண்டுமென்று பேசினார்கள்; அதை அவர்கள் எப்படிப் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பதுதான் இந்தச் சம்பவத்தில் தெரிகிறதோ என்று நான் பெருத்த வேதனையோடு சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, காவல் துறை இதுபோன்ற சம்பவங்களில், துப்பாக்கி எடுப்பதில் மிகவும் நிதானமாக இருக்க வேண்டுமென்று அரசு கடுமையாகச் சொல்லியாக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.



2011 செப்டம்பர் 12]

**திரு. அ. சவுந்தரராசன்:** இப்போது உயிரிழந்தவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற ஒரு இலட்சம் ரூபாய் என்கிற நிவாரணம் போதாது. ஆகவே, அதை 5 இலட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், அந்தக் குடும்பத்தவர்களில் யாராவது ஒருவருக்கு அரசு வேலை கொடுப்பதும் அந்தப் பகுதி மக்கள் மத்தியிலே நிம்மதியைக் கொண்டுவரும். ஏற்கெனவே ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட, மற்றவர்களுடைய உதவி தேவைப்படுகிற, அரசினுடைய கைதூக்கிவிடுதல் தேவைப்படுகிற அந்த மக்களுக்கு நம்பிக்கை தரவும், மேற்கொண்டு இதுபோன்று வராமல் தடுக்கவும் அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் சற்றும் எதிர்பாராத வகையிலே ஒரு வேதனைக்குரிய சம்பவம் நடைபெற்றிருக்கிறது என்பதை நாம் உணருகிறோம். அதேநேரத்தில், சட்டம்–ஒழுங்கை நிலைநாட்டுவது என்பது வெறும் காவல் துறையினர் கைகளிலே மட்டுமில்லை. மக்களும் மக்களை வழிநடத்திச் செல்லும் தலைவர்களும் ஒத்துழைப்பு தருவதன்மூலம்தான் சில நேரங்களில் சட்டம்–ஒழுங்கை நிலைநாட்ட முடியும். குறிப்பாக, தென் மாவட்டங்களில் இரு பிரிவினருக்கிடையே பதட்டமான சூழ்நிலை கடந்த காலங்களிலும் தற்பொழுதும் ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டு. ஆகவே, அவற்றைக் கையாளுகிறபொழுது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தியாகி இம்மானுவேல் சேகரன் அவர்களுடைய நினைவு நாளையொட்டி புறப்பட்டு வந்த ஜாண் பாண்டியன் அவர்களை, காவல் துறையினர், இறந்துவிட்ட மாணவன் பழனிக்குமார் வசிக்கின்ற கிராமத்திற்குச் செல்ல வேண்டாம்; அங்கே பதட்டமான சூழ்நிலை இருக்கிறது; போகிற வழியிலே இனக் கலவரம் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறதென்று சொல்லி, அந்த வழியிலே போக வேண்டாமென்று கேட்டுக்கொண்டதாக நான் அறிகிறேன். ஒரு பொறுப்புள்ள தலைவராக இருந்தால், அதை ஏற்றுக்கொண்டு காவல் துறைக்கு ஒத்துழைப்பு கொடுத்திருக்க வேண்டும் என்றுதான் நாங்கள் கருதுகிறோம். அதற்கு மாறாக, காவல் துறையினரிடத்திலே வம்பு வளர்த்து, வேண்டுமென்றே அவர்களை நடவடிக்கை எடுக்க வைத்து, அதற்குப் பிறகு அவர் கைது செய்யப்பட்டுவிட்டார்

[திரு.ச. இராமச்சந்திரன்] [2011 செப்டம்பர் 12

என்ற வதந்தியைப் பரப்பி, ஏதும் அறியாத அப்பாவி இளைஞர்கள், அவரை விடுதலை செய்ய வேண்டுமென்பதற்காக சாலை மறியல் போராட்டம் நடத்துகின்ற அளவுக்கு நிலைமை முற்றியிருக்கிறது. கைது செய்யப்பட்ட தலைவர்கூட ஓர் அறிக்கை தந்திருக்கலாம். 'என்னுடைய கைதைக் காரணம் காட்டி யாரும் எந்தக் கலவரத்திலும் ஈடுபடாதீர்கள்' என்று கேட்டுக்கொண்டிருந்தால் அது ஒரு பொறுப்புள்ள தலைவரின் செயலாகக்கூட அமைந்திருக்கும். ஆனால், அப்படி நடைபெறவில்லை. அங்கே கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டத்தைச் சேர்த்து அவர்கள் வன்முறையிலே ஈடுபட்டிருக்கிறார்கள். படிப்படியாக வன்முறையிலே ஈடுபட்டிருக்கிறார்கள். தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள் அங்கே அஞ்சலி செலுத்தப் போகிறபொழுது, அவருடைய காரும் தாக்கப்பட்டு, அவர் என்னிடத்திலே அன்றைக்குச் சொன்னார், 'தப்பித்து வந்ததே பெரிய காரியம்' என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு நிலைமை முற்றியிருக்கிறது. போலீசாரும் அந்தக் கூட்டத்தினுடைய தன்மையைக் கருதி, ஆரம்பம் முதலே அதிலே எச்சரிக்கையாக இருந்து அவர்களைக் கூட்டம் சேராவண்ணம் அவ்வப்போது அப்புறப்படுத்தியிருக்கலாம்.

*முற்பகல் 10—25*

அதோடுமட்டுமல்லாமல், பொதுவாக துப்பாக்கிச் சூடு நடைபெறுவதற்குக் கடந்த காலங்களிலேயும் என்ன காரணம் என்று நாம் பார்க்கிறபோது போதுமான அளவு போலீசாரும் இருப்பதில்லை. ஆகவே, அந்த மாதிரி strength குறைவாக இருக்கிற சூழ்நிலையில் அவர்களும் பாதிப்புக்கு ஆளாகிறபோது வேறு வழியில்லாமல் துப்பாக்கிச் சூடு நடத்தவேண்டிய துர்பாக்கியம் ஏற்படுவதும் உண்டு. ஆகவே ஒன்று, கூடியிருக்கின்ற மக்களை அப்புறப்படுத்துவதற்குக் காவல் துறையினர் நடவடிக்கை எடுத்திருக்கலாம் அல்லது காவல் துறையினர் தங்களுடைய பலத்தையாவது அதிகரித்து சமாளித்திருக்கலாம் என்று தோன்றுகிறது. ஆனால், அங்கேயுள்ள நிலவரம் நமக்கு என்னவென்று தெரியவில்லை. அரசின் சார்பிலேதான் அதைத் தெளிவாக்க வேண்டும். ஆனால், நடந்த சம்பவங்களிலேயிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது, பொதுவாக இரு பிரிவினருக்கிடையே இருக்கக்கூடிய ஒரு பதட்டமானச் சூழ்நிலையை மேலும் தீவிரப்படுத்துகின்ற வகையிலே அல்லது பலாத்காரத்தைத் தூண்டுகின்ற வகையிலே அவர்களை



2011 செப்டம்பர் 12] [திரு. ச. இராமச்சந்திரன்]

வழி நடத்திச் செல்லுகின்ற தலைவர்கள் நடப்பதுதான் இதற்கெல்லாம் காரணம் என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே, பொறுப்புள்ள அரசியல் தலைவர்கள் ஈடுபட்ட காரியங்களிலே இது நடந்திருக்காது. இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம்கூட சொன்னார்கள். எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அங்கே சென்று அஞ்சலி செலுத்தியிருக்கிறார்கள். அரசின் சார்பிலேயும் அஞ்சலி செலுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், ஒரு பிரிவினர் மட்டும் செல்கின்றபோது இத்தகைய நிலைமை ஏன் ஏற்படுகிறது என்பதைப் பார்த்து, அத்தகையோர்மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதுதான் முக்கியம். அதேநேரத்திலே பாதிக்கப்பட்டவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரணம் ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். என்னென்ன வகையிலே அந்த நிவாரணங்களை அதிகப்படுத்தி அவர்கள் துயர் துடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவற்றை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எங்களைப் பொறுத்தவரையிலே இதற்கு நீதி விசாரணை தேவையில்லை என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட சமூகத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான திரு. இம்மானுவேல் சேகரன் அவர்களது 54–வது நினைவு நாள் 11–9–2011 அன்று நடைபெற்றதை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் முன்கூட்டியே காவல் துறையின் சார்பில் பலத்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 9–9–2011 அன்று இராமநாதபுரம் மாவட்டம், கமுதியை அடுத்த, மண்டலமாணிக்கம் பச்சேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. தங்கவேலு என்பவரின் மகனும், ஆணைக்குளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் +1 படித்து வந்த மாணவருமான திரு. பழனிக்குமார், முத்துராமலிங்கபுரத்தில் நடைபெற்ற நாடகத்தைப் பார்த்துவிட்டு நள்ளிரவில் ஊருக்கு திரும்பிக்கொண்டிருக்கையில் பச்சேரி அருகில் சில நபர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டு உயிரிழந்தார். இதுகுறித்து இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 147, 148, 341, 302 ஆகியவற்றின்கீழ் மண்டலமாணிக்கம் காவல் நிலையத்தில் குற்ற வழக்கு எண் 33/11 பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக மண்டலமாணிக்கம் கிராமத்தைச் சேர்ந்த ஆறுமுகம் மற்றும் நால்வர் 10–09–2011 அன்று கைது செய்யப்பட்டனர். மேற்படி

கொடூரத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுத்து, அவர்களை சட்டத்தின்முன் நிறுத்த விரைந்து நடவடிக்கை எடுக்கும்படி காவல் துறையினருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் நிலவிய பதற்றமானச் சூழ்நிலையை உணர்ந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கு சட்டம்—ஒழுங்கை நிலைநாட்டும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்தின் நிறுவனர் திரு. ஜாண் பாண்டியன் அவர்கள் 11—9—2011 அன்று இராமநாதபுரம் மாவட்டத்திற்குள் நுழைய தடை விதித்தார். இந்தச் சூழ்நிலையில் 11—9—2011 அன்று நடைபெற்ற திரு. இம்மானுவேல் சேகரன் அவர்களின் 54—வது நினைவு நாளில் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் உள்ள அவரது சமாதியில் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளைச் சார்ந்தோர் அவருக்கு மரியாதை செலுத்தினர். இதற்கிடையில், மாவட்ட ஆட்சித் தலைவரின் தடையை மீறி பரமக்குடி நோக்கிச் சென்ற திரு. ஜாண் பாண்டியன் அவர்களை காவல் துறையினர் தூத்துக்குடி மாவட்டம், வல்லநாட்டில் முன்னெச்சரிக்கையாக கைது செய்தனர். திரு. ஜாண் பாண்டியன் கைதினைக் கேள்விப்பட்ட அவரது ஆதரவாளர்கள் சுமார் 500 பேர் பரமக்குடி நகரப் போக்குவரத்தினைச் சீர்குலைக்கும் வகையில் பரமக்குடி ஐந்துமுனைச் சந்திப்பில் சாலை மறியலில் 11—9—2011 அன்று பிற்பகல் 12—30 மணியளவில் ஈடுபட்டனர். அப்பொழுது அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காவலர்கள் சாலைச் மறியலில் ஈடுபட்டவர்களை கலைந்து செல்லும்படி அறிவுறுத்தினர். ஆனால் சாலை மறியலில் ஈடுபட்டவர்கள் காவல் துறையினரின் அறிவுரையை மறுத்ததோடு மட்டுமல்லாமல், காவல் துறையினர்மீது கற்களை எறிந்து வன்முறையில் ஈடுபட்டனர். வன்முறையில் ஈடுபட்டவர்களைக் கலைப்பதற்காகக் காவல் துறையினர் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசினர். இருப்பினும், சாலை மறியலில் ஈடுபட்டவர்கள் பெருமளவு வன்முறையில் ஈடுபட்டு காவல் துறையின் வஜ்ரா வாகனம் மற்றும் தீயணைப்பு வண்டிக்கு தீ வைத்தனர். இதனையடுத்து, காவல் துறையினர்மீது கற்களையும், பெட்ரோல் குண்டுகளையும் வன்முறையாளர்கள் தொடர்ந்து வீசியதால் தற்காப்பு நடவடிக்கைக்காகவும், பொதுச் சொத்துகளைப் பாதுகாக்கும் வகையிலும் காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனையடுத்து, வன்முறைக் கூட்டம் கலைந்தது. இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் துரதிருஷ்டவசமாக உயிரிழந்தனர். மேலும் இந்த நிகழ்வில் இராமநாதபுரம் சரகக் காவல் துறை துணைத் தலைவர், திரு. சந்தீப் மிட்டல், பரமகுடி நகர காவல் துறை துணை கண்காணிப்பாளர் திரு. கணேசன்,





காவல் துறை ஆய்வாளர் திரு. அதிசயராஜ் மற்றும் பல காவலர்கள் காயம் அடைந்தனர். இதேபோன்று, திரு. ஜாண் பாண்டியன் கைதினை எதிர்த்து மதுரை சிந்தாமணி சந்திப்பிலும் அவரது ஆதரவாளர்கள் சாலை மறியலில் ஈடுபட்டு போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தினர்.

முற்பகல் 10—30

மேலும் பாதுகாப்புப் பணியிலிருந்த காவலர்கள்மீது கல் எறிந்தனர். அதன் காரணமாக, 3 காவலர்கள் காயம் அடைந்தனர். மேலும் பாதுகாப்புப் பணியிலிருந்த ஆய்வாளரைத் தாக்க முற்பட்டபோது தற்காப்புக்காக ஆய்வாளர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் இருவருக்கு சாதாரண காயம் ஏற்பட்டுள்ளது. 11—9—2011 அன்று நடைபெற்ற துயரச் சம்பவத்தில் உயிரிழந்த 6 பேரின் குடும்பங்களுக்கும், 9—9—2011 அன்று சிலரால் கொடூரமாகத் தாக்கப்பட்டு உயிரிழந்த மாணவன் பழனிக்குமாரின் குடும்பத்திற்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்த நிகழ்வில் காயம் அடைந்தவர்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபாய் வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன். சட்டம்—ஒழுங்கைச் சீர்குலைக்கும் வகையில் ஒரு சிலரின் அரசியல் ஆதாயத்திற்காக இதுபோன்ற வன்முறைச் செயல்களில் ஈடுபடுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. வன்முறைக்கு வித்திட்டு பொதுமக்களின் உயிருக்கும், உடைமைக்கும் ஊறுவிளைவிக்கும் செயல்களில் ஈடுபடுவதை நாம் அனைவரும் வன்மையாகக் கண்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற வன்முறைச் செயல்களில் யாரும் ஈடுபட வேண்டாம் எனவும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரால் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 144—ன்படி தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் துயரச் சம்பவம் துரதிருஷ்டவசமானது. இந்தத் துயரச் சம்பவம் தொடர்பாக மாவட்ட வருவாய் அலுவலர் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து விசாரணை அறிக்கை கிடைத்த பின்னர் தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசியவர்களில் சிலர் உயர் நீதிமன்ற அமர்வு நீதிபதியின் தலைமையில் விசாரணை கமிஷன் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். பொதுவாக, இத்தகைய நிகழ்வுகளுக்கு விசாரணை கமிஷன் அமைத்தாலும், உயர் நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டாலும், அமர்வு நீதிபதியை, Sitting Judge-ஐ அவர்கள் தருவதற்கு அவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. ஆகவே, அப்படி நியமிப்பதாகயிருந்தாலும் ஒரு ஓய்வுபெற்ற நீதிபதியைத்தான் நியமிக்க முடியும். ஆனால், நான் ஏற்கெனவே தெரிவித்தபடி, இப்பொழுது மாவட்ட வருவாய் அலுவலர் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் இங்கே பேசியவர்களில் சிலர் இது இனக் கலவரம் இல்லை என்றார்கள். இனக் கலவரம் இல்லையென்றால் எங்களுக்கும் அதில் மகிழ்ச்சிதான். ஆனால் நடந்த உண்மை, நடந்த பின்னணி என்னவென்றால், அந்தக் கிராமத்தில் இப்பொழுது பெயர் குறிப்பிட்டேனே அந்தக் கிராமத்தில் ஒரு சுவரில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களைப் பற்றி இழிவான சில வாசகங்கள் எழுதி வைக்கப்பட்டிருந்தன. அதனைத் தொடர்ந்துதான் இந்த மாணவர் பழனிக்குமாரின் கொலை நடந்திருக்கிறது. அதனைத் தொடர்ந்துதான் திரு. ஜாண் பாண்டியன் அங்கே படையெடுத்து புறப்பட்டிருக்கிறார். அதனைத் தொடர்ந்துதான், இந்தக் கலவரங்களெல்லாம் நடைபெற்றிருக்கின்றன. ஆகவே, ஒரு சங்கிலித் தொடர்போல் இந்த நிகழ்வுகள் நடைபெற்று இருக்கின்றன. இத்தகைய சம்பவங்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காகதான் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எங்கள் அரசு எடுத்து வருகிறது.

முற்பகல் 10–35

கடந்த ஆட்சிக் காலத்தில்கூட டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலைகளும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைகளும் இருக்கின்ற இடங்களிலெல்லாம் இத்தகைய கலவரங்கள் அடிக்கடி முன்பு வருவதுண்டு. யாராவது ஒருவர் அந்த திருவுருவச் சிலைக்கு ஒரு செருப்பு மாலையை அணிவித்துவிடுவார். பின்னர் பதற்ற நிலை உருவாகும், வன்முறைக் கலவரங்கள் ஏற்படும். ஆகவே, இதனைத் தடுப்பதற்காகதான் கடந்த ஆட்சிக் காலத்தில் 2001 முதல் 2006 ஆம் ஆண்டு வரையில் இருந்த கழக ஆட்சிக் காலத்தில் இத்தகைய சிலைகள் இருக்கின்ற இடங்களிலெல்லாம் அந்தச் சிலைகளைச் சுற்றி ஒரு கூண்டு அமைக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருந்தேன். காவல் துறை





அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித் தலைவரும் அந்தக் கூண்டிற்குப் பூட்டுப் போட்டு அந்தச் சாவியை அவர்கள் வைத்துக்கொள்வார்கள். பிறந்த நாள், நினைவு நாள் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகள் வருகின்றபோது அதைத் திறந்துவிடுவார்கள் யார் வேண்டுமானாலும் சென்று மாலை அணிவித்து, மரியாதை செலுத்திவிட்டு வரலாம். இத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளெல்லாம் எடுத்ததால்தான் இனக் கலவரங்கள் தடுக்கப்பட்டன.

ஆகவே, இப்போதும் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முன்பெல்லாம் கழக ஆட்சி இருந்த காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு கிராமத்திலும் என்றால் எங்கெல்லாம் இனக் கலவரங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதோ அத்தகைய கிராமங்களில் எல்லாம் அமைதிக் குழு (Peace Committee) அமைக்கப்படும். ஆகவே, இத்தகைய ஒரு கலவரம் மூண்டு வருவதற்கு வாய்ப்பிருக்கிறது என்று தெரிந்தபோது மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே செல்வார். இரு தரப்பினரையும் அழைத்து இந்த Peace Committee–ஐக் கூட்டி பேச்சுவார்த்தை நடத்துவார். ஆனால், கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின்போது இந்தப் பழக்கமெல்லாம் விடுபட்டுவிட்டது. ஆகவே, மீண்டும் இந்த Peace Committee-களை அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை அறிக்கை கிடைத்த பின்னர் தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் Committee constitute செய்யப்படும் என்று தெரிவித்துவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, please sit down. (குறுக்கீடு) முனைவர் தமிழரசன், நீங்கள் என்ன பேசப் போகிறீர்கள்? (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி, please sit down. (குறுக்கீடு) முனைவர் தமிழரசன் பேசப் போகிறார். டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

[2011 செப்டம்பர் 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக, ஒரு Commission constitute செய்யப்படும், என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையெல்லாம் சொல்லிவிட்டார்கள். மாவட்ட வருவாய் அலுவலரின் தலைமையில் ஒரு enquiry conduct செய்யப்படுமென்று சொல்லிவிட்டார்கள். இதில் வேறொன்றும் விவாதம் இல்லை. டாக்டர் க. கிருஷ்ணசாமி, please sit down. (குறுக்கீடு) முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் பேசுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, ஒரு முக்கிய நிகழ்வினை நினைவுக்குக் கொண்டு வந்து விளக்கம் கேட்க விரும்புகிறேன். நேற்றைய தினமணி நாளிதழில் தமிழகத்திலே 75 ஆயிரம் விசைத் தறிகள் இயங்க முடியாமல் தடுமாறுவதாகவும் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் இதுபற்றி ஏற்கெனவே அவையில் 6 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள், உட்காருங்கள். நான் உங்களுக்கு மைக் கொடுக்க மாட்டேன், உட்காருங்கள். நீங்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது, உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக "ஒரு மாவட்ட வருவாய் அலுவலரின் தலைமையில் விசாரணை செய்யப்படும்" என்று அறிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடு) டாக்டர், நீங்கள் உட்காருங்கள். நீங்கள் கேட்டதால்தான் மாவட்ட வருவாய் அலுவலரின் தலைமையில் விசாரணை கமிஷன் அமைக்கப்படுமென்று அறிவித்திருக்கிறார்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி, please sit down. (குறுக்கீடு) திரு. ஆறுமுகம், இதில் விவாதம் கூடாது உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை அளித்த பிறகு டாக்டர் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. தயவுசெய்து உட்காருங்கள், டாக்டர் கிருஷ்ணசாமி. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், please sit

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2011 செப்டம்பர் 12] [பேரவைத் தலைவர்]

down. (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி, உட்காருங்கள். (குறுக்கீடு). மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முற்பகல் 10—40

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு ஒரு முக்கிய நிகழ்வினை . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரைக்குப்பின் விளக்கம் தேவையில்லை.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வைக்குக் கொண்டு வந்து விளக்கம் பெற விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தயவுசெய்து உட்காருங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** நேற்றைக்கு கோவைப் பகுதியிலே 75,000—க்கும் மேற்பட்ட விசைத்தறித் தொழிற்சாலைகள். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவாக விளக்கம் அளித்த பிறகு, அதில் மீண்டும் விளக்கம் எதற்கு? இல்லை, இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு)

**முனைவர் செ.கு. தமிழரசன்:** 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட விசைத்தறித் தொழிலாளர்கள். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கத்தைக் கொடுத்துள்ளார்கள். அதன் பிறகு என்ன விளக்கம் தேவையிருக்கிறது? (குறுக்கீடு) Please sit down. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுக்குப் பிறகு no clarification. (குறுக்கீடு) Please sit down. (குறுக்கீடு) யாராவது ஒருவர் பேசுங்கள். (குறுக்கீடு) C.P.I. அல்லது C.P.M. சார்பாக யார் பேசப் போகிறீர்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள். (குறுக்கீடு) திரு. எம். ஆறுமுகம், உட்காருங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்படி ஒரு சூழ்நிலை நிலவி இருப்பது, உருவாகி இருப்பது உண்மையிலேயே கவலை தரக்கூடியதாக இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களும் தன்னுடைய

[செல்வி கே. பாலபாரதி] [2011 செப்டம்பர் 12

கவலையைத் தெரிவித்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 6 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். உயிரிழந்த 6 பேரும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். ஆகவே, எந்தப் பக்கம் எது நடந்ததென்று நமக்குத் தெரியாது. அது இனக் கலவரமாக இல்லையென்ற அளவிற்கு நாம் மகிழ்ச்சியடையலாம். ஆனால், இது இந்தச் சமூகத்தில் பரவி விடக்கூடாது என்பதிலும் உறுதியாக இருக்கிறோம். எனவே, வருவாய்த் துறை அலுவலர் என்பவர், மாவட்ட ஆட்சியரையோ அல்லது காவல் துறை அதிகாரியையோ விசாரிப்பதில் சிரமம் இருக்கிறது.

தமிழக அரசினுடைய நடவடிக்கைகளுக்கு ஒரு ஓய்வு பெற்ற நீதிபதி அவர்கள் தலைமையில் விசாரிப்பது என்பது இதுபோன்ற சம்பவங்களைத் தடுப்பதற்கு கட்டாயமாக உதவி செய்யும். ஆகவே, அது விசாரணைதான். அதனுடைய விவரங்கள் என்ன என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக அமைக்கக்கூடிய ஒரு அமைப்பு. கடந்த காலத்தில் அவ்வாறுதான் அமைத்து வந்திருக்கிறார்கள். ஆகவே, வருவாய்த் துறை அலுவலர் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, ஒரு ஓய்வு பெற்ற நீதிபதி அவர்களின் மூலமாகவாவது விசாரணை கமிஷன் அமைத்தால்தான், நடந்த சம்பவங்கள் என்ன என்பது மக்களுக்கும், அரசுக்கும் தெரிய வரும். அது குறித்து பரிசீலிக்க வேண்டும். இப்போது அமைத்திருக்கக்கூடிய இந்த விசாரணையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளுக்கு மதிப்பளித்து, ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி அவர்கள் தலைமையில் விசாரணை கமிஷன் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே விசாரணை கமிஷன் அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு



2011 செப்டம்பர் 12] [திரு. ரா. சரத்குமார்]

உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று, ஓய்வு பெற்ற நீதிபதி அவர்களின் தலைமையில் விசாரணை செய்யப்படுமென்று சொன்னது மகிழ்ச்சியை அளிக்கிறது. சில சமயங்களில், சட்டமன்றத்திலே நான் பேசும்போதெல்லாம் மக்கள் அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீவிரமாக விசாரணை நடத்துவார்கள் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கும்பொழுது, விசாரணை கமிஷன் என்ன சொல்கிறதென்று கேட்டபிறகு எடுக்க வேண்டிய முடிவுகள்தான் சிறப்பாக இருக்குமென்ற கருத்தை இங்கே நான் பதிவு செய்ய ஆசைப்படுகின்றேன். இந்தச் சமயத்தில் இறந்த 6 பேரின் குடும்பங்களுக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு, நன்றி கூறி, விடைபெறுகிறேன். (குறுக்கீடு)

## 3. தகவல் கோரல்

### நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இலவச வேட்டி, சேலை தயாரித்து அளிக்கத் தேவையான நூல் மற்றும் முன்பணம் வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன திரு. தமிழரசன்? சரி, சொல்லுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கிய நிகழ்வினை தங்கள் வாயிலாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வைக்குக் கொண்டு வந்து விளக்கமறிய விரும்புகிறேன்.

நேற்றைய 'தினமணி' நாளிதழிலே ஒரு கட்டுரை வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டுரையிலே, கோவை மற்றும் திருப்பூர் பகுதிகளிலே 75,000–க்கும் மேற்பட்ட விசைத்தறி தொழிற்சாலைகள் இயங்க முடியாத அளவிற்கு தடுமாறி வருவதாகவும், அதன்விளைவாக 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையிழக்கிற அபாயம் ஏற்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, கடந்த 2005 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்திலே, விசைத்தறி வளர வேண்டுமென்பதற்காக, பல்லடம், குமாரபாளையம், ஆண்டிப்பட்டி ஆகிய மூன்று பகுதிகளிலே இந்தியாவிற்கே ஒரு முன்னுதாரணமாக 'விசைத்தறிப் பூங்காக்களை' ஏற்படுத்தி, அதை வளப்படுத்தியவர் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*[முனைவர் செ.கு. தமிழரசன்] [2011 செப்டம்பர் 12 முற்பகல் 10—45*

இன்றைக்கு பல்லடம், குமாரபாளையம் பகுதிகள் விசைத்தறிப் பூங்காக்கள் இயங்கிக் கொண்டிருக்கின்ற பகுதிகளாக இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய தொகுதி என்பதால், கடந்த தி.மு.க. ஆட்சியிலே ஆண்டிப்பட்டி பூங்கா சீரழிக்கப்பட்டது. ஆக, விசைத்தறி வளர வேண்டுமென்ற நோக்கிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 7 கோடி ரூபாய் அன்றைக்கு செலவழித்தார்கள். அந்த 7 கோடி ரூபாயையும் திருப்பித் தர வேண்டுமென்று கடந்த தி.மு.க. ஆட்சி அந்த விசைத்தறி அதிபர்களை அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி நிர்பந்தப்படுத்தி, நெருக்கடிக்கு உள்ளாக்கி, இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் திரும்பப் பெற்றார்கள். இதுவெல்லாம் நடந்த கதை.

ஆனால், இன்றைக்கு இடைத்தரகர்கள் இல்லாமல், எந்தவிதமான ஆளுங்கட்சித் தலையீடும் இல்லாமல், விசைத்தறித் தொழிற்சாலைகள் இயங்க வேண்டுமென்று விழைகிற, விசைத்தறிகளுடைய விசையாகவும், திசையாகவும் இருக்கக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தக் கட்டுரை குறித்த விளக்கத்தினை அளிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக கைத்தறித் தொழில் கிராமப்புற மக்களுக்குப் பெருமளவில் வேலைவாய்ப்பினை வழங்கி வருகிறது. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 4 இலட்சம் கைத்தறி நெசவாளர்களின் நலன் காத்திட எனது தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அதேபோன்று, விசைத்தறி நெசவாளர்களின் நலனுக்காகவும் பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு எடுத்து வருகிறது. தமிழகத்தில் தற்பொழுது செயல்பட்டுவரும் ஐந்து கூட்டுறவு நூற்பாலைகள், கைத்தறி கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்குச் சிட்டா நூல் தொடர்ந்து வழங்க ஏதுவாகவும், கூட்டுறவு நூற்பாலைகள் தாங்கள் உற்பத்தி செய்யும் நூலை எளிதில் விற்பனை செய்யும் வகையிலும், சிட்டா நூல் உற்பத்திச் சட்டப்படி 40 விழுக்காடு நூல் சிட்டா நூலாகத் தயாரிக்கப்பட வேண்டுமென்று இருந்தாலும்,



*2011 செப்டம்பர் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]*

அதற்கு அதிகமான அளவில் சிட்டா நூல் உற்பத்தி செய்து வருகின்றன. மேலும், இந்நூற்பாலைகள் தொடர்ந்து செயல்படத் தேவையான காசுக் கடன் வசதி மற்றும் நடைமுறை மூலதனம் ஆகியவை கிடைத்திடும் வகையிலான நடவடிக்கைகளை எனது அரசு எடுத்து வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் துணி ரகங்களைக் கொள்முதல் செய்து நாடெங்கிலுமுள்ள துணி விற்பனை நிலையங்கள்மூலம் விற்பனை செய்வதோடு, அரசுத் திட்டங்களான இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்; இலவச சீருடை வழங்கும் திட்டம் மற்றும் முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்தும் முகமை நிறுவனமாக கோ—ஆப்டெக்ஸ் செயல்பட்டு வருகிறது.

கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கும் வகையிலும்; கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்கள் பொங்கல் பண்டிகையின்போது இலவசமாக வேட்டி சேலை பெற்றிடும் வகையிலும்; இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் பல ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்குத் தேவையான வேட்டி சேலைகள் அனைத்தும், மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. வேட்டி சேலைகளை உற்பத்திச் செய்யத் தேவையான பருத்தி பாவு நூல், கூட்டுறவு நூற்பாலைகளில் இருந்தும்; கூட்டுறவு நூற்பாலைகளால் தயாரித்து அளிக்க முடியாத பாவு நூல் மற்றும் பாலியஸ்டர் ஊடை நூல் ஆகியவை வெளிச் சந்தையிலும் கொள்முதல் செய்யப்பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றன. வெளிச் சந்தையில் இவ்வாறு பாவு நூல் மற்றும் பாலியஸ்டர் நூல் கொள்முதல் செய்ய கைத்தறி மற்றும் துணி நூல் ஆணையரைத் தலைவராகக் கொண்டு ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கும் குழு அரசால் நியமனம் செய்யப்படுகிறது. இக்குழுவிற்கு கோ—ஆப்டெக்ஸின் தனி அலுவலர்/மேலாண்மை இயக்குநர் அமைப்பாளராக, Convener ஆக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், கோ—ஆப்டெக்ஸின் புதிய நிபந்தனைகளால் “ஐந்து இலட்சம் நெசவாளர்கள் வேலை இழக்கும் அபாயம்” என சில பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது. இச்செய்தியானது, கோ—ஆப்டெக்ஸின் தனி அலுவலர்/மேலாண்மை இயக்குநரின்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 செப்டம்பர் 12

20–7–2011 நாளிட்ட சுற்றறிக்கையில், விசைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இலவச வேட்டி சேலை உற்பத்திக்குத் தேவையான நூலையோ அல்லது கூலியையோ முன்பணமாக வழங்க முடியாது எனவும்; அவ்வாறு தேவையெனில், சங்கங்கள் வங்கியிடமிருந்து உத்தரவாதம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்ததனால், நெசவாளர்கள் மத்தியில் ஏற்பட்ட அதிருப்தியின் அடிப்படையில் வெளியாகியுள்ளது.

2012 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின்போது வழங்கப்படும் இலவச வேட்டி சேலைத் திட்டத்திற்குத் தேவையான வேட்டி சேலைகள் தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் உற்பத்தித் திறனைக் கணக்கில் கொண்டு உற்பத்தித் திட்டம் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10–50

இத்திட்டத்திற்கு கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து பெறப்படும் நூல் தவிர, கூடுதல் நூல் தேவைக்கான கொள்முதல் ஒப்பந்தப்புள்ளி 26–9–2011 அன்று திறக்கப்பட்டு, அக்டோபர் முதல் வாரத்தில் உற்பத்திக்குத் தேவையான நூல் நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டுவிடும்.

மேலும், இலவச வேட்டி சேலைகள் தயாரிக்கத் தேவையான நூலை உற்பத்தி செய்து வழங்க கூட்டுறவு நூற்பாலைகளுக்கும், வேட்டி சேலை தயாரித்து வழங்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேவைப்படும் முன்பணம், கோ–ஆப்டெக்ஸ்மூலம் முன்பணமாக விடுவிக்கப்படுகிறது. வேட்டி சேலைகள் தயாரித்து வழங்கப்பட்டபின், வழங்கப்பட்ட முன்பணம் ஈடு கட்டப்படும். விசைத்தறி மற்றும் கைத்தறிச் சங்கங்களுக்கு நடப்பு ஆண்டிற்குத் தேவைப்படும் 256 கோடி ரூபாயை முன்பணமாக கோ–ஆப்டெக்ஸ்மூலம் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 256 கோடி ரூபாய் உடனே விடுவிக்கப்படும். எனவே, ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள உற்பத்தித் திட்டத்தின் அடிப்படையில், விசைத்தறி நெசவாளர்கள் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்வதில் எந்தவித இடர்பாடும் ஏற்பட வழியில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே no clarification, no debate. (குறுக்கீடு)



2011 செப்டம்பர் 12]

## 4. விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்ட அறிக்கைகளின் நகல்களை உறுப்பினர்களுக்கு வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது படித்த அறிக்கை விதி 110–ன்கீழ் படிக்கக்கூடிய அறிக்கைளை அவையில் படித்த பிறகு அதன் நகலினை, அவையில் வைக்கப்படும் ஏடுகளோடு சேர்த்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் பத்திரிகை மூலமாகத்தான் நாங்கள் அவற்றைப் படிக்க வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இந்தக் கூட்டத் தொடரில் விதி 110–ன்கீழ் என்னால் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளும், இனிமேல் வழங்கப்படவுள்ள அறிக்கைகளும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுவின் அறிக்கை அளித்தல். (குறுக்கீடு) Please sit down Mr. Arumugam. இப்போது time already 10-52, Agenda படி நான் போக வேண்டும். இன்னும் Ministers reply இருக்கிறது; Demand move பண்ண வேண்டும். இவ்வளவு இருக்கிறது. Please sit down. இன்னொரு நாள் பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடு)

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இலவச வேட்டி, சேலை தயாரித்து அளிக்கத் தேவையான நூல் மற்றும் முன்பணம் வழங்குதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய இந்த விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியது. அந்த அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தி, தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய விசைத்தறி உரிமையாளர்களுடைய போராட்டத்தை முடிவிற்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 5. அறிக்கை அளித்தல்

### பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவராக நியமித்தமைக்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சிங்காநல்லூர் தொகுதியிலே இருந்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றிபெறச் செய்த சிங்காநல்லூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011–2012 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முதலாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். நன்றி.



## 6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்ற (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2011

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்ற (நீக்கச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையை நாளும் நம்பி வாழும் விவசாயிகளுக்காகப் பல்வேறு திட்டங்களை அறிவித்து, வேளாண்மைத் துறையிலே தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கின்ற அளவிற்கு உருவாக்கி வருகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்ற (நீக்கச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[2011 செப்டம்பர் 12

முற்பகல் 10—55

# 7. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

## (அ) சத்துணவு, அங்கன்வாடி மையங்களை மேம்படுத்துதல் மற்றும் காலிப் பணியிடங்களை நிரப்புதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110—ன்கீழ் இரண்டு அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள்; அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நம் நாடு என்னும் தோட்டத்திலே, நாளை மலரும் முல்லைகளே" என்று குழந்தைகளைப் பற்றிப் பாடினார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இன்றைய குழந்தைகளே நாளைய சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரங்கள் ஆவர். சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி ஆகியவற்றை எவ்வித இடர்பாடுமின்றிப் பெற்று, மகிழ்ச்சி நிறைந்த சூழ்நிலையில் வளரும் குழந்தைகளே வளமான மற்றும் வலிமையான தலைமுறையினராக உருவாகின்றனர்.

தமிழகத்திலுள்ள 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் வளரிளம் பெண்கள் ஆகியோரிடையே காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் கண்டறிந்து, அதனை அகற்றி, ஊட்டச்சத்து குறைபாடற்ற மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றும் வகையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் உள்ள அங்கன்வாடி மையங்கள்மூலம், பல்வேறு பணிகளை மேற்கொள்ள, 2002 ஆம் ஆண்டு எனது அரசால் செயல் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 2003 ஆம் ஆண்டு, ஊட்டச்சத்துக் குறைபாடற்ற தமிழகத்தை உருவாக்கும் வகையில், ஒரு புதிய கொள்கை வெளியிடப்பட்டது.

இதனடிப்படையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ், பல உதவிகள் வழங்கப்படுகின்றன. 6 மாதம் முதல் 36 மாதம் முடிய உள்ள குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்களுக்கு இணை உணவு வழங்குதல்; 2 வயது முதல் 6 வயதிற்குட்பட்ட



2011 செப்டம்பர் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

குழந்தைகளுக்குச் சத்துணவு அளித்தல்; முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கு மதிய உணவு அளித்தல்; சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளுதல்; உயர் மருத்துவச் சிகிச்சைக்காகப் பரிந்துரைத்தல்; பள்ளிசாரா முன்பருவக் கல்வி அளித்தல்; ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி அளித்தல்; வளரிளம் பெண்களுக்கு ஊட்டச்சத்து மற்றும் வாழ்க்கைக் கல்வி வழங்குதல் ஆகியவை இந்தத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ், 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு வருடத்தில் 300 நாட்களுக்குச் செரிமானத் தன்மை Amylase நிறைந்த இணை உணவு வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் பல்வேறு நிலைகளிலுள்ள பயனாளிகளுக்கு இணை உணவு வழங்க 190 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2 வயது முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும், முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் புரதச் சத்துமிக்க சத்தான, சூடான மதிய உணவு அனைத்து மையங்களிலும் வருடத்தில் 365 நாட்களுக்கும் வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான், ஓய்வூதியம் பெறும் முதியோர்களுக்குச் சமைக்கப்பட்ட சூடான மதிய உணவு குழந்தைகள் மையத்தில் வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிறந்தது முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் ஓய்வூதியம் பெறும் முதியோர் உள்ளிட்ட 28 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பயன்பெறும் குழந்தைகள் மையங்களின் பாதுகாப்பினை உறுதி செய்யவும், மையங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் எனது அரசு முடிவு செய்துள்ளது. அந்த வகையில், சொந்தக் கட்டடங்களில் செயல்படும் சிறிய பழுதுகளுடன் உள்ள 10,372 மையங்கள் மற்றும் பெரிய பழுதுகளுடன் உள்ள 7,449 மையங்கள், ஆக, பழுதுபட்டுள்ள மொத்தம் 17,821 மையங்களும் இந்த ஆண்டே 47 கோடியே, 61 இலட்சம் ரூபாய் செலவில் பழுது நீக்கிச் சீரமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் இயங்கும் குழந்தைகள் மையங்களுக்கு, ஆர்வமுடன் குழந்தைகள் வருவதற்கும், விளையாட்டுச் சாதனங்கள் வாயிலாக முன்பருவக்

கல்வி பயில்வதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இம்மையங்களில் கோடைக் காலத்தில் வெப்பத்தினாலும், மழை மற்றும் குளிர் காலங்களில் போதிய வெளிச்சமின்மையாலும், குழந்தைகள் அவதியுறாமல் இருக்கும் வகையில், மின் விசிறி மற்றும் மின் விளக்கு வசதி ஏற்படுத்தித் தர எனது அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி, மின் வசதியில்லாத 45,345 குழந்தைகள் மையங்களில், 27 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில், உட்புற மின் கட்டமைப்பு வசதி ஏற்படுத்தப்படுவதுடன் (மேசையைத் தட்டும் ஒலி) மின்விசிறி மற்றும் மின் விளக்கு ஆகியவை பொருத்தப்படும்.

சுற்றுச்சூழல் மாசு காரணமாக, குழந்தைகளுக்கு நோய் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில், சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பேணவும், குழந்தைகளிடம் இளம் வயதிலேயே கழிப்பறையைப் பயன்படுத்தும் பழக்கத்தை ஊக்குவிக்கவும், குழந்தைகள் மையங்களில் குழந்தைகள் நேயக் கழிப்பிடங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இக்கழிப்பிடங்கள் குழந்தைகள் பயன்படுத்துவதற்கு ஏதுவான வகையில் வடிவமைக்கப்படும். இதற்காக இந்த ஆண்டு 23 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் 29,727 குழந்தைகள் மையங்களில் குழந்தைகள் நேயக் கழிப்பிடங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–00

சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின்கீழ் இயங்கும், சத்துணவு மையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் 28,596 பணியிடங்கள் காலியாக உள்ளன. இந்தக் காலிப் பணியிடங்கள் அனைத்தும் விரைவில் நிரப்பப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு எனது அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளாலும், செயல்படுத்தி வரும் திட்டங்களாலும் தாய்–சேய் நலம் காப்பதில் தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஆ) திரு. சிங்காரவேலர், திரு. ஜீவரத்தினம் ஆகியோருக்கு மணிமண்டபம் மற்றும் திரு. சிதம்பரநாதன் அவர்களுக்கு சிலை அமைத்தல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய





தியாகிகளையும்; சமுதாய மேம்பாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களையும் போற்றிப் பெருமைப்படுத்த வேண்டியதும்; அவர்களது பெருமைகளை எதிர்கால தலைமுறையினர் அறிந்து பின்பற்றும் வகையில் நினைவுச் சின்னங்களை எழுப்பி மரியாதை செய்ய வேண்டியதும் ஒரு நல்ல அரசின் கடமையாகும்.

தமிழ் சமுதாயத்திற்கு வாழ்வளிக்க தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்த பெருமக்களுக்குப் பெருமைச் சேர்ப்பதில் எனது அரசு மிகுந்த முன்னுரிமை கொடுத்து செயல்படுகிறது.

சிந்தனைச் சிற்பி என்று மக்களால் போற்றப்படும் திரு. சிங்காரவேலர் அவர்கள், மயிலாப்பூர் மீனவர் கிராமத்தில் 18–2–1860 இல் பிறந்து, கல்வி பல கற்று சிறந்த வழக்குரைஞராகத் திகழ்ந்தவர். அந்நியருக்கு எதிராக அண்ணல் காந்தியடிகள் ஒத்துழையாமை போராட்டத்தைத் தொடங்கியபோது, தனது வழக்குரைஞர் அங்கியைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டு தீவிரமான விடுதலைப் போராட்ட வீரராக மாறியவர். கான்பூரில் நடைபெற்ற பொதுவுடைமைக் கட்சியின் முதல் மாநாட்டிற்குத் தலைமையேற்று, தன்னைப் பெற்றெடுத்த தமிழகத்துக்கும், தான் பிறந்த மீனவ இனத்திற்கும் தனிப் பெருமை சேர்த்தவர். சிந்தனையாலும், செயலாலும், அல்லும் பகலும் ஏழைத் தொழிலாளர் வர்க்கத்திற்குப் பாடுபட்ட உழைப்பாளர், சிந்தனைச் சிற்பி திரு. சிங்காரவேலர் அவர்கள்.

சுயமரியாதைச் சுடரொளி திரு. ஜீவரத்தினம் அவர்கள், 11–11–1911 இல் ஏழை மீனவர் குடும்பத்தில் பிறந்து, தமிழையும், ஆங்கிலத்தையும் சிறப்பாகக் கற்று, சொற்பொழிவு ஆற்றுவதில் வல்லவராகத் திகழ்ந்தவர். திராவிட இயக்கத்தின் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த திரு. ஜீவரத்தினம், தமிழர் நலனிலும், மீனவர் நலனிலும் மிகுந்த அக்கறை கொண்டு சமுதாய மாற்றத்தைக் காண கடுமையாக உழைத்தவர். பேரறிஞர் அண்ணாவின் அன்பையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நம்பிக்கையையும் பெற்றுத் திகழ்ந்தவர். பழமையை விடுத்து புதுமையை ஏற்று சமுதாய மாற்றத்தைக் காண உழைத்தவர்.

ஏழைத் தொழிலாளர்களுக்காகப் பாடுபட்ட ஓய்வறியா தொண்டரும், சிந்தனைச் சிற்பியுமான திரு. சிங்காரவேலர் அவர்களுக்கும்; திராவிட இயக்கத்தின் வளர்ச்சிக்கு அரும் பாடுபட்ட ஆற்றல்மிகு பேச்சாளராகவும், மீனவ இனத்தின் தலைவராகவும் விளங்கிய சுயமரியாதைச் சுடரொளி

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 செப்டம்பர் 12

திரு. ஜீவரத்தினம் அவர்களுக்கும்; அவர்தம் நினைவைப் போற்றி மணிமண்டபங்கள் அமைக்க வேண்டுமென பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கோரிக்கைகளை மிகுந்த உவகையுடன் ஏற்று, தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் தலைவர்களான சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களுக்கும்; சுயமரியாதைச் சுடரொளி திரு. ஜீவரத்தினம் அவர்களுக்கும்; சென்னை, பட்டினப்பாக்கத்தில் மணிமண்டபங்கள் கட்ட எனது அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ் மொழியின்மீது தணியாத பற்று கொண்டு, பல தலைவர்கள் தமிழ்நாட்டிற்காகத் தியாகங்கள் பல செய்துள்ளனர். அதில் குமரி மாவட்டத்தை தமிழ்நாட்டோடு இணைத்திட போராட்டம் நடத்திய மொழிப்போர் தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்கள் முக்கியமானவர் ஆவார்.

தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்கள், 5–1–1948 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில், திருவிதாங்கூர்–கொச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆனார். திருவிதாங்கூர்–கொச்சி அரசில் வனம் மற்றும் வருவாய்த் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்த திரு. சிதம்பரநாதன், திருவிதாங்கூர்–கொச்சி அரசில் அமைச்சர் பொறுப்பு வகித்த ஒரே தமிழர் ஆவார். அக்காலத்தில் திருவிதாங்கூர் தமிழ் மக்கள் மேல் விதிக்கப்பட்டிருந்த மானிய வரியை இவர் நீக்கினார்.

தாய்த் தமிழகத்துடன் தமிழ்ப் பகுதிகளை இணைப்பது ஒன்றே திருவிதாங்கூர் தமிழர்களின் சிக்கல்களுக்கு ஒரே தீர்வு என்ற நிலையில், தன் அமைச்சர் பதவியைத் துச்சமெனத் துறந்தார்.

தாய்த் தமிழகத்துடன் தமிழ்ப் பகுதிகளை இணைக்கக் கோரி 4–7–1954 இல் கண்டன நாளாக அறிவிக்கப்பட்டு, பொதுமக்களைச் சந்திக்க மூணாறு சென்றபோது, திரு. சிதம்பரநாதன் அவர்கள் கைது செய்யப்பட்டு 6–7–1954 இல் திருவனந்தபுரம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டு பல இன்னல்களுக்கு ஆளானார்.

*முற்பகல் 11–05*

திரு. சிதம்பரநாதன் அவர்கள், 1956 முதல் 1969 வரை தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தார். பல தியாகங்களைச் செய்த மொழிப் போர் தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் திருவுருவச் சிலை



2011 செப்டம்பர் 12][செல்வி ஜெ ஜெயலலிதா]

அமைக்கப்படும் என கன்னியாகுமரி மாவட்ட மக்களிடம் தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வாக்குறுதியினை நிறைவேற்றும் வகையில், மொழிப் போர் தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்களின் திருவுருவச் சிலையை, கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் அமைக்க எனது அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 8. விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அளித்த அறிக்கைகளுக்கு நன்றி தெரிவித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்திற்கு உழைத்த சான்றோர்களுக்குப் பெருமை சேர்ப்பதிலும், அந்தப் பெருமை நிலைத்து நிற்கிற வகையிலே மணி மண்டபங்கள் அமைத்து, திருவுருவச் சிலைகள் அமைத்து, புகழ் சேர்ப்பதிலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஈடு இணையாக வேறு எந்த அரசியல் தலைவரும் விளங்கிட முடியாது என்கிற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே பல்வேறு சான்றோர்களுக்கு நினைவு மண்டபங்களையும், திருவுருவச் சிலைகளையும் அமைத்தவர்கள், பெருமைபடுத்தியவர்கள் நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்த வரிசையிலே இன்றைக்கு 110 விதியின்கீழ் இரண்டு முக்கிய அறிவிப்புகளை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். ஒன்று, அங்கன்வாடிகளை, சத்துணவுக் கூடங்களை மேம்படுத்துகிற வகையிலே 120 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை ஒதுக்கி, ஒரு தேசத்தினுடைய எதிர்காலத்திற்கும், வளர்ச்சிக்கும், அந்த தேசத்தின் பொருளாதார வளர்ச்சியை மட்டும் அளவுகோலாகக் கொள்ள முடியாது. அந்த தேசத்தினுடைய குழந்தைகள் ஆரோக்கியமாகப் பிறப்பதிலும், அவற்றை ஆரோக்கியமாக வளர்ப்பதிலும் அக்கறை காட்டுவதன்மூலம்தான் அதை நிலைநிறுத்த முடியும் என்கிற வகையிலே ஆரோக்கியமான குழந்தைகள் பிறப்பதற்கும், ஆரோக்கியமான குழந்தைகள் இந்த நாட்டிலே வளர்வதற்கும் அடித்தளமாக இன்றைக்கு அதை மேம்படுத்தியிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், தமிழகத்தின் முதல் பொதுவுடைமை சித்தாந்தவாதி சிங்காரவேலர் அவர்களுக்கும்,

தமிழகத்தினுடைய சுய மரியாதைச் சுடரொளி, அமரர் ஜீவரத்தினம் அவர்களுக்கும், செக்கிழுத்தச் செம்மல் வ.உ.சி. அவர்களுக்கும் இன்றைக்கு நினைவு மண்டபம் கட்டுகிற வகையிலே, நினைவு மண்டபங்களை உருவாக்கித் தந்திருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களை தமிழக மக்கள் சார்பிலே எங்களுடைய நெஞ்சார்ந்த . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சிதம்பரநாதன், மொழிப் போர் தியாகி, கன்னியாகுமரியிலே. (சிரிப்பு) நீங்கள் சரியாக கவனிக்கவில்லை. (குறுக்கீடுகள்) திரு. சிதம்பரநாதன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மீனவர் சமுதாயத்திலே பிறந்த சிங்காரவேலர் அவர்களுக்கும், ஜீவரத்தினம் அவர்களுக்கும், அதற்கு மேலே கன்னியாகுமரி மாவட்டத்திலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாங்கூர்–கொச்சி அமைச்சரவையிலே அமைச்சராக இருந்த மொழிப் போர் தியாகி திரு. சிதம்பரநாதன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** ஆமாம், ஆமாம். கொஞ்சம் வார்த்தை குளறுபடி ஆகிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. அவர்களுக்கு கடந்த ஆட்சிக் காலம் 2001 முதல் 2006 வரையிலான ஆட்சிக் காலத்திலேயே மணிமண்டபம் அமைக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய வார்த்தைக் குளறுபடியை அன்புகூர்ந்து பொறுத்துக்கொள்ள வேண்டுகிறேன். சிதம்பரநாதன் அவர்களுக்கும், நினைவுச் சின்னம் அமைக்கயிருப்பதை நான் மனதார வரவேற்று, பாராட்டி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.





***திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நல்ல திட்டங்களை, குழந்தைகளின் நலன் கருதி, முதியோர்களின் நலன் கருதி அறிவித்திருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி, பாராட்டுகிறோம். மேலும், என் தொகுதியான விளவங்கோடு தொகுதியைச் சார்ந்த களியக்காவிளையில் மொழிப் போர் தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்களுக்கு சிலை அமைக்க அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி. என் தொகுதி என்பதால் நான் மிகவும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மரியாதைக்குரிய தமிழகத்தினுடைய முதல்வர் அம்மா அவர்கள் இரண்டு அறிவிப்புகளை இந்த மன்றத்திலே அறிவித்திருக்கின்றார்கள். "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ற பழமொழிக்கேற்ப, குழந்தைகளைப் பிறப்பிலிருந்தே எப்படி வளர்க்க வேண்டும் என்பதற்கு ஒரு முன்னுதாரணமாக, அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய அறிவிப்பு என்பது, அவர்களுக்கு இருக்கக்கூடிய வளர்ச்சியை எப்படி எல்லாம் புரிந்துகொண்டு, எதிர்காலத்திலே ஒரு நல்ல இந்தியனாக, நல்ல மகனாக வளர வேண்டுமோ, அதற்கேற்றாற்போல அறிவித்திருக்கக்கூடிய அந்த அறிவிப்பையும், அதற்காக ஒதுக்கி இருக்கக்கூடிய தொகையையும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி மனதாரப் பாராட்டுகிறது, வரவேற்கிறது.

முற்பகல் 11–10

தேசியத் தலைவர்கள் என்று வருகின்றபோது, சிந்தனை சிற்பி திரு. சிங்காரவேலன் அவர்களைப் பற்றி சொல்லியது என்பது பொதுவுடைமை கட்சியில் இருக்கக்கூடிய எங்களுக்கு எல்லாம் பெருமை சேர்ப்பது மட்டுமல்ல, அப்படித் தலைவர்களை போற்றி மகிழ்வது என்பது பாராட்டுதலுக்குரியது, வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

தொழிற் சங்கத் தலைவர்கள், தேசிய விடுதலை இயக்கத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள், ஒன்றுபட்ட இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய (மார்க்சிஸ்ட்) முதல் மாநாட்டில், கான்பூர் மாநாட்டில் ஒரு தமிழன் என்ற பெருமையை

[திரு. எம். ஆறுமுகம்] [2011 செப்டம்பர் 12

உணர்த்தக்கூடிய அளவில், தலைமையேற்று, நடத்தியிருக்கக்கூடிய அவருக்கு மணிமண்டபம் கட்டுவது என்பதும், அதுவும் ஒரு மீனவ சமுதாயத்தில் பிறந்து, வளர்ந்திருக்கக்கூடிய அவருக்குப் பெருமை சேர்க்கக்கூடிய முறையில் மணிமண்டபம் கட்டுவதற்கான அறிவிப்பை வெளியிட்டிருப்பதற்கு நாங்கள் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்.

அதேபோல், சுயமரியாதை இயக்கத்தில் பிறந்து வளர்ந்த திரு. ஜீவரத்தினம் அவர்களுக்கும் மணிமண்டபம் கட்டுவது என்பது பாராட்டுதலுக்குரியது, வரவேற்கக்கூடிய ஒன்றாகும். மொழிப் போர் தியாகி மரியாதைக்குரிய திரு. சிதம்பரநாதன் அவர்களுக்கும் சிலை அமைக்கப்படும் என்று அறிவித்திருப்பதை நாங்கள் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பிறந்து வளர்ந்து, தமிழுக்காக தன்னுடைய வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டவர் மரியாதைக்குரிய மறைந்த தலைவர் திரு. ஜீவானந்தம் அவர்கள். "தமிழ்நாடு" என்று பெயர் வைக்க வேண்டுமென்பதற்காக இந்தச் சட்டமன்றத்திலே முதன் முதலில் குரல் கொடுத்தவர், மறைந்த தலைவர் திரு. ஜீவானந்தம் அவர்கள். மரியாதைக்குரிய திரு. ஜீவானந்தம் அவர்கள் சிராமையில் ஆசிரமத்தில் இருந்தபோது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் separate-ஆக அதைப் பேசுங்கள். Please (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள், thanks சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு, எல்லாவற்றையும் சொல்லிக்கொண்டு இருக்க முடியாது. நீங்கள் separate-ஆக அதற்கு ஒரு time எடுத்துச் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் நான் வாய்ப்புக் கொடுத்ததை தவறாகப் பயன்படுத்தக் கூடாது. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110—ல் கொடுத்த அறிக்கையில் சொன்னதை வைத்து நீங்கள் சொல்ல வேண்டும். அதை விட்டுவிட்டு, நீங்கள் எல்லாவற்றையும் எடுக்கக் கூடாது. மணி என்ன ஆகிறது இப்போது? இப்போது நேரம் 11—12 ஆகிவிட்டது. Please sit down. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் எனது அறைக்கு வாருங்கள் பேசிக்கொள்ளலாம். என்னுடைய அறைக்கு வந்து என்னென்ன கோரிக்கைகள் இருக்கின்றனவோ அவற்றைக் கொடுத்து விடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ் அவர்கள்.



2011 செப்டம்பர் 12]

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களை அடுத்தடுத்து தந்து, தமிழக மக்களுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, தியாகச் செம்மல்களுக்கு மரியாதை செலுத்துவதற்கு முன் வந்து, சிறப்பான திட்டங்களை அளித்திருக்கிறார்கள். குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 1956 ஆம் ஆண்டு, சுமார் எட்டு மாதங்கள் தமிழகத்திலிருந்து போராடி, அவர்கள் வீட்டில் தங்கியதேயில்லை என்பதை நான் இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய திரு. சிதம்பரநாதன் அவர்கள் ஒரு ஒப்பற்ற தலைவர். அவர், திரு. மார்ஷல் நேசமணி அவர்களின் தலைமையின்கீழ் இணைந்து அந்தப் போராட்டத்தை நடத்தி, வெற்றி பெற்றார்கள், பெருமை சேர்த்தார்கள். இந்த மன்றத்தில் நான் வேண்டுவது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் திரு. மார்ஷல் நேசமணி அவர்களுக்கு மணிமண்டபம் கட்டுவதற்கு ஒப்பளித்ததற்கு நன்றியை மீண்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு request கூட வைக்கிறேன். சென்ற ஆட்சியிலே 48 இலட்சம் செலவாகும் என்று சொன்னார்கள். ஆனால் எவ்வளவு என்று தெரியவில்லை. அவர் ஒரு சிறந்த Parliamentarian. ஒரு கோடி ரூபாய்க்கு அதிகமாக ஆகும் என்றும் சொல்கிறார்கள். எவ்வளவு என்று தெரியவில்லை. அதைச் செய்வது அவருக்கு மகிமையாக இருக்குமென்று கருதுகிறேன். தியாகி சிதம்பரனார் அவர்களுக்கு களியக்காவிளையில் ஒரு சிலை வைப்பது வரவேற்கக்கூடியது. அதுமட்டுமல்ல, இந்த மன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், தியாகிகளை, தேசத்தினுடைய தலைவர்களை மதிப்பது என்பது (மேசையைத் தட்டும் ஒலி) எப்போதும் போற்றக்கூடியது. தேசம் வேண்டும், தமிழகம் வேண்டும் என்ற நல்ல சிந்தனையோடு செய்யக்கூடிய அறிவிப்புக்களை, திட்டங்களை காங்கிரஸ் கட்சி வரவேற்கிறது. வாழ்த்துகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மனித வளத்தைப் பாதுகாக்கிற நம்முடைய மிக உயர்வான சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் ஊட்டச் சத்துத் திட்டம், அதில் குழந்தைகளை, வளர் இளம் பெண்களை, முதியோர்களை, எல்லோரையும் பாதுகாப்பதற்கு

நாம் எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கைகளுக்கு மிக அடிப்படைத் தேவை அந்த மையங்களின் தரத்தை உயர்த்த வேண்டும். தரத்தை உயர்த்துவதற்காகவும் வேறு செலவுகளுக்காகவும் பணம் ஒதுக்கி ஏற்பாடு செய்திருப்பதை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

அடுத்து, திரு. சிங்காரவேலர், சிந்தனைச் சிற்பி, "கண்மூடி பழக்கமெல்லாம் மண்மூடிப் போக வேண்டும்" என்ற உயரிய நோக்கத்தோடு, அந்தக் காலத்திலேயே தன் வீட்டில் ஒரு பெரிய நூலகத்தையே கொண்டிருந்த ஒரு பெரிய சிந்தனையாளர். ஏராளமான விஞ்ஞான கட்டுரைகளைத் தமிழுக்கு முதலில் தந்தவர் என்று சொன்னால், அது மிகையாகாது. தந்தை பெரியார் அவர்களோடு தோளோடு தோள் நின்று அவர் நடத்தியிருக்கிற சுய மரியாதை இயக்கம் முடிவு பெற வேண்டுமானால், பொதுவுடைமை இயக்கமும் இணைய வேண்டுமென்கிற முறையிலே அவர் எடுத்துக்கொண்ட பாதை. 1923 ஆம் ஆண்டிலேயே மே தினத்தை இந்தியாவில் முதன்முதலாக சென்னை கடற்கரையில் கொண்டாடிய மிகப் பெரிய பெருமைக்குரியவர். அவருக்கு இப்போது நாம் காட்டியிருக்கிற இந்த மரியாதை மிகுந்த போற்றுதலுக்குரியது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–15*

அதேபோல, மரியாதைக்குரிய ஜீவரத்தினம் அவர்கள் நம்முடைய மொழிக்காக, அதேபோல பழைய பழக்கவழக்கங்களை எதிர்ப்பதற்காகப் பகுத்தறிவுப் பிரச்சாரத்திலே, அனைத்திலும் முன்னணியிலே நின்ற ஒரு முக்கியமான சிந்தனையாளர். அவருக்கும் மணிமண்டபம் அமைத்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

நம்முடைய மொழிப்போர் தியாகி சிதம்பரநாதன் அவர்களுக்குச் சிலை. அவர் நாம் மதித்துப் போற்றப்பட வேண்டிய மிக முக்கியமான ஒரு போராளி. அவருக்கு முதலமைச்சர் அவர்கள் இப்போது செய்திருக்கிற இந்த மரியாதை உண்மையிலேயே பாராட்டுக்குரியது. அவருக்கு திருவுருவச் சிலை வைப்பதையும் நான் மகிழ்ந்து பாராட்டுகிறேன்.

நான் கோரிக்கையாக அல்ல, உங்களுக்கு ஒரு உதவியாகச் சொல்கிறேன். நம்முடைய எல்லையை மீட்பதற்காகப் போராடிய சிலம்புச் செல்வர் திரு. ம.பொ.சி. அவர்களுடைய சிலை தி. நகரிலே



இருக்கிறது. அவருக்கு அரசு விழா கொண்டாட வேண்டுமென்று. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், ஏற்கெனவே தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதி இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று. (குறுக்கீடு) உங்கள் உரையை முடித்துவிட்டீர்களா?

**திரு. அ. சவுந்தரராசன்**: ம.பொ.சி. அவர்களுக்கு அரசு விழா நடத்த வேண்டுமென்று மட்டும் நான் கேட்கிறேன். வேறு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற இரண்டு அறிவிப்புகளையும் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பிலே நாங்கள் முழுமையாக வரவேற்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு குழந்தைக்குச் செய்கிற நன்மை என்பது, அதனுடைய ஆயுட்காலம் முழுவதும், 70, 80 ஆண்டுகள் வரைகூட பலனளிக்கக்கூடியது. ஆகவே, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தினைச் செம்மைப்படுத்தியும், தாய், சேய் நலத்தை மேன்மைப்படுத்தியும், அவர்களுடைய மேம்பாட்டிற்காக நிதி ஒதுக்கியும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்த திட்டங்களை வரவேற்கின்றோம். "ஆளும் வளரணும், அறிவும் வளரணும், அதுதான்டா வளர்ச்சி" என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, அறிவும், ஆளும் சேர்ந்து வளர்வதற்கு இந்தத் திட்டம் பயன்படும் என்று கருதுகின்றேன்.

அதேபோல 'இன்றைக்கு பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகிக் கொண்டே போகிறார்கள், ஏழைகள் மேலும் ஏழைகளாகிக் கொண்டே இருக்கிறார்கள், என்ன செய்வது?' என்று இந்திய அரசிலே பொருளாதார மேதைகள் எல்லாம் தங்களுடைய மூளையை கசக்கிக் கொண்டிருக்கிறபோது, 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்' என்பதற்காகப் பொதுவுடைமைச் சமுதாயம் அமைய வேண்டுமென்று அர்ப்பணித்துக் கொண்ட தலைவர்கள் சிங்காரவேலரும், ஜீவா அவர்களும் ஆவார்கள். அந்தக் காலத்திலேயே

[திரு. ச. இராமச்சந்திரன்] [2011 செப்டம்பர் 12

சமதர்ம சமுதாயம் அமைய வேண்டுமென்பதற்காகத் தங்களுடைய வாழ்வை தியாகம் செய்த சீலர்கள். அவர்களுடைய நினைவைப் போற்றுகின்ற வகையிலே அமைகின்ற மணி மண்டபம், இந்தச் சமுதாயத்திற்கு நல்ல படிப்பினையைத் தரும் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன். ஆகவே, அந்த முயற்சியும் பாராட்டத்தக்கது.

அதேபோன்று, தமிழ் மொழி பேசப்படுகிற நிலப்பரப்புகளெல்லாம் ஒரு மாநிலமாக அமைய வேண்டும் என்ற கருத்து எழுந்தபோது, அதற்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த தலைவர்கள் நேசமணி அவர்களும், சிதம்பரநாதன் அவர்களும். சிதம்பரநாதன் அவர்கள் இந்த மன்றத்திலே சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது அவரோடு பேசவும், பழகவும் வாய்ப்பைப் பெற்றேன். அவருக்கு ஒரு திருவுருவச் சிலை களியக்காவிளையில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மனமாரப் பாராட்டி வரவேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் 110–வது விதியின்கீழ் அறிக்கையைச் சட்டமன்றத்திலே எழுந்து அறிவித்தாலே தமிழக மக்களுக்கு ஒரு பெரிய மகிழ்ச்சியான செய்தி வரப்போகிறது என்பதைத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டமன்ற நிகழ்ச்சியை நாம் எல்லோரும் பார்க்கின்றபோது உணர முடிகிறது. எங்கள் மீனவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கை, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களுக்கு மணி மண்டபம், மறைந்த மரியாதைக்குரிய ஜீவரத்தினம் அவர்களுக்கு மணி மண்டபம் அமைக்க வேண்டுமென்பது நீண்டநாள் கோரிக்கையாக மீனவ மக்களிடையே எழுந்திருந்தது. அந்தக் கோரிக்கையை இன்று பூரணமாக நிறைவேற்றி வைத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீனவ மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த, கோடானுகோடி நன்றியை வணங்கி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை



2011 செப்டம்பர் 12]

அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பிறந்த முன்னாள் அமைச்சரும், மொழிப்போர் தியாகியுமான, மரியாதைக்குரிய சிதம்பரநாதன் நாடார் அவர்களுக்கு களியக்காவிளையில் சிலையமைக்க ஆணையிட்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்ட மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானுகோடி நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் பூராவும் பழுதடைந்த கட்டடங்கள் ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டில் இயங்கிக்கொண்டு, குழந்தைகள் வருவதற்கே தகுதியில்லாத நிறையக் கட்டடங்கள் இருப்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் உணர்ந்து, படிப்படியாக இல்லாமல், அனைத்து பழுதடைந்த கட்டடங்களுக்கும், ஒட்டுமொத்தமாக இந்த ஆண்டே முடிக்க வேண்டுமென்று, (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்தமாக நிதியை ஒதுக்கித் தந்துள்ளார்கள். வளரிளம் பெண்கள், தாய் சேய் நலனை உறுதி செய்யும்பொருட்டு குழந்தைகள் அனைவரும் அங்கன்வாடி மையத்திற்கு வருவதற்காக அவர்களுக்குக் கழிப்பிட வசதியை உறுதி செய்யும்பொருட்டு, தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பதுபோல், நல்ல பழக்கத்தை ஏற்படுத்த குழந்தைகளுக்குக் கழிப்பிட வசதி அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் இந்த ஆண்டே அமைக்க உத்தரவிட்டுள்ளார்கள். அதுமட்டுமல்லாமல் நிறைய பணியிடங்கள் காலியாக இருப்பதை உணர்ந்து கிட்டத்தட்ட 28,000 பணியிடங்களை நிரப்ப மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அந்த மையங்களில் மின்சார வசதி இல்லாமல் இருந்ததை உணர்ந்து, மாண்புமிகு அம்மா அவர்கள் மின் இணைப்பு மற்றும் மின் விசிறி அனைத்தையும் வழங்கி, ஒட்டுமொத்தமாக தமிழகத்திலுள்ள அங்கன்வாடி மையங்களில் உள்ள குழந்தைகள் நலனுக்காக அறிவித்திருக்கிற அறிவிப்பிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எங்களுடைய கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, விடைபெறுகின்றேன். நன்றி. அம்மா! நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிறப்பு என்பது ஒருவகையில்

பூமிக்கு வந்து போகிற ஒருவகை யாத்ரீக பயணம்தான். எல்லோரும் வெள்ளைத் தாளாகவே பிறப்பெடுத்து வருகிறோம். அந்த வெள்ளைத் தாளில் பலர் புரியாததை கிறுக்கிவிட்டுச் செல்கிறார்கள். சிலர் எதையும் செய்யாமல் வெற்றுத் தாளாகவே அதை வைத்துவிட்டுச் செல்கிறார்கள். ஆனால், வெகுசிலர் மட்டுமே தங்களது செம்மையான சேவைகளால், விந்தையான, வீரியமிக்க செயல்களால் தங்களது வாழ்க்கையையே காவியமாக்கி, வெள்ளைத் தாளில் எழுதி, அதனையே எக்காலத்திலும் மறையாத வரலாறாகப் பதித்துவிட்டுச் செல்கிறார்கள். இம்மண்ணைக் காப்பதற்கு இறைதூதராய் வந்து உதித்திருக்கும் ஆற்றல்மிகு அம்மா அவர்களைப் போல, (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வழியிலேயே அலையையும், வலையையும் நம்பியே உலை வைக்கும் மீனவ சமுதாயக் குடும்பத்தில் பிறந்து இவ்வையகம் வாழ்த்திடும் வண்ணம் சீரிய சிந்தனைகளால், சிறந்த பணிகளால், செம்மையான வாழ்வால், நம்மை வியக்க வைத்தவர்களான சிந்தனைச் சிற்பி சிங்காரவேலருக்கும், திருவாளர் ஜீவரத்தினம் அவர்களுக்கும் மணிமண்டபங்களை அமைத்து மீனவ மக்களின் நீண்ட நாள் கனவாக இருந்த இந்த எதிர்பார்ப்பை நனவாக்கி, ஆணையிட்டு, துடுப்பை நம்பியே அடுப்பெரிக்கும் மீனவச் சமூகம் காலமெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களை நன்றியோடு கைகூப்பி வணங்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் பணிவோடு தெரிவித்து, அந்த மாபெரும் தலைவர்களின் நினைவலைகளை எந்நாளும் மக்கள் மனதில் தவழவிடும் நம் காவியத் தாய்க்கு என் பணிவான நன்றிகளையும் சமர்ப்பித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, தமிழ் மொழிக்காகப் போராடி வருகிறோம் என பலர் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆனால், உண்மையாகவே தமிழ், தமிழர்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் அம்மா அவர்கள் மொழிப்போர் தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்களின் திருவுருவச் சிலையை களியக்காவிளையில் அமைக்க அறிவிப்பு செய்தமைக்கு அம்மா அவர்களுக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)





தாய் சேய் நலத்திற்காக பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு, அமல்படுத்தி, இந்தியாவின் பார்வையைத் தமிழக அரசின் பக்கம் நோக்க வைத்தவர் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு தாய் சேய் நலம் காக்க பல்வேறு நல்ல அறிவிப்புகளை வெளியிட்டு, உலக அரசுகள் இதனை அமல்படுத்திட தமிழகத்தை நோக்கச் செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–25

நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே; நாளை மலரும் முல்லைகளே; இன்று மலர்ந்துள்ள முல்லைகள், நல்ல பெயரை வாங்க வேண்டும் என்ற நம்முடைய அம்மாவின் புகழை என்றும் பரப்ப வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 9. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 7–மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

### (ஆ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

### (இ) கோரிக்கை எண் 8–பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2011–2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 10–9–2011 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றிற்கு முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதத்திற்குப் பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் இதயப் பகுதியான திருச்சியில்,

அதிலும் காவிரிக் கரையில், தொன்மையும், புராதனமும் நிறைந்த திருவரங்கத்தில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போட்டியிட்டு, சட்டமன்ற உறுப்பினராகி, முதல்வராகப் பொறுப்பேற்று இருப்பது, திருவரங்கத்திற்கு மட்டுமின்றி, திருச்சி மாவட்டமே பெருமையும், புகழும் அடையும் விதத்தில், (மேசையைத் தட்டும் ஒலி) பொற்கால வரலாற்றை, எங்கள் திருச்சி மாவட்டத்திற்கு அளித்திட்ட, எங்கள் அன்னையே, தங்கள் பொற்பாதங்களுக்கு என் பணிவான வணக்கத்தினைச் சமர்ப்பிக்கின்றேன்.

பொழியும் மழையாய் கருணை; உருகும் மெழுகாய் தியாகம்; சுழலும் பூமியாய் உழைப்பு; விரிந்த கடலாய் அறிவு; குளிர்ந்த நிலவாய் பரிவு; எல்லாம் சேர்ந்ததோர் உருவில், எங்கள் அம்மா என்னும் ஓர் வடிவில், (மேசையைத் தட்டும் ஒலி) திருவேங்கடத்து மாதவன் புகழ்காக்க பன்னிரெண்டு ஆழ்வார்கள்; இந்தத் தமிழகத்தின் நலம் காக்க அவதரித்த நம்மாழ்வார் – நம்மை ஆளும், ஆழ்வார் (மேசையைத் தட்டும் ஒலி) பாசமிகு எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, சிறப்புமிகு இந்தப் பேரவையில் அமர வைத்து, பதிலுரை அளிக்கும் பாக்கியத்தை அளித்து, என்னை காக்கின்ற இதய தெய்வமே, மாண்புமிகு அம்மா அவர்களின் விசுவாசமிக்க தொண்டர்களின் வரிசையில், சட்டக் கல்லூரியின் மாணவனாக இருந்த என்னை, 1991–ல் தொட்டியம் சட்டமன்ற உறுப்பினராக்கி, அம்மா அவர்களின் திருப்பெயரைத் தாங்கி இருக்கின்ற அம்மா பேரவையின் முதலாவது திருச்சி மேற்கு மாவட்டச் செயலாளராகப் பணியாற்ற வாய்ப்பு வழங்கி, திருச்சி புறநகர் மாவட்டக் கழகத்தின் துணைச் செயலாளராகவும், மாநில மாணவரணிச் செயலாளராகவும், மாநில எம்.ஜி.ஆர். மன்றத் துணைச் செயலாளராகவும், மாநில எம்.ஜி.ஆர். மன்ற இளைஞர் அணிச் செயலாளராகவும், 2–வது முறையாக முசிறித் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு அளித்து, வெற்றிபெறச் செய்து, அமைச்சராகப் பணியாற்றும் உயர்ந்த பெரும் வாய்ப்பையும் வழங்கி, தற்பொழுது திருச்சி புறநகர் மாவட்டக் கழகச் செயலாளராக நியமித்து, கழகப் பணியாற்ற வாய்ப்புகள் வழங்கிய எங்கள் தாயே, தங்களின் பொற்பாதங்களில் என் நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



முசிறித் தொகுதிக்கு வந்து, கடும் வெயில் என்றும் பார்க்காமல், எனக்காக தேர்தல் பிரச்சாரம் செய்து, என்னை வெற்றிபெறச் செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், வாக்களித்த முசிறித் தொகுதி மக்களுக்கும், வெற்றிக்குப் பாடுபட்ட அனைத்து நல்ல உள்ளம் கொண்டவர்களுக்கும், எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கிராம மக்கள் தங்கள் சொந்தக் கால்களிலே நிற்க வேண்டுமெனில், ஏழையெளிய மக்களைப் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்து, அவர்களின் பொருளாதார நிலைமையை உயர்த்துவது மக்கள் அரசின் கடமையாகும்” என்று தமிழகத்தின் காவிரித் தாய், கால்நடை பராமரிப்புத் துறைக்கோர் கலங்கரை விளக்கம், இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூறியுள்ளார்கள். “கால்நடைகள் நம் உன்னதமான நண்பர்கள். அவை நம்மைக் கேள்வி கேட்பதுமில்லை, நம்மை விமர்சிப்பதும் இல்லை” என்றார் திரு. ஜார்ஜ் எலியட்.

சங்க காலத்தில் கால்நடைகளை வைத்துதான் ஒருவரின் செல்வச் செழிப்பைத் தீர்மானிப்பார்கள். “ஒரு நாட்டின் மகத்துவமும், முன்னேற்றமும் அது தன்னுடைய கால்நடைச் செல்வங்களை எப்படி நடத்துகிறது என்பதைப் பொறுத்தே அமைகிறது” என்ற காந்தியடிகளின் கருத்திற்கு இணங்க, 15–8–2011 அன்றைய சுதந்திர தின விழா உரையில், மற்ற முதன்மைத் துறைகளுடன் கால்நடை பராமரிப்புத் துறைக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து, கால்நடைகளின் வளர்ச்சிக்கான சிறப்பான திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–30

கால்நடை பராமரிப்புத் துறையில் 6 பன்முக மருத்துவமனைகளும், 22 கால்நடை பெரு மருத்துவமனைகளும், 139 மருத்துவமனைகளும், 1,207 கால்நடை மருந்தகங்களும், 444 தரம் உயர்த்தப்பட்ட மருந்தகங்களும், 1,485 கால்நடைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

இவையன்றி, விவசாயிகளின் வசதிக்காக, கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று மருத்துவ வசதிகளை அளிக்க, 55 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், 20 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளும், 2 கோழி நோய்

ஆராய்ச்சிக் கூடங்களும் செயல்பட்டு வருகின்றன. கால்நடை பராமரிப்பின் முன்னேற்றங்களை மக்கள் அறிந்துகொள்ள ஏதுவாக 11 கால்நடைப் பண்ணைகள் செயல்படுகின்றன.

தமிழ்நாட்டில் கால்நடை பராமரிப்புத் துறைக்கு கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ஒதுக்கீடு செய்யப்பட்டது, அதிகபட்சமாக ரூபாய் 305 கோடி மட்டுமே ஆகும். ஆனால், இந்த ஆண்டில், மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தான் பொறுப்பேற்ற உடனேயே இத்துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, பல சிறப்பான திட்டங்களை, இத்துறையின்மூலம் நிறைவேற்றிட, ரூபாய் 676 கோடி நிதியொதுக்கீடு செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதியொதுக்கீடு கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் இரண்டு மடங்கிற்கும் மேலாக அதிகம் என்பதைப் பெருமையுடன் இந்த மாமன்றத்திலே தெரிவிக்க விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மீண்டும் ஒரு வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் விதமாக, கிராமப்புறங்களில் வாழும், ஏழையெளிய மக்களின் பொருளாதாரத்தை முன்னேற்றவும், தொடர்ந்து அவர்களுக்கு வாழ்வாதாரம் வழங்கும் விதமாகவும், ‘இலவச கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டம்’ மற்றும் ‘இலவச வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கும் திட்டம்’ போன்ற புரட்சிகரமானதும், இதுவரை இல்லாததுமான, சிறப்புத் திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். இலவச கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தில், 60,000 பயனாளிகளுக்கு ரூபாய் 232 கோடி செலவில், இலவச கறவைப் பசுக்கள் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்திலே, தானமாகக் கொடுக்கின்ற பசுவை பல்பிடித்துப் பார்க்கலாமா என்று சொல்வார்கள். அதை எதற்குச் சொல்வார்கள் என்று சொன்னால், இலவசமாகக் கொடுப்பதை, அதை எப்படிக் கொடுத்தால் என்ன? பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்வார்கள். ஆனால், கிராமத்திலே இருக்கின்ற விவசாயிகள் மாட்டின் பல்லைப் பிடித்துப் பார்ப்பது என்பது, அந்த மாடு, எத்தனை முறை கன்று ஈன்றிருக்கிறது என்பதையும், அதனுடைய வயதையும் விவசாயிகள் கண்டுபிடிப்பதற்காகத்தான். இதை



எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், ஓசியிலே கொடுப்பதை எப்படியாக இருந்தாலும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் அப்படிச் சொல்வார்கள். ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்குப் பயனாளிகளே வெளி மாநிலங்களுக்குச் சென்று, அவர்களுக்கும் அரசே செலவழித்து, அவர்களே சந்தையில் சென்று, அவர்களுக்கு விருப்பமான, முறையான, முதற்கன்று ஈன்ற மாடுகளை அவர்களே வாங்கிக்கொள்ளலாம் என்ற உன்னதமான திட்டத்தை இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதைச் சொல்வதற்குக் காரணம், தானமாகக் கொடுத்தாலும், தரமாகக் கொடுக்கவேண்டுமென்ற உயரிய சிந்தனையோடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் இன்றைக்கு மகளிரின் ஒப்பற்றத் தலைவியாக விளங்கிக்கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களை கிராமப் பகுதிகளில் இருக்கின்ற பெண்கள் எல்லாம் ‘கோமாதா வழங்குகின்ற குலமாதா’ என்று வணங்கிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, கிராமங்களில் வாழும் ஏழ்மையிலும் ஏழ்மை நிலையிலுள்ள ஏழு இலட்சம் பயனாளிகளுக்காக, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்தில், ரூபாய் 925 கோடி செலவில் இலவச வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தைத் தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

மகளிர் மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் அளித்துவரும் மாண்புமிகு அம்மா அவர்கள், மகளிரைக் குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் பொருட்டு, விதவைகள், கைவிடப்பட்டோர், உடல் குறைபாடுள்ள பெண்கள் மற்றும் திருநங்கைகள் ஆகியோருக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும் என்று தாயுள்ளத்துடன் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

மேலும், இத்திட்டத்தின் சிறப்பு அம்சமே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின சமுதாயத்தினருக்கு குறைந்தபட்சம் 30 விழுக்காடு ஒதுக்கீடு இருக்க வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட இச்சிறப்புத் திட்டங்கள், பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று அம்மா அவர்களின் பொற்கரங்களால் தொடங்கப்பட உள்ளன என்பதைப் பெருமகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறை, தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையுடன் இணைந்து, உள்நாட்டினங்கள் மேலும் அழிந்துவிடாமல் பாதுகாக்க உம்பளாச்சேரி மற்றும் காங்கேயம் பொலிகாளைகளை உறைவிந்து சேகரிப்பதற்காகப் பராமரித்து வருகிறது.

நம்பி வந்தோரை நட்டாற்றில் விடுகின்ற நயவஞ்சகக் கூட்டம், நம்பிக்கைத் துரோகத்திற்கு இலக்கணம் கோபாலபுரம். அதற்கு உதாரணம் குடும்ப நண்பர்கள் என சிலரை அறிமுகப்படுத்தி அவர்களைச் சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட வைத்து, பின்னர் அவர்கள் உயிர் பிரியும் நிலைக்குக் கொண்டுவந்து, அண்ணாநகர், பெரம்பலூர் நிகழ்ச்சிகள் உங்களுக்குத் தெரியும். அது கொலையா அல்லது தற்கொலையா எனப் பத்திரிகைகள்மூலம் பட்டிமன்றம் நடத்த வைத்தவர்கள் ஆட்சி செய்தபோது, ஒரத்தநாட்டிலுள்ள கால்நடைப் பண்ணையில் கால்நடை ஆய்வாளர் பயிற்சி அளிக்கப்பட்டு, பணி நியமனம் ஆணை வழங்கப்படாமல் அம்போ என நடுத்தெருவில் விடப்பட்ட 154 நபர்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே கருணை உள்ளத்தோடும், தாயுள்ளத்தோடும் (மேசையைத் தட்டும் ஒலி) எந்தவிதமான அரசியல் காழ்ப்புணர்ச்சியும் இன்றி பணி நியமனம் வழங்கி 154 குடும்பங்களின் வாழ்வில் ஒளிவீசச் செய்துள்ளார்கள் என்பதை இந்த அவையிலே பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளுக்கும் மனிதர்களைப்போலவே, இன்பமான நிகழ்வுகளில் மகிழ்வும், துன்பமான நேரங்களில் துயரமும் ஏற்படும். அவற்றிற்கும், மனிதர்களைப் போலவே வாழ்க்கையின் மேல் ஆசையும், பற்றும் உண்டு என்று புத்தமத குரு தலைவர், தலாய்லாமா அவர்கள் கூறியுள்ளார்கள். இத்தகைய கால்நடைகளுக்கு அவற்றின்



தேவைகளை அறிந்து சரியான நேரத்தில் மருத்துவச் சேவை வழங்குவது, மனிதர்களாகிய நமது தலையாய கடமையாகும். இந்தச் சேவைகளை வழங்குவதற்கும், துறையின் திட்டங்கள், சிறப்பான சிகிச்சை மற்றும் பராமரிப்புப் பணிகள் கால்நடை வளர்ப்போரைச் சென்றடையவும், கால்நடை பட்டதாரிகள் சேவை மிகவும் இன்றியமையாததாகும். இதனை அறிந்து புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் இதனைச் சீர்செய்யும் வகையில் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு 385 கிளை நிலையங்களை ஊரக மருந்தகங்களாகத் தரம் உயர்த்த ஆணையிட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க ஆட்சியில் கட்டடங்கள் பழுது பார்ப்பு, மற்றும் சீரமைப்புப் பணிக்காக, சராசரியாக ஒரு கோடியே 90 இலட்சம் ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொகையானது 2 விழுக்காடு கட்டடங்களைக்கூட சீரமைக்கப் போதுமானதாக இல்லாததினால் பெரும்பாலான நிலையங்கள் அடிப்படை வசதியின்றி செயல்படும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தன.

இந்த நிதியாண்டில் தமிழகத்தில் உள்ள பெரும்பான்மையான மருத்துவமனைகளுக்குப் பராமரிப்பு மற்றும் மேம்படுத்துதலுக்காக, இந்தியா சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு, இத்துறையின் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவாக 5 கோடி அல்ல, 10 கோடி அல்ல, 25 கோடியை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருந்தகங்களை வலுவூட்டுவதற்கும், புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தீர்க்க சிந்தனை மற்றும் இத்துறைக்கு ஒரு புத்துணர்வு தரவேண்டுமென்ற எண்ணத்திலும் 131 கோடியே 20 இலட்சம் ரூபாய் வழங்கி ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்”

என்ற வள்ளுவரின் குறளுக்கிணங்க நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கால்நடைகளின் ஆரோக்கியத்தைப் பேணிப் பாதுகாக்க கால்நடை மருத்துவச் சேவையை மேலும் பரவலாக்கி, பல இலட்சம் கால்நடைகள் பலனடையும் வகையில் கால்நடைகளைத் தாக்கி விவசாயிகளுக்குக் கடுமையான பொருளாதார இழப்பையும், சரிவையும் ஏற்படுத்தும் வாய் மற்றும் கால் கோமாரி, வெக்கை நோய், கன்று வீச்சு நோய், அடைப்பான் நோய், தொண்டை அடைப்பான் நோய், ஆட்டுக்கொல்லி நோய், முதலான கொள்ளை நோய்களைக் கண்டறிந்து கட்டுப்படுத்தவும் ரூ. 6 கோடியே 48 இலட்சத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்திற்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுக்கால குடும்ப ஆட்சியிலே ஏனோ தானோ என்று நடைபெற்று வந்த முகாம்கள் அனைத்தும், இந்த ஆண்டிலிருந்து கால்நடை விவசாயிகள் அனைவரும் பயன்பெறும் விதமாக முனைப்போடும், துடிப்போடும் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆண்டில் 5,500 கால்நடை மருத்துவப் பாதுகாப்பு முகாம்கள் நடத்த ரூபாய் 2 கோடியே 31 இலட்சம் அனுமதித்து இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு சாதனைச் சரித்திரம், புதிய சகாப்தத்தின் வெளிப்பாடாகத் திகழும் அம்மா அவர்கள், கிராமப்புற ஏழையெளிய விவசாயிகளுக்குக் கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள்/ செம்மறியாடுகள் வழங்குவதோடு மட்டும் நிறுத்தாமல், அக்கால்நடைகளுக்கும், இதரக் கால்நடைகளுக்கும், தீவனம் கிடைக்க வேண்டும், அதன்மூலம் ஏழையெளிய மக்களின் வாழ்க்கைத்தரம் முன்னேற வேண்டும் என்ற ஒப்பற்ற சிந்தனை இவ்வுலகில் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர, வேறு யாருக்கும் ஏற்பட்டதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கு இலக்கணமாகத் திகழும் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, தீவன உற்பத்தியை மேம்படுத்த சிறப்புத் திட்டம் ஒன்றைத்



தொடங்கத் திட்டமிட்டுள்ளது. பசுந்தீவனப் பற்றாக்குறையைப் போக்கும் வகையில் இந்த ஆண்டில் 24,000 ஏக்கர் நிலப்பரப்பில் தீவன உற்பத்தியைப் பெருக்கவும், நுண்ணீர்ப் பாசனத் திட்டம், நுண்ணீர்ப் பாசனத் தெளிப்பான்கள், வேகத் தெளிப்பான்கள் போன்றவற்றை சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்படுத்தவும், தீவன சேதாரத்தைக் குறைக்க, புல் வெட்டிகள் மற்றும் நறுக்கும் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு வழங்கவும், இத்தகைய பசுந்தீவன உற்பத்தித் திட்டத்திற்கென மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான இந்த அரசு 35 கோடி ரூபாயை இந்த ஆண்டே வழங்கி ஆணையிட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்குக் கால்நடைகளின்மீதுள்ள ஈடுபாட்டை உணர்த்தும் வகையில் மற்றொரு புள்ளிவிவரத்தைக் கூற நான் விரும்புகிறேன். வருடந்தோறும், தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் மாநில அளவிலான ஒப்பளிப்புக் குழுக் கூட்டம் ஒன்று, தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நிதியொதுக்கீடு செய்யும். கடந்த 5 ஆண்டுகளையும் சேர்த்து சுமார் 24 கோடி ரூபாய் மட்டுமே கால்நடை பராமரிப்புத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், இந்த ஓராண்டுக்கு மட்டும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தனிப்பட்ட வழிகாட்டுதலின்பேரில் கால்நடை பராமரிப்புத் துறைக்கென 47 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 5 ஆண்டுகளில் 24 கோடி, ஆனால் ஒரே ஆண்டில் 47 கோடி என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கு நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், 2010–2011 ஆம் ஆண்டிற்கு, கால்நடை பராமரிப்புத் துறைக்கென வெறும் 5 கோடியே 56 இலட்சம் ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்தனர். “கருணையையும்” “நிதியையும்” பெயரில் மட்டுமே கொண்ட ஒருவர் தனக்கு ஒதுக்கிக் கொண்டதோ அதிகம், துறைக்கு ஒதுக்கியதோ குறைவு. தற்போது அதைவிட 9 மடங்கு கூடுதலாக 47 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து தந்துள்ள ஈகை அரசி, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு கொடை வள்ளல் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதால்தான் வீட்டுப் பற்றுக்கும் நாட்டுப் பற்றுக்கும்

உள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொண்ட தமிழக மக்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் ஆட்சியைத் தந்துள்ளார்கள்.

இந்த வருடம் கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக மருந்துகள் மற்றும் உபகரணங்கள் வாங்க 16 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள் என்பதையும் இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னையிலும், நாமக்கல்லிலும் இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. பெருகி வரும் கலப்பினக் கால்நடைகளின் மருத்துவ வசதி மற்றும் பராமரிப்புத் தேவைகளுக்கு அதிக எண்ணிக்கையில் கால்நடை மருத்துவர்கள் தேவைப்படுகிறார்கள். இத்தேவையைப் பூர்த்தி செய்ய திருநெல்வேலியில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி துவங்கப்பட உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஒரத்தநாட்டில் நடப்பாண்டில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்கவும், (மேசையைத் தட்டும் ஒலி) இதைத் தவிர, உலகத்தரம் வாய்ந்த கோழி வளர்ப்பு மற்றும் மேலாண்மை மையம் ஒன்றை ஒசூரில் தொடங்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தை உலகத் தரத்திற்கு உயர்த்திடும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் அமெரிக்க நாட்டில் உள்ள அரிசோனா மற்றும் ஆபர்ன் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இதனால், உலகத்தரம் வாய்ந்த, நன்கு பயிற்சி பெற்ற கால்நடை மருத்துவர்களை உருவாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிரவும், கோழியின உற்பத்தி மற்றும் இதர பராமரிப்பு சம்பந்தமான துறைகளில், பட்டய மேற்படிப்பை முதல்முறையாக அறிமுகப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"Animals are reliable, many full of love, true in their affection, predictable in their actions, greatful and loyal. Difficult standards for people to live upto" என்று Alfred A. Montapert என்ற அறிஞர் கூறினார். அதாவது, வாழ்க்கையில் மனிதர்கள்கூட கடைப்பிடிக்கத் தவறுகின்ற முக்கிய வாழ்வியல் கோட்பாடுகளான நம்பகத்தன்மை, பரிசுத்தமான அன்பு, மெய்யான பாசம், யூகிக்கக்கூடிய நடவடிக்கைகள், நன்றி மற்றும் விசுவாசம் ஆகியவற்றை மிகச் சாதாரணமாகக் கொண்டுள்ள கால்நடைகள் மற்றும் விலங்குகளைப் பேணிப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரது கடமையாகும் என்பது அவர் கூறிய கருத்து.





முற்பகல் 11–45

அப்படிப்பட்ட இந்தச் சிறப்புமிக்க கால்நடைகளின் பராமரிப்புக்காக அம்மா அவர்களின் ஆழ்ந்த சிந்தனையாலும், அறிவாற்றலாலும், அறிவிக்கப்பட்ட திட்டங்கள் கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்கோர் மைல்கல். ஏழை எளிய குடும்பங்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கோர் ஒளி விளக்கு. கால்நடை வளம் மற்றும் உற்பத்திக்கு ஓர் ஆணி வேர். ஒட்டுமொத்தமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், புரட்சித் தலைவி இதய தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி, இத்துறைக்கோர் பொற்காலம் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில், தொடர் நன்மைகள் பல நாள்தோறும் தொடர்கின்றன. இந்த வகையில் பால்வளத் துறையில் பல திட்டங்களை அறிவித்து வருகிறார்கள். தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் தலைமையில் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களும், 8,770 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும், பால் உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் பாலமாகச் செயல்பட்டு வருகின்றன.

நட்டத்தில் இயங்கி வந்த கூட்டுறவு அமைப்புகளை இலாபகரமாக மாற்றுவதற்கும் தமிழகத்தில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், தேவையான போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொண்டு, தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தவாறு இரண்டாவது வெண்மைப் புரட்சியை உருவாக்க மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் உறுதிபூண்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. என்.ஆர். சிவபதி] [2011 செப்டம்பர் 12

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றபோது, தமிழ்நாட்டில் நாளொன்றுக்கு 20 இலட்சம் லிட்டர் என்ற அளவில் இருந்த பால் கொள்முதல், அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி 1,500 புதிய சங்கங்களை நிறுவியதன்மூலமும், தினசரி கண்காணிப்பின்மூலமும் படிப்படியாக உயர்ந்து தற்பொழுது மூன்றே மாதங்களில், 25 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

“கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்” என்பது வேதவாக்கு. ஆனால் கேளாமல் கொடுப்பது எங்கள் தாயின் வாக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) அதுவே எங்கள் அம்மாவின் சத்திய வாக்கு. (மேசையைத் தட்டும் ஒலி) மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், 150 கோடி ரூபாய் ஆவின் நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்வது குறித்து, எந்த ஒரு ஆணையையும் அளிக்காமல் அந்தரத்தில் விட்டுவிட்டனர். இதனால் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டிய பால் பணம் பட்டுவாடாவில் மிகுந்த காலதாமதம் ஏற்படுவதை அறிந்த அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், ஆவின் நிறுவனத்திற்கு முதற்கட்டமாக 49 கோடியே 65 இலட்சம் ரூபாய் வழங்க உத்தரவிட்டார்கள். மேலும் இதுபோன்று ஒவ்வொரு மாதமும் 16 கோடியே 55 இலட்சம் ரூபாயை ஆவின் நிறுவனத்திற்கு வழங்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, ஆவின் நிர்வாகத்தின்மீதும் பால் உற்பத்தியாளர்கள்மீதும் தனி அக்கறை கொண்டு, இதுவரை ஏறத்தாழ 84 கோடி ரூபாய் வழங்கி, பால் நிறுவனத்தின் வயிற்றுக்கே பால் வார்த்ததைப்போல, பால் உற்பத்தியாளர்களின் துயர் துடைத்தவர்தான் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், 2004 ஆம் ஆண்டில், திருவண்ணாமலை மாவட்டத்தில், அம்மாபாளையத்தில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் அறிவித்த காரணத்தாலேயே, அத்திட்டத்தை நிறைவேற்றுவதில் கடந்த ஆட்சியாளர்கள் காலம் தாழ்த்தினர். ஆனால், திருவண்ணாமலையில் வீற்றிருக்கும் அண்ணாமலையாரே மாண்புமிகு அம்மாதான் அத்திட்டத்தை நிறைவேற்றி முடிக்க முடியும் என முடிவு செய்துவிட்டார் என்று நினைக்கும் வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும்



2011 செப்டம்பர் 12] [திரு. என்.ஆர். சிவபதி]

மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற மாண்புமிகு அம்மா அவர்கள் சுமார் 60 கோடி ரூபாய் செலவில் இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், பால் வளத்திற்கு 2011–2012 ஆம் நிதி ஆண்டில் 155 நடமாடும் கால்நடை மருத்துவக் குழுக்கள் நிறுவுவதற்கும், கிராம அளவில் பால் உற்பத்தி செய்வதற்கான 1500 பால் விரிவாக்க மையங்களை ஏற்படுத்துவதற்கும், வேலூர் பால்பண்ணையை மேம்படுத்துவதற்கும், அம்பத்தூரில் பால் உப பொருட்கள் தொழிற்சாலையை உருவாக்குவதற்கும், 10 மொத்தப் பால் குளிரூட்டு இயந்திரங்கள் நிறுவுவதற்கும், கிருஷ்ணகிரி பால் பண்ணையை மேம்படுத்துவதற்கும், காஞ்சிபுரம், காக்களூர் பால் பண்ணையை மேம்படுத்துவதற்கும், சென்னை மாநகரில் முக்கிய இடங்களில் 3 முக்கிய நவீனப்படுத்தப்பட்ட பாலகங்களை இயக்குவதற்குமாகிய பணிகளை மேம்படுத்த சுமார் ரூ.34 கோடி ஒதுக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான அரசு (மேசையைத் தட்டும் ஒலி) முனைந்து செயல்பட்டு வருகிறது என்பதை இப்பேரவையில் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்கள் தங்கள் வசதிக்கேற்ப பால் வழங்க ஏதுவாக நடப்பாண்டில் கிராம அளவில் 40 பால் குளிரூட்டும் நிலையங்கள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் நிறுவ மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பாண்டில் 1,500 பால் கூட்டுறவு சங்கங்கள் புதியதாக அமைக்கவும், மறுமலர்ச்சி செய்யவும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, 3 மாதங்களில் இதுவரை 1,662 பால் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்டும், புதுப்பிக்கப்பட்டும் உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) எஞ்சியுள்ள சங்கங்கள் விரைவில் தொடங்கப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் உயரிய திட்டமான 60,000 இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின்மூலம் பால் உற்பத்தியைப் பெருக்கி, இரண்டாவது வெண்மைப் புரட்சிக்கு வலுவூட்டும் வகையில் ஆவின் நிறுவனம் சிறப்பாகச் செயல்படும் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனது தேர்தல் வாக்குறுதியிலேயே, தமிழகத்தில் கழக ஆட்சி அமைந்ததும் ஏழை, எளிய, வறுமையில் வாடும் மக்களுக்கு ஆடுகளும், மாடுகளும் தரப்படும் என்று அறிவித்திருந்தார்கள். வாக்களித்த மக்களின் விரல் மை ஈரம் காய்வதற்குள், அதற்கான உத்தரவையும் இட்டு, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்த நாளில் இத்திட்டத்தை அமல்படுத்தவுள்ளார்கள்.

ஆனால், வழக்கம்போலவே குதர்க்கம் பேசக்கூடியவர்கள், குறை கூறியே பிழைப்பு நடத்துபவர்கள், மக்களை ஆடு, மாடு மேய்க்கச் சொல்கிறார்கள் என்று அறியாமையால் பேசுகிறார்கள். ஆடு, மாடு வளர்ப்பதை மட்டரகமாக, அறியாமல், புரியாமல் பேசுகின்ற ஆறாவது அறிவைப் பயன்படுத்தாத அற்பர்களே, புரிந்துகொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஊரையே வளைத்துக் கொள்ளையடித்துப் பிழைப்பதைவிட, இட்லிக் கடைகளிலும், நகைக் கடைகளிலும், லாரிகளில் வந்த ஹார்லிக்சையும் பறித்துப் பசியாறுவதைவிட, (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்தவர் வீட்டை அபகரித்து ஆசுவாசம் கொள்வதைவிட, (மேசையைத் தட்டும் ஒலி) திருட்டுப் பணம் கொண்டு திரை உலகை வளைப்பதைவிட, (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்தவர் நிலத்தை அபகரித்து அறிவாலயம் கட்டுவதைவிட, (மேசையைத் தட்டும் ஒலி) அலைவரிசைத் திருட்டுக்குக் கூட்டு சதிகாரியாக திகார் சிறையில் அடைபட்டுக் கிடப்பதைவிட, (மேசையைத் தட்டும் ஒலி) ஆடு, மாடு மேய்த்து, உழைத்துப் பிழைப்பது, கருணாநிதியின் பிழைப்பைவிட கௌரவமாய் இருக்கும் என்பதை வலியுறுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆடு, மாடுகளைக் கொடுத்து, நம் மக்களை உழைத்து, உயர, உயர்வான வழி செய்துகொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க துறை சார்ந்த அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

**கால்நடைப் பண்ணைகளை மேம்படுத்துதல்**

கால்நடை பராமரிப்புத் துறையில் செயல்படும் மாவட்ட கால்நடைப் பண்ணைகள் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பண்ணைகளில் உள் கட்டமைப்பு



வசதிகளை இந்த ஆண்டிலிருந்து வலுப்படுத்த பல்வேறு திட்டங்கள் தொடங்கப்படும். தீவன வசதி ஏற்படுத்துதல், கால்நடைகளின் தரம் மற்றும் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி ரூ.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–55

**கால்நடை நிறுவனங்களைப் புதுப்பித்தல் மற்றும் அவற்றிற்கு உபகரணங்கள் வழங்குதல்**

அனைத்து கால்நடை நிலையங்களிலும், சிறப்பான சேவைகள் கிடைக்கப்பெறுவதை உறுதிசெய்வதற்காக, ஏற்கெனவே கட்டப்பட்ட கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருந்தகங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் அவசியமான ஒன்றாகும். உள்கட்டமைப்பு வசதிகளில் தற்போதுள்ள குறைபாடுகளைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, இந்த நிதியாண்டில் தமிழகத்தில் உள்ள உள்கட்டமைப்பு வசதிக் குறைபாடுள்ள பெரும்பான்மையான மருத்துவமனைகளின் பராமரிப்பு மற்றும் முன்னேற்றத்திற்காக 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**நிர்வாகத்தை மேம்படுத்துதல்**

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, கால்நடைப் பராமரிப்புத் துறையில் 1 இணை இயக்குநர், 13 உதவி இயக்குநர், 843 கால்நடை உதவி மருத்துவர், 600 கால்நடை ஆய்வாளர் மற்றும் இதர பணியாளர்கள் மொத்தமாக 2,864 பணியிடங்கள் நிரப்பப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**பால் உற்பத்தியாளர்களின் குடியிருப்பிலேயே கால்நடை மருத்துவ சேவை**

கால்நடைகளுக்கான மருத்துவம் மற்றும் பராமரிப்பு வசதிகளைப் பால் உற்பத்தியாளர்களுக்கு ஏற்படுத்தித் தருவது ஆவின் நிறுவனத்தின் கொள்கையாகும். இதனை நிறைவேற்ற, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, புதியதாக 155 நடமாடும் கால்நடை மருத்துவத் தொகுப்பு மையங்கள் 8 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும். இதன்மூலம், ஆவின் நிறுவனக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சுமார் 30

சங்கங்களுக்கு ஒரு கால்நடை மருத்துவர் என்ற அடிப்படையில் குடியிருப்பிலேயே மருத்துவ சேவை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**சங்கங்களின் தரம் உயர்த்தி சிறிய பண்ணைகள் அமைத்தல்**

பாலினைப் பதப்படுத்த பால் பண்ணையிலிருந்து நீண்ட தூரங்களில் உள்ள கிராமங்களில் மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைத்து பாலின் தரத்தைக் காக்க வேண்டியது அவசியமாகிறது. அதன்பொருட்டு, பல்வேறு திட்டங்களின்கீழ் இவ்வாண்டு அரசு 30 மொத்த பால் குளிர்விப்பான்களை ஏற்படுத்தும். மேலும், 10 பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் மேம்படுத்தப்பட்ட குளிரூட்டும் வசதிகள் மேற்கொண்டு, சிறிய பால் பண்ணைகளாகத் தரம் உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, 10 கோடி ரூபாய் இவ்வாண்டில் ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**பால் பண்ணைகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

கூடுதலாகக் கொள்முதல் செய்யப்படும் பாலைப் பதப்படுத்தும்விதமாக அம்பத்தூர், சோழிங்கநல்லூர், மாதவரம், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, ஈரோடு, காக்களூர் மற்றும் விழுப்புரம் ஆகிய பால் பண்ணைகளின் உள்கட்டமைப்பு வசதிகள் இவ்வாண்டு மேம்படுத்தப்படும். இதற்காக, 18 கோடி ரூபாய் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாவட்ட ஒன்றியங்களில் பால் உற்பத்தி, பால் விற்பனை மேம்படுத்துவதற்கான திட்டங்கள்**

தமிழகம் முழுவதிலும் சீரான பால் உற்பத்தியை உறுதி செய்ய இவ்வாண்டில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, சிவகங்கை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் சிறப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட்டு சங்க அளவிலும், ஒன்றிய அளவிலும், பால் பதப்படுத்துவதற்கும், விற்பனைக்கும் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, 26 கோடியே 24 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



**அம்பத்தூரில் புதிய பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை**

ஆவின் நிறுவனம்மூலம் தயாரிக்கப்படும் கோவா, ஐஸ்கிரீம், லஸ்ஸி, மோர் போன்ற உபபொருட்களுக்குப் பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு உள்ளது. சென்னை பெருநகரின் பெருகிவரும் பால் பொருட்களின் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு, அனைத்து பால் உபபொருட்களையும் பொதுமக்களுக்குத் தேவையான அளவில் வழங்கிட ஏதுவாக, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, அம்பத்தூரில் 5 கோடி ரூபாய் மதிப்பில் புதிய பால் உபபொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கான பணிகள் இவ்வாண்டில் துவங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**கால்நடை நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல்**

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கால்நடை மருத்துவ வசதிகளை மேம்படுத்தவும், மேம்படுத்தப்பட்ட வசதிகளைக் கொண்டு தரமான மருத்துவச் சேவைகளை கால்நடை வளர்ப்போருக்கு வழங்கவும், கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடை மருத்துவமனைகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட ஆணையிட்டுள்ளார்கள். நபார்டு வங்கி மற்றும் இதர திட்டங்களின்மூலம் 131 கோடி ரூபாய் செலவில் 18 கால்நடை மருத்துவமனைகள், 356 கால்நடை மருந்தகங்கள், ஒரு பன்முக மருத்துவமனை, மூன்று கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் 5 உறைவிந்து வங்கிகள் ஆகியவற்றிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி புதிய கட்டடங்கள் கட்டப்படும். இதன்மூலம் அரசுத் துறையின் கட்டமைப்பு வசதிகள் புதுப்பொலிவுடன் புத்துயிர் பெறும். (மேசையைத் தட்டும் ஒலி)

**பால் கூட்டுறவு அமைப்புப் பணியாளர்களுக்கான சிறப்புத் திட்டங்கள்**

பணியாளர்களின் நலனைக் காப்பதில் மாண்புமிகு அம்மா அவர்கள் எப்பொழுதும் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறார்கள். பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களை ஊக்கப்படுத்தும் விதமாக, உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை மற்றும் சம்பள உயர்வாக மாதம் ஒன்றுக்கு ஒரு பணியாளருக்கு 200 ரூபாய் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*[திரு. என்.ஆர். சிவபதி] [2011 செப்டம்பர் 12*

மேலும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையப் பணியாளர்களுக்கான சிறப்புத் துணை விதிகளில் உள்ள வேறுபாடுகளைக் களையவும், மாவட்ட ஒன்றியங்களுக்கான சிறப்புத் துணை விதிகள் உருவாக்கவும், அவற்றின் அடிப்படையில் பணி நியமனம் மற்றும் பதவி உயர்வுகள் வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி நடவடிக்கை எடுக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*நண்பகல் 12—00*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு மற்றும் மானியக் கோரிக்கை எண் 6—ன்கீழ் 22 பேரவை உறுப்பினர்கள் 62 வெட்டுத் தீர்மானங்களையும், பால் வளம் பற்றிய மானியக் கோரிக்கை எண் 8—ன்கீழ் 40 உறுப்பினர்கள் 43 வெட்டுத் தீர்மானங்களையும் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களின் வாயிலாகக் கொடுத்துள்ள கோரிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கனிவுடன் பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம் ஆகிய மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். என்னை இந்த மானியக் கோரிக்கையின் விவாதத்தில் கலந்துகொண்டு பதிலளிக்க வாய்ப்பளித்த தங்களுக்கும், கார்முகிலை மிஞ்சும் கருணையே, எங்கள் அன்னையே, கடைக்கோடித் தமிழனுக்கும் கவசமே, எங்களின் சுவாசமே. *(மேசையைத் தட்டும் ஒலி)* நானும், எங்கள் குடும்பமும் என்றும் தங்களின் விசுவாசமே என்று தெரிவித்து எனது நன்றி மலர்களைத் தங்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வணங்கி என் உரையை நிறைவு செய்து, அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. *(குறுக்கீடு)* கடைசியிலே clarification கேட்கலாம்.

*__மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளமான தமிழகத்தை வறட்சி மாநிலமாக்கி தன் குடும்பத்திற்காகச் சுரண்டிக் கொழுத்த தீய சக்தியை வீழ்த்தி, மூன்றாம் முறையாக தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் மாண்புமிகு புரட்சித் தாய் அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*



*2011 செப்டம்பர் 12] [திரு. கே.ஏ. ஜெயபால்]*

ஆடல் வல்லானாகிய சிவபெருமான் தன்னை அவமதித்த தட்சபிரஜாபதி என்பவனை தலையெடுக்க முடியாமல் சாய்த்து வெற்றி கண்ட செய்தியை கந்தபுராணம் பாடுகிறது. கருணையில்லா ஆட்சி கடிதல் ஒழிய வேண்டும் என்றார் வள்ளலார். இதுபோல் கணக்கு கேட்டதற்காகக் கட்சியைவிட்டு நீக்கிய கருணையே இல்லாத பழைய தட்சிணாமூர்த்தியை ஆட்சியிலிருந்து தலையெடுக்க முடியாமல் ஒழித்துக் கட்டினார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். சாதாரண மீனவ குடும்பத்தில் பிறந்த என்னை மேலமைப்பு பிரதிநிதியாக்கி, கிளைக் கழகச் செயலாளராக ஆக்கி, நாகப்பட்டினம் மாவட்ட மீனவரணிச் செயலாளராகவும், மாவட்ட கழகப் பொருளாளராகவும், இரண்டு முறை நாகை சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக்கி என்னை வெற்றி பெற வைத்து 1½ கோடி தொண்டர்களில் கடைக்கோடி தொண்டனான என்னை தங்கள் அமைச்சரவையில் அமர வைத்து, அழகு பார்க்கின்ற அன்னையே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன் அம்மா. *(மேசையைத் தட்டும் ஒலி)* என் வெற்றிக்கு உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், கூட்டணிக் கட்சித் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கும் வாக்களித்த நாகப்பட்டினம் தொகுதி மக்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேரறிஞர் அண்ணாவுடன் வந்து கழகத்தைக் கட்டிக் காத்தவர்களைத் தந்திரமாக வெளியேற்றி பேரறிஞர் அண்ணாவையும் பலியாக்கி, அவரது கொள்கைகளையும் சமாதிக் குழியிலே தள்ளிவிட்டு ஆலயத்தின் வாசலிலே சிலையாக்கி நிற்க வைத்தவர்களை, சர்க்காரியா புகழ் விஞ்ஞான கொள்ளையர்களுக்கு சவுக்கடி கொடுத்து தரைமட்டமாக்கி, பராசக்தியைப்போல் எழுச்சியுடன் நிற்கும் மாண்புமிகு புரட்சித் தாய் அம்மாவின் பொன்னடியை வணங்குகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நடக்கவே முடியாதவர்கள் நாற்காலியில் அமரத் துடிப்பது நியாயமே. ஆனால், அளவுக்குமீறி ஆசைப்படுவது துன்பமே என்று புத்தர் பெருமான் கூறியதைக் கண்டுணராத பேராசைக்காரர்களுக்குச் சவுக்கடி கொடுத்த அன்னையே! முதுமையின் உளறல் என்று தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் எழுதிய நூலைப் படித்திருப்பாரே, அதைப் படித்த பிறகும் நாளுக்கொரு அறிக்கை விட்டு புலம்புவது நையாண்டித்தனமாகத் தெரியவில்லையா? அன்று ராணி மங்கம்மாள், பொற்கால ஆட்சி செய்த பெண்ணரசி

என்று புகழப்பட்டார். இன்று தமிழக மக்கள் பொற்கால ஆட்சி செய்யும் பெண்ணரசி என்று புகழ்ந்து கொண்டிருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் பாதம் பணிந்து எனது பதிலுரையைத் துவங்குகின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், ஏழைகளை நேசிக்கத் தெரிந்தவராக இருப்பதால்தான் அவர்களின் நெஞ்சங்களை உங்களுக்கு வாசிக்கத் தெரிந்திருக்கிறது. அதன் பலனை அவர்கள், லேப்டாப்பாகவும், மிக்சியாகவும், கிரைண்டராகவும் மின் விசிறியாகவும் சுவாசிக்க இருக்கிறார்கள். இராமனின் கால் பட்டுத்தான் அகலிகை பெண்ணானாள். ஆனால், உங்கள் மூச்சுக் காற்றுப்பட்டே பல கற்கள் வைரங்களாக ஆயின.

மீன் மற்றும் மீன்வளம் பண்டைக் காலந்தொட்டு தமிழக மக்களின் வாழ்வில் இரண்டுற கலந்த ஒன்றாகும். சங்க காலத்தில் நிலப்பரப்பு என்பது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை என ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. அவற்றுள் சங்ககாலம் முதல் இன்றுவரை கடலும், கடல் சார்ந்த பகுதியைக் கொண்ட நெய்தல் மீனவர்களின் வாழ்வாதாரமாக அன்றும் இன்றும் விளங்கி வருகிறது.

பிற்பகல் 12–05

உலகில் அனைத்துத் தொழில்களும் இயற்கை சார்ந்துள்ள நிலையில் மீன்பிடித் தொழில் மட்டும் இயற்கையை எதிர்கொள்ளும் தொழிலாக உள்ளதால் மீனவர்களின் பாதுகாப்பும், வாழ்வாதாரமும் எண்ணற்ற இன்னல்களைச் சந்திக்கும் சூழ்நிலை உள்ளது. இந்த இன்னல்களின் நிலையினை உணர்ந்த தாய் உள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு பதவியேற்றவுடன் மீனவக் குடும்பங்களுக்கு மீன்பிடி தடைக் காலத்தில் வழங்கி வந்த 1,000/– ரூபாயை 2,000/– ரூபாயாக உயர்த்தி, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உதவித் தொகை ஏழை மீனவக் குடும்பங்களுக்கு உடன் கிடைத்திடும் வகையில் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பதவியேற்றவுடன் முதலில் கையெழுத்திட்ட கோப்புகளில் இந்தக் கோப்பும் ஒன்றாகும் என்றால், (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர்களின்பால் மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுள்ள அன்பு தெள்ளத் தெளிவாகிறது என்பதுடன் மீனவர்களின் நலனைப் பேணிப் பாதுகாக்கும் பணியை தன் இதயத்தில் இருத்தி செயல்பட்டு வருகிறார் என்பது புலனாகிறது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்கள் குறிப்பாக இராமநாதபுரம் மீனவர்கள் மீன்பிடித்து ஓய்வெடுப்பதற்கும், வலைகளைக் காய வைப்பதற்கும், அந்தோணியார் கோயில் திருவிழாவில் கலந்துகொள்ளவும், பல நூற்றாண்டுகளாக கச்சத் தீவு சென்று வந்த உரிமையை இழந்து நிர்க்கதியாக, ஆதரவற்று இருந்தபோது அவர்களின் துயர் துடைக்கக் குரல் கொடுக்காத கருணாநிதி, மத்திய அமைச்சரவையில் தாங்கள் விரும்பிய இலாகாக்களை ஒதுக்காத காரணத்தினால் பதவியேற்பினைப் புறக்கணித்த சரித்திர சாதனையை அனைவரும் அறிவோம்.

ஆனால், 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இந்திய இலங்கை இடையேயான உடன்படிக்கையின்படி, இந்திய அரசால் உச்ச நீதிமன்ற ஆணைக்கு எதிராக நாடாளுமன்ற இரு அவைகளின் ஒப்புதல் இல்லாமல், சர்க்காரியா கமிஷன் ஊழல் நாயகனின் ஒத்திசைவுடன் கச்சத் தீவு இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்டது. மீனவர்களின் மீன்பிடிப்பு உரிமையை நிலைநாட்டுவதில் உயர் முன்னுரிமை அளிப்பவர் தமிழகத்தின் காவல் தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பதவியேற்றவுடன் கச்சத் தீவைத் திரும்பப் பெறுதல் குறித்து உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தமிழ்நாடு வருவாய்த் துறையை ஒரு பிரதிவாதியாகச் சேர்த்திட சட்டமன்றத்தில் கொண்டுவந்த தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பிய சாதனை தமிழகத்தின் சரித்திரத்தில் மட்டுமல்ல, மீனவ மக்களின் இதயத்திலும் நீங்கா இடம் பெற்றுள்ளது அம்மா.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 13–6–2011 அன்று அளித்த கோரிக்கை மனுவிலும் தமிழக மீனவர்களின் இறையாண்மையை நிலைநாட்ட கச்சத் தீவைத் திரும்பப் பெறுதலின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளார்கள்.

'கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்று விவிலியத்தில் ஒரு வாசகம் உண்டு. ஆனால், கேட்காமலேயே கொடுப்பவர்தான் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மீன்பிடிப்பு குறைவாக உள்ள காலங்களுக்கும் மீனவர் மற்றும் மீனவ மகளிருக்கு 1,800/– ரூபாய் உதவித் தொகையாக மூன்று மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. இந்தத் தொகை மீனவர்கள் குடும்பம் நடத்துவதற்குப் போதுமானதாக இருக்காது என்பதை உணர்ந்த தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள்,

இந்த மீன்பிடிப்புக் குறைவாக உள்ள காலங்களுக்கு மீனவக் குடும்பம் ஒன்றிற்கு சிறப்பு உதவித் தொகையாக 4,000/– ரூபாயை மீனவர்கள் கேட்காமலேயே வழங்க ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் வாக்குறுதியில் ஒன்றான இத்திட்டம் நடப்பு ஆண்டில் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூபாய் 72 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்க ஆணையிட்டுள்ளார்கள். இந்தச் சிறப்பு உதவித் தொகை இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் மீனவ மக்களுக்கு வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்களுக்கு மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'ஒருநாள் போவார் ஒருநாள் வருவார்
ஒவ்வொரு நாளும் துயரம்,
ஒருநாள் போவார் ஒருநாள் வருவார்
ஒவ்வொரு நாளும் துயரம்.
ஒரு சாண் வயிறை வளர்ப்பவர் உயிரை
ஊரார் நினைப்பது சுலபம்,
ஊரார் நினைப்பது சுலபம்'

என்ற பாடலை உலகிற்குத் தந்த புரட்சித் தலைவர் அவர்களின் கனவை நனவாக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மீனவர்கள் கடலுக்குச் சென்று காணாமல் போகும்பொழுதும், பிற நாட்டினரால் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும்பொழுதும், அவர்தம் குடும்பங்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள்தான் எத்தனை, எத்தனை. இந்தச் சமயங்களில் ஆதரவற்று இருக்கும் மீனவக் குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகையாக காணாமல் போன அல்லது பிற நாட்டினரால் கைது செய்யப்படும் மீனவக் குடும்பத்திற்கு வழங்கப்பட்ட தின உதவித் தொகையான ரூ.50/–ஐ ஐந்து மடங்கு உயர்த்தி ரூ.250/– ஆக வழங்க (மேசையைத் தட்டும் ஒலி) கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதையும் இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–10

மீன் பிடிப்பினை நான் ஏற்கெனவே கூறியவாறு மீனவர்கள் ஆபத்தான சூழ்நிலைகளை மேற்கொண்டு, பிடித்த மீன்களுக்கு நல்ல வருவாய் பெற்றிட, விரைந்து கரை திரும்ப வேண்டும்.



மீன் பிடித்ததிலிருந்து கரை திரும்பும் நேரம் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட காலத்தைப் பொறுத்தே மீனின் தரம் அமையும். அந்தத் தரத்திற்கு ஏற்றவாறு மீனின் விலை நிர்ணயிக்கப்படும். இந்தக் கால விரையத்தால் ஏற்படும் வருவாய் இழப்பினைத் தவிர்க்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நடுக்கடலிலேயே மீன்பதனம் செய்யும் வசதியுடன்கூடிய தாய்க்கப்பல் ஒன்றினை நிறுத்தி, மீனவர்களிடமிருந்து உடன் மீன்களைப் பெற்றுவர 10 பேபி கப்பல்களையும் இணைத்து, மீன்களை ஏற்றுமதித் தரத்துடன் பதனம் செய்யும், இந்தியாவிற்கே முன்னோடித் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்து, இப்போது அதை அமல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தினால், மீனவர்கள் பிடிக்கும் மீன்களால் நல்ல வருவாய் கிடைக்கவும், மீன்பிடிப் படகுகளுக்குத் தேவையான இடுபொருட்களை அவ்வப்போது வழங்கவும் வழிவகை செய்யப்படும்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தரைமேல் பிறக்க வைத்தான், எங்களை
தண்ணீரில் பிழைக்க வைத்தான்,
கரைமேல் இருக்க வைத்தான், பெண்களை
கண்ணீரில் குளிக்க வைத்தான்"

என்று படகோட்டி படத்திலே புரட்சித் தலைவரின் காலத்தால் அழியாத பாடல் வரிகளை இங்கே நினைவுகூர விழைகின்றேன். மேலும் அந்தப் பாடலில்,

"கடல்நீர் நடுவே பயணம் போனால்
குடிநீர் தருபவர் யாரோ?
தனியாய் வந்தோர் துணிவைத் தவிர
துணையாய் வருபவர் யாரோ? (மேசையைத் தட்டும் ஒலி)

என்ற கேள்விகளுக்கு இன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விடையளித்துள்ளார்கள். கடலின் நடுவே தண்ணீர் மட்டுமல்ல, மீனவர்களுக்குத் தேவையான இடுபொருட்களான எரியெண்ணெய், பனிக்கட்டிகள், உணவு மற்றும் தேவையான இடுபொருட்களையும் வழங்கி, தனியாய் ஆழ்கடலில் துணிவாய் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்குத் துணையாய் வந்துள்ளவர்தான் நமது முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அண்மைக் கடலில் மீன்வளம் குறைந்துள்ளதை அறிந்து ஆழ்கடல் மீன்பிடிப்பை அதிகரிக்கும் நிலையை உருவாக்கி, மீனவர்களின் வருவாயைப் பெருக்கவும் அறிவித்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் இத்திட்டம், மீனவர்களின் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை நிச்சயம் ஏற்படுத்தும். இத்திட்டத்திற்கானப் பூர்வாங்க பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன என்பதையும் மிக்க மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்கள் எளிதில் கெடக்கூடிய வகையாக இருப்பதால், கரை சேரும் மீன்களை விரைவில் பதனம் செய்ய வேண்டியதன் அவசியத்தை அனைவரும் அறிவோம். ஆனால், அதற்கான வசதிகள் போதுமானதாக உள்ளதா என்றால், அதுதான் இல்லை. எனவே, மீன் பதனிடும் வசதிகள் கொண்ட மீன் பதனிடும் பூங்காக்களை 13 கடலோர நகரங்களில் பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சியுடன் நிறுவிட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். முதற்கட்டமாக இத்திட்டம் சென்னை மற்றும் நாகப்பட்டினத்தில் துவங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணாநிதிக்கு மீனவர் பிரச்சினை என்பது கையில் உள்ள மோதிரம் போன்றது. கருணாநிதிக்கு மீனவர் பிரச்சினை என்பது கையில் உள்ள மோதிரம் போன்றது. எப்பொழுது வேண்டுமானாலும் கழற்றி வைத்துவிடுவார். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு உள்ளங்கை ரேகைபோல் உள்ளத்தில் இருப்பது. அதனால்தான் பல அடுக்குப் பாதுகாப்பையும் மீறி, நாகை மாவட்டம், புஷ்பவனம் மீனவர் ஜெயக்குமார் சிங்கள கடற்படையினரால் கொடூரமான முறையில் கழுத்தில் சுருக்கிட்டு கடல் நீரில் மூழ்கடித்துக் கொல்லப்பட்டபோது ஓடோடி வந்து ஆறுதல் சொன்னது மட்டுமின்றி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்தம் குழந்தைகளின் படிப்பு மற்றும் அனைத்துச் செலவுகளையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமே ஏற்கும் என்று அறிவித்தார்கள்.

தமிழக மீனவர்கள் தாக்கப்பட்ட வேளைகளில் எல்லாம் மத்திய அரசுக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டு, மாலையில் குத்தாட்ட நட்சத்திர விழாவை 6 மணி நேரம் வரை அமர்ந்து கண்டுகளித்தவர்தான் கருணாநிதி அவர்கள். அவர் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியதும் ஒன்றுதான்; சினிமாவிற்கு வசனம் எழுதியதும் ஒன்றுதான். ஏனெனில், இரண்டையும் நல்லவர்கள்



யாரும் கண்டுகொண்டதே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடவுள் மனிதனுக்கு அளித்தது கீதை—கடவுள் மனிதனுக்கு அளித்தது கீதை. மனிதன் கடவுளுக்கு அளித்தது திருவாசகம்—மனிதன் கடவுளுக்கு அளித்தது திருவாசகம். மனிதன் மனிதனுக்கு அளித்தது திருக்குறள்—மனிதன் மனிதனுக்கு அளித்தது திருக்குறள். அம்மா, தமிழர்களுக்கு நீங்கள் அளித்துக் கொண்டிருப்பது நல்லாட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) கால் இல்லாமல், கை இல்லாமல்—கால் இல்லாமல், கை இல்லாமல், உறுப்புகள் கோரமான மனிதர்கள் இருக்கிறார்கள். ஆனால், வயிறு இல்லாத மனிதன் உலகில் இல்லவே இல்லை. அதனால்தான் விலையில்லா அரிசி கொடுத்து தமிழர்களைப் பசி இல்லாமல் வாழவைத்துக் கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர் இராம பிரான். சிறந்த மாணவனாக, சிறந்த மகனாக, சிறந்த கணவனாக, சிறந்த அரசனாக, சிறந்த கடவுளாக. ஆனால், ஒரு மனிதன் எப்படியெல்லாம் வாழக்கூடாது என்று வாழ்ந்து காட்டிக் கொண்டிருப்பவர்தான் கருணாநிதி அவர்கள். ஆர்டிக் கடல் பகுதியில் வாழும் ஆபத்தான ஜெல்லி மீனை “லயன்மேன்” என்பார்கள். இரையை இறுக்கிப்பிடித்து இரத்தத்தை உறிஞ்சிவிடும். கருணாநிதியும் அவரது குடும்பத்தினரும் தமிழக மக்களை இறுக்கிப் பிடித்து, சாறை உறிஞ்சி எடுத்துவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 ஆம் ஆண்டு தமிழ்நாட்டினைத் தாக்கி, கோரத்தாண்டவமாடிய சுனாமியையும் அதனால் ஏற்பட்ட பேரழிவுகளையும் அனைவரும் அறிவோம்.

சுனாமி வேகத்தைவிட நிவாரணப் பணிகள் இந்த அழிவுகளினால் பாதிப்படைந்தோர் அனைவருக்கும் குறிப்பாக மீனவ மக்கள் மீளாத் துயரிலிருந்து மீண்டு வருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களால் துரிதமாக எடுக்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகளை உலகமே வியந்து பாராட்டியதையும் அனைவரும் அறிவோம். (மேசையைத் தட்டும் ஒலி) அன்று வந்து பார்வையிட்ட அமெரிக்க முன்னாள் அதிபர் கிளிண்டன் வெகுவாகப் பாராட்டினார். இன்று அவரது துணைவியார் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் பாராட்டுகிறார். அமெரிக்க வெளியுறவு மந்திரி, ஒரு மாநில முதல்வரை தானாக நேரில் வந்து பாராட்டியது இதுதான் முதல்

[திரு. கே.ஏ. ஜெயபால்] [2011 செப்டம்பர் 12

முறை. (மேசையைத் தட்டும் ஒலி) Guinness Record போல் இது ஒரு அமெரிக்கப் பதிவு.

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் இந்த நேரத்தில் சுனாமி பற்றிய செய்தியை நான் தெரியப்படுத்துவது என் கடமை என்றே கருதுகின்றேன். சுனாமி வந்து தாக்கியது. யாரும் சுனாமியைக் கேள்விப்பட்டதில்லை. வந்து, போனபிறகுதான் அது சுனாமி என்று பலருக்கும் தெரியும். நாங்களெல்லாம் ஊரில் இருந்தோம். அப்பொழுது சுனாமி கரையிலிருந்து 200 மீட்டர் தூரத்திற்கு, கடலுக்கு அடியிலே நிலம் பிளந்து, ஒரு நாகப் பாம்புபோல் உயரமாக மலைபோல் கிளம்பி வந்தது. மீனவர்கள் எல்லோரும் தினமும் கடலைப் பார்த்து, மேகத்தைப் பார்த்து, வானத்தைப் பார்த்து அன்றைக்குத் தொழிலுக்குச் செல்லலாமா வேண்டாமா என்று முடிவெடுப்பார்கள். அப்படிக் கடலைப் பார்த்தபோது இவர்களுக்குப் பயமில்லை. சாதாரண புயல்தான் என்று நினைத்து, கரைக்கு வராது என்று நினைத்துக் கொண்டு இருந்துவிட்டார்கள். சுனாமி தாக்கியதில் ஏறத்தாழ 6 ஆயிரம் பேர்களுக்கு மேல் இறந்து போனார்கள். ஆனால், நாகப்பட்டினம் மாவட்டத்தில் அதிகமானவர்கள் இறந்துபோனார்கள். அதிலும் குறிப்பாக எங்கள் கிராமம் அக்கரைப்பேட்டை, கீச்சாங்குப்பம், கல்லார் இந்த மூன்று கிராமங்களில் அதிகமானவர்கள் இறந்து போனார்கள். நாகப்பட்டினம் மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 6 ஆயிரம் நபர்களுக்கு மேல் இறந்து போனார்கள். அதில் குறிப்பாக அக்கரைப்பேட்டை ஊராட்சியில் மட்டும் 2,426 பேர்கள் மாண்டு போனார்கள். என்ன காரணம் என்று சொன்னால், அக்கரைப்பேட்டை ஊராட்சி என்பது ஒரு கிலோ மீட்டர் நீளமும், 4 பர்லாங்கு அகலமும் உடையது. விசைப் படகுகள் நிறுத்தி வைக்கின்ற கடுவையாறும் அங்கேதான் இருக்கிறது. மீன் ஏலம் விடுகின்ற விற்பனைகூட அங்கேதான் நடக்கிறது. கடல் உயர்ந்து வரும்போது இவர்கள் பார்த்து கொண்டு சும்மா இருந்துவிட்டார்கள். இது நம்மை ஒன்றும் செய்யாது என்று பேசாமல் இருந்துவிட்டார்கள். ஆனால் அது வந்து அடித்து எல்லோரையும் உயிரிழக்கச் செய்யும்போதுதான் இது சுனாமி பேரழிவு என்பது அவர்களுக்குத் தெரியும். எனது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 17 பேர் மாண்டு போய்விட்டார்கள். சுனாமி வந்து



2011 செப்டம்பர் 12] [திரு. கே.ஏ. ஜெயபால்]

முடிந்தது. சுனாமி வந்ததை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேள்விப்பட்டவுடனேயே நேராக சென்னைக்கு உடனடியாக வந்தார்கள். எல்லோரும் கிழக்கிலிருந்து மேற்காக ஓடிக் கொண்டிருக்கும்போது, மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டும் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்னை வந்தார்கள். கடலூருக்கு வந்தார்கள், நாகப்பட்டினத்திற்கும் வந்தார்கள். அம்மா வரும்போது சுமார் 4 மணி இருக்கும். நான் அம்மா அவர்களைப் பார்க்க முடியவில்லை. ஏனென்று சொன்னால் சுனாமியில் இறந்தவர்கள்— –கணவனை இழந்த மனைவி, மனைவியை இழந்த கணவன், குழந்தைகளை இழந்த தாய், தந்தை. இவர்கள் எல்லோரையும் போட்டுவிட்டு ஓடிக் கொண்டிருக்கிறார்கள். சுனாமி மீண்டும் வரப் போகிறது என்று எச்சரிக்கை தந்தவுடன் ஊரிலே இருக்கக்கூடாது என்று எல்லோரும் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். நான் அங்கே கடற்கரையிலே நடந்து பார்த்துக் கொண்டிருந்தபோது தெருவிலே, சாலைகளிலே பிணங்கள் அப்படி அப்படியே கிடக்கின்றன. இதை இரவிலே அப்படியே போட்டுவிட்டால் நாய்கள், நரிகள் தின்றுவிடும் என்று நான் ஒவ்வொருவராகக் கூப்பிடுகிறேன், யாரும் வரவில்லை. 5 பேரை மட்டும் கஷ்டப்பட்டு கூப்பிட்டு, 323 பிணங்களைக் கொண்டு போய் சேர்த்து புதைத்தோம். 3 குழிகளில் 323 பேரை, அவர்கள் மேலே துணியைப் போடுவதற்குகூட துணி இல்லை, போட்டு மூடிவிட்டு வந்தோம். சுனாமி வந்தது. சுனாமி வந்ததென்று சொன்னால் 860 கிலோ மீட்டர் வேகத்தில் வந்தது. ஆனால், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு 2,000 கிலோ மீட்டர் வேகத்தில் வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஏன் இதைச் சொல்லுகிறேன் என்று சொன்னால்,

> "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு".

அம்மா அவர்களுக்கு என்னால் அப்பொழுது நன்றியை நேரடியாகச் சொல்வதற்கு வாய்ப்பில்லை. இந்த மாமன்றத்திலே பேசுகின்றபோது, தமிழக மக்களெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கின்றபோது அம்மா அவர்களுடைய ஆட்சித் திறனைப் பற்றி இங்கு சொல்லியாக வேண்டுமென்பதற்காகத்தான் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எப்படித்தான் சிந்தனையில் உதித்தது என்று தெரியவில்லை. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும்

நான்கு மீனவ கிராமங்களைச் சேர்த்து ஒரு I.A.S. அதிகாரி, ஒரு மாநில அமைச்சர், ஒரு மக்கள் பிரதிநிதியை உள்ளடக்கி நிருவாகப் பணிகள் நடைபெற வேண்டும். காலையில் 6 மணிக்கே வந்துவிடுவார்கள். அன்று பகல் முழுவதும் எல்லாப் பணிகளையும் பார்ப்பார்கள். பணியைப் பார்த்துவிட்டு, இரவு வந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே கூட்டம் நடைபெறும். கூட்டம் விடிய, விடிய நடக்கும், விடியற்காலை 3.00 மணி வரைக்கும் நடக்கும். ஆனால் நான் பார்த்திராத, கேள்விப்படாத ஒரு விஷயம் என்னவென்று சொன்னால், கூட்டம் நடந்த உடனேயே மாவட்ட ஆட்சித் தலைவர், அங்கே பொறுப்பேற்றிருந்த ஊரக வளர்ச்சித் துறைச் செயலாளர் சென்னையிலிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தகவல் கொடுத்தார். தகவல் கொடுத்த ஒரு மணி நேரத்திற்குள்ளாக ஒரு அரசாணை வெளியிடப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு நடைமுறை உலகத்திலே எங்கேயும் நடந்தது கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட ஒரு சிறப்பான நிர்வாகத் திறமையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையால்தான் அங்கு மாவட்ட ஆட்சித் தலைவராகயிருந்த இராதாகிருஷ்ணன் அவர்கள் ஒரு சிறந்த நிர்வாகியென்று இலங்கை அரசாங்கமும், அமெரிக்க அரசாங்கமும் அவரை வரவழைத்துப் பாராட்டியது. ஆனால் இதற்கெல்லாம் சுனாமி நிவாரணப் பணிகளுக்குண்டான ஏற்பாட்டைச் செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதைச் சொல்லாமல் விட்டுவிட்டால், நன்றியுடையவர்களாக இருக்கமாட்டோம், நன்றியற்றவர்களாக இருப்போம் என்ற உணர்வு மக்களிடத்திலே ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் இந்த மாமன்றத்தில் இந்தத் தகவலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட ஒரு சிறப்பான நிவாரணப் பணிகள் அன்று நடந்தன.

பிற்பகல் 12—20

சுனாமி வந்து நான்கு நாட்கள் ஆயின. மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களையெல்லாம் அழைத்தார்கள், அதிகாரிகளையும் அழைத்தார்கள். எல்லா மாவட்டங்களிலிருந்தும் மீனவர்கள் வந்திருந்தார்கள். அப்பொழுது நிதியமைச்சராகயிருந்த மதிப்பிற்குரிய பொன்னையன் அண்ணன் அவர்கள் தலைமையிலே கூட்டம் நடைபெற்றது. என்ன வேண்டுமென்றாலும் கேளுங்கள்.



உங்களுக்கு உதவி செய்வதற்கு மாண்புமிகு அம்மா இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் உங்களுக்காக எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு துணிவு, தைரியம் மாண்புமிகு அம்மா அவர்களைத் தவிர மீனவர்களிடத்தில் அன்பு காட்டுகிற தலைவர்களை இந்த உலகத்திலேயே நாங்கள் பார்த்தது கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

நான் ஒரு சம்பவத்தை இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். அன்றைக்கு எங்களது அக்கரைப்பேட்டை, கீச்சாங்குப்பம், நாகப்பட்டினம் ஆரியநாட்டு தெரு, நம்பியார் நகர் ஆகிய நான்கு மீனவர் கிராமங்களுக்குப் பொறுப்பாளராக இருந்த நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சராக இருக்கக்கூடிய மதிப்பிற்குரிய அண்ணன் அவர்கள் அங்கு வந்தார்கள். எல்லாம் முடிந்துவிட்டது. இடிந்துபோன வீடுகளையெல்லாம் சீர்படுத்த வேண்டும், அந்த இடத்தைத் தரைமட்டமாக்க வேண்டும் என்று JCB Poclain இயந்திரத்தைக் கொண்டுவந்து எல்லாவற்றையும் சரிசெய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒரு வீட்டின் கூரையை மேலேயிருந்து JCB Poclain இயந்திரம் கீழே இழுத்துக் கொண்டிருந்த வேளையில் ஒரு பத்து மாத பச்சிளங்குழந்தை கூரையின் மீதிருந்த மூங்கிலைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அப்படியே இறந்துபோய் இருந்தது. அந்தச் சம்பவத்தைப் பார்த்தவுடனேயே மாண்புமிகு நிதியமைச்சர் அண்ணன் அவர்களும், நாங்களும் நெகிழ்ந்து போனோம். அந்தப் பச்சிளங்குழந்தைக்கு என்ன தெரியும். சுனாமி வந்த வேகத்தில் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு துணையைத் தேடியிருக்கிறது. இப்படி பல உயிர்கள் மாண்டு போய்விட்டன. மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டும் அன்றைக்கு இல்லையென்று சொன்னால், மீனவ சமுதாயத்தினர் இன்று நாதியற்றவர்களாக ஆகியிருப்பார்களென்று என்னுடைய மனத்தின் அடித்தளத்திலிருந்து இந்த மாமன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காத்திடும்வகையில் அவர்களுக்குத் தேவையான மீன்பிடிக்கலன்கள், வலைகள் வாங்குவதற்குத் தேவையான நிதியுதவி அளித்து ஐந்தே மாதங்களில் மீண்டும் மீன்பிடித் தொழிலுக்குச் செல்லும் நிலையை உருவாக்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

அதுமட்டுமல்ல, சுனாமி பேரழிவில் சிக்குண்டு உயிரையும், உடமைகளையும் இழந்து தவித்த மீனவ மக்களின் துயரினைப் போக்கிடும் விதமாக, பாதிப்படைந்த உள்கட்டமைப்பு வசதிகளைச் சீர்படுத்திடவும், பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்விற்கும் எண்ணற்ற உதவிகள் உலகம் முழுவதிலிருந்தும் மாண்புமிகு அம்மா அவர்களால் பெறப்பட்டதும் அனைவரும் அறிந்த ஒன்றாகும். எந்தவொரு திட்டத்தினையும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்தால்தான் அத்திட்டம் வெற்றியடையும். ஆனால், சுனாமிக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட பல நிவாரணப் பணிகள் கடந்த தி.மு.க. மைனாரிட்டி ஆட்சியில் நிறைவடையாததால், அத்திட்டங்களின் பயன்கள் மக்களைச் சென்று சேரவில்லை. காரணம் அப்போதைய மைனாரிட்டி முதல்வர் கருணாநிதிக்கு தமிழக மக்களைப் பற்றிக் கவலையில்லை. தன் மக்களைப் பற்றிதான் கவலை.

உதாரணமாக உலக வங்கி நிதியுதவியுடன் அவசரகால சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் நாகப்பட்டினம் மற்றும் பழையாற்றில் மீன்பிடித் துறைமுகம் அமைத்தல், கடலூர் மாவட்டம் வெள்ளாறு முகத்துவாரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், திருமுல்லைவாசலில் உப்பனாறு முகத்துவாரம் நிரந்தரமாகத் திறந்து வைக்கும் பணிகள், நாகூர் மற்றும் பரங்கிப்பேட்டை– அண்ணன் கோயில் ஆகிய இடங்களில் மீன் இறங்கு தளங்கள் ஆகியவை திட்டங்களாகவே இருந்ததன்றி செயல்வடிவம் பெறவில்லை.

கடந்த கால தி.மு.க. ஆட்சியில் மீன் வளத் துறையில் நடந்த சில விஷயங்களைப் பற்றி இந்த நேரத்தில் தெளிவுபடுத்துவது என்னுடைய கடமையென்று கருதுகின்றேன். இந்தப் பணிகளுக்கெல்லாம் மேற்கூறிய திட்டங்களுக்காக டெண்டர் வைத்தாகிவிட்டது என்று சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த உடனேயே ஆய்வுப் பணிகளை நடத்தி விரைவாக அப்பணிகள் முடிக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டதன்பேரில் ஆய்வுக் கூட்டம் நடத்தி கேட்கிறபோது, டெண்டர் வைத்தாகிவிட்டது. ஆனால், work ஆரம்பிக்கவில்லை என்று சொன்னார்கள். ஏனென்றால், ஒவ்வொரு திட்டத்திற்கும் ஆறு, ஏழு துறைகளில் நாம் N.O.C. வாங்க வேண்டியிருக்கிறது. கலெக்டரிடமிருந்து Enter upon permission வாங்க வேண்டும். அதன்பிறகு, ஒப்பந்தக்காரர்களோடு ஒப்பந்தம் செய்துகொண்டு பணிகளை ஆரம்பிக்க வேண்டும். இதில் எந்தவொரு துறையிலிருந்தும் N.O.C. வாங்கப்படவில்லை. பையை நிரப்பிக்கொண்டுப் போய்விட்டார்களே தவிர, எந்தப் பணியையும் அவர்கள் செய்யவில்லை, ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடித்த கதையாக இந்தத் துறையையும் சேர்த்து எந்தத் துறையையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை என்பதை இந்த மாமன்றத்தில் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)





பிற்பகல் 12–25

மேலும், சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தின் வாயிலாக 10 மீன் இறங்கு தளங்கள் ரூபாய் 49 கோடியே 97 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் திருவள்ளூர் மாவட்டம் அண்ணாமலைச்சேரி, எண்ணூர் முகத்துவாரக்குப்பம், பெரிய மாங்கோடு, காஞ்சிபுரம் மாவட்டம் கடலூர் பெரியகுப்பம், விழுப்புரம் மாவட்டம் எக்கியார்குப்பம், புதுக்கோட்டை மாவட்டம் ஆர்.புதுப்பட்டினம், இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை, தூத்துக்குடி மாவட்டம் திரேஸ்புரம், பெரியதாழை மற்றும் திருநெல்வேலி மாவட்டம் உவரி முதலிய திட்டப் பணிகள் கடந்த தி.மு.க. மைனாரிட்டி ஆட்சியில் ஆமை வேகத்தில் சென்று கொண்டிருந்த நிலையில், செயல்திறன்மிக்க தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பொறுப்பேற்ற 100 நாட்களுக்குள் பணிகள் முடுக்கிவிடப்பட்டு, உவரி தவிர மற்ற அனைத்து இடங்களிலும் கட்டுமானப் பணிகள் துவங்கி அசுரவேகத்தில் நடைபெற்று வருகின்றன என்பதை இந்த மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

“கோயில்” கொள்ளையர்களின் கூடாரமாகிவிட்டது என்று வசனம் பேசிய கருணாநிதியும் அவரது கூட்டமும் தலைமைக் கொள்ளையர்களாகமாறி தமிழகத்தைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தது தமிழக மக்களுக்கு வெட்ட வெளிச்சமாகிவிட்டது. தமிழக மக்களின் கோபம் ஜப்பான் தேசத்து எரிமலைபோல் வெடித்து, இவர்களை “கிளீன்போல்டு” ஆக்கினார்கள். ஆனாலும், இவர்கள் “நோ பால்” என்று கத்துவதை விடவேயில்லை.

தமிழ்நாட்டில் தற்போது, 60 ஆயிரத்து 863 மீன்பிடிக் கலன்கள் உள்ளன. இதில் 6,700 மீன்பிடி விசைப் படகுகள், 13,583 பைபர் வள்ளம், 10,172 பைபர் கட்டுமரங்கள், 8,315 வள்ளம் மற்றும் 22,093 கட்டுமரங்கள் ஆகும். இந்தப் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்குப் போதிய இடவசதி இல்லாததால் குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டம், மேற்குக் கடற்கரையிலுள்ள மீன்பிடி விசைப்படகுகளை நிறுத்தி வைப்பதற்கு அண்டை மாநிலமான கேரளாவிற்குச் செல்லும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனைப் போக்கிட கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடியில் தனியார் பங்களிப்புடன் மீன்பிடித் துறைமுகம் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுமட்டுமல்ல, தேசிய மீன் வள அபிவிருத்தி வாரியத்தின் நிதியுதவியுடன் சென்னை மீன்பிடித் துறைமுகம் ரூபாய் 12 கோடியே 7 இலட்சத்திலும், புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினம் மீன் இறங்குதளம் ரூபாய் 53 இலட்சத்து 32 ஆயிரத்திலும், கடலூர் மாவட்டம், முடசலோடை மீன் இறங்குதளம் ரூபாய் 25 இலட்சத்து 32 ஆயிரத்திலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையோடு தரம் உயர்த்தப்படவுள்ளன என்பதையும் இம்மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களின் நலன் மற்றும் மீன் வளத்தினைப் பாதுகாக்க "மீன் வள மேம்பாட்டு இயக்கத்தினை" 2002 ஆம் ஆண்டில் 61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 ஆண்டுகளில் செயல்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் இராமநாதபுரத்தில் துவக்கி வைக்கப்பட்டது. இந்த இயக்கத்தின்மூலம் பல்வேறு மீனவர் நலன் மற்றும் மீன் வள மேம்பாட்டுத் திட்டங்கள் தீட்டப்பட்டு அதனடிப்படையில் தமிழகத்தின் மீன் உற்பத்தியைப் பெருக்கி முறையான பயன்பாட்டிற்குக் கொண்டுவரவும், அதன்மூலம் மீன் வளர்ப்போர் மற்றும் எளிய மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்தவும், 15 அம்சத் திட்டத்தினை அறிவித்தார்கள்.

தொலைதூரக் கடல் பகுதியில் மீன் பிடிப்பினைப் பெருக்குதல், மீன் பிடிப்பிற்குப் பின்னர் கையாளப்படும் செயல்முறைகளை மேம்படுத்துதல், மீன் விற்பனையில் முக்கியப் பங்கு வகிக்கும் மீனவ மகளிருக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றில் தனிக் கவனம் செலுத்தப்பட்டது.

பாரம்பரிய மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதுடன் ஆறு, குளம், குட்டை போன்ற உள்நாட்டு நீர் ஆதாரங்களில் நவீன உத்திகள்மூலம் மீன் வளத்தினைப் பெருக்கி மீன் உற்பத்தியை அதிகரிக்க இவ்வியக்கம் செயல்பட்டது. இவ்வியக்கத்தின்மூலம் ஒருங்கிணைந்த நீர்த்தேக்க மீன் வளர்ச்சி, குளம், குட்டைகளில் ஒருங்கிணைந்த மீன்வளர்ப்பு பிரபலப்படுத்தப்பட்டது.

கடலோர மீன் வளத்தினைப் பாதுகாத்து, மேம்படுத்தும்பொருட்டு 10 இடங்களில் ரூபாய் ஒரு கோடியே 50 இலட்சத்தில் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைக்கப்பட்டன. மீன் வள இருப்பை அதிகப்படுத்திட 4 கோடியே 80 இலட்சம் கருப்பு இறால் குஞ்சுகள்





ரூபாய் ஒரு கோடியே 28 இலட்சம் செலவில் அண்மைக் கடல் பகுதிகளில் இருப்புச் செய்யப்பட்டன. பாரம்பரிய மீனவர்களுக்கு 90 விழுக்காடு மானியத்தில் உயிர்காக்கும் சட்டைகள் ரூபாய் 90 இலட்சத்தில் வழங்கப்பட்டன. ஆனால், அதன்பின் வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு, இந்த மீன் வள மேம்பாட்டு இயக்கத்தினைத் தொடர்ந்து செயல்படுத்தாததால் மாநிலத்தின் 'மீன் வளமும் மீனவர் நலனும்' பின்னடைவைச் சந்தித்தன. இந்தத் தேக்க நிலையை மாற்றிடும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்திட ஆணையிட்டுள்ளார்கள்.

குறிப்பாக, 1. கடலோர ஆதாரத்தினை அதிகரிக்கும்பொருட்டு 19 கடலோர மீனவக் கிராமங்களில் ரூபாய் 2 கோடியே 93 இலட்சம் செலவில் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைக்கப்படும்.

பிற்பகல் 12—30

2. மீனவர்கள் இரவு நேரங்களில் மீன் பிடித்துவிட்டு, எந்த நேரமும் பாதுகாப்பாக கரை திரும்ப கடலோர மீனவ கிராமங்களில் சூரிய சக்தி மற்றும் காற்றின் சக்தியால் இயங்கும் 'வழிகாட்டி விளக்குகளை' தமிழகத்தில் 9 கடலோர மாவட்டங்களிலுள்ள 10 மீனவ கிராமங்களில் ரூபாய் 1 கோடியில் நிறுவப்படும்.

3. ரூபாய் 3 கோடியே 34 இலட்சம் செலவில் மீனவர்களுக்குக் கூண்டுகளில் மீன் வளர்க்கத் தேவையான பயிற்சியளித்து மீன் உற்பத்தியினைப் பெருக்கவும், மீன் விற்பனை நிலையங்களை அமைக்கவும், திருவள்ளூர் மாவட்டம், பூண்டி நீர்த்தேக்கத்தில் 2 ஹெக்டேர் நீர்பரப்பில் 4 வலை அடைப்பான்கள் அதாவது Pen அமைத்து மீன்குஞ்சுகள் வளர்க்கவும், 48 கூண்டுகள் அமைத்தும் மீன்கள் வளர்க்கப்படும். இதன்மூலம் தமிழ்நாட்டில் ஆண்டொன்றுக்கு கூடுதலாக 480 டன் மீன் உற்பத்தி செய்யப்படும்.

4. சென்னை நகர மக்களின் தரமான மீன் தேவையைக் கருத்தில்கொண்டு, சென்னையில் சாந்தோம் பகுதியில் 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பனிக்கட்டி நிலையம் ஒன்றும், குளிர்பதனக் கிட்டங்கி ஒன்றும் கொண்ட 'மீன் கையாளும் மையம்' தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின்மூலம் அமைக்கப்படும்.

5. மீனவ நலத் திட்டங்கள் மற்றும் மீன்வள மேம்பாட்டுத் திட்டங்கள் பயனாளிகளை விரைவில் சென்றடைய, மீன்வளத்

[திரு. கே.ஏ. ஜெயபால்] [2011 செப்டம்பர் 12

துறை அலுவலகங்களுக்கு ரூபாய் 53 இலட்சம் மதிப்பிலான 10 ஊர்திகள் வழங்கப்படும்.

6. நமது மீனவர்கள் ஆழ் கடலுக்குச் சென்று, ஏற்றுமதி தரம் வாய்ந்த சூரை மற்றும் கேரை மீன்களைப் பிடித்திடவும், அவர்களுக்குத் தேவையான செய்முறைப் பயிற்சிகளை அளித்திடவும் ரூபாய் 85 இலட்சத்து 81 ஆயிரம் மதிப்பீட்டில் 6 கண்ணாடி நாரிழைப் படகுகளை வாங்கி அதில் செய்முறைப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இதன்மூலம், நமது மீனவர்கள் தங்களது சிறிய படகுகளில் ஆழ்கடல் பகுதிக்குச் செல்வதற்குத் தேவையான ஆக்கமும், ஊக்கமும் பெறுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டையில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தற்போது நீங்கள் படிப்பது அறிவிப்புகளா?

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** இல்லை, அறிவிப்புகள் இல்லை. அறிவிப்புகள் தனியாக இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிவிப்புகள் தனியாக இருக்கின்றனவா? ஏழு என்று சொன்னீர்களே, அதற்காகத்தான் கேட்டேன்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** கடற்பாசி வளர்ப்பு, நண்டு மற்றும் சிங்கி இறால் கொழுக்க வைத்தல், கூண்டுகளில் மீன் வளர்ப்பு போன்ற கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்புத் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து, ஒரு மாதிரி வடிவமைப்பினை ரூபாய் ஒரு கோடியே 35 இலட்சத்தில் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நமது மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்பவர்களுக்கு திறன் மேம்பாடு பயிற்சி அளிப்பதன்மூலம் கடல் மீன் உற்பத்தி அதிகரிப்பதோடு அவர்கள் அதிக வருவாய் ஈட்டவும் வழி பிறக்கும். இதுபோன்ற செயல்திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இத்திட்டங்கள் அனைத்தையும் செவ்வனே செயல்படுத்திட உறுதுணையாய் இருக்கும் அரசுச் செயலர், கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை அவர்களுக்கும், மீன் துறை ஆணையர் அவர்களுக்கும் எனது மேலான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2011 செப்டம்பர் 12] [திரு. கே.ஏ. ஜெயபால்]

மாநிலத்தில் ஒட்டுமொத்த மீன்வளத்தினைப் பெருக்கிடவும், மீனவ சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடவும், மீனவர்களின் மீன்பிடி உரிமையை நிலைநாட்டிடவும், மீனவர்களின் நலனை எப்பொழுதும் தனது இதயத்தில் இருத்திச் செயல்படும், அனைவராலும் நேசிக்கப்படும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு பாடுபடும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"காதல் பெண்ணையும், மழை வாங்கிய களிமண்ணையும், கருணாநிதியையும் நம்பவே கூடாது" என்பார்கள். இந்த மூன்றும் எப்பொழுது வேண்டுமானாலும் வழுக்கி விட்டுவிடும் என்பதை இலங்கைத் தமிழர்கள் மட்டுமல்ல, சிறையில் வாடுபவர்களும் தெரிந்து கொண்டுவிட்டார்கள்.

அன்று 'அன்னைத் தமிழின் அழுகுரல் கேட்டும், திண்ணை ஆண்டிபோல் தூங்கிக் கொண்டிருந்த கருணாநிதிக்கு, முள்வேலியின் கவலை தெரியவில்லை. ஆனால், இன்று திஹார் கம்பியின் கவலை கண்ணில் தெரிகிறது'. மாண்புமிகு அம்மா, நீங்கள் மானைப் போன்றவர்கள்—ஏன் கவரி மானைப் போன்றவர்கள். அவற்றின் கண்களில் கருணை இருக்குமே தவிர, கபடம் இருக்காது. மான்கள் அன்புள்ளவை. தன்னை பின்தொடரும் எந்த உயிரினமும் புதைக் குழியில் மாட்டிவிடக் கூடாது என்பதற்காக, துள்ளித் துள்ளி முன்னால் போய் நின்று, பின்னால் திரும்பிப் பார்க்கும். நான் வந்த வழியே வா என்று சொல்லாமல் சொல்லும். புரிந்து கொண்டு வந்தவர்கள் இன்று புகழ் அடைந்து கொண்டிருக்கிறோம். என் மூச்சில் கலந்த உங்கள் பெருமைகளைச் சொல்ல வார்த்தைகளே கிடைக்கவில்லை அம்மா. என் வாழ்க்கையில் மிகப் பெரிய விசிட்டிங் கார்டை எனக்காக உருவாக்கித் தந்திருக்கிறீர்கள்.

இருந்தாலும் நிறைவாக, உலகிலேயே ஸ்வீடன் முழுமையான ஜனநாயக நாடாகத் திகழ்கிறது. ஆனால், அதுபோல் தமிழக மக்கள் யாரிடமும் கையேந்தாமல் முழுமை பெற்ற மக்களாக உருவாக்கிட, நிறைவான தமிழகத்தை ஏற்படுத்திட, நாளுக்கு 24 மணி நேரமும் பணியாற்றிக்கொண்டிருக்கும் உங்களுக்கு 12 இலட்சம் மீனவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். உங்கள் கட்டளைகளை எங்கள் இதயத்திலும், கால்களை எங்கள் கண்ணிலும் தாங்கி செயல்படுவோம் என்று உங்கள் பொற்பாதம் பணிந்து உறுதி கூறுகிறோம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

இறுதியாக, நட்சத்திர மீனைத் துண்டு துண்டாக வெட்டினாலும் இறப்பதில்லை. நானும் நட்சத்திர மீன்போல், என்னைத் துண்டு துண்டாக வெட்டினாலும், என் சுவாசம் உள்ளவரை விசுவாசத்தோடு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் காலடியில் இருப்பேன் என்பதைப் பணிவுடன் வணங்கித் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுகின்றேன்.

பிற்பகல் 12–35

கன்னியாகுமரி மாவட்டம் மணக்குடியில் மீன்பிடித் துறைமுகம் அமைத்தல். கன்னியாகுமரி மாவட்டம் மணக்குடியைச் சுற்றியுள்ள மீனவக் கிராமங்களைச் சேர்ந்த விசைப்படகுகள் தற்போது சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகத்தில் கட்டப்பட்டு வருகின்றன. சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகத்தில் படகு கட்டுவதற்குப் போதிய இடவசதி இல்லாததால் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியைப் போக்கவும், கூடுதல் படகுகள் கட்டுவதற்குத் தளங்கள் உருவாக்கும்பொருட்டும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடி மீனவக் கிராமத்தில் தனியார் பங்களிப்புடன் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அம்மாவின் அரசு உத்தேசித்துள்ளது. இதற்கான பணிகள் இந்த ஆண்டே தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடலில் மீன்பிடிக்கையில் காணாமல் போகும் அல்லது பிற நாடுகளில் சிறை வைக்கப்படும் மீனவரின் குடும்பத்திற்கு வழங்கப்படும் தின உதவித் தொகையை 50 ரூபாயிலிருந்து 250 ரூபாயாக உயர்த்தி வழங்குதல். கடலில் மீன் பிடிக்கையில் காணாமல் போகும் அல்லது பிற நாடுகளில் சிறை வைக்கப்படும் மீனவரின் குடும்பத்திற்கு தற்போது தின உதவித் தொகையாக 50 ரூபாய் அல்லது மாத உதவித் தொகையாக 1,500 ரூபாய், காணாமல் போகும் அல்லது சிறை வைக்கப்படும் மீனவர் கரை திரும்பும்வரை வழங்கப்படுகிறது. இந்தக் குறைந்த தொகையைக் கொண்டு, காணாமல்போகும் அல்லது பிற நாடுகளில் சிறை வைக்கப்படும் மீனவரின் குடும்பம், தங்களது வாழ்க்கையினை நடத்துவதற்கு மிகவும் சிரமப்படுவதைக் கருத்திற்கொண்டு, காணாமல் போகும் அல்லது பிற நாடுகளில் சிறை வைக்கப்படும் மீனவரின் குடும்பத்திற்கு வழங்கப்பட்டுவரும் தின உதவித் தொகை



50 ரூபாயிலிருந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி நடப்பாண்டு முதல் 250 ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மீன்பிடித் துறைமுகம் மற்றும் மீன் இறங்குதளங்கள் தரம் உயர்த்துதல். சமீப காலமாக கடல் மீன் உணவுப் பொருட்களின் தரம் குறித்து, உலகளாவிய அளவில் எழுந்துள்ள விழிப்புணர்வு தொடர்பான சவால்களைச் சமாளிக்கவும் மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்தவும் மீன்பிடித் துறைமுகங்களிலும், மீன் இறங்குதளங்களிலும் உள்ள வசதிகளைத் தரம் உயர்த்துதல் அவசியமாகிறது. எனவே, 2011–2012 ஆம் நிதியாண்டில் தேசிய மீன்வள அபிவிருத்தி வாரியத்தின்மூலம் மீன்பிடித் துறைமுகம் மற்றும் மீன் இறங்குதளங்களைத் தரம் உயர்த்த, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி 12.86 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டிலான கீழ்க்காணும் திட்டங்களுக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதாவது, சென்னை மீன்பிடித் துறைமுகத்தினைத் தரம் உயர்த்துவதற்கு 12.07 கோடி ரூபாயும், புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினம் மீன் இறங்குதளத்தினைத் தரம் உயர்த்துவதற்கு 53.26 இலட்சம் ரூபாயும் மற்றும் கடலூர் மாவட்டம் முடசலோடை மீன் இறங்குதளத்தைத் தரம் உயர்த்துவதற்கு 25.32 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

செயற்கை மீன் உறைவிடங்களை தமிழகத்தின் அண்மைக் கடல் பகுதிகளில் அமைத்தல். அண்மைக் கடல் பகுதியில் மீன் உற்பத்தியை அதிகரிக்க, செயற்கை மீன் உறைவிடங்கள் உதவுகின்றன. இவை, கடல்வாழ் உயிரினங்களுக்கு வாழ்விடமாக அமைவதோடு, உணவு மற்றும் பாதுகாப்பினையும் அளிக்கிறது. இந்த செயற்கை மீன் உறைவிடங்கள், கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கத்தை அதிகரிக்கவும், குஞ்சுகள் பாதுகாப்பாக உயிர் வாழவும் வாய்ப்பளிப்பதால், மீன் உற்பத்தி அதிகரிக்கிறது. மேலும், செயற்கை மீன் உறைவிடங்கள் அண்மைக் கடல் பகுதியில் இழுவலைகளைப் பயன்படுத்தத் தடையாகவும் அமைகிறது. 2011–2012 ஆம் நிதியாண்டில், தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவி மற்றும் அரசு பகுதி–2 திட்டத்தின்கீழ், 19 மீனவக் கிராமங்களின் அருகேயுள்ள கடல் பகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி 2.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 19 செயற்கை மீன் உறைவிடங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. கே.ஏ. ஜெயபால்] [2011 செப்டம்பர் 12

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பினை மேம்படுத்திட, ஒருங்கிணைந்த மாதிரி வடிவமைப்புகளை உருவாக்குதல். கடற்பாசி வளர்ப்பு, நண்டு, சிங்கி இறால் கொழுக்க வைத்தல், கூண்டுகளில் மீன்வளர்ப்பு ஆகியவை மீனவ மக்களுக்கு சுய வேலைவாய்ப்பு அளிப்பதோடு, வருமானத்தை உயர்த்துவதற்கு மாற்று வாழ்வாதாரத் தொழிலாகவும் அமைந்துள்ளது. மேலும், அண்மைக் கடல் பகுதியில் மீன் பிடிப்பு அழுத்தத்தினைக் குறைப்பதற்கும் வழிவகை செய்கிறது. எனவே, அனைத்து கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்புத் தொழில்நுட்பங்களை ஒரே இடத்தில் செயல்முறை பயிற்சிமூலம் விளக்குவதற்கு ஏதுவாக, கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்புத் தொழில்நுட்பங்கள் ஒருங்கிணைந்த மாதிரி வடிவமைப்பு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, 2011–2012 ஆம் ஆண்டில் கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டையில் 1.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மீனவர்களுக்குத் தூண்டில்மூலம் சூரை மீன்பிடிப்புத் தொடர்பான பயிற்சி அளித்தல். தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், 6 கண்ணாடி நாரிழைப் படகுகளை வாங்கி, மீனவர்களுக்கு ஆழ்கடல் சூரை மீன் பிடிப்புப் பற்றிய பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி, சிறிய மீன்பிடிக் கலன்களை தொலைதூரக் கடல் மீன்பிடிப்பினை மேற்கொள்ள ஊக்குவிப்பதோடு, தங்கு கடல் மீன்பிடிப்பினை மேற்கொள்ள ஒரு புதிய வழியினை உருவாக்கும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 2011–2012 ஆம் நிதியாண்டில் 85.81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தவிருக்கும் இத்திட்டத்தின்மூலம் மீனவர்களுக்கு அதிக மீன்பிடிப்பு மற்றும் வருவாய் கிடைப்பதுடன் சூரை மீன் ஏற்றுமதி செய்யும் வாய்ப்பும் அதிகரிக்கும்.

நீர்த்தேக்கங்கள் மற்றும் கிராமப்புற மாதிரி மீன்வளர்ப்புக் குளங்களில், மீன்வளத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, வெளிப்பொருத்தும் இயந்திரம் பொருத்திய கண்ணாடி நாரிழைப் படகுகள் வாங்குதல். நீர்த்தேக்கங்கள் மற்றும் கிராமப்புற மாதிரி மீன்வளர்ப்புக் குளங்களில் மீன்வளத்தைப் பாதுகாக்கவும், அதன்மூலம் மீன் உற்பத்தியைப் பெருக்கிடவும், மீன் சரணாலயப் பகுதிகளைப் பாதுகாத்திடவும் ரோந்துப் பணி மேற்கொள்ளுவது அத்தியாவசியமானது. எனவே, 2011–2012 ஆம் நிதியாண்டில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவின்படி,



2011 செப்டம்பர் 12] [திரு. கே.ஏ. ஜெயபால்]

வெளிப்பொருத்தும் இயந்திரம் பொருத்தப்பட்ட 45 கண்ணாடி நாரிழைப் படகுகள் வாங்க 1.07 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மீன் வளர்ப்போர்கள் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைத்திட மானியம் வழங்குதல். மீன்குஞ்சு உற்பத்தியில் தனியார் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகள் அமைப்பதை ஊக்குவித்திட, 50 விழுக்காடு மானியம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கடலூர், விழுப்புரம், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் மொத்தம் 8 முதல் 10 கோடி நுண்மீன் குஞ்சுகள் உற்பத்தித் திறனுடைய 10 மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகளைத் தனியார் அமைத்திட மானியம் வழங்கப்படும். இதன்மூலம், சுமார் 2.5 கோடி வளர்ந்த மீன்குஞ்சு விரலிகள் உற்பத்தி செய்யப்பட்டு, மீன் உற்பத்தி ஆண்டொன்றிற்கு 400 டன் அதிகரிக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, இத்திட்டத்தினை செயல்படுத்த மொத்த மானியமாக 50 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–40

பிற மாநிலங்களுக்கு கடல் மீனவர்களை அழைத்துச் சென்று, அவர்களின் திறன் மேம்பாடு அடையச் செய்தல். கடல் மீனவர்களை அண்டை மாநிலங்களில் உள்ள பெரிய மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், மீன் பதனிடும் நிலையங்கள் மற்றும் மீன் விற்பனை மையங்கள் ஆகியவற்றிற்கு நேரில் அழைத்துச் சென்று, அங்கு பின்பற்றப்படும் சிறந்த செயல்முறைகள், பயன்படுத்தும் மீன்பிடிக் கலன்கள் மற்றும் மீன்பிடி வலைகளின் வகைகள் ஆகியவற்றினைத் தெரிந்துகொள்ள வழிவகை செய்யப்படும். இத்திட்டத்தின் மூலமாக, மீனவர்களிடையே நிலைத்த வளங்குன்றா கடல் மீன்வளம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

இப்பயிற்சிக்காக, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், 86 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடலோர மீனவ கிராமங்களில் சூரிய சக்தி மற்றும் காற்றின் சக்தியால் இயங்கும் வழிகாட்டி விளக்குகள் அமைத்தல். தமிழகத்தில் 9 கடலோர மாவட்டங்களில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா

அவர்களின் ஆணைப்படி, 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 10 சூரிய சக்தி மற்றும் காற்றின் சக்தியால் இயங்கும் வழிகாட்டி விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டி விளக்குகள் சூரிய ஒளி மற்றும் காற்று சக்தியினைப் பயன்படுத்தி, தடையற்ற மின்சக்தியின்மூலம் ஒளிருவதால், மீனவர்கள் பாதுகாப்பாக எந்த நேரமும் கரை திரும்ப வழிவகுக்கும்.

தேசிய புரத மேலுணவு இயக்கம்: தேசிய புரத மேலுணவு இயக்கத் திட்டத்தின்கீழ், மீன்வளம் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. இத்திட்டத்தின்கீழ், மீனவர்களுக்கு கூண்டுகளில் மீன்வளர்க்கத் தேவையான பயிற்சியளித்து, மீன் உற்பத்தியினைப் பெருக்கவும், மீன் விற்பனை நிலையங்களை அமைத்து, மீனவர்கள், தாங்கள் பிடிக்கும் மீன்களுக்கு நல்ல விலையைப் பெற்றிடவும், திருவள்ளூர் மாவட்டம், பூண்டி நீர்த்தேக்கத்தில் 2 ஹெக்டேர் பரப்பில் நான்கு வலை அடைப்பான்கள் அமைத்து மீன் குஞ்சுகள் வளர்க்கவும் மற்றும் 48 கூண்டுகள் அமைத்து மீன் வளர்ப்பினை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, இத்திட்டத்தினை 3.34 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்துவதன்மூலம், ஆண்டொன்றிற்குக் கூடுதலாக 480 டன் மீன் உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்திற்குத் தலைமை அலுவலகம் கட்டுதல். சென்னையைத் தலைமை இடமாகக் கொண்டு, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், 1974 ஆம் ஆண்டு முதலும், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம், 1991 ஆம் ஆண்டு முதலும் இயங்கி வருகின்றன. தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் இவ்விரு நிறுவனங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சொந்தமாகத் தலைமை அலுவலகக் கட்டடம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மீன்வளத் துறையில் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்புதல். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, மீன்வளத் துறையில் காலியாக உள்ள 476 பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் 37 வெட்டுத் தீர்மானங்களை



வழங்கியுள்ளார்கள். அனைத்தையும் படித்துப் பார்த்தேன். மீனவர்களின் நலன் காக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அவற்றின்மீது படிப்படியாக நடவடிக்கை எடுக்கும் என அறிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கை எண் 7–மீன் வளத் துறையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தை உரித்தாக்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறறிவு படைத்த மனித குலத்திற்கு மட்டும் நான் பாதுகாவலன் இல்லை; ஐந்தறிவு படைத்த உயிர்களுக்கும், உயிரினங்களுக்கும் நான் பாதுகாவலர் என்ற முறையில் கால்நடைகளை வளர்க்கவும், கால்நடைகளைப் பாதுகாக்கவும், கால்நடை மருத்துவர்களை அதிகப்படுத்தவும், ஒரத்தநாட்டிற்கு ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியைக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் ஒரத்தநாடு தொகுதி மக்களினுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 7–மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 7–மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை). 10–9–2011 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப் பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.332,36,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.67,31,89,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஆ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை). 10–9–2011 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 676,49,26,000/-, மூலதனக் கணக்கில் ரூ. 14,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ. 1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 12–45

## (இ) கோரிக்கை எண் 8–பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 8–பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை). 10–9–2011 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.62,76,72,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.81,05,06,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஈ) கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோடானுகோடி தொண்டர்களில் கடைக்கோடித் தொண்டனாகிய என்னை, எளிய மருத்துவனாகிய

[டாக்டர் வி.எஸ். விஜய்] [2011 செப்டம்பர் 12

என்னை, வேலூர் கிழக்கு மாவட்ட மருத்துவ அணி இணைச் செயலாளராகவும், மாவட்ட மருத்துவர் அணிச் செயலாளராகவும் நியமித்து, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் வேலூரில் கழகத்தின் வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பு தந்ததோடு மட்டுமின்றி, 'வெயிலுக்குப் பெயர்பெற்றது வேலூர்' என்று அழைக்கப்படுகின்ற வேலூரில், கோட்டை மைதானத்தில், மதிய வேளையில், சுட்டெரிக்கும் அக்னி நட்சத்திர வெயிலையும் பொருட்படுத்தாமல், எனக்காக வாக்குச் சேகரித்து, மகத்தான வெற்றியைப் பெற்றுத் தந்து, என்னை வேலூர் சட்டமன்ற உறுப்பினராக்கி, வேலூர் கோட்டையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டையாக மாற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) என்மீது நம்பிக்கை வைத்து மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக்கி, வேலூர் மாவட்ட மாணவர் அணிச் செயலாளராக நியமித்த, நித்தம் நித்தம் நான் வணங்கும் தெய்வத்தின் தெய்வமே! மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையை, அம்மா அவர்களின் ஆசியோடு தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 41, திரு. வி.சி. சந்திரகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 493, திரு. ஆர். சுந்தர்ராஜன்.

**திரு. ஆர். சுந்தர்ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்



2011 செப்டம்பர் 12] [திரு. ஆர். சுந்தர்ராஜன்]

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1170, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2104, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 281, திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.

***திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டையில் இந்த நிதியாண்டில் மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 404, திரு. சி. மைக்கேல் ராயப்பன்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம், நாங்குனேரி, வள்ளியூர், பனகுடி ஆகிய ஊர்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில், பிரேதப் பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 478, திரு. பி.வி. கதிரவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 633, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “பத்து வருடங்களுக்கும் மேலாக, தற்காலிக எய்ட்ஸ் கட்டுப்பாட்டு வாரியச் சங்கத்தின் மூலமாகப் பணிபுரியும் சுமார் 3,500 ஊழியர்களைப் பணி நிரந்தரமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 728, திரு. ம. கலை அரசு.



**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “வேலூர் மாவட்டம், தலைமை மருத்துவமனை மருத்துவக் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரை, பென்னாத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட சப்தனபுரம் கிராம ஏரியில் விடுவதால் ஏற்படும் பாதிப்பைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1246, திருமதி ர. சுபா.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட சார்வாய் மற்றும் கோவிந்தம்பாளையம் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1503, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “விருதாச்சலம் தொகுதி, மங்கலம்பேட்டை நகரத்தில் உள்ள கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தடுப்பூசி பணிகளுக்காகத் தனிக் கட்டட வசதியும், சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவரும் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1584, திரு. அ. சவுந்தரராசன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "108 அவசர ஊர்திகளில் பணியாற்றுவோருக்குக் குறைந்தபட்ச ஊதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1763, திரு. எஸ்.ஆர். பார்த்திபன்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டூர் தொகுதி, மேட்டூர் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையின் தரத்தை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1786, செல்வி கே. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1814, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட கருங்கல் அரசு மருத்துவமனையில் துணை செவிலியர் (ANM) பதவி இல்லாமல்



போய்விட்டது. ஆரம்ப சுகாதார நிலையமாக இருக்கும்பொழுது அப்பதவி இருந்தது. ஆகவே, அதனை மீண்டும் உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1834, திரு. என்.ஆர். ரெங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1847, திரு. து. முருகேசன்.

**திரு. து. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு தொகுதிக்கு உட்பட்ட நெடுங்குன்றம் ஊராட்சிக்குள் அடங்கிய நெடுங்குன்றம், கொளப்பாக்கம், ஆலப்பாக்கம், சதானந்தபுரம், பம்பேடு ஆகிய கிராம பொது மக்கள், பிரசவம் மற்றும் மருத்துவ சிகிச்சை பெற தாம்பரம், குரோம்பேட்டைக்குச் செல்ல வேண்டும். இவர்களுக்கு நெடுங்குன்றத்திலோ அல்லது அதனைச் சார்ந்த கிராமத்திலோ, ஆரம்ப சுகாதார மருத்துவமனையை உடனடியாகக் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1873, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளச்சல் அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்திடவும், செயல்படாமல் உள்ள X-ray, Scan, Ambulance ஆகியவற்றை இயக்கிட வழிவகை செய்ய வேண்டியதன் அவசியம்

குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1890, திரு. எம். ஆறுமுகம்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை மருத்துவமனையை Super Speciality மருத்துவமனையாக மாற்றம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1898, திரு. ந. நஞ்சப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1929, திரு. க. பாலகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1961, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒன்றியத் தலைநகரங்களில் வட்டத் தலைமை மருத்துவமனையை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2011, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாலுகா மருத்துவமனையாக உள்ள திருத்துறைப்பூண்டி மருத்துவமனையில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2041, திரு. கே. தங்கவேல்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூரில் ESI மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2217, திரு. க. பாண்டியராஜன்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு, நிலம் ஒதுக்கப்பட்ட விருதுநகர் மருத்துவக் கல்லூரியை, அறிவித்தவாறு ஜூலை 2012-ல் தொடங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2289, திரு. ர.ம. பாபு முருகவேல்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி அரசு மருத்துவமனையில் புதிய ஊடுகதிர்– Scan இயந்திரங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2323, திரு. ப. பார்த்தசாரதி.

**திரு. ப. பார்த்தசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருகம்பாக்கம் தொகுதிக்கு உட்பட்ட கே.கே. நகர், அரசு மருத்துவமனையில் அடிப்படை வசதிகள் இல்லாமல் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு மிகவும் அசுத்தமாக இருப்பதால், அடிப்படை வசதிகள் செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2327, திரு. கு. நல்லதம்பி.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை, எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 101–வது வட்டம், சச்சிதானந்தம் தெருவில் இருபது ஆண்டுகளாக மக்கள் பயன்பாட்டில் இருந்த ஆரம்ப சுகாதார மருத்துவமனை,



கடந்த இரண்டு வருடங்களாக மருத்துவர் இல்லாமல் பூட்டு போடப்பட்டுள்ளதைத் திறந்து, அதனைத் திரும்பவும் செயல்படச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2462, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதியில் உரிகம்மலை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2575, திருமதி எஸ். விஜயதரணி.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குழித்துறை, அருமனை, ஆசாரிபள்ளம் மருத்துவமனைகளில் காலியாகவுள்ள சுகாதார துப்புரவுப் பணியாளர்கள், மருத்துவ மாது, அனைத்து வசதிகளும் உள்ள அருமனைக்கு X-ray தொழில்நுட்ப உதவியாளர், ஆய்வக உதவியாளர், மகப்பேறு மருத்துவர், மருந்தாளுநர், செவிலியர், துப்புரவுப் பணியாளர் போன்ற பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,413,33,22,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,35,63,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக முன்னதாகவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறேன். இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளையும், ஆலோசனைகளையும் தெரிவித்த பிறகு, என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கங்களையும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரையின்படி, புதிய அறிவிப்புகளையும் வெளியிட இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையின்மீது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் தே.மு.தி.க. உறுப்பினர் மாண்புமிகு திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள். பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அன்புகூர்ந்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்வரிசையிலே உள்ள தலைவர்களோடு அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே கலந்தாலோசிக்கப்பட்டு, அதன்படி ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஐந்து நிமிடங்கள்தான் ஒதுக்கப்பட்டுள்ளன. தயவுசெய்து ஐந்து நிமிடங்களைத் தாண்டாமல் உங்களுடைய கருத்துகளைக் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சுந்தர்ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப ஆட்சி செய்த கும்பலிடமிருந்து தமிழகத்தை

@ 579 முதல் 706 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





மீட்டெடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, கடந்த 47 ஆண்டுகளாக நண்பராக இருந்து, நட்பின் இலக்கணமாகத் திகழ்ந்து, அகில இந்திய கேப்டன் மன்றத் தலைவராகவும், தேசிய முற்போக்குத் திராவிடக் கழகத்தை ஆரம்பித்தவுடன், கழகத்தின் மாநிலப் பொருளாளராகவும் நியமனம் செய்து, தற்போது மதுரை மத்திய தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் ஆக்கியுள்ள மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், எனது அருமைமிகு நண்பர் கேப்டன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12–50

இந்த பதினான்காம் சட்டப் பேரவையின் அனைத்துக் கட்சியின் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டப் பேரவையில் எனது முதல் துவக்கப் பேச்சைப் பேசுவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். எனக்கு மத்திய தொகுதியில் வாக்களித்த பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவில் நகரமாம் மதுரை மாநகரை கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் கொலை நகரமாக இருந்ததை மீட்டு, மீண்டும் கோவில் நகரமாக மாற்றி மக்களைப் பயமின்றி வாழ வழி செய்தமைக்கு எனது சார்பாகவும், மதுரை மக்கள் சார்பாகவும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சென்னை மாநகரை குப்பையில்லா மாநகரமாக மாற்றிட 'ஹெலிகாப்டரில்' சுற்றிப் பார்த்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், கோவில் மாநகரமாம் மதுரை மாநகரையும் சுற்றிப் பார்த்து குப்பையில்லா மாநகரமாக மாற்ற ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் சுற்றிப் பார்க்கும்பொழுது "தேய்ந்துபோன தே.மு.தி.க." என்றும், 2011 இல் அ.தி.மு.க. என்ற கட்சியே இல்லாமல் அழியப் போகிறது என்றும், "அஞ்சா நெஞ்சன் என்று சொல்லி தனக்குத்தானே பட்டம் சூட்டிக் கொண்டு, அண்ணன் என்று சொல்லி இன்று காணாமல் போனவரை", தங்கள் அரசைக் கண்டு "அஞ்சிய நெஞ்சராக இருக்கும்" அவரைக் கண்டுபிடித்து மக்கள் மன்றத்திலும், நீதிமன்றத்திலும் நிறுத்தி தக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட நோயற்ற வாழ்க்கையினைக் கொடுக்க, பழைய மருத்துவமனைகளைத் தரம் உயர்த்துவதற்கும், புதிய மருத்துவமனைகளை விரிவாக்கம் செய்வதற்கும் தங்கள் அரசு ஆவன செய்து வருகிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

உழவர் பாதுகாப்பு, மருத்துவத் தனி தேர்வு வாரியம், மகப்பேறு உதவித் தொகை, விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை போன்ற நல்ல திட்டங்களை அறிவித்த முதல்வர் அவர்களைப் பாராட்டுகின்றோம். மக்கள் தொகையின் வளர்ச்சிக்கேற்ப, சுகாதாரத் துறைமூலம் மக்களுக்கு வழங்கக்கூடிய சேவைகளை அதிகரிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையின் அருகில் உள்ள சிவகாசியில் அதிகமான பட்டாசுத் தொழிற்சாலைகள் உள்ளன. வெடி விபத்துகளும் அதிகமாக நடந்து கொண்டிருக்கின்றன. தீ காய சிகிச்சைப் பிரிவு மதுரையில் மட்டுமே முழு அளவில் செயல்படுகின்றது. விருதுநகர் அரசு மருத்துவமனையிலோ அல்லது சிவகாசி மருத்துவமனையிலோ தற்போது செயல்படும் தீ காய சிகிச்சைப் பிரிவை நவீனப்படுத்தி 24 மணிநேரமும் இயங்கக்கூடியதாக இருக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை I.S.O. தரச் சான்று பெற விண்ணப்பித்து அதற்கான வேலைகள் நடைபெற்று வருவதாக அறிந்தேன். இத்தகைய நிலையில் அம்மருத்துவமனைக்கு அனைத்து உயர் ரக அறுவை சிகிச்சை செய்வதற்கு வேண்டிய உபகரணங்கள் வழங்கிட கேட்டுக்கொள்கிறேன்.

உட்புற கிராமங்களுக்கு பத்து நாட்களுக்கு ஒருமுறையாவது "நடமாடும் மருத்துவக் குழுவை" அனைத்து மருத்துவ வசதிகளுடன் அனுப்பி அவர்களது நோயைப் போக்க ஏற்பாடுகள் செய்திடல் வேண்டும். ஒருசில மாவட்டங்களில் ஏற்படக்கூடிய "யானைக்கால்" நோயைக் குணப்படுத்த தனிக்கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நம் நாட்டில் சிகிச்சையில் புகழ்பெற்ற "A.I.I.M.S. மருத்துவமனையை" மதுரையில் நிறுவி, தென்னகத்தின் மக்கள் அனைவரும் பயன்பெற வேண்டுமென்ற நோக்கத்திற்காக கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் அடிக்கல்நாட்டு விழா நடைபெற்றது.



ஆனால், இதுவரை மருத்துவமனைக் கட்டடங்கள் மதுரையில் கட்டப்படவில்லை. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசை வலியுறுத்தி "A.I.I.M.S. மருத்துவமனையை" மதுரையில் செயல்பட ஆவன செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென் மாவட்டங்களிலேயே பெரிய மருத்துவமனை அரசு இராஜாஜி மருத்துவமனையாகும். இம்மருத்துவமனைக்கு அதிகமான புற நோயாளிகளும், உள் நோயாளிகளும் வந்து செல்கின்றனர். இம்மருத்துவமனையின் தேவைகள் பற்றிக் கூற விரும்புகிறேன்.

மதுரையில் 2 இலட்சம் மக்கள் மட்டுமே ஆரம்பக் காலத்தில் வாழ்ந்து வந்தனர். ஆனால், இன்று சுமார் 20 இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். முதல்வர் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்பு அறிவித்ததுபோல பத்து மடங்கு மக்கள்தொகை பெருகியுள்ள போதிலும், அதற்கான உள் கட்டமைப்பு வசதிகள் பெருகவில்லை. எனவே, இந்த அரசு இன்றைய தேவைக்கு ஏற்ப கட்டமைப்பு வசதிகளை அதிகப்படுத்தி அதற்குத் தேவைப்படுகின்ற கட்டட வசதிகள், ஆய்வுக்கூட வசதிகள், உள் நோயாளிகள் அதிக அளவில் தங்கி சிகிச்சைப் பெறுவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். மருத்துவர்கள், செவிலியர்கள், துப்புரவுப் பணியாளர்கள், 108 ஆம்புலன்ஸ் வசதிகள் என அனைத்து வசதிகளையும் தற்போதைய மக்கள்தொகை பெருக்கத்திற்கேற்ப ஏற்பாடு செய்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சுந்தர்ராஜன், இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஆர். சுந்தர்ராஜன்:** குழந்தைகளுக்குப் பிறவியிலேயே ஏற்படக்கூடிய இருதய நோய் அறுவை சிகிச்சையைப் பொறுத்தவரையில், மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் ஒரு வருடத்திற்கு 100 முதல் 150 பேருக்கு அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. தற்போது இப்பிரிவு புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டதால், பழைய 99 ஆம் வார்டை தனியார் மருத்துவமனைபோல நவீனப்படுத்த வேண்டும். அவ்வாறு நவீனப்படுத்தும்போது வருடத்திற்கு 150 முதல் 450 பேருக்கு அறுவை சிகிச்சை செய்யலாம். இதற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து, அதிக அளவில் மக்கள் பயன்பெறும் வகையில் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டுகின்றேன்.

[திரு. ஆர். சுந்தர்ராஜன்] [2011 செப்டம்பர் 12
பிற்பகல் 12–55

இருதய நோய் சிகிச்சைப் பிரிவைப் போல இரைப்பை, குடல், ஆசன நோய் அறுவை சிகிச்சைத் துறையினை நவீனப்படுத்த ஆவன செய்யும்படி வேண்டுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதிப் பிரச்சினைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். அவை அவைக் குறிப்பில் பதிவு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள். (குறுக்கீடு) இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. ஆர். சுந்தர்ராஜன்:** மதுரை அருகில் உள்ள ஆஸ்டின்பட்டி காசநோய் மருத்துவமனை, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், ஆசாரிப்பள்ளம் காசநோய் மருத்துவமனை, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அருகில் உள்ள அம்பிளிகை காச நோய் மருத்துவமனை போன்றவற்றின் தரத்தை உயர்த்தவும், தமிழகம் எங்கும் உள்ள பிற மருத்துவமனைகளை நவீனமயமாக்கவும் வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை எழுதிக்கொடுத்தால், அவைக் குறிப்பில் பதிவு செய்யப்படும் என்று சொல்லியாகிவிட்டது இல்லையா? Conclude பண்ணுங்கள்.

**திரு. ஆர். சுந்தர்ராஜன்:** தொகுதிப் பிரச்சினைகள்: மதுரை மாநகராட்சியின்கீழ் செயல்படும் சுகாதார நிலையங்களில் போதுமான வசதியுடன்கூடிய மகப்பேறு நிலையங்களை நிறுவிட வேண்டும் எனவும், மாநகராட்சி சார்பில் இரத்த வங்கி நிறுவிட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

தென் மாவட்டங்களின் மிகப் பெரிய மருத்துவமனையான அரசு இராஜாஜி மருத்துவமனையினைப் பராமரிக்கும் பணி பொதுப் பணித் துறையிடம் உள்ளது. கட்டடத்தில் உள்ள பழுதுகளை நீக்கி, வெள்ளையடித்து, தூய்மைப்படுத்திட வேண்டுகிறேன். மேலும், அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு I.S.O. தரச் சான்றுகள் பெற்றுத் தந்து, நவீனமயமாக்கிட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வுக்கு அடிப்படையாக உள்ளது சுகாதாரம். மதுரை மாநகரில் ஆங்கிலேயர் காலத்தில் அமைக்கப்பட்ட பாதாள சாக்கடை அப்படியே உள்ளது. இதைச் சீர் செய்யாமல் கடந்த ஆட்சியாளர்கள் இதற்கு ஒதுக்கப்பட்ட பணத்தை அவர்களின் சுய நலத்திற்காகப் பயன்படுத்திக்கொண்டார்கள்.



2011 செப்டம்பர் 12] [திரு. ஆர். சுந்தர்ராஜன்]

இதனால் குடிநீருடன் சாக்கடை நீர் கலந்து வருகிறது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் தொற்று நோய் ஏற்படும் அபாயம் உள்ளது. கடந்த 15 ஆண்டுகளாக மாநகராட்சியை நிர்வகித்தவர்களால் மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படவில்லை. பாதாள சாக்கடைப் பராமரிப்பு மற்றும் டெபாசிட் தொகையை பல மடங்கு உயர்த்தி மக்களை வாட்டி வதக்கிவிட்டனர். பாதாள சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்தி, அதை முறைப்படுத்தி, கட்டணத்தைக் குறைத்தும் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நாடு சுதந்தரமடைந்து 64 ஆண்டு காலமாகியும், தென் மாவட்டங்களில் இராஜபாளையம், நெல்லை, ஸ்ரீவில்லிப்புத்தூர், அருப்புக்கோட்டை, சிவகாசி, கோவில்பட்டி, சாத்தூர் போன்ற ஊர்களில் பாதாள சாக்கடைத் திட்டம் தன்னிறைவு பெறவில்லை.

அதேபோன்று, கடந்த மைனாரிட்டி ஆட்சியில் திண்டுக்கல், திருவண்ணாமலை, கடலூர், திருப்பூர் போன்ற நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டத்தை ஆரம்பித்து அப்படியே கிடப்பில் போட்டுவிட்டார்கள். அதையும் துரிதப்படுத்தி உடனடியாக முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உள் நோயாளிகள் மற்றும் புற நோயாளிகள் அனைவருக்கும் தகுந்தாற்போல் செவிலியர்கள், மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள் போன்ற பணியிடங்களை நிரப்பும்படி வேண்டுவதோடு, திருநெல்வேலி, மார்த்தாண்டம், நாகர்கோவில், தேனி, இராஜபாளையம் போன்ற பகுதிகளில் இருந்து மாற்றுப் பணியாக வந்து மதுரையில் பணிபுரியும் செவிலியர்களுக்கு மதுரையிலேயே நிரந்தரமாக பணி புரியவும், பணி புரியும் இடத்திலேயே சம்பளம் வழங்கிடவும் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் மணல், செங்கல், ஜல்லி போன்ற கட்டுமானப் பொருட்களை தங்கள் ஆட்சியில் கட்டுப்படுத்தியது போல, அனைத்து ஹோட்டல்களிலும் தரமான, சுகாதாரமான உணவுப்பொருட்களை விற்க ஆவன செய்யும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாநகரில் போக்குவரத்து நெரிசலால் ஏற்படும் நச்சுக் காற்றின்மூலம் தொற்று நோய்கள் பரவிட ஏதுவாக உள்ளது. இக்குறையினைப் போக்க கோரிப்பாளையம் பகுதியிலும், மதுரை பெரியார் பஸ் நிலையப் பகுதிகளிலும் மேம்பாலம் கட்டிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

என்றென்றும் இந்த அரசுக்கு நல்ல பெயரும், மக்கள் மனதில் நீங்காத இடம் பெறவும், நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி அரசு செயல்படக் கேட்டுக்கொண்டும், இறைவனை வேண்டிக் கொண்டும், வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கேப்டன் அவர்களுக்கும் நன்றி சொல்லி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.

***திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை ஈன்றெடுத்த தாய் இந்த உலகில் இல்லை. ஆனால், நான் நித்தம் வணங்கும் எங்கள் குடும்பத்தின் குல தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் வடிவில் என் தாயினைக் காண்கிறேன் பேரவைத் தலைவர் அவர்களே. அந்தத் தாயை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய கன்னிப் பேச்சைத் துவங்குவதற்கு முன்பாக, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, ஆதி திராவிடர் நலனில் எவ்வளவு பற்றோடு, பாசத்தோடு, கனிவோடு செயல்பட்டு வருகின்றது என்பதை இந்த 100 நாட்களுக்குள் என்னுடைய தொகுதியில் ஆதி திராவிட மக்களுக்கு அம்மா அவர்கள் மனிதாபிமான அடிப்படையில் உதவிய இரண்டு நிகழ்ச்சிகளை இந்த மன்றத்திலே தெரிவிப்பது என்னுடைய கடமை என்ற வகையிலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

10–7–2011–ல் கயத்தாறு ஒன்றியத்திலே, தளவாய்புரம் என்ற கிராமத்தில் கிணற்றை ஆழப்படுத்துகின்ற பணியில் ஈடுபட்டிருந்த என் கிராமத்திற்கு அருகே உள்ள நொச்சிகுளம் என்ற ஆதி திராவிட சமுதாயம் வாழ்கின்ற கிராமத்தில் வசித்து வந்த நாராயணன், கருப்பசாமி என்பவர்கள் அப்பணியிலே ஈடுபட்டிருந்த சமயத்தில், மண் சரிந்து விழுந்து புதையுண்டு விபத்திலே இறந்துவிட்டார்கள் என்ற செய்தி கிடைத்தவுடன் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் கவனத்திற்கு அந்தச் செய்தியைத் தெரியப்படுத்தியவுடன், 15–7–2011 அன்றிலிருந்து நான்கே நாட்களில் அவர்தம் குடும்பங்களுக்கு, அந்த சோக சுவடு மாறுவதற்கு முன்பாக அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு தலா ஒரு இலட்சம் ரூபாயை அந்தக் குடும்பங்களுக்கு நிவாரண உதவியாகக் கிடைக்கச் செய்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)





அதேபோல, கோவில்பட்டிக்கு அருகே உள்ள மந்தித்தோப்பு என்ற கிராமத்திலே ஆதி திராவிட சமுதாய தம்பதிகளான சங்கரபாண்டி, எலிசபெத் தம்பதியரின் மதிலெட்சுமி என்ற 8 மாத குழந்தைக்கு Open heart அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலையை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு, அம்மா அவர்களின் தொண்டனான நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே தெரியப்படுத்தியவுடன் மூன்று நாட்களுக்குள் 18-8-2011 அன்று அம்மா அவர்கள் அக்குழந்தையின் பெற்றோரை நேரிலேயே அழைத்து ரூபாய் 62 ஆயிரத்திற்கான காசோலையை வழங்கி, அதுமட்டுமல்லாமல், அந்த அறுவை சிகிச்சை நல்ல முறையிலே நடைபெற்று அந்தக் குழந்தை பூரண நலம் பெற வேண்டுமென்று வாழ்த்திய (மேசையைத் தட்டும் ஒலி) நிகழ்ச்சியையும், அந்தக் குழந்தைக்கு இன்றையதினம் திருவனந்தபுரம் மருத்துவமனையிலே இருதய அறுவை சிகிச்சை நடைபெற இருக்கின்றது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, கலைவாணி என்ற ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு பெண் தகுதியின் அடிப்படையிலேயே தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியில் படிப்பதற்கு இடம் கிடைத்து, 2002–லே படிப்பதற்குப் போதுமான வசதி இல்லை என்பதை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குத் தெரிவித்தவுடன், இதய தெய்வம் அம்மா அவர்கள் தாய் உள்ளத்தோடு, அந்த பெண்ணையும், அந்தப் பெண்ணின் பெற்றோரையும் அழைத்து, 5 வருட மருத்துவப் படிப்பிற்கான முழுத் தொகையான 1,72,900/– ரூபாயை வழங்கி, 5 ஆண்டுகளுக்குண்டான அனைத்துக் கட்டணத்தையும் மொத்தமாக வழங்கி, இன்றையதினம் ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த அந்தப் பெண்ணை மருத்துவராக ஆக்கியதோடு, படிப்பதற்கே வசதி இல்லாத அந்தப் பெண்ணின் தந்தையை, சாதாரண குடும்பத்திலே பிறந்த அந்த ஆதி திராவிடத் தொண்டனை, இன்றையதினம் சட்டமன்ற உறுப்பினராக்கி, எனக்கு அருகிலேயே செய்யூர் சட்டமன்ற உறுப்பினராக அமர வைத்து அழகு பார்க்கின்ற அன்னையை இந்த அவையின் சார்பாக வணங்கி என்னுடைய உரையைத் துவக்குகிறேன் பேரவைத் தலைவர் அவர்களே.

பிற்பகல் 1–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகெங்கும் வாழும் தமிழினம் யாருடைய விழி அசைவை வைத்த கண் மாறாது உற்று நோக்குகிறதோ, அந்த விழிகளுக்கு உரியவர். உலகெங்கும் வாழும்

தமிழர்கள் யாருடைய "நா" அசைவிற்கு செவிமடுத்து சிலையாகி நிற்கிறார்களோ அந்த நாவிற்குச் சொந்தக்காரர். யாருடைய அசைவை இவ்வையகம் கண்ணும் கருத்துமாய் கவனிக்கிறதோ, யாருடைய பேனா எழுத தலைகுனியும் போதெல்லாம் உலகத் தமிழினம் தலைநிமிர்கிறதோ, ஆனால் ஒரு தீய சக்தியின் பேனா தலைகுனியும் போதெல்லாம் உலகத் தமிழினமே வெட்கித் தலை குனிகிறது அம்மா! அது வேறு விஷயம். அந்த விழிகளுக்கு, அந்தப் பேச்சுக்கு, அந்த அசைவிற்கு, அந்த எழுத்திற்கு, உரியவரான அன்பின் திருவுருவே, ஆற்றல்களின் குவியலே! இம்மாநில மக்கள் நலமும், வளமும் பெற்றிட, நாளும் உழைக்கும் ஈகை குணம் கொண்ட தாயே!

இம்மண்ணுலகில் பிறந்த சாதாரண மானிடப் பிறவி அல்ல அம்மா நீங்கள். தெய்வீகப் பிறவியாக பிறந்த தெய்வத் திருமகள் அம்மா நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இறைதூதராக இப்புவியில் அவதரித்த முகராசி கொண்ட மகராசியே அம்மா! தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

பேரறிஞர் அண்ணா கண்ட கனவான, மிட்டாதார், மிராசுதார், ஜமீன்தார்கள், இவர்கள்தான் இம்மாபெரும் சபையில் அங்கம் வகிக்கலாம் என்று இருந்த நிலையை மாற்றி சாமானியனும் சட்டசபைக்கு வரலாம் என்ற நிலையையும் தாண்டி, இன்றைக்கு கொடி கட்டுகிற தொண்டனும் கோட்டைக்கு வரலாம் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற புதிய அத்தியாயத்தை உருவாக்கி அந்த வகையிலே, கழகத்தில் 1978 முதல் உறுப்பினராக இருந்த என்னை, 1981 முதல் கிளைக் கழகச் செயலாளராகவும், மாண்புமிகு அம்மா அவர்கள் கொள்கை பரப்புச் செயலாளராக இருந்த நேரத்திலேயே, 1983–ல் எம்.ஜி.ஆர். மன்ற ஒன்றியச் செயலாளர் பொறுப்பிற்கு என்னை பரிந்துரை செய்தீர்கள் அம்மா. அதற்குப்பின், மாண்புமிகு அம்மா அவர்கள் தலைமையின்கீழ் கழகம் செயல்பட்ட நேரத்தில் 1988–ல் தூத்துக்குடி மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞரணி பொருளாளராக என்னை மாவட்ட அளவிலே உயர்த்தி அழகு பார்த்து, 1995–ல் தூத்துக்குடி மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளராக்கி, 1997–ல் கழகப் பொதுக்குழு உறுப்பினராக்கி, 2005–ல் தூத்துக்குடி வடக்கு அம்மா பேரவை செயலாளராக்கி, 2007–ல் ஒருங்கிணைந்த தூத்துக்குடி மாவட்ட கழக துணைச் செயலாளராக்கி, கடந்த கால மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் தூத்துக்குடி மாவட்ட



அறங்காவலர் குழு உறுப்பினராக பணியாற்ற வாய்ப்பும் அளித்து, மீண்டும் 2010 முதல் அம்மா பேரவையின் தூத்துக்குடி மாவட்ட இணைச் செயலாளராக, கழகப் பணிகளில் தொடர்ந்து பணியாற்றிட வாய்ப்பளித்ததோடு, 33 ஆண்டுகளாக கழகத்தில் இன்று வரை சாதாரண தொண்டனாக பணி புரிந்து வருகின்ற, கடம்பூருக்கு அருகேயுள்ள பரும்புக்கோட்டை என்ற சிதம்பராபுரம் கிராமத்தில் சாதாரண ஆசிரியர் குடும்பத்தில் பிறந்த எளியவனான என்னை புரட்சித் தலைவர் காலம் முதல் பார்வையாளர் மாடத்தில் இருந்து சபை நிகழ்ச்சிகளைப் பார்த்து வந்த எனக்கு, இம்மாபெரும் சபையில் கோவில்பட்டி சட்டமன்ற தொகுதியின் உறுப்பினராக, மாண்புமிகு அம்மா அவர்களின் விசுவாசமிக்க தொண்டனாக, தொகுதி மக்களுக்கு பணியாற்றிட வாய்ப்பளித்த எங்கள் குடும்பத்தின் குல தெய்வம், தமிழகத்தின் ஒளிவிளக்கு, தமிழகத்தின் பொற்கால மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) "ஈங்கிவரை யாம்பெறவே என்ன தவம் செய்தோமோ" என்று கழகத்தின் ஒன்றரைகோடி தொண்டர்கள் மட்டுமல்ல, அவர்தம் குடும்பமும், ஏழுகோடி தமிழர்கள் மட்டுமல்ல, உலகெங்கிலும் வாழும் ஒட்டுமொத்த தமிழினமும் போற்றி வணங்குகின்ற மாண்புமிகு அம்மா அவர்களை நான் மட்டுமல்ல என்னுடைய குடும்பமும், என்னுடைய வருங்கால சந்ததியினரும் வணங்கி வழிபடுகிறோம் அம்மா.

இந்த நல்ல நேரத்தில் என்னை உருவாக்கி, வளர்த்து, சட்டமன்ற உறுப்பினராக்கிய அம்மா அவர்களையும், என்னுடைய வெற்றிக்கு உழைத்த அத்துணைபேருக்கும் தொகுதியில் உள்ள தொண்டர்களுக்கும், பொதுமக்களுக்கும், அந்த மாவட்டத்தில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியை சமர்ப்பித்த தொகுதி மக்களின் சார்பாக அந்த வெற்றிக் கனியை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967–லேயே தன்னுடைய வீட்டிற்கு நிலத்தை அபகரித்தவர்கள், அதன்பின் அறிவாலயத்திற்கு மாநகராட்சி இடத்தை அபகரித்தவர்கள், தலைவன் எவ்வழியோ, தொண்டன் அவ்வழி என்பதை நிரூபித்து திருச்சியில் கட்டப்பட்ட அறிவாலயத்திற்கு டாக்டர் சீனிவாசன் என்பவரின் நிலத்தை அபகரித்தவர்களை எல்லாம் இன்று நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது. இதென்ன அறிவாலயங்களா இல்லை ஆக்கிரமிப்பு ஆலயங்களா என்பதை நாட்டு மக்கள் இன்றையதினம் எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இது மட்டுமல்ல, ஒட்டுமொத்த குடும்பமே, ஒட்டுமொத்த தமிழகத்தை சுரண்டி ஆக்கிரமிப்பில் ஈடுபட்டு யார் திறமைசாலி என்று பட்டிமன்றம் நடத்தும் வகையிலே, அக்குடும்பத்தில் தாத்தா தொடங்கி வைத்த ஆக்கிரமிப்பை குலத்தொழிலாக்கி மூன்றாம் தலைமுறையாக இன்று பேரன் அறிவுநிதி வரை ஜாமீன் கேட்பதை இன்று தமிழர்கள் பார்த்து அக்குடும்பத்தை எண்ணி எள்ளி நகையாடுகிறார்கள் அம்மா!

ஆக்கிரமிப்பு என்பது கருணாநிதிக்கு புதியதல்ல. அண்ணா அமர்ந்த சிம்மாசனத்தையே அபகரித்தவர்தான் இந்த கருணாநிதி என்பதை நாடறியும். ஏனென்றால், அண்ணா அவர்கள் என்றைக்குமே கருணாநிதியை அடையாளம் காட்டியதில்லை. ஆனால், இடையில் இருந்து கிடாயை பறித்துத் தின்னும் நரியைப்போல கருணாநிதி அந்தப் பதவியைப் பறித்துக் கொண்டார் என்பதை நாட்டில் உள்ள நல்லோர் சிந்தித்துப் பார்க்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடரில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் மானியக் கோரிக்கையில், மாண்புமிகு அம்மா அவர்கள், "நோயற்ற வாழ்வே, குறைவற்ற செல்வம்" என்கிற பழமொழிக்கு ஏற்ப நாட்டு மக்கள் நலமுடன் வாழ வழிவகை செய்து வரலாற்றுச் சிறப்புமிக்கத் திட்டங்களை அறிவித்துள்ளீர்கள். அதற்கு நன்றிக்கடனாக ஒட்டுமொத்த தமிழர்களும் அம்மா அவர்களை,

"நூறாண்டு காலம் வாழ்க
நோய் நொடியில்லாமல் வளர்க
ஊராண்ட மன்னர் புகழ்போல
உலகாண்ட புலவர் தமிழ்போல"

என்று போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் தருகின்றனர் மகத்தான ஆதரவு
தக்கதொரு ஆதரவால் தமிழகத்தில் நல்லரசு
திக்கற்றோர் நோய்நொடியை தீர்த்துவைக்கும் தாயரசு
வக்கணைகள் பேசுகின்ற வஞ்சக மனிதர்களை

வாய்மூடி நிற்க வைத்த வலிமைமிகு நல்லரசு தந்த தாயைப் பார்த்து



"ஈங்கிவரை யாம்பெறவே என்ன தவம் செய்து விட்டோம்" என்று தமிழகமும், இந்தியமும், ஏன் உலகமுமே பாராட்டி மகிழ்கிறது.

அம்மா என்ற ஒரு சொல்லால் இன்றையதினம் ஒட்டுமொத்த உலகத் தமிழர்களும் தலைநிமிர்ந்து நிற்கின்றார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அரசனுக்கு இலக்கணம் நாட்டில் இயற்றப்படும் சட்டங்களும், திட்டங்களும், காலம் கடந்த வரலாற்றில் இடம் பெறுகின்ற வகையில் இருக்க வேண்டும். அந்த வகையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இயற்றிய திட்டங்களையெல்லாம் இன்றையதினம் நாட்டு மக்களுக்கு அதையும் மிஞ்சும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள், தொட்டில் குழந்தைத் திட்டம் கொண்டு வந்ததற்காக மதர் தெரஸா அவர்கள், அம்மா அவர்களின் இல்லம் தேடி வந்து பாராட்டியதையும், (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து மகளிர் காவல் நிலையம் இந்திய திருநாட்டிற்கே வழிகாட்டக்கூடிய அற்புதத் திட்டம் என்பதையும், மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்ட இலவச சைக்கிள் திட்டம் ஆகியவை காலம் கடந்து நிற்கும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–05

கடந்த கால மைனாரிட்டி முதலமைச்சர், 'பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம்' என்ற திட்டத்தைக் கொண்டுவந்தார். எந்த பிச்சைக்காரனுக்கும் மறுவாழ்வு இன்றுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை; மறுவாழ்வையும் காணவில்லை, திட்டத்தையும் காணவில்லை. ஆனால், பிச்சைக்காரர்கள் மட்டும் இருக்கின்றார்கள். அதுபோல இலவச கண்ணொளி வழங்கும் திட்டம். இத்திட்டத்தின்மூலம் கண்பார்வையற்றோர் எவருக்கும் கண்பார்வை வராதது மட்டுமல்ல. திட்டம் கொண்டுவந்த கருணாநிதிக்கே இன்றுவரை கண்ணொளி வந்ததாகத் தெரியவில்லை. கண்ணொளியே கிடைக்காதபோது திட்டத்தை எங்கே தேடுவது? இந்தவகையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்பான பல நல்ல திட்டங்களை அறிவித்துள்ளார்கள். அந்தத் திட்டங்கள் சம்பந்தமாக என்னுடைய கோரிக்கைகளை நான் இந்த மாமன்றத்திலே எடுத்துரைத்ததாக எண்ணி பதிவு செய்து,

தொகுதி கோரிக்கைகளாக 12 கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களிடம் தொகுதி மக்களின் சார்பாக அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இறுதியாக அம்மா அவர்களுக்கு நன்றியை மட்டும் சொல்லி என் உரையை முடிக்கிறேன்.

முதலேழு வள்ளல்கள்; சரகன், காரி, நலன், நுந்துமாரி, நிருதி, செம்பியன், விராடன்; இடையேழு வள்ளல்கள் அக்குதன், அந்திமான், அரிச்சந்திரன், கர்ணன், சந்திமான், சிசுபாலன், தந்தவக்கிரன் மற்றும் கடையேழு வள்ளல்கள் பாரி, ஆய், எழினி, நல்லி, மலையன், பேகன், ஓரி முதலிய மூவேழு வள்ளல்களுக்கெல்லாம் வள்ளலாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற வள்ளல் எங்கள் அம்மா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) தொகுதி மக்களின் அத்தனை கோரிக்கைகளையும் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு எளிய தொண்டனான என்னை அனுமதித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே உங்கள் தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். அவைக் குறிப்பில் அவை பதிவு செய்யப்படும்.

**திரு. கடம்பூர் ராஜு:** தொகுதிப் பிரச்சினைகள்: 1) கோவில்பட்டி நகரம் வளர்ந்து வருகிற நகரம் அம்மா. இன்றைக்கு ஒரு நாளைக்கு 50,00,000 லிட்டர் வீதம்தான் குடிநீர் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் கிடைக்கிறது அம்மா. கடந்த 2001–2006–ல் அம்மா அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆட்சியில் தீட்டப்பட்ட 2–வது பைப் லைன் குடிநீர்த் திட்டத்தை கடந்தகால மைனாரிட்டி ஆட்சி கிடப்பிலே போட்டதன் விளைவாக இன்றைக்கு நகர மக்கள் 12 நாட்களுக்கு ஒருமுறைதான் குடிநீர் பெறும் நிலையிலே உள்ளார்கள். கோவில்பட்டி நகரில் 1,00,000 பேருக்கு மேல் மக்கள் தொகை உள்ளதால் அவசரகால அடிப்படையில் 2–வது பைப் லைன் திட்டத்தைச் செயல்படுத்தி, கோவில்பட்டி நகர மக்களின் குடிநீர் தாகத்தை தாயுள்ளத்தோடு அம்மா அவர்கள் தீர்த்து வைக்க அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வேண்டுகிறேன் அம்மா.



2) கோவில்பட்டி தொகுதியில் பல்வேறு வகையான கல்வி நிலையங்களும், கல்லூரிகளும் தனியார் நிறுவனங்களாக உள்ளன. கோவில்பட்டி தொகுதிக்குட்பட்ட பகுதியில் அரசு சம்பந்தப்பட்ட கலைக் கல்லூரியோ, தொழில்நுட்பக் கல்லூரியோ இதுவரை இல்லாத நிலை உள்ளது. தொகுதியில் கல்வித்தரம் மேம்பட்டிட, அரசு கலைக் கல்லூரியை மிகவும் பின்தங்கிய பகுதியான கயத்தார் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் அமைத்துத் தந்திட மாண்புமிகு அம்மா அவர்களை பணிவுடன் வேண்டுகிறேன் அம்மா.

3) அம்மா அவர்களின் கடந்தகால ஆட்சியில் கோவில்பட்டி அரசு பொது மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டது. கோவில்பட்டி நகரம் மதுரை–கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை நான்கு வழித்தடத்தில் அமைந்துள்ளதால் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு, சிகிச்சைக்கு வருகின்ற நேரத்தில் மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் வசதி இல்லாததால் 60 கி.மீ. தொலைவில் உள்ள திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. மேலும், 1,300 புற நோயாளிகள் தினசரி சிகிச்சை பெறுகிறார்கள். உடனடியாக சி.டி. ஸ்கேன் வசதியும், எலும்பு சிகிச்சை மருத்துவரும், ரேடியோலஜிஸ்டும், கண் சிகிச்சை மருத்துவரும், ஃபார்மாஸிஸ்டு–13 நபர்கள் தேவையான இடத்திலே 3 பேர்தான் இருக்கிறார்கள். எனவே, தேவையான ஃபார்மாஸிஸ்டுகளை நியமனம் செய்து நோயாளிகள் நலன்காக்க வேண்டுகிறேன் அம்மா.

4) கோவில்பட்டி நகரம் தீப்பெட்டித் தொழிலாளர்கள் மற்றும் பஞ்சாலைத் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. இ.எஸ்.ஐ. சந்தாதாரர்களின் எண்ணிக்கையே 18,000–க்கு மேல் உள்ளது. அவர்களின் குடும்ப நபர்களின் எண்ணிக்கையையும் சேர்த்தால் 70,000–க்கும் மேற்பட்ட நபர்கள் உள்ளனர். எனவே, இ.எஸ்.ஐ. மருந்தகமாக செயல்படுவதை இ.எஸ்.ஐ. மருத்துவமனையாக மாற்றி தொழிலாளர்கள் நலன் காத்திட அம்மா அவர்களை பணிவோடு வேண்டுகிறேன்.

5) கோவில்பட்டி தாலுகாவில் முன்னாள் இராணுவ வீரர்கள் மற்றும் பணியில் உள்ள இராணுவ வீரர்கள் சுமார் 4,000 குடும்பங்கள் வரை உள்ளன. அவர்கள் பொருட்களை பெறுவதற்கு C.S.D. Canteen மற்றும் ECHS மருத்துவமனைக்கு சுமார் 70 கி.மீ. தொலைவிலுள்ள திருநெல்வேலி அல்லது தூத்துக்குடி அல்லது

ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது. இப்பகுதியில் C.S.D. Canteen மற்றும் ECHS மருத்துவமனை அமைப்பதற்கு சுமார் ஒரு ஏக்கர் நிலத்தை புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள சுபா நகரில் தனியார் நிறுவனம் ஒன்று இலவசமாக வழங்கியுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்னாள் இராணுவ வீரர்களின் நலன் காத்திடும் வண்ணம் C.S.D. Canteen மற்றும் ECHS மருத்துவமனை அமைந்திட ஆவன செய்திட அம்மா அவர்களின் பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

6) எனது சொந்த ஊரான கடம்பூர் பேரூராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் Block PHC ஆக உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் கடம்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தித் தர ஆவன செய்ய அன்புடன் வேண்டுகிறேன்.

7) தூத்துக்குடி மாவட்டத்திலேயே இரண்டாவது பெரிய நகரமாக கோவில்பட்டி உள்ளது. அதுவும் நான்கு வழிச் சாலையில் அமைந்துள்ள மிக முக்கியமான நகரம். இங்கு பழங்காலத்தில் நெடுஞ்சாலைத் துறையால் கட்டப்பட்டுள்ள பயணியர் விடுதி ஒன்று மட்டும் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் உள்ளது. அதைப் புதுப்பித்து, வேண்டிய வசதிகள் செய்து தந்து, நவீனப்படுத்தித் தரவும் வேண்டி, அதேசமயம் பொதுப் பணித் துறை அலுவலகத்திற்கு எதிரே உள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில் தேவையான காலியிடம் உள்ளது. அந்த இடத்தில் நவீன வசதிகளுடன் பொதுப் பணித் துறை சார்பாக சுற்றுலா மாளிகை ஒன்று அமைத்துத் தர அம்மா அவர்களிடம் அன்புடன் வேண்டுகிறேன்.

8) கோவில்பட்டி வட்டம், கயத்தார் ஊராட்சி ஒன்றியம், சவலாப்பேரி கிராமம் அருகே உள்ள உப்போடை குறுக்கே புதிய தடுப்பணை அமைத்திட ரூ.86 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு, நீர்வள ஆதார முதன்மைப் பொறியாளர் வசம் தயார் நிலையில் உள்ளது. இதற்கான ஆயத்தப் பணிகள் மாண்புமிகு அம்மா அவர்களின் 2001–2005 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் தயாரிக்கப்பட்டு பின் வந்த மைனாரிட்டி ஆட்சிக் காலத்தில் கிடப்பில் போடப்பட்டது.

9) கோவில்பட்டிக்கு அருகே உள்ள இனாம் மணியாச்சி கிராமம் 10,000 மக்கள் தொகை வரை வாழ்கின்ற பெரிய ஊராட்சிப்



பகுதியாகும். இம்மக்களின் நீண்டநாள் கோரிக்கையான அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை புதிதாக அமைத்திடவும், இதேபோல் கழுகுமலைக்கு அருகே உள்ள கேதுரைச்சாமிபுரம் ஊராட்சியிலும் ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தந்திட அம்மா அவர்களை வணங்கி வேண்டுகிறேன்.

10) கோவில்பட்டி தொகுதிக்கு முழுவதுமாக ஒரேயொரு அரசு போக்குவரத்துப் பணிமனை கோவில்பட்டியில் உள்ளது. கயத்தாரிலும் அரசு போக்குவரத்துப் பணிமனை ஒன்றை ஏற்படுத்தி அப்பகுதி மக்களுக்கு போக்குவரத்து கிடைத்திடவும், இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான கடம்பூர்–சென்னை, கோவில்பட்டி–பெங்களூர் ஆகிய இருவழித்தடங்களில் அரசு விரைவுப் பேருந்துகளை இயக்கி இப்பகுதி மக்களின் கனவை நனவாக்கிட அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

11) கோவில்பட்டியில் ஏராளமான கல்வி நிலையங்கள் உள்ளன. விளையாட்டு ஆர்வலர்கள் நிறைந்த பகுதி. ஹாக்கி விளையாட்டில் தேசிய அளவில் பதக்கம் பெற்ற விளையாட்டு வீரர்கள் உள்ளனர். பெரிய நகரமான கோவில்பட்டியில் நவீன வசதிகளுடன்கூடிய விளையாட்டு அரங்கம் ஒன்று அமைத்துத் தந்திட அம்மா அவர்களின் பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

12) கழுகுமலையில் பிரசித்தி பெற்ற அருள்மிகு கழுகாசலமூர்த்தி என்கிற மேற்கு நோக்கிய முருகன் திருக்கோயில் பழங்கால மன்னர்கள் காலத்திலுள்ள வெட்டுவான் கோயில் என்கிற குகைக் கோயிலாக அமைந்துள்ளது. மலையின் மேல் பகுதியில் பிள்ளையார்கோயில் ஒன்றும் உள்ளது. மலையின்மேல் ஒரு டெலஸ்கோப் வசதி செய்து கொடுத்து, ஏற்கெனவே சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்டு பராமரிப்பின்றி உள்ளது. நவீன வசதிகளுடன்கூடிய சுற்றுலாத் தலமாக கழுகுமலையை அறிவித்திட அம்மா அவர்களின் பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 நிமிட பத்தியம் எனக்கும் உண்டா என்று கேட்டுக்கொண்டு என் உரையைத் தொடங்க ஆசைப்படுகிறேன். (சிரிப்பு) நோயாளிக்கு மட்டும் பத்தியம் இருக்கட்டும், எங்களுக்கு 6 நிமிடங்கள் என கூடுதலாக ஒரு நிமிடம் ஒதுக்கித் தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறொரு சந்தர்ப்பத்தில் பேசலாம். இப்போது 5 நிமிடங்களில் பேசிவிடுங்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தத் தங்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்"

என திருக்குறளில், உண்ட உணவு செரித்த பின் மீண்டும் பசிக்கும்போது சாப்பிட்டால், உடம்பிற்கு மருந்தே தேவை இல்லை என்கிறார் வள்ளுவர்.

பிறப்பு, வளர்ப்பு, வளரும் சூழல், கல்வி, கல்விக்கேற்ற வேலைவாய்ப்பு, வேலைக்கேற்ற ஊதியம் ஆகியவை பொருளாதார அடிப்படையை மேம்படுத்தும் என்பது அனைவருக்கும் தெரியும். இது எந்த அளவுக்கு அவசியமோ அதேபோல் சுகாதாரம் இதற்கு அடித்தளம் என்று நாம் சொல்லலாம். ஆக, 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதை இது குறிக்கிறது என்பதுதான் வள்ளுவன் சொல்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, நலமான மக்கள் அவசியம், ஆரோக்கியம் அவசியம். அதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டுதான், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கு கடந்த நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட ரூ.3,389 கோடியை, 2011–2012 ஆம் ஆண்டில் ரூ.4,761 கோடியாக உயர்த்தியிருப்பது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு சுகாதாரத்திற்கு அளிக்கின்ற முன்னுரிமையையும், மக்கள் நல்வாழ்வு மீது அரசு கொண்டுள்ள அக்கறையையும் எடுத்துக்காட்டுகிறது என்றே சொல்லலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

நவீன காலத்தில் மக்களின் உணவுப் பழக்க வழக்கங்களில், பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பெண்கள் அதிகமாக வேலைக்குச் செல்கிறார்கள்; அவர்களுக்கு நேரம் கிடைக்காததால் எங்கெல்லாம் உணவு கிடைக்கிறதோ அங்கெல்லாம் உணவருந்தி விடுகிறார்கள். ஆக, சாப்பிடும் சாப்பாட்டினை விடுதிகளில் சென்று சாப்பிடும் நிலைமையில், பூச்சிக்கொல்லி, இரசாயன உரங்களைப் பயன்படுத்துவது, தூய்மையான குடிநீர் இல்லாமை, சுகாதாரமற்ற



சூழ்நிலையால் கொசு, ஈ போன்றவற்றால் நோய் பரவும் நிலை ஆகிய காரணங்களால், பெரும்பான்மையான மக்கள் நோய்களால் பாதிக்கப்படும் நிலை உள்ளது.

தமிழகத்தின் ஜனத்தொகை 7 கோடியை எட்டிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், தமிழகத்தில் கிட்டத்தட்ட 80,000 மருத்துவர்கள் உள்ளனர். இது விகிதாச்சார அடிப்படையில் 1,000 நோயாளிக்கு ஒரு மருத்துவர் என்ற நிலை உள்ளது. இந்நிலை மாற வேண்டுமென்றால் மருத்துவக் கல்லூரிகள் அதிகரிக்கப்பட்டு, ஏற்கெனவே உள்ள மருத்துவக் கல்லூரியோடு சேர்த்து அதிகரிக்கப்பட்டு, மருத்துவர்கள் நியமனம் அதிகரிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறந்த மருத்துவச் சேவைகளுக்கு மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் மிக அவசியம். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பணிகளை, அவர்கள் சிறப்பாகச் செய்வது மிக மிக அவசியம். மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ். படிப்பை முடித்தவுடன், எந்தவித முன் அனுபவமும் இல்லாமல், ஏனென்றால் fresh candidate–ஆக அவர்கள் செல்கிறார்கள். நேரடியாக ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர் பணிக்கு அவர்களை நியமிப்பதால், அவர்களின் 100 சதவிகிதத் திறமையை வெளிப்படுத்த முடியாத நிலை உருவாகிறது. ஆகவே, அனுபவமுள்ள மருத்துவர்களுடன் புதிய மருத்துவர்கள் சேவை செய்வது மிகவும் அவசியமாகிறது. ஏற்கெனவே நான் இந்த மாமன்றத்திலே குறிப்பிட்டதுபோல, ஓய்வுபெற்ற மருத்துவர்கள் இவர்களுடன் இருந்து பணிபுரிய நியமிக்கலாம் என்ற கருத்தினை நான் பதிவு செய்ய ஆசைப்படுகிறேன். அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரையில் நோய்வாய்ப்பட்டு, பலரும் சிகிச்சைக்காக வருவதால்... (குறுக்கீடு)

பிற்பகல் 1–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவக் கல்வி என்பது ஐந்தரை வருடக் கல்வி. அதில் நான்கரை வருடம் படிப்பு. அதுமட்டுமல்லாமல், ஒரு வருடம் ஹவுஸ் சர்ஜன் செய்கிறார்கள். அதிலே, பெரிய மருத்துவர்களுடன் அவர்கள் தொடர்பு வைத்திருக்கிறார்கள். ஆகவே, தனியாகத் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இருப்பினும் சில சமயங்களில் ஆரம்ப சுகாதார மையங்களுக்குச் செல்லும்போது அங்குள்ள சுற்றுப்புறச் சூழலும் அங்கிருக்கிற நிலைமையை அறிந்து அவர்கள் நோய்களைத் தீர்ப்பதற்காக மருத்துவம் செய்யும்போது சில தவறுகள் ஏற்படும்போது அவர்கள் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்ற கிராமத்தில் கிராம மக்களுக்கு அஞ்சுகிற சூழ்நிலை உருவாகிவிடுவதால் இந்தக் கருத்தைப் பதிவு செய்திருக்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

அரசு மருத்துவமனைகளைப் பொறுத்தவரையில், நோய்வாய்ப்பட்டு பலரும் சிகிச்சைக்காக வருவதால், நோய் ஆய்வு (Investigation and Diagnosis) பரிசோதனை ஆகியவற்றில் காலதாமதம் இல்லாமல், ஆய்வுகள் உடனுக்குடன் மேற்கொள்ளப்பட வேண்டும். சென்னை பொது மருத்துவமனையில், தனியார் மருத்துவமனைகள்கூட வைத்திராத மிக உயர்ந்த மருத்துவக் கருவிகள் உள்ளன. இவற்றை இயக்குவதற்காக தொழில்நுட்பப் பணியாளர்களை உடனுக்குடன் நியமிக்கும் வகையில், அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள், செவிலியர்கள், வார்டு உதவியாளர்கள், ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள் ஆகியோரை விரைந்து நியமிக்கும் வகையிலும், அரசு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தை (Medical Staff Recruitment Board) நிறுவி இருப்பது மருத்துவத் துறையில் ஒரு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வேலை நிர்ணயம் செய்யப்படுதல் மிக மிக அவசியம். மருத்துவர்கள் எந்தப் பணியைச் செய்ய வேண்டும் என்பது ஆரம்ப சுகாதார மையங்களில் வரையறுக்கப்பட வேண்டும். அதை சிறப்பான முறைப்படி கண்காணிக்க வேண்டும். ஏற்கெனவே, சுகாதார மையங்களில் பொது மருத்துவமனைகளிலும் கண்காணிப்பு இருக்கின்றபோதிலும் (Supervision and Audit) 6 மாதத்திற்கு ஒரு முறை அவர்கள் பணியின் தரம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். இது சிறந்த முறையில் மருத்துவர்கள் செயல்பட வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். காவலர் வீட்டு வசதி வாரியம் காவலர்களுக்கு வீடு கட்டித் தருவதைப்போல, மருத்துவத் துறையும் அரசு பொது மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார



நிலையங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் மருத்துவர், செவிலியர், தொழில்நுட்பப் பணியாளர், வார்டு உதவியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள் ஆகியோருக்கு, அவரவர் வருமானத்தின் அடிப்படையில், அவர்கள் பணி சிறக்க மருத்துவ வீட்டு வசதிக் கழகம் (Medical Housing Corporation) ஒன்றைப் புதிதாக அரசு ஏற்படுத்தி வாடகை வீடுகள் கட்டித் தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

உலக சுகாதார நிறுவனம் (World Health Organisation) 1,000 மக்களுக்கு இரண்டு படுக்கைகள் என்ற வீதத்தில் மருத்துவமனைகள் செயல்பட வேண்டும் என வலியுறுத்தி இருக்கிறது. தமிழகம் முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் அரசு மருத்துவமனைகளில் 50,000 படுக்கைகளும், தனியார் மருத்துவமனைகளில் 25,000 படுக்கைகளும் உள்ளன. சென்னையிலுள்ள அரசு மருத்துவமனைகளில் அதிகப்படியான நோயாளிகள் தினந்தோறும் வந்து செல்வதால், அவசர நிலையில் வரும் நோயாளிகளை, படுக்கை வசதி இல்லாமல், சில சமயம் தரையில் படுக்க வைக்கும் நிலை ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் பயன்படுத்தப்படாமல் உள்ள 'ஏ' பிளாக் கட்டடத்தில், (மணியடிக்கப்பெற்றது) அதிநவீன பல்துறை சிறப்பு மருத்துவமனை ஒன்றை அமைக்க முடிவெடுத்தது வரவேற்கத்தக்கது. 188 பக்கங்கள் கொண்ட இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் இருக்கின்ற அனைத்துத் திட்டங்களும் சிறப்பாக வடிமைக்கப்பட்டிருக்கின்றன. அது செயல் வடிவத்திற்கு வரும்போது நிச்சயமாக மக்கள் நலமாகவும் வளமாகவும் வாழ முடியும் என்பதைச் சுட்டிக்காட்டி, ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

சமுதாயத்தில் மக்கள் நோயின்றி வாழ உணவு முக்கியப் பங்கு வகிக்கிறது. எனவே, உணவுப் பொருளில் கலப்படம் நடைபெறுவதைத் தடுப்பது அரசின் முக்கிய கடமையாகும். அனைவரும் விரும்பிச் சாப்பிடும் பழங்களில் ஒன்று மாம்பழம். மாம்பழங்களை கார்பைடு என்ற இரசாயனத்தை வைத்து பழுக்க வைப்பதால், உடல்நிலை பாதிக்கப்பட்டு, நோய்களுக்கு ஆளாகிறார்கள். இதனைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தக் கோரிக்கையில் உள்ள திட்டங்கள் அனைத்தும் இங்கே பாராட்டுக்குரியது என்பதைச் சுட்டிக்காட்டி அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தி.மு.க.வின் மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே! சுகாதாரத் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தில் பேச வாய்ப்பு அளித்ததற்கு பா.ம.க.வின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஒரு அரசின் செயல்பாட்டை மக்கள் எப்படி நினைக்கிறார்கள் என்பதற்கு சுகாதாரத் துறையினுடைய செயல்பாடு ஒன்று எடுத்துக்காட்டாக இருக்கும் என்பதற்கு ஒரு உதாரணத்தைக் கூறுகிறேன். பொதுவாக நோயுற்ற மக்கள் டாக்டர்களிடம் செல்லுகின்றபோது தங்களுடைய உடல்நிலை சரிசெய்யப்பட்ட பிறகு அவர்களிடத்திலே சென்று, டாக்டர் ஐயா! நீங்கள் கடவுள்போல் எங்களைக் காப்பாற்றினீர்கள் என்று சொல்வார்கள். அந்த அளவிற்கு, இந்தத் துறை மிக முக்கியமான ஒரு துறையாகக் கருதப்படுகிறது. தமிழக சுகாதாரத் துறைக்கு எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்த அனுபவமிக்க, ஆற்றல்மிக்க ஒரு மருத்துவரை, புகழ்பெற்ற ஒரு மருத்துவரை, மருத்துவத் துறைக்கு அமைச்சராக நியமித்திருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–15

தமிழ்நாட்டில் சுகாதாரத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நடப்பு நிதிநிலை அறிக்கையில் ரூ.4,761 கோடி ஒதுக்கீடு செய்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர், மருத்துவர் அய்யா அவர்களுடைய நோக்கம், “இந்திய திருநாட்டினுடைய மூத்தக் குடிமகனுக்குக் கிடைக்கக்கூடிய மருத்துவ வசதி, கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய சாதாரண ஏழையெளிய மக்களுக்கும் கிடைக்க வேண்டும்” என்பதுதான். அந்த வகையில், கடந்த ஆட்சியின்போது, மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த, மாண்புமிகு அன்புமணி இராமதாஸ் அவர்கள் தேசிய ஊரக சுகாதாரத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தின்படி தமிழ்நாட்டுக்கு 5,000 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கினார்கள். ஆனால், முந்தைய தி.மு.க. அரசு அந்த நிதியில் பெரும் பகுதியைப் பயன்படுத்தாமல் திருப்பி அனுப்பினார்கள். இது வேதனை தரும் செய்தி ஆகும்.



அதேபோல், தேசிய முதுமை மருத்துவ நிறுவனத்தின்மூலம் (National Institute on Aging) தமிழ்நாட்டில் முதியோருக்கு ஏற்படும் நோயை குணப்படுத்துவதற்கான ஒரு நிறுவனத்தை அமைக்க 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதேபோல், பொது சுகாதாரப் பள்ளி அமைக்க 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றாமல் கடந்தகால ஆட்சியில் நிதி திருப்பி அனுப்பப்பட்டது.

தேசியப் புற்றுநோய் நிறுவனத்தின் சார்பில், சென்னை அருகே தேசியப் புற்றுநோய் மையம் ஒன்று அமைக்க ரூ.900 கோடியை முன்னாள் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அன்புமணி இராமதாஸ் அவர்கள் ஒதுக்கினார்கள். முந்தைய தி.மு.க. அரசிடம் 50 ஏக்கர் நிலம் தரும்படியும் வலியுறுத்தினார். ஆனால், நிலம் தரப்படாததனால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

சென்னை, எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையை மேம்படுத்துவதற்கு 100 கோடி ரூபாயும், மதுரை, இராஜாஜி மருத்துவமனையை மேம்படுத்துவதற்கு 150 கோடியும் கடந்த காலத்தில் அன்புமணி இராமதாஸ் அவர்கள் ஒதுக்கினார்கள். ஆனால், இந்தத் திட்டங்கள் எதுவும் செயல்படுத்தப்படாமல் பணம் திருப்பி அனுப்பப்பட்டது. சென்னை, எழும்பூர் மருத்துவமனை ஆசியாவிலேயே மிகப் பெரிய மருத்துவமனை ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுவும் கடந்த கால ஆட்சியிலேதானே?

**திரு. ம. கலை அரசு:** ஆம், கடந்த கால ஆட்சியிலேதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் அதைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு குற்றச்சாட்டுகள் சுமத்தியிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடந்த தேர்தலில் மட்டும் ஏன் அவரைத் தலைமையாக ஏற்றுக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கூட்டணியிலே இவர்கள் தேர்தல் களத்தில் நின்றார்கள் என்பதை விளக்குவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியான கேள்வியைக் கேட்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, பதில் சொல்லுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் மாற்றங்கள் ஏற்படுவது சகஜம். (சிரிப்பு) அரசியலில் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, உட்காருங்கள். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் மாற்றம் என்பது வேறு, கூட்டணி மாற்றம் என்பது வேறு. நடைபெற்றது அரசியல் மாற்றம் ஆகும். அம்மா அவர்கள் முதலமைச்சராக வேண்டும் என்று மக்கள் நினைத்தார்கள். அது அரசியல் மாற்றம். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் கூட்டணி மாற்றம் செய்தீர்கள். அடிக்கடி கூட்டணியை மாற்றிக்கொண்டிருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** நாங்கள் கூட்டணியை மாற்றியிருப்பதுகூட மக்களினுடைய நன்மைக்காகத்தான் இருக்குமே தவிர (சிரிப்பு) தனிப்பட்ட காரணத்திற்காக இருப்பது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சென்னையில், உலகத் தரம் வாய்ந்த ஒரு இரத்த வங்கியை 50 கோடி ரூபாயில் அமைப்பதற்காக அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அதையும் கடந்த தி.மு.க. அரசு தவிர்த்துவிட்டது. அதேபோல், Plasma approximation நிலையம் ஒன்று அமைப்பதற்காக ரூ.270 கோடி அனுமதிக்கப்பட்டு, இந்த நிதியையும் முந்தைய ஆட்சியாளர்கள் பயன்படுத்தப்படாமல் கிடப்பில் போட்டுவிட்டார்கள்.

இப்படி மருத்துவத் துறையில் பல்வேறு சீர்கேடுகள் செய்திருக்கக்கூடிய முந்தைய தி.மு.க. அரசினுடைய செயல்பாட்டுகளையெல்லாம் கடந்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தலைமையில் இயங்கிக்கொண்டிருக்கக்கூடிய இந்த அரசு, மிகச் சிறந்த ஒரு சுகாதாரத் துறையை தமிழ்நாட்டுக்குத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பிருந்த தி.மு.க. ஆட்சியில், மருத்துவத் துறையில் இத்தனை குறைபாடுகள் இருந்ததாக மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கிறார். பல வாக்குறுதிகளை அளித்துவிட்டு, பல திட்டங்களை அறிவித்துவிட்டு, முந்தைய தி.மு.க. அரசு அவற்றையெல்லாம் செயல்படுத்தவில்லை, அப்படியே கிடப்பில் போட்டுவிட்டார்கள் என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார். இவற்றையெல்லாம் எப்போது கண்டுபிடித்தார்? அதாவது கூட்டணி வைத்துக்கொண்டு, தேர்தல் கூட்டணி வைத்துக்கொண்டு, தேர்தலில் தோல்வியை அடைந்த பின்னர் இவற்றையெல்லாம் கண்டுபிடித்தாரா அல்லது கூட்டணி அமைப்பதற்கு முன்பாகவே இவற்றையெல்லாம் தெரிந்துவைத்துக்கொண்டு, ஜெயித்தால் ஒருவேளை அப்போது பார்த்துக்கொள்ளலாம் அதனால் இது பரவாயில்லை என்று நினைத்தாரா? அவர் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இதற்குப் பதில் சொல்லுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவைக்குப் புதியவன், அரசியலுக்கும் புதியவன். பொதுவாக, பாட்டாளி மக்கள் கட்சியைப் பொறுத்தமட்டில் மக்களுக்கு என்னென்ன திட்டங்களெல்லாம் சிறப்பாகச் செயல்படும் என்று நினைக்கிறார்களோ, அதை வெட்டவெளிச்சமாக, பட்டவர்த்தனமாக பேசக்கூடியவர்கள் என்பதை இந்த மாமன்றத்திலே பதிய வைக்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் நினைத்ததையெல்லாம் வெட்டவெளிச்சமாக, பட்டவர்த்தனமாக பேசக்கூடியவர்கள். ஆமாம், உண்மை. காலையில் ஒன்று பேசுவார்கள். அதை மறந்துவிட்டு

மாலையில் ஒன்று பேசுவார்கள். மாலை பேசியதை திரும்பவும் மறந்துவிட்டு காலையில் பேசுவார்கள். இப்போது பல்வேறு குற்றச்சாட்டுகளை கடந்த ஐந்தாண்டு காலத்திலே, நாங்கள் அதைக் கொடுத்தோம், இதைக் கொடுத்தோம் அவர்கள் அதை நிறைவேற்றவில்லை இதை நிறைவேற்றவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், இவர்கள் சுகாதாரத் துறை அமைச்சராக இருந்தபோது, கிண்டியில் இருக்கின்ற, மிக முக்கியமான வெறிநாய்க்கடி தடுப்பு ஊசி மருந்தை தயாரிக்கின்ற King Institute–ஐ கூட மூடியது யார் என்பதைத் தெரியப்படுத்த வேண்டும், ஒன்று. கடந்த ஆட்சிக்கு ஜீரோ மார்க் போட்டவர்கள் நீங்கள். ஆனால், தேர்தல் வந்ததும் எப்படி 100 மார்க் போட்டீர்கள் என்பதை விளக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சர்க்கரை நோய் மக்களை எப்படியெல்லாம் பாதித்துக்கொண்டு இருக்கிறது என்பதை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தக் கேள்விக்குப் பதில் இல்லையா? மேலே பேசுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** பதில் இருக்கிறது. மக்களையெல்லாம் எப்படியெல்லாம் வாட்டிக்கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் நன்றாக அறிவார்கள். அந்த வகையில் சர்க்கரை நோய்க்கு முன்னுரிமை கொடுத்து, அந்த நோயை இந்த நாட்டிலேயிருந்து விரட்டுவதற்கு முக்கியத்துவம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புகையிலையினால் நாட்டிலுள்ள மக்கள் எப்படிச் சீரழிகின்றார்கள் என்பதற்கு பல்வேறு உதாரணங்களைச் சொல்ல முடியும். அந்த வகையில், புகையிலை ஒழிப்புச் சட்டத்தை உடனடியாக அமலுக்குக் கொண்டுவந்து, புகையே இல்லாத ஒரு நாடாக இந்த நாட்டை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை சீக்கிரம் முடியுங்கள்.



**திரு. ம. கலை அரசு:** வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, நான் சார்ந்திருக்கக்கூடிய அணைக்கட்டு பகுதியிலே அமைந்திருக்கிறது. நான் தேர்தலில் நன்றி சொல்வதற்கு அந்தப் பகுதிக்குச் செல்கின்றபோது, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள், அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய சீர்கேடுகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். குற்றம் சொல்வதற்காக நான் சொல்லவில்லை. அந்த அரசு மருத்துவமனை சிறப்பாக செயல்பட வேண்டுமென்ற உயரிய நோக்கத்திற்காகச் சொல்கின்றேன். அங்கே வெளியேற்றப்படுகின்ற கழிவுநீரெல்லாம் பக்கத்திலே இருக்கக்கூடிய சந்திலிபுரம் கிராமத்திலே இருக்கக்கூடிய ஏரியில் சென்று அங்கு சுற்றியிருக்கக்கூடிய கிராமங்கள் எல்லாம் சீரழிகின்றன. குடிநீரும் பாழ்பட்டுக் கிடக்கிறது. ஆகவே, அந்த வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வெளியேற்றப்படுகின்ற கழிவுநீரை சுத்திகரிப்பு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு மருத்துவக் கல்லூரியில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். இல்லை, நீங்கள் உங்கள் தொகுதியில் உள்ள சுகாதாரப் பிரச்சினைகள், எந்தப் பிரச்சினைகளாக இருந்தாலும் அம்மா அவர்களிடம் எழுதிக்கொடுத்துவிடுங்கள். நடவடிக்கை எடுப்பார்கள். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கே. தங்கவேல். (குறுக்கீடு) திரு. ம. கலை அரசு, சொல்லுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை அரசு மருத்துவமனைகளையும் சீர்படுத்தி, போதிய டாக்டர்களை நியமிக்க வேண்டும் அவர்களுக்கு தனியார் மருத்துவமனைகளில் வழங்கப்படுகின்ற ஊதியத்தைப் போன்று வழங்க வேண்டும். ஐந்தாண்டு காலம் படிப்பை முடித்துவிட்டு பயிற்சி டாக்டர்களாக பணியாற்றும் மருத்துவர்களுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தெளிவாக விதி 110–ன்கீழ் அளித்த அறிக்கையில் என்னென்ன செய்யப் போகிறோம் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். சொன்ன பிறகு இந்தக் கேள்வியா? தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் எழுதிக் கொடுங்கள். வேறு ஒரு சந்தர்ப்பத்தில் எடுத்துக்கொள்வோம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

பிற்பகல் 1–25

***திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையின் விவாதத்தில் பங்கெடுப்பதில் நான் பெருமகிழ்ச்சிகொள்கிறேன். நாட்டில் அனைத்து மக்களுக்கும் சுகாதாரத்தை உறுதிபடுத்தும் சுகாதாரம் அரசின் கட்டுப்பாட்டில் இருப்பது அவசியம். ஆனால், மத்திய அரசோ எல்லாத் துறைகளிலும் தனியார்மயத்தைப் புகுத்துவதிலே ஆர்வம் காட்டி வருகிறார்கள். நவீன தாராளமயக் கொள்கைகள் தீவிரப்படுத்தப்படுமானால் அதன் விளைவுகள் கடுமையாக இருக்கும். இந்த நடவடிக்கைக்கெதிராக நாடாளுமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் நடைபெறும் போராட்டங்களில் இடதுசாரி ஜனநாயக சக்தியுடன் இணைந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தமிழகத்தின் பிற ஜனநாயக சக்திகளும் குரல் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

தனிநபர் அடிப்படையில் மருத்துவத்துக்கு நிதியொதுக்கும் கடைசி 5 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது. மத்திய அரசின் பட்ஜெட்டில் மொத்தம் உள்நாட்டு உற்பத்தியில் 1.4 சதவீதம்தான் மக்கள் நல்வாழ்வுக்கென ஒதுக்கப்படுகிறது. இந்த ஒதுக்கீட்டை 3 சதவீதமாக உயர்த்த வேண்டுமென மத்திய அரசை நாம் வலியுறுத்த வேண்டும். தமிழக அரசு தனது நிதிநிலை அறிக்கையில் இத்துறைக்கென 4,761 கோடி நிதியொதுக்கியுள்ளது. இது கடந்த நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட தொகையைக் காட்டிலும் 20 சதவீதம் உயர்வாகும். இத்தொகை மாநில மொத்த உற்பத்தியில் 0.7 சதவீதம் ஆகும். இதனை மொத்த உற்பத்தியில் 2 சதவீதமாக உயர்த்த வேண்டும்.

தமிழகத்தினுடைய நிதிநிலை அறிக்கையில் மக்கள் நல்வாழ்வுக்கான திட்டங்களில் வரவேற்கத்தக்க அம்சங்கள் நிறைய உள்ளன. அவற்றை நான் வரவேற்கிறேன், அவற்றை வரிசையாகச் சொன்னால் நேரம் போதாது. சென்ற ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட கலைஞர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தனியார் காப்பீட்டு நிறுவனத்திற்கே பயன் அளிப்பதாய் இருந்தது. இந்தியா, பொது சுகாதார அமைப்பு நிதி பொறுப்பை ஏற்றுக்கொண்டபோதிலும் மருத்துவச் சேவை வழங்கும் பொறுப்பு 100 சதவீதம் தனியாரிடம் விடப்பட்டது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், காப்பீட்டுத் திட்டத்திற்கென



ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக மக்களுக்குப் பயனளிக்கவில்லை. இதற்கு மாறாக, புதியதாக செயல்படுத்தப்பட உள்ள முதலமைச்சரின் விரிவான பொது காப்பீட்டுத் திட்டத்தில் மருத்துவச் சேவைகளை வழங்கும் பொறுப்பு அரசிடமே இருக்க வேண்டும்.

அவ்வாறு செய்வது பொது மருத்துவமனைகளை மேம்படுத்த பெரிதும் உதவும். மேலும், இத்திட்டத்தில் சித்தா மருத்துவம், ஆயுர்வேதம், ஹோமியோ முறைகளிலும் சிகிச்சை பெற்றிட இடமளிக்க வேண்டும். தமிழகத்தில் 32 மாவட்டங்களில் தலைமை மருத்துவமனைகளில் ஏழு மட்டுமே M.R.I. Scan வசதியுள்ளது. இந்த நிலையில் புதிய அனைத்து மருத்துவமனைகளிலும் புதிய கருவிகள் வழங்கிட 55 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. இந்த நிதியைக் கூடுதலாக்கி குறிப்பிட்ட கருவிகள் மட்டுமல்லாது மருத்துவமனைக்குத் தேவையான அனைத்து அத்தியாவசியக் கருவிகளும் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

கோவை போன்ற மாவட்ட மருத்துவமனைகளில்கூட Open Surgery-க்கான வசதிகள் இல்லை. நோய் கண்டறியும் பரிசோதனைகளை மேம்படுத்துவதும், அதிநவீன ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்துவதும், தனியார் பங்களிப்புடன் ஏற்படுத்துவதென அரசு அறிவித்துள்ளது. இது பொது மருத்துவ நோக்கத்தின் பயனை அளிக்காது என்பதால், தனியார் பங்களிப்பு குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

5 ஆண்டுகளில் தமிழகத்தின் அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும். தலைக் காயம், முதியோர் சிறப்பு மருத்துவம் உள்ளிட்ட அனைத்துப் பிரிவுகளும் மருத்துவ வசதிகள் உள்ளடங்கியதாக மாற்றுவதற்கு அரசு இலக்கு நிர்ணயிக்க வேண்டும். அதேபோல் மக்களுக்கு அருகில் அமைந்துள்ள அரசு மருத்துவமனைகளை நவீனவசதிகள் உள்ளடங்கியதாகத் தரம் உயர்த்துவதற்கு ஊராட்சிக்கு ஓர் ஆரம்ப சுகாதார மையம், மலைப் பகுதிகளில் 500 பேருக்கு ஒரு துணை சுகாதார மையம் என்று இலக்கு நிர்ணயித்தால் ஏழையெளிய மக்கள் பயனடைவார்கள்.

மருத்துவத் துறை சீருடன் செயல்பட வேண்டுமானால், அத்துறையில் போதுமான பணியாளர்கள் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும். காலியிடங்களை நிரப்பவும், பணி நியமன தாமதத்தைத் தவிர்க்கவும் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாரியத்தின்மூலம்

காலியிடங்களை விரைந்து நிரப்புவதற்கு மருத்துவமனை புதிய தேவைகளைக் கணக்கிட வேண்டும். தொகுப்பூதிய முறையில் பணியாற்றும் செவிலியர்கள், பணிவரன்முறை செய்து அவர்களுக்கான பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும்.

*பிற்பகல் 1–30*

கடந்த ஆட்சியில் 2,600 பணியிடங்களுக்கு ஆட்கள் நியமிக்கப்பட்டதுபோக 1,200 பணியிடங்கள் இன்றைக்கு உள்ளன. 2005 ஆம் ஆண்டு முதல் பொது சுகாதாரத் துறையில் மருத்துவப் பணியாளர்களாக உள்ளார்கள். மிகக் குறைந்த மாதச் சம்பளமாக 990 ரூபாய் மட்டுமே பெறுகிறார்கள். அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும். ஃபிசியோதெரஃபி சோதனைக்கூட ஆய்வாளர்கள் போன்றவர்கள் தனியார் கல்லூரிகளில் படித்துவிட்டு வேலையில்லாமல் உள்ளார்கள். நமது சுகாதார நிலையங்களில் அவர்களைப் பணியமர்த்தினால் பெரிதும் பயன்படும். திருப்பூரினுடைய தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டிருக்கிற நானூற்று. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. வே. குணசீலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் வாழ்வின் வழிகாட்டி. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குணசீலன் உட்காருங்கள். அவர் நன்றி சொல்ல வேண்டும் என்கிறார். திரு. கே. தங்கவேல், நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாவட்டத்தினுடைய கோரிக்கைகளை எல்லாம் எழுதிக் கொடுத்துவிடுகிறேன். அவற்றைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

தொகுதிப் பிரச்சினைகள்: திருப்பூர் (தெற்கு) தொகுதியில் மாவட்டத் தலைமை மருத்துவமனை அமைந்துள்ளது. 450 படுக்கைகளுடன் 6 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. கூடுதலாக 23 ஏக்கர் காலியிடமும் உள்ளது. இதனைப் பயன்படுத்தி திருப்பூர் மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை துவக்கிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.



மாவட்ட மருத்துவமனையில் செயல்பட்டுவரும் செவிலியர் பயிற்சிப் பள்ளிக்கு வகுப்பறையும், விடுதி வசதியும் இல்லை. மாணவர்கள் கல்வித்தரம் மேம்படுத்திட இந்தக் கோரிக்கைமீது மாண்புமிகு அமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

தொழிலாளர்கள் நிறைந்த திருப்பூருக்கென இ.எஸ்.ஐ. சார்பில் 200 படுக்கைகளுடன்கூடிய மருத்துவமனை கட்டும் பணி பொருத்தமான இடம் கிடைக்காததால் துவக்கப்படாமலே உள்ளது. உரிய இடம் கண்டறிந்து கட்டுமானப் பணிகள் துவங்கிட அரசு தனிக் கவனம் செலுத்திட வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.

***திரு. வே. குணசீலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களின் வாழ்வின் வழிகாட்டி, வாழும் வள்ளல் இதயதெய்வம், சமூக நீதி காத்த வீராங்கனை, கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற் பாதங்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்து வணங்குகிறேன் தாயே. (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா! வந்தவாசி தொகுதியில் அனக்காவூர் ஒன்றியத்தில் செய்யாமூர் என்ற ஒரு கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த நான், தங்களின் மேலான தலைமை ஏற்று கழக உறுப்பினராகவும், கிளைக் கழகச் செயலாளராகவும், ஒன்றிய அம்மா பேரவைச் செயலாளராகவும், அறங்காவலர் குழுத் தலைவராகவும், இரண்டு முறை அனக்காவூர் ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளராகவும், வேளாண்மை விற்பனைக் குழு உறுப்பினராகவும் பணியாற்றினேன் அம்மா.

1996 ஆம் ஆண்டு வந்தவாசி சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்புகள் தந்தீர்கள் அம்மா. குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தாலும், எனது பிள்ளைகள் வேதனைப்படக் கூடாது என்று தொடர்ந்து இரண்டு முறை நியமனம் செய்து உழைப்புக்கேற்ற ஊக்கத்தையும் தந்த எங்களின் தெய்வத்தாயே.

நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில் வந்தவாசி தொகுதியில் இரண்டாவது முறையாக எனக்கு போட்டியிடும்

வாய்ப்பளித்தீர்கள். திருவண்ணாமலை மாவட்டம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டை என்று கருணாநிதி மாரைத் தட்டிக் கொண்டு சொல்வார்கள். ஆனால், அம்மா அவர்கள் பிரச்சாரத்தை மேற்கொண்டு அந்த ஏழு தொகுதிகளிலும் கழகக் கூட்டணி அமோக வெற்றி பெற்று அந்தச் சட்டமன்றத் தொகுதியைக் கைப்பற்றியது அம்மா. வந்தவாசி தொகுதியில் 26 ஆண்டுகளுக்குப் பிறகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவரை வேட்பாளராக்கி அம்மாவின் திருக்கரங்களால் உருவாக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினரை இந்த மாமன்றத்திலே பேச வாய்ப்பளித்ததற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற் பாதங்களை பணிவாக வணங்கி நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் அம்மா.

தங்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றியைக் காணிக்கையாக்கி வணங்குகிறேன். தமிழகத்தின் அனைத்துத் துறைகளையும் தனது குடும்ப உறுப்பினர்களை நுழைத்து அரசியலும், ஆட்சியிலும் அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழகத்தை இன்றைக்கு சுடுகாடாக்கியது மைனாரிட்டி தி.மு.க. கருணாநிதியினுடைய அரசு. இன்று தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்களும், மாவட்டச் செயலாளர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் திகார், புழல், கடலூர், திருச்சி, வேலூர், சேலம் என்று சுற்றுலா போல சிறைகளுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள் அம்மா.

இப்படிப்பட்டவர்களை மக்களுக்கு அடையாளம் காட்டி, ஊழல் செய்தவர்களுக்கு பாடம் புகட்டித் தமிழகத்தைக் காத்த எங்கள் காவல் தெய்வமே!

அதர்மம் தலைவிரித்தாடும்போது அதை அழிக்க தர்மத்தாயாம் தங்களின் பொற்கால ஆட்சியை மக்கள் வேண்டுகிறார்கள். மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையை ஏற்று மக்களாட்சி நடத்துகிறார்கள் அம்மா.

ஏழை எளிய விவசாயிகளுக்கு ஆடு, மாடுகள் வழங்கும் அற்புதத் திட்டம். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி அதிகரிப்புத் திட்டம், இன்றைக்கு தமிழகத்திலே மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி போன்றவற்றை ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கும் சிறப்பான, இனிப்பான திட்டம், மாணவ, மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டம், அரிசி பெற தகுதியுடைய குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் 20 கிலோ இலவச அரிசி



வழங்கும் திட்டம், மாணவ, மாணவிகளுக்கு இலவசப் பாடப் புத்தகம், சீருடை மற்றும் பஸ் பாஸ் வழங்கும் திட்டம், பட்டம் பெற்ற பெண்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் திருமண நிதி உதவியுடன் தாலிக்கு 4 கிராம் தங்கம் வழங்கும் திட்டம். படித்தப் பெண்களுக்கு 25 ஆயிரம் ரூபாயும், தாலிக்கு 4 கிராம் தங்கமும் இலவசமாக வழங்கும் திட்டம், இன்றைக்கு ஏழை எளியோர் பயன்பெறும் வகையில் சூரிய சக்தியுடன்கூடிய 300 சதுர அடியிலே 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவிலே வீடு கட்டும் திட்டம், இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக குடிநீர் வாரிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிபோல் அமைக்கப்பட்டு அவசரக் கோலத்தில் அடிப்படை வசதியின்றி திறக்கப்பட்ட புதிய தலைமைச் செயலகத்தை மாற்றியமைத்தது போன்ற நல்ல திட்டங்களைக் கொண்டு வந்ததற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். மக்கள் நல்வாழ்வுத் துறையிலே பேச வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 1–35*

முந்தைய ஆட்சியில் இந்தத் துறை அமைச்சராக இருந்த எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் என்பவர் மக்களைப்பற்றி கவனிக்கவில்லை. மக்களை தி.மு.க. அரசு ஐந்தாண்டுக் காலமாக கண்டுகொள்ளவே இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, தற்போது என்னுடைய வந்தவாசித் தொகுதியிலே ஒரு தலைமை மருத்துவமனை ஏற்படுத்தித் தர வேண்டும் அம்மா.

வந்தவாசி தொகுதியிலே உள்ள போக்குவரத்து நெரிசலைக் கருத்திற்கொண்டு, வந்தவாசியிலே போக்குவரத்துக் காவல் நிலையம் ஒன்றை அமைத்துத் தரவேண்டும் அம்மா. எங்கள் தொகுதியிலே 4 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவிலே தி.மு.க. அரசு பேருந்து நிலையத்தைத் திறந்து கிடப்பில் போட்டுவிட்டார்கள் அம்மா. அதற்கு கலைஞர் பேருந்து நிலையம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. அந்தப் பெயரை நீக்கிவிட்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டும் அம்மா.

என்னுடைய வந்தவாசித் தொகுதியிலே ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குப் போதுமான தானிய சேமிப்புக் கிடங்கு இல்லாமல் விவசாயிகள் பெரிதும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்

அம்மா. ஆகவே, தனியாக ஒரு கிடங்கு கட்டித்தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிப் பிரச்சினைகள்: வந்தவாசியில் வட்டார தலைமை மருத்துவமனை செயல்படுகிறது. இங்கு தினமும் 1,500 நபர்கள் வரை சிகிச்சை பெற்றுத் திரும்புகிறார்கள். தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. அதற்கு ஏற்ற படுக்கை வசதிகள் இல்லை. மேலும், மருத்துவ உபகரணங்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், அடிப்படைப் பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளது, மற்றும் ஆம்புலன்ஸ் வசதி, அவசர சிகிச்சைபெற வசதிகள் இல்லை. சிகிச்சை பெற செங்கல்பட்டிற்கோ அல்லது சென்னைக்கோதான் செல்ல வேண்டியுள்ளது. இதனால் சில நேரங்களில் நோயாளிகளுக்கு உயிரிழப்பு ஏற்படுகிறது. எனவே, இந்த மருத்துவமனையை நவீன வசதிகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

வந்தவாசியில் கடந்த ஆட்சியில் பேருந்து நிலையம் அவசரக் கோலத்தில் அடிப்படை வசதிகள் இன்றி திறக்கப்பட்டது. அதைச் சீரமைத்து, நவீன வசதிகள் செய்து மக்கள் பயன்பாட்டிற்குத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன். மேலும், வந்தவாசியிலிருந்து புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்கவும், வந்தவாசியிலிருந்து சென்னைக்குக் குளிர்சாதனப் பேருந்து இயக்கவும், அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சியில் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் மற்றும் கான்கிரீட் வீடுகள் கடந்த தி.மு.க. ஆட்சியில் பழுதுபார்க்காமல் பாழடைந்துள்ளது. அவற்றைப் புதுப்பித்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

தமிழகத்திலேயே நிரந்தர வறட்சி மாவட்டம் என அறிவிக்கப்பட்ட மாவட்டம் திருவண்ணாமலை மாவட்டம். அந்த மாவட்டத்தில் அமைந்துள்ள வந்தவாசியில் எந்தவொரு தொழிற்சாலைகளோ, சிறு தொழில்களோ இல்லாத மிகவும் பின்தங்கிய தொகுதி. இங்கு விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் ஏழையெளிய மக்கள் பயன்பெறும் வகையில் தொழிற்சாலை ஒன்றை அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.



இங்கு முஸ்லீம் சமுதாய மக்கள் 50 சதவிகிதம் பேர் கோரைப்பாய் தயாரிக்கும் தொழிலை நம்பி இருக்கிறார்கள். அது இப்போது மிகவும் நலிவடைந்துள்ளது. மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ளதுபோல் நவீன பாய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்து முஸ்லீம் மக்கள் வாழ்வாதாரத்தைக் காக்க வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

வந்தவாசி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் இதுவரை செயல்படுத்தவில்லை. அதை நிறைவேற்றிட ஆவன செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

வந்தவாசி தொகுதியைச் சார்ந்த தெள்ளாறு ஒன்றியத்தில் சத்தியவாடி கிராமத்தைச் சுற்றி அருங்குளம், மாவளவாடி, படூர், கொண்டையாங்குப்பம் மற்றும் பல கிராமங்கள் உள்ளன. 6,000 மக்கள்தொகை கொண்ட இங்கு கால்நடை மருத்துவமனைக்கு 15 கிலோ மீட்டர் செல்ல வேண்டியுள்ளது. எனவே, சத்தியவாடியில் கால்நடை மருத்துவமனை திறக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

வந்தவாசி தொகுதியைச் சார்ந்த தெள்ளாரில் 27 ஆண்டுகளாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் இயங்கி வந்தது. இதற்கு இதுவரை கட்டட வசதி இல்லாத காரணத்தினால் கடந்த ஒரு வருடமாக இயங்கவில்லை. இதற்கு கட்டட வசதி செய்து பொதுமக்கள் நலன் கருதி மீண்டும் திறக்க வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

வந்தவாசியில் வெண்குன்றம் மலைக்கோயில் மற்றும் தவளகிரி நாதர் கோயில் உள்ளது. இந்த மலைப்பாதை சரிவர இல்லாததால் அதை சீர் செய்து, கார்த்திகை மாதம் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியூரிலிருந்து தரிசனம் செய்ய வருவார்கள். அவர்களுக்கு வசதிகள் செய்து, இந்தக் கோயிலை சுற்றுலாத்தலமாக அறிவிக்க மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

வந்தவாசியில் உள்ள தெள்ளாரில் சக்தி முக்தாலம்மன் திருக்கோயில் உள்ளது. அந்தக் கோயிலின் தேர் சக்கரம் பழுதடைந்து தேரோட்டம் நடைபெறுவதில்லை. அந்த நான்கு சக்கரங்களையும் இரும்புச் சக்கரமாக மாற்றித்தரவும், இங்கு பக்தர்கள் தங்கும் விடுதி ஒன்று அமைத்துத் தரும்படியும் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஒன்றியத்தில் உள்ள தெய்யார்—2008, வந்தவாசி ஒன்றியம் மருதநாடு—2006, பெரணமல்லூர் ஒன்றியம், பெரணமல்லூர்—2009 மேற்கண்ட பள்ளிகளை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த மூன்றாண்டுகளுக்கு முன்பே இரண்டு இலட்சம் ரூபாய் அரசுக்குக் கட்டப்பட்டுள்ளது. இதற்கு அனுமதி வழங்க மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

வந்தவாசி தொகுதி, தேசூர் பேரூராட்சியில் ஆதிகேசவ பெருமாள் கோயில், காசி விஸ்வநாதர் திருக்கோயில் உள்ளது. மேற்கண்ட இரண்டு கோயில்களுக்குத் தனித்தனியே தேர்கள் உள்ளன. ஆனால், இரண்டுமே பழுதடைந்து தேரோட்டம் நடைபெறாமல் உள்ளது. மக்கள் தரிசிக்கும் வகையில் இந்தத் தேர்களைப் புதுப்பித்து தேரோட்டம் நடைபெற மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

வந்தவாசி தொகுதியில் உள்ள நெடுஞ்சாலைத் துறை சாலைகள், மாவட்ட இதர சாலைகள் (O.D.R.) மிகவும் மோசமான நிலையில் உள்ளன. புதிய சாலைகள் அமைக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

வந்தவாசியில் அதிகமான அரசு ஊழியர்கள் வசிக்கிறார்கள். சொந்த வீடுகள் இன்றி வாடகைக் குடியிருப்பில் வசிக்கும் மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு ஊழியர் குடியிருப்பு ஒன்றும், குடிசை மாற்று வாரியத்தின்மூலம் அடுக்கு மாடிக் குடியிருப்பும் கட்டித் தர ஆவன செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

வந்தவாசி, தெள்ளாறு ஒன்றியத்தில் 300—க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. வந்தவாசி கிராமிய மின்சாரக் கூட்டுறவுச் சங்கம்மூலம் பணியமர்த்தப்பட்ட 71 பேர் இன்னும் நிரந்தரமில்லா பணியிலுள்ளார்கள். அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி, நிரந்தர பணியமர்த்த வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்கொடுங்காலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தி வழூர், மருதாடு, கடைசிகுளம், கல்லாங்குத்து ஆகிய ஊராட்சிகளின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்குமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.



வந்தவாசி தொகுதியில் தெள்ளார், தேசூர், பொன்னூர், நல்லூர், ஓசூர், மருதாடு, பெரணமல்லூர் ஆகிய இடங்களில் அடிக்கடி தீ விபத்துகள் ஏற்படுகின்றன. அதைத் தடுக்க போதுமான தீயணைப்பு வசதிகள் இல்லை. எனவே, இங்கு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

வந்தவாசி தொகுதியைச் சார்ந்த பெரணமல்லூர் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்டித் தர ஆவன செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

பெரணமல்லூர் பேரூராட்சியில் உள்ள ஈஸ்வரன் கோயிலைப் புதுப்பித்து குடமுழுக்கு விழா செய்ய ஆவன செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன். அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வந்தவாசி தொகுதியில் உள்ள தெள்ளாரில் தொழில்நுட்பக் கல்லூரி, கலை அறிவியல் கல்லூரி, தொழிற்பயிற்சி நிலையம், ஆசிரியர் பயிற்சி நிலையம் உள்ளது. இந்தப் பகுதியில் 33/11 கிலோ வாட் துணை மின் நிலையம் உள்ளது. இதனால் மின் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனைத் தீர்க்க 110 கிலோ வாட் கொண்ட மின் நிலையமாக மாற்றித்தர ஆவன செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வந்தவாசி தொகுதியில் வந்தவாசி நகராட்சியைச் சேர்ந்த கோட்டைமுனையிலே 31—7—2011 அன்று தீ விபத்து ஏற்பட்டு 8 வீடுகள் எரிந்து சாம்பலாகிவிட்டன அம்மா. அதிலே ஒரு குடும்பத்தில் திருமணத்திற்காக வாங்கி வைத்திருந்த அனைத்துப் பொருட்களும் சாம்பலாகி எரிந்துபோனதற்காக என்னுடைய ஒரு மாத சம்பளத்தை திரு. எச். காதர்பாட்ஷாவின் மகள் செல்வி அசினா என்ற மணப்பெண்ணுக்கு வழங்கினேன் அம்மா!

அதேபோல், தெள்ளாறு ஒன்றியத்தில், சத்தியவாடி என்ற கிராமத்திலே 29—8—2011 அன்று நடந்த தீ விபத்தில் அஞ்சம்மாள் அவர்களின் குழந்தைகள் அசோக் வயது—13, அஜய் வயது—10 மற்றும் ஆகாஷ் வயது—8 ஆகியோரை இழந்துவாடும் அந்தக் குடும்பத்திற்கு என்னுடைய ஒரு மாதச் சம்பளத்தை வழங்கினேன் அம்மா!

[திரு. வே. குணசீலன்] [2011 செப்டம்பர் 12

மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த அன்னதானத் திட்டத்தை வந்தவாசி தொகுதி, வந்தவாசி நகராட்சியிலுள்ள அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் திருக்கோயில் மற்றும் வழூர் பிரம்மபுரிஸ்வரர் திருக்கோயில்களுக்கும் அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான தேர் பழுதடைந்துள்ளதால் அதனை சீர் செய்து, கூரை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வந்தவாசி தீயணைப்பு நிலையத்தில் நீர்தாங்கி வண்டி பழுதடைந்திருப்பதால், புதிய தீயணைப்பு வண்டியும், தீயணைப்பு நிலையத்திலுள்ள ஆம்புலன்ஸ் வண்டி பழுதடைந்துள்ளதால் அதற்குப் பதிலாக புதிய ஆம்புலன்ஸ் வண்டியும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வந்தவாசி தொகுதியில் வேளாண்மை பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வந்தவாசி தொகுதிக்குட்பட்ட தெள்ளார் ஒன்றியத்திலுள்ள கோவனந்தல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் 7–9–2011 அன்று மினி லாரியில் நிச்சயதார்த்தத்திற்கு சென்றபோது ஏரிபட்டு கூட்ரோடில் 54 பேர் சாலை விபத்திற்குள்ளானார்கள். அதில் சம்பவ இடத்திலேயே 2 பேர் இறந்துவிட்டார்கள். அதிகமாக காயமடைந்த 33 பேர் வந்தவாசி அரசு பொது மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். எனவே, அவர்களுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வந்தவாசி சட்டமன்றத் தொகுதி, வந்தவாசி அரசு பொது மருத்துவமனையில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களை நிரப்பும்படி மாண்புமிகு அம்மா அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் என் நன்றியையும், வணக்கத்தையும் கூறி, விடைபெறுகிறேன் அம்மா!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.



2011 செப்டம்பர் 12]

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையினுடைய இந்த மானியக் கோரிக்கையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துகளை இங்கே தெரிவித்துக்கொள்ள வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மருத்துவத் துறையில், சிறப்பான பல்வேறு திட்டங்களை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிமுகம் செய்திருக்கிறார்கள். அதனை மேலும் செழுமைபடுத்துகிற வகையில், கீழ்க்கண்ட கருத்துகளை நான் முன்வைக்க விரும்புகின்றேன்.

இன்றைக்கு தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், அதேபோன்று மருத்துவ நிலையங்களிலும், மருத்துவமனைகளிலும் மருந்தாளுனர் பணியிடங்கள் காலியாக உள்ளன. அந்தப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப ஆவன செய்ய வேண்டும். பார்மசிஸ்ட் படித்தவர்களுக்கு, அனைத்து சாதியைச் சேர்ந்தவர்களுக்கும், வயதுவரம்பு ஏதும் இல்லாமல், வயதுவரம்பை முற்றிலுமாக நீக்கி, காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு ஆவன செய்ய வேண்டும். தென் மாவட்டங்களினுடைய முக்கியப் பகுதியான மதுரையில் உள்ள இராஜாஜி மருத்துவமனையில் 20 மருந்தாளுனர் பணியிடங்களை நிரப்ப வேண்டுமென நீதிமன்றம் அறிவித்ததை சென்ற அரசு ஏற்காமல், அந்த இடங்களை நிரப்பாமல் வைத்திருக்கிறது. உடனடியாக நிரப்ப வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிஸியோதெரபி படித்தவர்களை பணியில் அமர்த்த வேண்டும். அதேபோன்று தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் 108 ஆம்புலன்ஸ் வசதி செய்து கொடுக்க வேண்டும். 108 ஆம்புலன்ஸ் சேவையை தமிழக அரசே ஏற்று நடத்த வேண்டும். அதில் இருக்கக்கூடிய பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் முதல், மருத்துவக் கல்லூரி வரை மருத்துவமனைகள் மற்றும் மருத்துவத் துறைகளில் இருக்கக்கூடிய மருத்துவர்கள் அதிலே பணியாற்றக்கூடிய துப்புரவுப் பணியாளர்கள், உதவியாளர்கள், செவிலியர்கள் போன்று ஒப்பந்த அடிப்படையிலே இருக்கக்கூடியவர்களை நிரந்தரம் செய்ய வேண்டும்.

பிற்பகல் 1–40

சி.டி. ஸ்கேன் மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் உள்ளிட்ட பிரிவுகளில் இருக்கக்கூடிய காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும். மாவட்ட தலைமை மருத்துவமனையில் புற்றுநோய் கண்டறிகின்ற விதத்தை அனைத்து மாவட்ட மருத்துவமனைகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும்.

இந்தியாவில் இருக்கக்கூடிய அகில இந்திய மருத்துவ கவுன்சில், இப்பொழுது மருத்துவப் படிப்பிற்குப் பொது நுழைவுத் தேர்வை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று அறிவித்திருப்பதிலிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்கக்கேட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கின்றார்கள். அதனை மத்தியிலிருந்து கோரிப் பெற்று நம்முடைய தமிழக மாணவர்கள் நலன் பாதிக்காதவகையிலே அதை உறுதிப்படுத்த வேண்டும்.

பல்வேறுவிதமான புதிய நோய்கள், தொற்று நோய்கள், காய்ச்சல் உள்ளிட்ட நோய்கள் பரவி வருவதை அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், மருத்துவமனைகளிலும் உரிய மருத்துவ வசதிகள் இல்லாததால், சென்ற ஆட்சியாளர்களால் கட்டுப்படுத்த முடியாமல், அவற்றை அப்படியே விட்டுவிட்டார்கள். அதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

வரும் ஆண்டில் தனியார்கள் மருத்துவக் கல்லூரிகள் தொடங்குவதற்கு எந்தவிதமான அனுமதியையும் தமிழக அரசு கொடுக்காமல், அரசுத் துறையின் சார்பில் தொடங்க வேண்டும். அரசு மருத்துவக் கல்லூரிகளில் கூடுதல் இடங்களை மாணவர்களுக்கு உருவாக்கித் தரவேண்டும். சித்த மருத்துவப் படிப்புகளில் கடந்த ஆட்சியாளர்களின் நிருவாகச் சீர்கேட்டினால் கிட்டத்தட்ட 40–லிருந்து 20–ஆகக் குறைக்கப்பட்டிருக்கக்கூடிய முதுநிலைப் படிப்புகளை மீண்டும் உருவாக்கித் தரவேண்டும்.

மருத்துவக் கல்லூரிகளில், மருத்துவ உயர் படிப்புக்கு சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் வாரிசுகளுக்கு மேற்படிப்புவரை சலுகைகள் வழங்க வேண்டும். மருத்துவக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய மாணவர்களின் கல்விக் கட்டணத்தை அரசே ஏற்று கட்டணத்தைச் செலுத்த வேண்டும். உயர் படிப்பில் துறை வாரியாகக் காத்திருப்பவர்களுக்கு பட்டியல் தயாரிப்பதைக் கைவிட்டு, பொதுவான காத்திருப்போர் பட்டியலைத் தயாரிக்க வேண்டும். அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும்



தற்போது நடைமுறையில் உள்ள புறநோயாளிகளுடைய பார்வையாளர் நேரத்தை ஒரு மணிநேரம் கூடுதலாக உயர்த்தித் தர வேண்டும்.

கிராமப்புறங்களில் இருக்கக்கூடியவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் சிறப்பு முன்னுரிமை பெறுவதற்காக, கிராமப்புற மாணவர்களுக்குச் சிறப்பு ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும். தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின்மூலம் இன்றைக்கு மருத்துவமனைகளுக்குத் தேவைப்படுகின்ற அனைத்துவிதமான பொருட்கள், கெமிக்கல்ஸ் உள்ளிட்டவற்றையெல்லாம் வழங்க வேண்டும்.

அதேபோன்று, மருத்துவ மாணவர்களுக்கு அதிநவீன மருத்துவக் கருவிகள், ஆய்வகக் கருவிகள் போன்றவற்றையெல்லாம் வழங்க வேண்டும். காவல் துறையைப் போன்று, கட்டடம் கட்டுவதற்கென்று தனியாக ஒரு துறையை, சுகாதாரத் துறைக்குப் புதியதாக உருவாக்க வேண்டும். மாவட்ட தலைமை மருத்துவமனையில் இருக்கக்கூடிய இதய நோய் மருத்துவர்கள், நீரிழிவு நோய்ப் பிரிவில் இருக்கக்கூடிய மருத்துவர்கள் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும். தொழுநோய்த் துறையிலிருந்து சுகாதாரத் துறைக்கு வந்திருக்கக்கூடிய ஆய்வாளர்களுக்கு உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியும் இன்னும் பணி வழங்கப்படாமல் இருப்பதை அரசு கவனத்திலே கொண்டு அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** புதுக்கோட்டை மாவட்டத்தில் நீண்ட நாட்களாக அந்த மாவட்டத்து மக்கள் மருத்துவக் கல்லூரி வேண்டுமென்ற வலுவான கோரிக்கையினை வைத்திருக்கின்றார்கள். புதுக்கோட்டையில் இருக்கின்ற 6 சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளிலும் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே தேர்தலை மனதிலே வைத்து, கடந்த பிப்ரவரி மாதத்திலே கடலூர், திண்டுக்கல், இராமநாதபுரம், புதுக்கோட்டை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் புதியதாக மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும் என்று வெற்று அறிவிப்புகளை அறிவித்தார்கள்.

ஆனால், எந்தவித பூர்வாங்கப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்க வேண்டுமென்றால் குறைந்தபட்சம் 25 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். 500 படுக்கை வசதிகள் இருக்க வேண்டும். அதிலே, 90 சதவீதம் in-patient இருக்க வேண்டும். போதிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இருக்க வேண்டும். பேராசிரியர்கள் இருக்க வேண்டும். ஆனால், இதையெல்லாம் கருத்தில் கொள்ளாமல் முந்தைய அரசால் அள்ளித் தெளித்த அவசரக் கோலமாக, மக்களை ஏமாற்ற முயன்ற வெற்று அறிவிப்புகளாக இருந்தன. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நடைமுறைக்கு சாத்தியமான, ஒரு வருடத்திற்கு, ஒரு மாவட்டத்திற்கு, ஒரு மருத்துவக் கல்லூரி என்று ஆணையிட்டுள்ளார்கள். இதன் அடிப்படையில் மாண்புமிகு அம்மாவின் அரசு முடிவெடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம், இதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். புதுக்கோட்டையில் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. அள்ளித் தெளித்த அவசரக் கோலத்தை மாற்றியமைத்து, நல்ல அழகான கோலம் அமைப்பதற்கு மக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைத் தேர்வு செய்திருக்கின்றார்கள். ஆகவே, இந்தக் குறிப்பிட்ட மாவட்டங்களிலெல்லாம் மீண்டும் மருத்துவக் கல்லூரியை முறையாக அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று மாண்புமிகு துறையினுடைய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். ஏனென்றால், அந்த மாவட்ட மக்கள் மிகுந்த ஆர்வத்தோடு, எதிர்பார்ப்போடு காத்திருக்கிறார்கள். ஆகவே, அதற்கான ஒரு வாய்ப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.



பிற்பகல் 1–45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், அதாவது நடைமுறைக்குச் சாத்தியமான வருடத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், இங்கே பார்த்தீர்கள் என்றால், இங்கே பேராசிரியர்கள் கிடைப்பது கிடையாது. இந்த non-clinical side என்று சொல்லப்படுகின்ற anatomy, physiology, bio-chemistry போன்ற non-clinical side–லே இருக்கின்ற பேராசிரியர்கள் இந்தியாவிலேயே கிடைப்பதில்லை. இதுதான் உண்மை. கடந்த ஆட்சியில் செய்த கோளாறுகளின் காரணமாக இந்த ஆண்டிலே தேனியிலேயும், திருவாரூரிலேயும் திரும்பவும் M.C.I. approval செய்வதற்கு மிகவும் நாங்கள் சிரமப்பட்டோம் என்பதை நான் இந்தத் தருணத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே ஒவ்வொரு வருடமும் ஒரு மருத்துவக் கல்லூரி கண்டிப்பாக வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் த. ஹரிதாஸ் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நன்றி சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, நன்றி சொல்லி சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி முன்னுரிமை கொடுக்கிறபோது புதுக்கோட்டைக்கு முன்னுரிமையை முதலிலேயே தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதற்குரிய ஆயிரம் ஏக்கர் இடத்தை நாங்கள் தயாராக அங்கே வைத்திருக்கிறோம். எந்தச் சிரமமும் இல்லை என்பதனையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மருத்துவத் துறையிலே நம்முடைய சிவகங்கை மாவட்டத்திலே இருக்கக்கூடிய கல்லலில் மாவட்டத் தலைமை மருத்துவமனை ஏற்படுத்த வேண்டும். திருத்துறைப்பூண்டி வட்டம், முத்துப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையம் இருப்பதை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும். அதேபோன்று, மலையூரில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையை உருவாக்க வேண்டும். மணவிடுதி மற்றும் வெட்டன்விடுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதையெல்லாம் எழுதிக் கொடுத்துவிடலாம்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொகுதிப் பிரச்சினைகள்: புதுகை தலைமை மருத்துவமனையில் இரண்டு புதிய ஆம்புலன்ஸ் வழங்குமாறும், புதுகை மருத்துவமனையில் C.Arm வசதி செய்துகொடுக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டையில் மருத்துவக் கல்லூரி அமைக்கவும், புதுக்கோட்டை மருத்துவமனைக்கு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ரூ.5 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யவும், 100 படுக்கைகளைக் கொண்ட கட்டட வசதி செய்துதரவும் வேண்டுகிறேன்.

ராணியர் மருத்துவமனைக்கு 100 படுக்கைகள் கொண்ட கட்டட வசதி செய்துதரவும், காலிப் பணியிடங்களில் மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

புதுகை மருத்துவமனையில் மூளை நரம்பியல் டாக்டர் நியமனம் செய்யவும், இருதய சிகிச்சைப் பிரிவில் 50 படுக்கைகள் வசதி செய்துகொடுக்கவும், குழந்தைகளுக்குத் தனி மருத்துவ வசதி செய்துகொடுக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் த. ஹரிதாஸ் அவர்கள். (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன், சொல்லுங்கள், நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்?

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே சற்றுமுன்பு சொல்கிற நேரத்திலே, மருத்துவக்



கல்லூரிக்குத் தேவையான பேராசிரியர்கள் கிடைப்பதில்லை என்று சொன்னார்கள். அது யதார்த்தமான உண்மை. ஆனால், அந்தப் பேராசிரியர்களை உருவாக்குவது காலத்தின் அவசியம். எனவே, நமது இந்த அரசு, மருத்துவப் பேராசிரியர்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமா? ஏனென்று சொன்னால், சீனியர்களாக இருக்கக்கூடிய மருத்துவர்கள்தான் மருத்துவப் பேராசிரியர்களாக மாறுகிறார்கள். அவர்களெல்லாம் வெவ்வேறு இடங்களிலே, அதிகமான சம்பளத்தை எதிர்பார்த்து, வேறு தனியார் மருத்துவமனைகளுக்குச் செல்கிற காரணத்தினால் பேராசிரியர்களாக வர மறுக்கிறார்கள். எனவே, அதற்கு வழிவகை ஏற்படுத்துகிற விதமாக ஏதாவது திட்டத்தை அறிவித்தால்தான் மருத்துவப் பேராசிரியர்களை உருவாக்க முடியும். அப்பொழுதுதான் மருத்துவக் கல்லூரிகளையும் கூடுதலாக உருவாக்க முடியும். எனவே, அதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல, இங்கே பேராசிரியர்கள் குறைவாக இருப்பதற்கு ஒரு காரணம், தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்குப் போய்விடுவதுதான். இதையெல்லாம் அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், M.C.I. approval வாங்குவதற்காக P.G., Post Graduate Course-களை அதிகப்படுத்தினால்தான் ஆசிரியர்களும், பேராசிரியர்களும் அதிகமாகக் கிடைப்பார்கள். அதற்கான முயற்சிகளை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செய்துகொண்டிருக்கின்றது என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் த. ஹரிதாஸ் அவர்கள்.

***டாக்டர் த. ஹரிதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர்களுக்கெல்லம் டாக்டராக விளங்கும் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்களின் பாதம் பணிந்து என் உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது என்னுடைய கன்னிப் பேச்சு என்பதால், சிறிது நேரம் அதிகமாக

[டாக்டர் த. ஹரிதாஸ்] [2011 செப்டம்பர் 12

ஒதுக்க வேண்டி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உயிர் எழுத்தில் அம்மா!

அன்பிற்கும் அறிவிற்கும் அகராதியே,

ஆழ்ந்த சிந்தனையின் ஆழ்கடலே,

இன்சொல் பேசுவதில் இமயமே,

ஈகை வரம் தருவதில் ஈஸ்வரியே,

உலகத் தமிழர்களின் உணர்வே,

ஊர்தோறும் நீர் நிறைந்த ஊருணியே,

எடுத்ததை முடிக்கும் எழுச்சியே,

ஏழைகளை ஏற்றிவிடும் ஏணியே,

ஐவகை நிலம் போற்றும் ஐஸ்வரியமே,

ஒப்புமை இல்லா ஒருமைப்பாடே,

ஓம் எனும் பிரணவத்தின் ஓசையே,

ஔவையின் தமிழ் கற்ற ஔவையே,

தமிழகத்தின் உயிர் எழுத்தே, நீங்கள் வங்கக் கடலலையின் எண்ணிக்கையைவிட, வைகை ஆற்று மணல்துகள்களின் எண்ணிக்கையைவிட, ஆண்டுகள் நீண்டு வாழ, வாயார வாழ்த்துகிறேன்.

பிற்பகல் 1–50

வள்ளலின் வாரிசான தலைமையே,

வரலாற்றின் பிழைதிருத்தும் புலமையே,

வாக்குறுதி நிறைவேற்றும் அன்னையே,

வகைவகையாய் பயனளிக்கும் தென்னையே,

மனித நேயம் வளர்க்கின்ற பூ மனமே,

மக்களெல்லாம் உற வென்னும் தாய் மனமே,

துறைதோறும் அறிவூறும் சிந்தனையே,

தூய நல் ஆட்சி தரும் அம்மாவே,

இங்கென்னை வந்தமரச் செய்த தாயே,

ஏழ் பிறப்பு எடுத்தாலும் மறவேன் அம்மா,

முதல்வரே, முதிர்ந்த பேரறிவே,



2011 செப்டம்பர் 12] [டாக்டர் த. ஹரிதாஸ்]

தங்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். வணங்குகிறேன். வணங்குகிறேன்.

'அ' என்பது உயிர் எழுத்து,

'ம்' என்பது மெய் எழுத்து,

'மா' என்பது உயிர்மெய் எழுத்து,

உயிர் எழுத்தும், மெய்யெழுத்தும், உயிர்மெய்யெழுத்தும் இணைவதால் இணங்குகிறது தமிழ் மொழி. உயிர் எழுத்தும், மெய்யெழுத்தும், உயிர்மெய்யெழுத்தும் இணைந்த அம்மாவால் இயங்குகிறது தமிழ்நாடு. (மேசையைத் தட்டும் ஒலி)

வள்ளலின் வாரிசாய், கழகத்தின் பொதுச் செயலாளராய், தமிழகத்தின் முதல்வராய் ஆகிய மூன்று நிலைகளில் மூன்று புள்ளி பெறும் ஆய்த எழுத்தாகவும் விளங்கும் அம்மாவே. எழுத்தில் மட்டுமா நீங்கள் ஆய்தம்? எதிரிகளை வீழ்த்துவதிலும் நீங்கள் ஆய்தம்தான். எமனே நேரில் வந்து எதிர்த்தாலும், அவன் எதிர்ப்பையும் எருவாக்கி எழுச்சியினை உருவாக்கும் தாயே, உங்கள் துணிவு மக்களுக்கோர் பாடம்.

'இடுகாடு சென்றது திரும்பாது' என்பார்கள். ஆனால், திரும்பச் செய்து உயிர் கொடுத்து, இழந்தோரை வாழ வைக்கும் தெய்வம் நீங்கள். உடைமைகளை இழந்து தவித்துக் கிடந்தவர்கள் இன்று உங்களால் களிப்பில் மிதக்கின்றார்கள். அபகரிக்கப்பட்ட உடைமைகள் மீட்கப்பட்டு உரியவர்களிடம் மீண்டும் ஒப்படைக்கப்படும் என்று; அம்மா, நீங்கள் அளித்த ஒரே வாக்குறுதி தமிழகத்தின் தலையெழுத்தையே மாற்றிவிட்டது. தமிழர்களை வெப்பத்தால் தகிக்க வைத்த சூரியனை வீழ்த்தி, தட்பத்தால் நலம் சேர்க்கும் மூலிகையே. தன் வீடு வாழ, ஆட்சி புரிந்தோரை வீழ்த்தி, தமிழ்நாடு வாழ ஆள்கின்ற முதல்வர் நீங்கள். மூன்று உயிர்காக்க தீர்மானம் போட்ட மனித நேய மாண்பே, நீங்கள் ஆள்கின்றபோது நாங்களும் வாழ்கிறோம் என்பதில்தான் அம்மா எங்களுக்குப் பெருமை.

மத்திய அரசு, தமிழக அரசுக்குக் கேட்ட தொகை கொடுக்காமல், குறுந்தொகை கொடுத்தாலும், தமிழர்கட்கு நெடுந்தொகை அளிக்கின்ற கருணைமிகு முதல்வரே, உங்கள் நெஞ்சம் என்ன மக்கள் நலத் திட்டங்களின் சுரங்கமா? ஏ அப்பா! எத்தனை எத்தனை திட்டங்கள்! நினைத்தாலே இனிக்கிறது நெஞ்சம்! மலைக்கிறது மக்கள் மன்றம்!

உயர் சிறப்பு மருத்துவச் சிகிச்சைக்கு டெல்லி பயணம். இனி டெல்லியே சிகிக்சைக்கு சென்னைக்கு வரணும் என்ற நிலையை உருவாக்க திட்டமிட்ட தாயே! உங்களை உலகம் உற்றுப் பார்க்கிறது; உயர்த்தத் துடிக்கிறது.

இலங்கைத் தமிழர்களின் இன்னலைத் துடைக்க, இங்குள்ள தமிழர்களின் வளத்தினைப் பெருக்க, உலகத் தமிழர்களின் ஒற்றுமை நிலைக்க, ஏழைப் பெண்களின் திருமணம் நடக்க, இயலா முதியோர் மகிழ்ச்சியில் திளைக்க, உழவர்தம் நிலத்தில் உற்பத்தி பெருக்க, மழலையர் புத்தகச் சுமையினைக் குறைக்க, மாணவர் அறிவிற்கு செயற்கைக்கோள் அமைக்க, மீனவர் துயரினை ஆனவரை குறைக்க தீர்மானம் திட்டங்கள் நிறைவேறின. திசையெங்கும் பாராட்டுகள் அரங்கேறின. அம்மா நான் மருத்துவன் என்ற வகையில் ஒரு கோரிக்கையை வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கோரிக்கைகளையெல்லாம் எழுதிக் கொடுங்கள். உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**டாக்டர் த. ஹரிதாஸ்:** தங்களுடைய பொற்காலத்தில், இப்போது மருத்துவமனைகளைச் சீரமைக்க இந்திய அளவிலேயே முதன்முறையாக திட்டங்கள் தீட்ட வேண்டி என் பணிவான கோரிக்கைகளை சமர்ப்பிக்க விரும்புகின்றேன்.

நான் பயின்ற சென்னை மருத்துவக் கல்லூரியில் எங்களுடைய பழைய Dean-களுடைய பெயர் பட்டியலைப் பார்க்கும்போது பிரிட்டிஷ் பேரரசின் ஆதிக்கம் முடிந்த 1947 ஆம் ஆண்டிற்கு முந்தைய பட்டியலில் இந்திய மற்றும் ஆங்கிலேய Dean-களுடைய பெயர்களோடு I.M.S. என்ற ஒரு பதவியுடன் குறிப்பிடப்பட்டுள்ளதைக் கண்டிருக்கிறேன். அன்றைய காலக்கட்டத்தில் I.C.S. (Indian Civil Service), I.M.S. (Indian Medical Service) என்ற இரு இந்திய அரசுப் பணிகளே இருந்தன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல I.M.S. என்பது நம்முடைய மத்திய



அரசிற்குட்பட்டது. பிரிட்டிஷ் காலத்திலே அது முதலில் இருந்தது. நம் நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு இந்த I.M.S. இல்லை. ஆகவே, இது மத்திய அரசிற்குட்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1–55

**மாணபுமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடியுங்கள், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் த. ஹரிதாஸ்.

**டாக்டர் த. ஹரிதாஸ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இந்த I.M.S.–ஐ மத்திய அரசிடம் கேட்டு அதை நம் தமிழகத்தில் செயல்படுத்திட வேண்டுமாய் கேட்டுக்கொண்டு, இந்த அரிய வாய்ப்பினை எனக்கு அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொகுதிப் பிரச்சினைகள்: தமிழகத்திலேயே சென்னை, திண்டிவனம், கோவை ஆகிய மூன்று இடங்களில்தான் விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் இயங்குகின்றன. விவசாய ஆராய்ச்சிப் பண்ணை இயங்கும் கோவையிலே விவசாயக் கல்லூரி இயங்குகிறது. எண்ணெய் வித்து ஆராய்ச்சியிலே புகழ்பெற்று விளங்கும் திண்டிவனத்தின் அருகில் உள்ள எறையானூரில் உள்ள ஆராய்ச்சிக்குப் பயன் சேர்க்கும் வகையில் திண்டிவனத்தில் விவசாயக் கல்லூரி அமைத்திட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்களுக்கென்றும், பெண்களுக்கென்றும் தனியார் பள்ளிகளாக உயர்நிலைப் பள்ளிகளும், மேல்நிலைப் பள்ளிகளும் இயங்குகின்றன. அரசு சார்பில் ஒரேயொரு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மட்டும் உள்ளது. ஆகவே, ஏழையெளிய பிள்ளைகளும் கல்வி கற்கும் வகையில் அரசு சார்பில் ஒரு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அமைத்திட ஆணையிடும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

திண்டிவனத்தில் இயங்கும் அரசு கல்லூரியில் போதுமான வகுப்புகளும் இல்லை. போதிய பாடப் பிரிவுகளும் இல்லை. மீனவர்களும், பின் தங்கிய மக்களும் பெரும்பான்மையாக வாழும் இப்பகுதியில் உள்ள கல்லூரிக்கு 1, 2, 3, 4 பாடப் பிரிவுகள் தொடங்கிட வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தின் தலைநகரிலிருந்து, தமிழகத்தின் தென்கோடியில் உள்ள கன்னியாகுமரிக்குச் செல்லும் பேருந்துகள் பெரும்பாலும் திண்டிவனம் வழியாகத்தான் செல்கின்றன. ஆகவே, திண்டிவனத்தில் இயங்கும் அரசு விரைவுப் பேருந்து நிலைய பணிமனையை விரிவாக்கம் செய்வது அவசியம் என்பதை மாண்புமிகு அம்மாவின் மேலான கவனத்திற்கு வைக்கிறேன்.

திண்டிவனத்தில் வட்டாட்சியர் அலுவலகம் ஓரிடத்திலும், சார் ஆட்சியர் அலுவலகம் ஓரிடத்திலும் இயங்குகின்றன. பணிகள் விரைவாக நடக்க இது வழி செய்யவில்லை. ஆகவே, வட்டாட்சியர் அலுவலகம், சார் ஆட்சியர் அலுவலகம், நீதிமன்றங்கள், பதிவாளர் அலுவலகம் ஆகிய எல்லாமும் ஒரே இடத்தில் இயங்கும்படி ஒருங்கிணைப்பு வளாகம் ஒன்று அமைய வேண்டியது அவசியம் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திண்டிவனத்தில் பயணிகள் நெரிசலில் மிகவும் கஷ்டப்படுவது தொடர்கிறது. தமிழகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் செல்ல திண்டிவனம் மையப் பகுதியாக இருப்பதால், திண்டிவனத்தில் நிரந்தரமாக ஒரு பெரிய பேருந்து நிலையம் அமைக்க நீண்ட காலமாக மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் போராட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களால் மட்டுமே முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்பதால், திண்டிவனத்தில் நிரந்தரமாக ஒரு அரசுப் பேருந்து நிலையம் அமைத்திட அனுமதி வழங்கிட அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை–திருச்சி நெடுஞ்சாலையில் திண்டிவனம் உள்ளதால், வழியில் விபத்துகளால் பாதிக்கப்பட்ட பயணிகளுக்குச் சிறந்த மருத்துவ சிகிச்சை அளிக்கத்தக்க வகையில் திண்டிவனம் மருத்துவமனையில் உபகரணங்களும், கட்டட வசதிகளும் இல்லை. ஆகவே, சி.டி. ஸ்கேன் அமைப்பதோடு, போதிய உபகரணங்கள், புதிய கட்டடங்கள் கட்ட வழி செய்ய வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் மணிலா, தர்பூசணி, மரவள்ளிக் கிழங்கு, பூக்கள் ஆகியவை அதிகமாக விளைகின்றன. குறிப்பாக, திண்டிவனத்தில் விளையும் தர்பூசணி இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. எங்கள் பகுதியிலிருந்து ஒரு நாளைக்கு நான்கு லாரிகளில் சென்னைக்கு ஏற்றுமதி ஆகின்றது. ஆகவே, விவசாயிகளுக்குப் பயனளிக்கும்



வகையில் தர்பூசணி, மரவள்ளி, மணிலா சார்ந்த தொழிற்சாலைகளும், பூக்கள்மூலம் சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது தொகுதி வளம் பெற வழிவகுக்கும் என்பதை மாண்புமிகு அம்மாவிடம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுமார் 40 கிலோ மீட்டர் தூரத்திற்கு எந்த ஒரு கலைக் கல்லூரியும் இல்லாத நிலையில் மரக்காணத்தைச் சுற்றியுள்ள 100–க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள ஏழை மாணவ மாணவிகள், குறிப்பாக மீனவ சமுதாய மாணவர்கள் உயர் கல்வி பெற முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, எல்லா மாணவ மாணவிகளும் கல்வி கற்று உயர வேண்டும் என்று தாயுள்ளம் கொண்ட டாக்டர் அம்மா அவர்கள் மரக்காணத்தில் ஒரு கலைக் கல்லூரி அமைக்க அனுமதி வழங்க வேண்டுமென்று பணிந்து வேண்டிக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் பிரம்மாண்டமாக தொடக்க விழா நடத்தியதோடு, தொடரப்படாமல் நின்று போன திட்டங்கள் ஏராளம் என்பதை நாடே அறியும். அந்த நிலையில் எங்கள் தொகுதியிலும் நிலம் கையகப்படுத்தப்பட்ட நிலையில் சிப்காட் பணிகள் தொடரவில்லை. பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளும் தொடரப்படவில்லை. தெளிந்து உரைப்போம், துணிந்து முடிப்போம் என்ற தொடருக்கு இலக்கணமாக விளங்கும் அம்மா அவர்கள் இந்தப் பணிகளையும் முடிக்க ஆணை வழங்கிட வேண்டுகிறேன்.

சமுதாய நலப் பணிகளுக்கு தன் வாழ்வைத் தியாகம் செய்துவரும் அம்மா அவர்கள் திண்டிவனம் நகரின் மையப் பகுதியில் ஒரு சமுதாய நலக் கூடம் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

தாயிடம் கேட்பது பிள்ளையின் கடமை, தட்டாமல் கொடுப்பது தாயின் கடமை. எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் கொடுக்க முடியாது என்பதாலும் ஒவ்வொன்றாகக் கொடுப்பார் என்ற நம்பிக்கையோடு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன் அவர்கள்.

***திரு. து. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, எங்களுடைய குடும்பத்

[திரு. து. முருகேசன்] [2011 செப்டம்பர் 12

தலைவர் டாக்டர் கேப்டன் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) நான் வெற்றிபெற எனக்கு வாக்களித்த செங்கல்பட்டு தொகுதி மக்களுக்கும், நன்நிலைக்கு என்னை ஆளாக்கிய என் பெற்றோர்களையும் நன்றிப் பெருக்கோடு வணங்கி என் கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

அனைவருக்கும் சுகாதாரம் என்ற அடிப்படையில் இந்த அரசு மக்கள் நல்வாழ்வுத் துறைக்காக இந்த நிதியாண்டில் 4 ஆயிரத்து 261 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தும், தேசிய ஊரக சுகாதார நலத் திட்டத்தின்கீழ் 900 கோடி ரூபாய் செலவிடத் தீர்மானித்தும் இன்றைய முதல்வரின் கடந்த ஆட்சியில் உலக வங்கி நிதியுதவியோடு தொடங்கப்பட்ட தமிழ்நாடு சுகாதார நலத் திட்டத்திற்கு இந்த நிதியாண்டில் 194 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

பச்சிளம் குழந்தைகளின் இறப்பு விகிதம் தேசிய அளவில் ஆயிரம் பிறப்புகளுக்கு ஐம்பதாக இருப்பதும், மாநில அளவில் 28 ஆக இருப்பதும், பேறுகாலத்தில் பெண்களின் இறப்பு விகிதம் தேசிய அளவில் ஒரு இலட்சம் பிறப்புக்களுக்கு 212 ஆக இருப்பதும், மாநில அளவில் 80 ஆக இருப்பதும் பாராட்டுக்குரியதாகும். தமிழகத்தில் 1997 ஆம் ஆண்டு மருத்துவமனை ஒழுங்குமுறைச் சட்டம் என்ற ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால், இந்தச் சட்டம் இயற்றப்படாமல் கிடப்பில் போட்டதால் புற்றீசல்போல பல போலி மருத்துவமனைகள் இன்று உருவாகியுள்ளன. எனவே, ஏழை மக்களின் உயிர்காக்க மீண்டும் அந்தத் திட்டத்தை இந்த அரசு கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அக்கல்லூரி 1965–ல் ஆரம்பிக்கப்பட்டபோது உருவாக்கப்பட்ட பணியிடங்கள்தான் தற்போதும் இருக்கின்றன. ஓய்வுபெற்ற காலிப் பணியிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் இருக்கின்றன. மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சேர்க்கையை 50–லிருந்து 100 ஆக உயர்த்த வேண்டும். செங்கல்பட்டு மருத்துவமனையை நாடி விழுப்புரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து பெருமளவில் சிகிச்சைக்காக இங்கே வருகிறார்கள். நாள் ஒன்றிற்கு 1,500 முதல் 2,000 வரை புறநோயாளிகள் சிகிச்சைப் பெறுகிறார்கள். ஆகையால் 630 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையை 1,500 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்த வேண்டும்.



2011 செப்டம்பர் 12] [திரு. து. முருகேசன்]

மருத்துவக் கல்லூரிக்கு நிரந்தரமாக Dean, நிலைய மருத்துவர் இல்லை. Dean-ஐ நியமிக்க உடனடியாக ஆவன செய்ய வேண்டும். செங்கல்பட்டு மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் இல்லை. இதனால் காலை 8–00 மணி முதல் வார மாத்திரைகள் வாங்கவும், நோயாளிகள் பகல் 1–00 மணி வரை காத்திருந்து மாத்திரை வாங்க வேண்டிய நிலைக்கு தீர்வு காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

எனது செங்கல்பட்டு தொகுதிக்குள் அடங்கிய செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பல பிரிவுகளில் பல பணியிடங்கள் காலியாக உள்ளன. அவற்றையெல்லாம் நிரப்பினால்தான் மருத்துவமனையில் பணிகள் முழுமை பெறும். முக்கியமாக அங்குள்ள ஆவணங்களைப் பாதுகாக்க கணினிப் பிரிவு அவசியம் மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதிகள் வேண்டும். குறைப் பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளைப் பராமரிக்க இந்த மருந்துவமனையில் தற்போது இங்குபேட்டர் வசதி உள்ளது. (மணியடிக்கப்பெற்றது) ஆனாலும், அவ்வசதியுள்ள தற்போதைய இடம் மிகவும் குறுகலாகவுள்ளதால், அவ்வசதி கருதி தனிக் கட்டடம் கட்டி அதில் இயக்கத்தக்கவகையில் ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

பெரிய மருத்துவமனைகளில் முன்பெல்லாம் இரவு 10–00, 12–00 மணியளவிலும், காலை 10–00, 4–00 மணியளவிலும் 4 முறைகள் வைத்து அந்த முறை நேரங்களில் அங்குள்ள பணி மருத்துவர்களும், செவிலியர்களும் அனைத்து வார்டுகளையும் சுற்றி வருவார்கள். இரவு நேரங்களில் வார்டுகளைச் சுற்றி வரும் ரோந்துப் பணிகளை மீண்டும் கொண்டுவர வேண்டும்.

சென்னை, கிண்டியில் உள்ள கிங் ஆராய்ச்சி நிலையம் மற்றும் ஊட்டியில் உள்ள ஆராய்ச்சி நிலையங்களில் விஷ முறிவு மருந்துகளை அந்தந்த இடங்களிலேயே முன்பு தயாரித்தார்கள். ஆனால், குறிப்பிட்ட அந்த உற்பத்திப் பிரிவுகளை சென்ற அரசு மூடுவிழா செய்தது. வெளி மாநிலங்களிலிருந்து அம்மருந்துகளை வரவழைக்கிறார்கள். மக்கள் நலன் காக்கும் இந்த மாதர்நல அரசில் இந்த உற்பத்திகள் இங்கே தொடர்ந்து நடக்க ஆவன செய்ய வேண்டும்.

பிற்பகல் 2–00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. து. முருகேசன்:** காஞ்சிபுரம் மாவட்டத் தலைமை மருத்துவமனையில் போதிய மருத்துவர்களும், போதிய மருத்துவ வசதிகளும் இல்லாமையால் இங்கு வரும் நோயாளிகளை செங்கல்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கிறார்கள். அதே குறைபாடுகள் இங்கும் உள்ளதால் செங்கல்பட்டு மருத்துவமனையினரும் தங்களுக்கு வரும் காஞ்சிபுரம் மாவட்ட நோயாளிகளை சென்னை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கிறார்கள். இதனால் நோயாளிகள்தான் பெரிதும் அவதிப்படுகிறார்கள். எனவே, சென்னை மருத்துவமனை வசதிகளை செங்கல்பட்டு மருத்துவமனைக்கும் அளிக்க வேண்டுகிறேன். சொல்லப்போனால் சென்னை–விழுப்புரம் பகுதிக்கு இந்த செங்கல்பட்டு ஒரு மையப் பகுதி என்பதால் எதிர்கால வளர்ச்சி, எதிர்கால மக்கள்தொகை வளர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு இந்த மருத்துவமனையை திருச்சி அண்ணல் காந்தி மருத்துவமனைக்கு நிகராக ஓர் உயர் சிகிச்சை மையமாக மாற்றித் தந்தால் என் தொகுதி மக்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றிக்கடன்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பல ஆரம்ப சுகாதார நிலையங்களில் வெறிநாய்க் கடி மருந்து இல்லாமலும், விஷ முறிவு மருந்துகள் இல்லாமலும் அவதிப்படுகிறார்கள். இந்த அவலங்களைப் போக்க வேண்டுமானால், அந்தச் சுகாதார நிலையங்களில் வெறி நாய்க்கடி மருந்துகளும் விஷ முறிவு மருந்துகளும் தயார் நிலையில் இருக்கும் நிலையை இந்த அரசு ஏற்படுத்த வேண்டும்.

கர்ப்பப்பை நோயைக் கண்டறியும் கருவிகளை ஆரம்பச் சுகாதார நிலையங்களில் நிறுவ தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதைப் படிப்படியாக விரிவாக்கம் செய்யக் கேட்டுக்கொள்கின்றேன். செங்கல்பட்டில் ஆர்.எம்.ஓ.க்கள் குடியிருக்கும் செங்கல்பட்டு மருத்துவமனை வளாகத்திலுள்ள குடியிருப்புகளில் தகுந்த பராமரிப்பு இல்லை. இதனால் மருத்துவர்கள் யாரும் அங்கு குடியிருக்கவில்லை.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர், உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. து. முருகேசன்**: அதனால் பராமரிப்பு செய்து கொடுத்தால் அவர்கள் தங்கவும், இவருக்குக்கீழ் பணியாற்றும் பணியாளர்களைக் கண்காணிக்கவும் இயலும். சில தாலுகா மருத்துவமனைகளில் மயக்க மருத்துவர் பணியிடம் காலியாக உள்ளது. மயக்க மருத்துவர் இல்லாத தாலுகா மருத்துவமனையில் மயக்க மருத்துவர் கருத்தறிய, நோயாளி மாவட்ட தலைமை மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியதாயிருக்கிறது; அல்லது அங்குள்ள மருத்துவரை இங்கு வரவழைக்க வேண்டியிருக்கிறது. இதனால் அவசர அறுவை சிகிச்சைகூட தள்ளிப் போடப்பட்டு, ஏழை நோயாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இந்த அரசு காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப ஆவன செய்ய வேண்டும்.

ஒவ்வோர் அரசு மருத்துவமனைக்கும் சமையல் அறைகள் ஒதுக்குப் புறமாக உள்ளன. இங்கே சமைக்கும் உணவுகள் வார்டுக்குள் வருவதற்குள் அதில் தொற்று நோய்க் கிருமிகளால் பாதிப்பு ஏற்பட்டுவிடுகின்றது. எனவே, நோயாளிகளுக்கு வழங்கும் உணவுகளை பாதுகாக்கப்பட்ட பாக்கெட்டுகளில் வழங்க அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல கோரிக்கைகளை வைத்தார்கள். முக்கியமாக இந்த செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியிலே எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வழங்குவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல், எம்.பி.பி.எஸ். மாணவர் சேர்க்கையை இப்பொழுதுள்ள 50–லிருந்து 100 ஆக ஆக்க வேண்டுமென்ற முறையிலே, இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவின்படி இந்திய மருத்துவக் கழகத்திற்கு 29–8–2011 அன்று விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால், 1965 ஆம் ஆண்டிலிருந்து 50 எம்.பி.பி.எஸ். இடங்கள்தான் அங்கே இருக்கின்றன. ஆகவே, அதை 100 இடங்களாக மாற்றுவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு முயற்சி செய்துகொண்டிருக்கின்றது

என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அதேபோல, கடந்த ஆண்டிலிருந்தே மருத்துவக் கல்லூரி முதல்வர் பதவி நிரப்பப்பட்டு, தொடர்ந்து அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர், உங்கள் உரையை நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. து. முருகேசன்**: அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பயிற்சி மருத்துவர்கள் தங்கள் பயிற்சிக் காலத்தில் பிற மருத்துவமனைகளுக்குச் செல்கிறார்கள். ஆனால், பயிற்சி செவிலியர்கள் தங்கள் பயிற்சிக் காலங்களில் ஒரே மருத்துவமனையிலேயே இருந்துவிடுகிறார்கள். எனவே, பட்டயப் படிப்பு செவிலியர்களையும் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர், உங்கள் உரையை நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. து. முருகேசன்**: B.Sc. (Nursing) பயின்ற செவிலியர்களையும் அவர்களுடைய பயிற்சிக் காலங்களில் பிற மருத்துவமனைகளுக்கும் அனுப்பி, அங்கும் அவர்கள் பணிகளை மேற்கொள்ளச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கே.கே. நகரில் புறநகர் மருத்துவமனை உள்ளது. இந்த மருத்துவமனைக்கு தினந்தோறும் நோய்வாய்ப்பட்ட பொதுமக்கள் சிகிச்சை பெற வருகிறார்கள். இங்கே பெரும்பாலும் உள் நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற வருகிறார்கள். ஆனால், அப்படி தங்கி சிகிச்சை பெறுபவர்களுக்கு குளிப்பதற்கோ, காலைக் கடன் கழிப்பதற்கோ முடியவில்லை. காரணம், அங்கு சென்னைக் குடிநீர் இணைப்பு இருந்தும், மருத்துவமனைக்கு சுமார் 20 ஆண்டுகளாக தண்ணீர் வரவில்லை. சிகிச்சை பெறும் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் என்பதை இந்தச் சபையிலே தெரிவித்துக்கொள்கின்றேன். அதைப்போல, வாரியத்திற்கு 40 இலட்சம் ரூபாய் வரி செலுத்த வேண்டுமென்று கூறுகிறார்கள். எத்தனையோ திட்டங்கள் இருந்தபோதும், அரசு இதனைக் கவனத்தில் கொண்டு சென்னைக் குடிநீர் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய வரியைத் தள்ளுபடி செய்யுமாறு இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. து. முருகேசன்**: அதேபோல், விருத்தாசலம் அரசு பொது மருத்துவமனையில் போதுமான மருத்துவர்கள் இல்லாத காரணத்தால் நோயாளிகளையும், பிரசவத்திற்காக வரும் பெண்களையும்கூட கடலூர் மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. போகிற வழியில் பல உயிர்கள் பலியாகும் சூழ்நிலை உள்ளதால் உடனடியாக விருத்தாசலம் அரசு மருத்துவமனைக்கு 5 மருத்துவர்களை நியமனம் செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிப் பிரச்சினைகள்: சைதாப்பேட்டையில் இயங்கும் துணை இயக்குநர் அலுவலகத்தை செங்கல்பட்டிற்கு மாற்றிட அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

செங்கல்பட்டு நகரத்திற்கு ஒரு சித்த மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி அமைத்திட அரசு போதிய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு வட்டாட்சியர் அலுவலகத்தை சார்நிலைய ஆட்சியாளர் வளாகத்திற்கு மாற்றி, அதற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு நகரில் தொன்றுதொட்டு மாவட்ட நீதிமன்றம் இயங்கி வருகிறது. திருவள்ளூர் மாவட்டம் தனியாக உருவானதால், நீதிமன்றத்தின் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. மேலும், காஞ்சிபுரம் சார்நிலை நீதிமன்றத்திற்கு இதிலிருந்து அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் கோரிக்கை உள்ளதாக அறிகிறேன். இந்த நீதிமன்றத்தின் தனித் தன்மையை, சிறப்புத் தன்மையை நிலைநாட்டிட அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு நகரத்தில் சுமார் 40 ஆண்டுகாலமாக கைத்தறி விற்பனை நிலையம் மக்களின் பேராதரவுடன் இயங்கி வருகிறது. மேலும் கைத்தறி விற்பனையை ஊக்குவிக்கவும், மக்கள் விற்பனை நிலையத்தை அணுகி, கைத்தறி துணிகளை எளிதாக வாங்கிட வசதியாக அதற்கொரு நிரந்தர கட்டடம் தேவை. தற்போது கடை வீதியில் (அண்ணா சாலையில்) ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இடிந்து தரைமட்டமான சாவடி நிலையம் உள்ளது.

[திரு. து. முருகேசன்] [2011 செப்டம்பர் 12

இது சுமார் 2,000 சதுர அடிகள் கொண்ட மனையாகும். தற்போது அது குப்பை மேடாக உள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட இடத்தை கைத்தறி விற்பனை நிலையத்திற்கு ஒதுக்கீடு செய்து, கட்டடம் கட்ட ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

75 வயது மற்றும் அதற்கும் மேற்பட்ட அரசு ஓய்வூதியதாரர்களுக்கு 15 சதவிகிதம் கூடுதல் ஓய்வூதியம் வழங்க அரசு தக்க ஆணை பிறப்பித்து நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு நகரின் மையப் பகுதியில் கட்டப்பட்டுள்ள நகராட்சி சமுதாயக் கூடம் இன்னும் திறக்கப்படாமல் உள்ளது. எனவே, இந்தக் கட்டடத்தில் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு மக்கள் பயன்பெறும் வகையில் நல்ல நிகழ்ச்சிகள் நடைபெற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வண்டலூரிலிருந்து வாலாஜாபாத் போகும் வழியில் கட்டப்பட்டு வரும் மேம்பாலப் பணிகள் மந்தமாக நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகளை விரைவில் முடித்து பாலத்தைத் திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, செங்கல்பட்டு இரயில்வே கேட் மேம்பாலப் பணிகள் மிகவும் மந்தமாக நடைபெற்று வருகின்றன. இந்த மேம்பாலப் பணிகளையும் விரைவில் முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு நகராட்சியில் சாலையின் இருபக்கமும் உள்ள கால்வாய்கள் உடைந்து சிதைந்து கிடக்கின்றன. கடந்த ஐந்தாண்டுகளாக உள்ள இந்த நிலையை மாற்றி, கழிவுநீர் கால்வாய்களை சீரமைக்க நெடுஞ்சாலைத் துறையும், செங்கல்பட்டு நகராட்சியும் இணைந்து தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட அறிஞர் அண்ணா ஆண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2011 செப்டம்பர் 12] [திரு. து. முருகேசன்]

செங்கல்பட்டு தொகுதி, அஞ்சூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 800 மாணவர்களுக்கு மேல் படிக்கின்றார்கள். இங்கு இரண்டு வகுப்பறைகள் மட்டுமே இருப்பதால் மேலும் 60 x 20 அளவு கொண்ட இரண்டு வகுப்பறைகளைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு தொகுதி, அஸ்தினாபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மறைமலை நகர் நகராட்சிக்குட்பட்ட 21—வது வார்டிலுள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டித் தர வேண்டுகிறேன்.

செங்கல்பட்டு தொகுதி, ஐயஞ்சேரி கிராமம், ஊரப்பாக்கம் கிழக்கு கணபதி நகரில் மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக ‘வாசக சாலை’ அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் துறைமூலம் வழங்கும் இலவச விதை கருணைகளை மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 8,000 ஏக்கர் நடவு வரை கொடுக்க ஆணையிட வேண்டும்.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குத் தேவையான ஆட்களை முழுமையாக நியமிக்க வேண்டும். தற்போது சிறிய எண்ணிக்கையிலான கரும்பு அதிகாரிகள் மற்றும் உதவியாளர்களை வேறு சர்க்கரை ஆலைக்கு திருப்பியனுப்புவதற்கு முன் தேவையான பணியாளர்களை முழு நேர பணியாளர்களாக நியமிக்க வேண்டும்.

கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2,500/— என்ற அறிவிப்பை வெளியிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் விழா நடத்தி, விவசாயிகளுக்குப் பெருமைச் சேர்க்க வேண்டுமென்று விவசாயிகளின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வேளாண்மைத் துறை அலுவலக அதிகாரிகள் விவசாய பணிகளுக்குத் தேவையான வாடகைப் பொருட்களை விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய நெல் கொள்முதல் நிலையங்கள் மேலும் அதிகப்படுத்தப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

விவசாயிகள் விதை நெல்களை வாங்கும்போது அதனுடன் வேறு ஏதாவது ஒரு பொருளை வாங்கினால்தான் விதை நெல் கிடைக்கும் என்று தெரிவிக்கிறார்கள். அரசு மானிய விலையில் விதை நெல்கள் வாங்கும் விவசாயிகளை வேறு பொருள்களை வாங்க வேண்டுமென்று சொல்வதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயி சிறப்பான பயிர் அறுவடை செய்ய தடையில்லா மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்ட புரட்சிகரமான 'சொட்டுநீர் பாசனத் திட்டம்' சென்ற ஆட்சியில் மெத்தனப்போக்கில் செயல்பட்டதாகத் தெரிகிறது. இத்திட்டத்திற்கு மீண்டும் முன்னுரிமை அளித்து செயல்படுத்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

விளை நிலங்களை விற்பனை செய்யக்கூடாது என்று புதிய சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாலாற்றில் பழவேலி பகுதியில் தடுப்பணைக் கட்டி உபரி நீர் வெளியேறுதைத் தடுத்து தண்ணீரைத் தேக்கி வைப்பதன்மூலம் செங்கல்பட்டு முதல் தாம்பரம், பல்லாவரம், ஆலந்தூர் நகராட்சி வரை குடி தண்ணீரை சீராக விநியோகம் செய்ய முடியும். எனவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றிட ஆணை வழங்கி, நிதி ஒதுக்கீடு செய்து மக்களை காத்திட வேண்டுகிறேன்.

தேசிய ஏரிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மத்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் செங்கல்பட்டுக்கு அருகிலுள்ள குளவாய் ஏரியை மேம்படுத்தும் திட்டம் தீட்டப்பட்டதாக அறிகிறோம். இந்தத் திட்டத்தின் நோக்கம், கழிவுநீர் கலக்காத வகையில் குளவாய் ஏரியிலுள்ள நீரை குடிநீராகப் பயன்படுத்துவதாகும். ஏரியின் கரையை உயர்த்துதல், தூர்வாருதல் போன்ற பணிகளை மேற்கொள்ள இத்திட்டத்தில் வழிவகுக்கப்பட்டுள்ளது. இதனால் நிலத்தடி நீர் பெருகும், கழிவுநீர் வெளியேறவும் வழிவகுக்கப்படும். இத்திட்டத்தை நிறைவேற்ற அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு நகரத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள குண்டூர் ஏரி பொதுப் பணித் துறையால் பராமரிக்கப்படுகிறது.



இந்த ஏரிக்கு மும்மலை காடுகளிலிருந்து மழை நீர் வருகிறது. இந்த ஏரியை ஆழப்படுத்தினால், கோகுலபுரம், வேதாசல நகர், பெரிய மணியகாரத் தெரு, வீரக்குடி வேளாளர் தெரு, பிள்ளையார் கோயில் தெரு மற்றும் ஜி.எஸ்.டி. சாலை குடியிருப்புகளிலுள்ள கிணறுகளில் நிலத்தடி நீர் பெருகும். எதிர்காலத்தின் குடிநீர் பஞ்சத்தைப் போக்க முன்னுரிமையின் அடிப்படையில் இந்தத் திட்டத்திற்கு அனுமதியளித்து, நிதி ஒதுக்கீடு செய்ய ஆணை பிறப்பிக்குமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு தொகுதியில் அடுக்குமாடி பயணியர் விடுதியை கட்டித்தருவதன்மூலம் செங்கல்பட்டு நகராட்சிக்கு வருவாய் கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு தொகுதி, அம்மனபாக்கம் கிராமம், ஸ்ரீகன்னியம்மன் கோயிலை இந்து சமய அறநிலையத் துறையின் மூலம் சீர்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு தொகுதி, 1—வது வார்டில் குழந்தைகளின் நலன் காக்க பால்வாடி, அங்கன்வாடி மையம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு நகரத்தில் விளையாட்டு மைதானம் அமைத்து மாணவ, மாணவிகள் மற்றும் இளைஞர்களை ஊக்குவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு நகரத்திலுள்ள பஸ் நிலையம் மற்றும் இரயில் நிலையங்களுக்குச் செல்பவர்களை விபத்திலிருந்து பாதுகாக்க அந்த இடத்தில் சுரங்கப் பாதை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி, வெண்பாக்கம் மாற்று திறனாளிகள் அலுவலகத்தில் கழிப்பறை வசதி, குடிநீர் வசதி மற்றும் தங்குதவற்கு வராண்டா கட்டி தருதல் போன்ற வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாற்று திறனாளிகளுக்கு ஒருங்கிணைந்த மாவட்ட அலுவலகத்தில் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவர் வாரம் ஒருமுறை நேரடியாக வந்து சான்று கொடுத்தால் அவர்களின் போக்குவரத்து அலைச்சலைக் குறைப்பதற்கு உதவியாக இருக்கும்.

செங்கல்பட்டு நகரத்தில் பெண்கள் தங்கும் பாதுகாப்பு இல்லம் அரசின் சார்பாகக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2–05*

இந்தச் சபையிலே எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், எங்களுடைய கழகத் தலைவர் கேப்டன் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்ற வாக்கிற்கேற்ப மனிதன் நோயில்லாமல் வாழ்வதே வளமான வாழ்க்கை என்று அறிஞர் பெருமக்களும், ஆன்றோர்களும் கூறி வருகின்றனர். இந்த நிலையில் பல்வேறுவிதமான நோய்களும் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. தென் மாவட்டங்களில் குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் 100 பேருக்கு ஒருவர் என்ற விகிதாச்சாரத்தில் புற்று நோயாளிகள் பெருகி வருகின்றனர். இதற்கு ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரியிலும், நெய்யூர் சர்வதேச ஆராய்ச்சி மையத்திலும் மட்டுமே மருத்துவ வசதியுள்ளது. அங்கேயும் போதிய கட்டமைப்பு வசதிகள் இல்லை. ஆகவே, உயர் சிகிச்சைப் பெறுவதற்காக திருவனந்தபுரத்திற்கோ அல்லது சென்னைக்கோ வர வேண்டியுள்ளது.

இந்தியாவிலேயே அதிகமான புற்று நோயாளிகள் குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்று அச்சம் எழுந்துள்ளது. நான் மாண்புமிகு முதல்வர் அவர்களை வேண்டி, விரும்பிக் கேட்பதெல்லாம், கன்னியாகுமரி மாவட்டத்தில் கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதியில் ஒரு சர்வதேச புற்றுநோய் மருத்துவமனை ஆரம்பித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு மருத்துவமனைகளில் ஹோமியோபதி மருத்துவர்களையும் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



யூனியன் டிஸ்பென்சரி என்று சொல்லக்கூடிய ஒன்றிய மருந்தகம் பல இடங்களில் உள்ளது. இது சரிவர இயங்கவில்லை. எனவே, இவற்றை மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் எடுத்து ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்ற வேண்டும்.

வட்டார மருத்துவமனைகளில் சி.டி. ஸ்கேன் போன்ற கருவிகள் இல்லாத காரணத்தால் ஏழையெளிய மக்கள் தனியார் நிறுவனங்களில் அதிகப் பணம் கொடுத்து, இந்தச் சோதனைகளை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, வட்டார மருத்துவமனைகளில் ஸ்கேன் கருவிகளை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகர்கோவில் அரசு மருத்துவக் கல்லூரியில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் போன்ற கருவிகளை உடனடியாக நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்று, கிழக்குக் கடற்கரைச் சாலைகளில் அதிகமான வாகனங்கள் செல்கின்ற காரணத்தினால் சாலை விபத்துகள் அதிகமாக நடக்கின்றன. ஆகவே, அந்தச் சாலைகளில் விபத்து சிகிச்சைப் பிரிவு தொடங்கினால் மக்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும்.

புதியதாக தனியாரால் தொடங்கப்பட்டுள்ள மருத்துவக் கல்லூரிகளில் ஒரு M.B.B.S. Seat ரூ.30 இலட்சம் முதல் ரூ.40 இலட்சம் வரை விற்கப்படுகிறது. பல துறைகளில் இரும்புக் கரம் கொண்டு அடக்கும் நமது முதல்வர் அவர்கள் இந்த பகல் கொள்ளையையும் கட்டுப்படுத்தித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அங்கீகாரம் இல்லாத பாரா மெடிக்கல் நர்சிங் கல்லூரிகளை தடை செய்ய வேண்டும்.

குமரி மாவட்டத்தில் கருங்கல், குளச்சல், சேனம்விளை மற்றும் அரசு மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் இல்லாத காரணத்தால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். உடனடியாக மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கருங்கல் மருத்துவமனையை முழு நேர மருத்துவமனையாக மாற்றியும் இதுவரை பிரேத பரிசோதனை செய்யப்படவில்லை. ஆகவே, பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவக் கல்லூரிக்குக் கொண்டுபோக வேண்டியுள்ளது. எனவே, அரசு உடனடியாக இதை முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவில் சித்தர்களால் உருவாக்கப்பட்ட சித்த மருத்துவம், உலகின் பல பாகங்களிலும் வேகமாக வளர்ந்து வருகிறது. எந்தவித பக்க விளைவுகளும் இல்லாத இந்த மருத்துவத்திற்கு, அலோபதி

[திரு. எஸ். ஜாண் ஜேக்கப்] [2011 செப்டம்பர் 12

மருத்துவத்திற்கு இணையான கௌரவம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் 1,589 ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் சித்த மருத்துவம், ஹோமியோபதி மருத்துவம் மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தையும் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த 2006 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் கன்னியாகுமரி மாவட்டம், கோட்டாறில் மாவட்ட தலைமை மருத்துவமனை செயல்பட்ட இடத்தில், அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியை சிறப்பாக அமைக்க அரசாணை பிறப்பித்தார்கள். ஆனால் நடைபெற்ற ஆட்சி மாற்றத்தின் விளைவாகவும், பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகு 2009 ஆம் ஆண்டுதான் மாணவர் சேர்க்கை நடைபெற்றது. சரியான நிருவாகமின்மைக் காரணமாக இக்கல்லூரி இன்றுவரை சிறப்பாகச் செயல்படவில்லை. கல்லூரி வளாகத்தில் ஆட்கள் நடமாட்டம் அதிகமாக இல்லாததாலும், பராமரிப்பின்மை காரணமாகவும் புதர்கள் அதிகமாக காணப்படுவதால் கொசு, பாம்பு, நாய், பூனை, பூரான் போன்ற விஷ ஜந்துக்கள் அதிகமாக உலாவுகின்றன. அதனால் உள் நோயாளிப் பிரிவில் உள்ள நோயாளிகள் கடும் பீதியில் சிரமத்திற்குள்ளாகின்றனர். மேலும் பல வேளைகளில் தண்ணீர் பிரச்சினையால் நோயாளிகளும், விடுதியில் உள்ள மாணவர்களும் கடும் அவதிக்குள்ளாகிறார்கள். நோயாளிகள் மசாஜ் செய்த பிறகு சுடு நீர் கிடைக்காமல் குளிக்க முடியாமல் அவதிப்படுகிறார்கள். மருத்துவமனைகளில் நோயாளிகளுக்குப் படுக்கை விரிப்புகள் வழங்கப்படுவதில்லை. பெரும்பாலும் வாத நோய்கள், தோல் நோய்கள், மூத்திரக்கல், சளி, இழைப்பு, மாதவிடாய் பிரச்சினை போன்ற நோய்களுக்காக மக்கள் அரசு ஆயுர்வேத மருத்துவமனைகளுக்குச் செல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** இதுபோன்று தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு சித்தா, ஆயுர்வேத, ஹோமியோபதி கல்லூரிகளிலும் போதிய வசதிகள் இல்லை. போதிய வசதிகள் இல்லாததால் இந்த ஆண்டு மாணவர் சேர்க்கைக்கு இந்திய மருத்துவ கவுன்சில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.



2011 செப்டம்பர் 12]

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாதவிடாய் என்பது ஒரு நோயல்ல என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2–10

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மாணவர் சேர்க்கைக்கு அனுமதி மறுத்துவிடப்பட்டதால், மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பித்த மாணவர்களின் நிலை கவலை அளிப்பதாக உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக இதேபோன்று அனுமதி மறுக்கப்படுவதும் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். (குறுக்கீடு) சரி, நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். மேற்கொண்டு கோரிக்கை வைக்க வேண்டாம்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** கடந்த மூன்று ஆண்டுகளாக இதேபோன்று அனுமதி மறுக்கப்படுவதும், பின் மாநில அரசு தலையிட்டு அனுமதி கிடைப்பதுமான நிலை உள்ளது. ஆனால், இந்த ஆண்டு குறைந்தபட்ச நிபந்தனைகளைக்கூட பூர்த்தி செய்யாமல் அனுமதி தரமாட்டோமென இந்திய மருத்துவ கவுன்சில் உறுதியுடன் தெரிவித்துள்ளது. தற்போது நாடு முழுவதும் இந்திய மருத்துவ முறை மருத்துவக் கல்லூரிகளில் அக்டோபர் 31 ஆம் தேதிக்குள் மாணவர் சேர்க்கையை முடிக்க அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய மருத்துவ கவுன்சில் அறிவுறுத்தியுள்ளது. இதற்கிடையே மற்றொரு சிக்கலாக சித்தா மருத்துவப் பட்ட மேற்படிப்புக்கான மாணவர் சேர்க்கைக்கு இந்திய மருத்துவ கவுன்சில் அனுமதி மறுத்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்லாட்சியிலே, கடந்த ஆண்டைவிட மருத்துவத் துறைக்கான நிதி ஒதுக்கீடு 20 சதவிகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளதை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக முதலிலே வரவேற்கிறேன். அதேபோல, தமிழகத்திலுள்ள குக்கிராமங்களுக்கும் சிறந்த மருத்துவ வசதி செய்வதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய அருமையான திட்டங்களையும் தொடக்கத்திலேயே மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2011 செப்டம்பர் 12

போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையிலே பேசும்போது நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த தி.மு.க. ஆட்சியிலே எப்படி புதிய பேருந்து தடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன என்று சொன்னார். அறிமுகப்படுத்தப்படுகின்றன என்ற பெயரில் பச்சைக் கொடி காட்டி ஒரு கண்காட்சியை நடத்திவிட்டு மீண்டும், மீண்டும் அதேபோன்று செய்ததாகச் சொன்னார்களோ, அதேபோலத்தான் இராமநாதபுரத்திலே ஒரு அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும் என்று அறிவித்து, அதற்கான விழாவை நடத்திவிட்டு, அந்த மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான எந்தவொரு பணியையும் செய்யாமல் சென்ற ஆட்சியினர் சென்றுவிட்டார்கள்.

இராமநாதபுரம் தொகுதி மக்கள் ஒட்டுமொத்தமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு தெரிவித்து, எங்களையெல்லாம் வெற்றிபெற வைத்திருக்கின்றார்கள். ஆண்டுக்கு ஒரு புதிய அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தக் கல்லூரி, டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்தில் முதலிலே அமைக்கப்பட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே மிக முக்கியமாக அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு ஒரு கருத்தைக் கொண்டு வர விரும்புகின்றேன். சித்த மருத்துவமுறை நம்முடைய தமிழ் மண்ணினுடைய மருத்துவ முறையாக இருக்கின்றது. இன்று 70 சதவிகிதம் மக்கள் சித்தா, ஆயுர்வேதா, யுனானி போன்ற இந்திய மருத்துவ முறைகளில் நம்பிக்கைக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் தமிழகத்திலே இந்த சித்த மருத்துவ முறையை விரிவுபடுத்துவதற்கு, வளப்படுத்துவதற்கு முறையான முயற்சிகள் நடக்காமலிருப்பது வருந்துவதற்குரிய ஒன்றாகக் கருதுகின்றேன். எடுத்துக்காட்டுக்கு சொல்ல வேண்டுமென்றால், 1996–லே சித்தா மெடிக்கல் கவுன்சில் தொடங்கப்பட்டது. ஆனால், 15 ஆண்டுகள் ஆன பிறகும்கூட சித்தா மெடிக்கல் கவுன்சில் இன்றுவரை செயல்பாட்டுக்கு வரவில்லை. காரணம் என்னவென்றால், சித்தா மெடிக்கல் கவுன்சிலில் 2 உறுப்பினர்களை தமிழக அரசு நியமிக்க வேண்டும். அவர்களை நியமிக்காததன் காரணமாக, சித்தா மருத்துவ கவுன்சில் இன்றுவரை செயல்படாமல் இருக்கக்கூடிய நிலையை இந்த ஆட்சியிலே மாற்றி சித்தா மருத்துவ முறை தமிழகத்திலே தழைத்தோங்குவதற்கு நிச்சயமாக இந்த அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2011 செப்டம்பர் 12] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

அதுமட்டுமல்லாமல், சித்த மருத்துவ முறையை வளப்படுத்துவதற்காக உண்மையான நிபுணர்களைக் கொண்ட, அரசு உறுப்பினர்கள் அல்ல, மருத்துவத் துறையிலே பாண்டித்தியம்பெற்ற பல்கலைக் கழகத்தில் படித்த experts committee, நிபுணர் குழு அமைக்கப்பட்டு, சித்தா மருத்துவ முறையை வளப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தற்சமயம் தமிழகத்திலே இயங்கிவரும் ஆறு சித்த மருத்துவக் கல்லூரிகளை, அதிலும் குறிப்பாக, இரண்டு அரசு சித்த மருத்துவக் கல்லூரிகளை மூடுவதற்கு மத்திய மெடிக்கல் கவுன்சில் உத்தரவிட்டிருக்கின்றது. சென்னை அண்ணாநகரில் இருக்கக்கூடிய சித்த மருத்துவக் கல்லூரியும் அதேபோல பாளையங்கோட்டையிலே இருக்கக்கூடிய சித்த மருத்துவக் கல்லூரியும் . . . (குறுக்கீடு)

பிற்பகல் 2–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல, அண்ணாநகர் சித்த மருத்துவக் கல்லூரிக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பாளையங்கோட்டையில்தான் பிரச்சினை. அதிலே என்ன பிரச்சினையென்றால் கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசின் மெத்தனப்போக்கினால் மருத்துவமனை சரியாக இயங்கவில்லை. அப்பொழுது 2011–2012 ஆம் ஆண்டு மாணவர் சேர்க்கை தொடர்பாக கடந்த தி.மு.க. ஆட்சியிலே 29–3–2011 அன்று "மத்திய இந்திய மருத்துவக் கழகம்" ஆய்வு செய்தபோது உள்நோயாளிகளின் சேர்க்கை 38.29 சதவிகிதம் மட்டுமே இருந்தது. 50 சதவிகிதம் இல்லாததால் மாணவர் சேர்க்கைக்கு அனுமதி கிடைக்கவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அமைந்தவுடன் மருத்துவமனையின் செயல்பாடுகள் முடுக்கிவிடப்பட்டு உள்நோயாளிகளின் சேர்க்கை 50 சதவிகிதத்திற்கு அதிகரிக்கப்பட்டு, மாணவர் சேர்க்கைக்கு அனுமதி கோரி, மக்கள் நல்வாழ்வுத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் 28–7–2011 அன்று மத்திய இந்திய மருத்துவக் கழகத்திற்கு நேரில் சென்று உரிய விளக்கம் அளித்துள்ளார். இதுவரை, மாணவர் சேர்க்கை ஆணை பிறப்பிக்கப்படவில்லையென்றாலும் இதுகுறித்து அரசு தொடர் முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. சென்னையிலுள்ள அருங்காட்சியகத்தில் நம்முடைய பாரம்பரிய தமிழக மருத்துவமுறை தொடர்பான அரிய ஓலைச் சுவடிகள், பழமைவாய்ந்த நூல்கள் குவியலாக, மூட்டையாக வைக்கப்பட்டுள்ளன. மனிதநேய மக்கள் கட்சியின் கோரிக்கை என்னவென்றால், இதையெல்லாம் முறைப்படுத்தி, அதற்காக ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தி, அந்தப் பழமைவாய்ந்த, விலைமதிப்பில்லாத ஓலைச்சுவடிகள், பழமையான நூல்களையெல்லாம் சி.டி. வடிவத்தில், இணைய வழியாக அனைவரும் பயன்படக்கூடிய வகையிலே இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, நம்முடைய தமிழகத்தில் வர்ம மருத்துவமுறை அரிய மருத்துவ முறையாக இருக்கிறது. தண்டுவடம் மற்றும் மூட்டு நோய்களுக்கு இந்த வர்ம மருத்துவ முறைதான் சிறந்த சிகிச்சையை அளிக்கக்கூடியதாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர், உங்களுக்கு வர்மக் கலை தெரியுமா? நரம்பு சம்பந்தப்பட்டதுதானே? அந்தக் கலையைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** அந்த மருத்துவ முறையினால் பயனடைந்திருக்கிறேன். அதனால்தான் சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது, பாரம்பரிய வைத்தியமான, யுனானி, சித்தா சம்பந்தப்பட்ட அரிய ஆவணங்கள் எல்லாம் குவியலாகக் குவிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார். அப்படியில்லை. சென்னைப் பல்கலைக்கழகத்தில் அதற்கென்று குளிரூட்டப்பட்ட அறையிலே பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல அதிலிருந்து படியெடுக்கப்பட்டு சி.டி.களாக்கும்



பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை தொல்லியியல் துறை மானியக் கோரிக்கையில் ஏற்கெனவே நான் விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன் என்பதைத் தெரியபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. நான் சொன்னது சென்னை மியூசியத்தில், அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆக, இந்த வர்ம மருத்துவத்தை வளப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் இந்த அரசாங்கம் ஈடுபட வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். தமிழகத்தில் யுனானி மருத்துவத்திற்காக மத்திய அரசாங்கத்தின் "மருத்துவத் திட்டம்" இன்னும் அமல்படுத்தவில்லை அதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய தொகுதி சம்பந்தமான பிரச்சினைகளையெல்லாம் எழுதிக் கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்?

***திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை படித்த அன்று எனக்கு நன்றி சொல்ல வாய்ப்புக் கிடைக்கவில்லை. Medical Recruitment Board அமைத்திருக்கிறார்கள். அந்த நியமனங்கள், பதவி உயர்வுகளைக் கண்காணித்து சிறப்பாக நடத்துவதற்கு சிறந்த ஒரு Board-ஐ அமைத்திருக்கிறார்கள். அதற்காக, காங்கிரஸ் கட்சியின் சார்பாக, மனதார வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், ஒரே ஒரு கோரிக்கை. என்னுடைய தொகுதியிலுள்ள குழித்துறை, அருமனை போன்ற அரசு மருத்துவமனைகளைத் தரம் உயர்த்தி நிரந்தரப் பணியாளர்களை அமர்த்த ஆவன செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களையும், அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

பிற்பகல் 2—20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் அவர்கள். (குறுக்கீடு) அதற்கு முன்னர், ஒரு நிமிஷம். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110—ன்கீழ் அறிக்கையை வாசித்து இரண்டு நாட்கள் கடந்த பின், காங்கிரஸ் கட்சி இப்போதுதான் ஏதோ தூக்கத்திலிருந்து விழித்ததைப் போன்று நன்றி சொல்கிறார்கள். நம்முடைய காங்கிரஸ் கட்சி எப்போதுமே காலதாமதமாக, மிக, மிக காலதாமதமாகத்தான் யோசிக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு முன்னுதாரணம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் கூறுவது தவறு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்று விதி 110—ன்கீழ் அறிக்கை படித்தபொழுதே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் நான் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவிக்க வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கூறி கையை உயர்த்தினேன். எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை என்பதைத் தெளிவாக இப்போது கூறியிருக்கிறேன். என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் புரியவில்லையே என்பது மிகவும் வருத்தமாக இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் அவர்கள்.

*__DR. NANCY ANN CYNTHIA FRANCIS:__ Hon. Speaker, to achieve the goals and objectives of the State Health Society, there have been a lot of mention made, but I would like to specify on two points i.e. the provision of specialised services ‘obstetricians and anaesthetists for emergency obstetric care at Primary Health Centres and District Hospitals by hiring retired and private specialists under the Reproductive and Child Health Projects and also for enabling Doctors to attend Government of India approved short term training courses of 24 weeks in life saving anaesthesia and emergency



obstetric care for Medical Officers of Primary and Secondary Health Care Centres to bridge the specialised care gaps.

I am very thankful to our beloved Amma, for the new initiatives proposed under the RCH for the year 2011-2012, the increase in the MCH Centres, improvement of the EMRI 108 ambulances to reach the hilly and tribal areas, 24 special vehicles have been sanctioned. The Village Health and Nutrition Day Programme to be conducted to create an awareness of health and nutrition among the villagers, the Village Health and Water Sanitation Programmes, the upgradation of infrastructure in Primary Health Centres, the modified School Health Programme to be extended to all the Districts in the State, the Kannoli Kappom Thittam, the correction of refractive errors in school children, the Comprehensive School Dental Camps, the Palliative care for the community which will help not only the patients but also the family members of the patients who are in the terminal stages of cancer.

The opening of new Primary Health Centres, ‘Pengal Nalamudan’- a well women campaign where screening programmes to identify breast and cervical cancer will be done, establishing of elderly clinics with physiotheraphy facilities, screening of visible congenital defects in the children up to the age of 15, the multi pronged attack to the dreaded disease, AIDS- thereby The Tamil Nadu Aids Control Society will achieve the goal, ‘AIDS-free and no new infection State’ by the year 2012 and last but not the least, our beloved Amma’s, the Chief Minister’s Comprehensive Health Insurance Scheme.

On behalf of the medical fraternity and on my own behalf I am very grateful to you, our beloved Amma, for instituting all these above plans. I thank you.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Thank you. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நாளை (13—9—2011) பதிலுரை வழங்குவார்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (13—9—2011) செவ்வாய்க்கிழமை காலை 10—00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2—24 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*41. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 5–8–2010 ஆம் நாளிட்ட 33 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*42. 2009–2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் இருபத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*119. மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)*

*120. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)*

*121. இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் போக்குவரத்துத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)*

*122. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முதலாவது அறிக்கை. (2011–2012)*

*123. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)*

———————

# இணைப்பு

*(508 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 19—மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012

## அத்தியாயம்–1

### முன்னுரை

**1.1.** "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது நமது மூதாதையர் முதுமொழி ஆகும். நலமான நாடே வளமான நாடாகும். மக்கள் நல்வாழ்வு என்பது ஒரு சமுதாயத்தின் அனைத்து வளர்ச்சியிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சிக்கு ஆரோக்கியமான மக்களால் மட்டுமே ஆக்கபூர்வமான பங்கினை அளிக்க இயலும். தரமான மருத்துவ வசதிகளைப் பொது மக்களுக்கு எளிதாகக் கிடைக்கச் செய்வதில் மட்டும் கவனம் செலுத்தாமல், நோய் தடுப்புப் பணிகளிலும் நல்ல வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடிப்பதிலும் கவனம் செலுத்தி நலமான சமுதாயத்தை உருவாக்க நமது மாநிலம் உறுதி பூண்டுள்ளது. சுகாதாரமான தமிழ்நாடு என்ற இலக்கை அடைவதற்காக, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கு 2010-2011 ஆம் நிதியாண்டில் ரூபாய் 3,889 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு, 2011-2012 இல் ரூபாய் 4,761 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டைவிட 20 விழுக்காடு அதிகமாகும்.

**1.2.** முக்கிய சுகாதார குறியீடுகளில் இந்தியாவில் உள்ள பல மாநிலங்களில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. நல்ல பொது சுகாதாரத்தைப் பராமரிப்பதில் அதிலும் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் நலம் பராமரிப்பதில் மற்ற மாநிலங்களைவிட, நமது மாநிலம் முன்மாதிரி மாநிலமாக விரைந்து முன்னேறி வருகிறது. தமிழகத்தில் 99.8% பிரசவங்கள் மருத்துவ நிலையங்களில் தகுதியும், பயிற்சியும் பெற்றவர்களால் நடத்தப்படுகின்றன. 2001 முதல் 2006 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் செயல்படுத்தப்பட்ட

ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 24 மணி நேரமும் பிரசவ சேவை வசதிகள், ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகள் மற்றும் நவீன மருத்துவக் கருவிகளுடன் தரம் உயர்த்துதல், அரசு மருத்துவமனைகளில் சீமாங் சேவைகள், மகப்பேறு உடனாளர் இருப்புத் திட்டம், தாய் இறப்பை தடுக்கும் தணிக்கை முறை போன்ற பல்வேறு திட்டங்கள் தமிழ்நாடு தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு வருவதற்கான காரணங்களாகும்.

**1.3.** இளம்பிள்ளை வாதம், தொழுநோய் மற்றும் காசநோய் போன்ற தொற்று நோய்களை ஒழிப்பதில் தமிழகம் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றுள்ளது. எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோய் ஒழிப்பிலும் சிறப்பான முன்னேற்றம் கண்டுள்ளது. 2012—க்குள் தமிழகத்தை "எய்ட்ஸ் இல்லா மற்றும் புதிய தொற்று இல்லா மாநிலமாக்க" தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் தற்போது தனது செயல்பாட்டில் கவனம் செலுத்தி வருகிறது. அதிக உயிரிழப்புக்கு காரணங்களான நீரழிவு நோய், இதய நோய், உயர் இரத்த அழுத்த நோய் மற்றும் புற்றுநோய் போன்ற தொற்று இல்லாத நோய்களை கட்டுபடுத்துதல் மீதான நமது கவனத்தை உடனடியாக ஒருமுகப்படுத்த வேண்டிய அவசியத் தேவை தற்போது ஏற்பட்டுள்ளது. இந்நோய்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன், வாழ்க்கை முறை மாற்றம், நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை செய்வது என்ற இரண்டு வழிகளின்மூலம் மட்டுமே நோயைக் கட்டுப்படுத்த இயலும். உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இரண்டாம் கட்ட தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், தேசிய கிராம சுகாதாரத் திட்டத்துடன் இணைந்து, மேற்கண்ட நோய்களைத் தடுப்பதற்கும், சிகிச்சையளிக்கும் திட்டங்களின்மீதும் கவனம் செலுத்துவது மட்டுமின்றி, அதனால் வரும் தீங்கு மற்றும் வாழ்க்கை முறை மாற்றம் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்திட தகவல் கல்வித் தொடர்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் இதய நோய், நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்த நோய் மற்றும் கருப்பைவாய் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய், போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் நோயினை தொடக்கத்திலேயே கண்டறிந்து சிகிச்சை வழங்குவதற்கு ஏற்ற வகையில் அரசு மருத்துவமனைகளின் கட்டமைப்பை நவீன உபகரணங்களுடன் மேம்படுத்தும் பணி தற்போது செயல்படுத்தப்படுகிறது.



**1.4.** முந்தைய அரசால் கொண்டுவரப்பட்ட உயிர்காக்கும் சிகிச்சைக்கான காப்பீட்டுத் திட்டம், விரிவானதாகவும் மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யக்கூடியதாகவும் இல்லாத காரணத்தினால் இரத்து செய்யப்பட்டது. இந்த அரசு "முதலமைச்சரின் விரிவான பொது மருத்துவ காப்பீட்டுத் திட்டம்" என்ற புதிய காப்புறுதித் திட்டத்தை தற்போது அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் விரைவில் தொடங்கப்படும். இந்தப் புதிய திட்டத்தில் காப்பீடாக ஆண்டிற்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் நான்கு ஆண்டுகளுக்கு வழங்கப்படும். சில குறிப்பிட்ட நோய்களுக்கு ஒரு இலட்சம் என்பது 1.5 இலட்சம் ரூபாய் வரை உயர்த்தவும் வகை செய்யப்பட்டுள்ளது. மருத்துவ சிகிச்சை முறைகளின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படும். சிகிச்சை சம்பந்தப்பட்ட பரிசோதனைகளும், மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து வீட்டிற்கு அனுப்பும் நாளிலிருந்து ஐந்து நாட்களுக்கு மருந்து மாத்திரைகளும், பயணச் செலவும் காப்பீட்டுத் தொகையில் அடங்கும். இந்தப் புதிய திட்டத்தின்கீழ் அரசு மருத்துவமனைகள் முழுவதுமாக பயன்படுத்தப்படும். புதிய விரிவாக்கப்பட்ட சுகாதார காப்புறுதித் திட்டம் தொடங்குவதற்கு முன் இடைப்பட்ட காலத்தில் பொது மக்களுக்கு தங்கு தடையின்றி, அவசர உயிர்காக்கும் நோய்களுக்குச் சுகாதாரக் காப்பீடு வழங்கும் வகையில் இடைக்கால நடைமுறை (Stop Gap) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**1.5.** 2004-2005 ஆம் ஆண்டில் 15 வயதுக்குக் குறைவாக உள்ள குழந்தைகளில் பிறவிக் குறைபாடு உள்ளவர்கள் கண்டறியப்பட்டு, அவர்களில் உதடுப் பிளவு மற்றும் அண்ணப் பிளவு அறுவை சிகிச்சை தேவைப்பட்டவர்களுக்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு தமிழ்நாடு உதடு பிளவு — அண்ணப் பிளவு இல்லாத மாநிலமாக்கப்பட்டது. தற்பொழுது மீண்டும் இத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 15 வயதுக்கு கீழுள்ள பார்வைக்குப் புலப்படும் பிறவிக் கோளாறு குறைபாடுகள் உள்ள குழந்தைகள் அனைவரையும் ஆய்வு மேற்கொண்டு, அவர்களில் அறுவை சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளுக்கு இலவசமாக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செய்து பிறவிக் கோளாறு சரி செய்யப்படும்.

**1.6.** ஒரு புதிய முயற்சியாக எளிதில் சென்றடைய முடியாத தொலை தூரப் பகுதிகளில் மக்களின் வீட்டிற்கே சென்று சுகாதார வசதிகள் அளிப்பதற்கு “நடமாடும் மருத்துவமனை” என்ற புதிய

[2011 செப்டம்பர் 12

திட்டம் இந்த அரசால் தொடங்கப்பட உள்ளது. தற்போதுள்ள 385 நடமாடும் மருத்துவப் பிரிவுகள், கூடுதல் பணியாளர்கள் மற்றும் ஆய்வக வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டு இந்த நடமாடும் மருத்துவமனை அறிவிக்கப்பட்ட பயணத் திட்டத்தின்படி தொலை தூர கிராமங்களுக்குச் சென்று சிகிச்சை அளிக்கும்.

**1.7.** நமது மாநிலத்தில் கிராமப் பகுதிகளில் மருத்துவ வசதிகள் வழங்குவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளபோதிலும், நகர்ப்புறங்களில் வாழும் ஏழை எளியோர் குறிப்பாக குடிசைப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் கவனிக்கப்படாதவர்களாகவும், போதுமான சுகாதார கவனிப்பு சேவைகள் கிடைக்கப் பெறாதவர்களாகவும் உள்ளனர். இந்த ஏற்றத் தாழ்வினை சரிசெய்யும் விதமாக, நகர்ப்புற சுகாதார சேவைகளை வழங்கும்வகையில் ஒரு விரிவான திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. ஊரகப் பகுதியில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு நிகராக, நகர்ப்புறப் பகுதிகளிலும் ஆரம்பச் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதில் அரசு கவனம் செலுத்தும். நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் வலுப்படுத்தப்படும். ஏற்கெனவே தேசிய ஊரக சுகாதார நலத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள 60 நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குத் தேவையான பணியாளர்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கி பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககத்தின்கீழ் அவை கொண்டுவரப்படும். நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இல்லாத ஒரு இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை உள்ள 75 சிறிய நகரங்களில் நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

**1.8.** இந்த அரசு எப்போதும் மகளிர் மேம்பாடு மற்றும் குழந்தை நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. இதனை அங்கீகரிக்கும் வகையில் மகளிர் நலனில் கவனம் செலுத்தும் பல திட்டங்கள் செயல்படுத்துவதற்காக அறிவிக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் ஏழைப் பெண்களுக்கு இரண்டு மகப்பேறுக்கு ரூ.12,000 நிதி உதவி உயர்த்தி வழங்கும் வகையில் வலுப்படுத்தப்படும். இதில் முதல் ரூ.4000/- கருவுற்ற ஏழாவது மாதத்தில் பரிசோதனை முடிந்தபின் வழங்கப்படும். ரூ.4000/- அரசு மருத்துவமனையில் மகப்பேறு வசதி பெறும் போது உடன் வழங்கப்படும். இறுதித் தவணையாக ரூ.4000/- தேசிய அட்டவணைப்படி குழந்தைக்கு தடுப்பூசி போட்டவுடன் ஐந்தாவது மாதத்தில் வழங்கப்படும். இந்த ஆண்டு இந்தத் திட்டம் ரூ.596 கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ளது.



2011 செப்டம்பர் 12]

**1.9.** இளம் பெண்களிடையே சுகாதாரத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது, எதிர்வரும் காலத்தில் தொற்று நோய்களையும், கருவுறாமையின் ஆபத்தையும் குறைப்பதற்கு பெரும் உதவியாக இருக்கும். கிராமப்புறங்களில் வாழும் இத்தகைய பெண்களுக்கு ஆறு சானிடரி நாப்கின் உள்ள ஒரு பேக்கெட் ஆறு ரூபாய் என்ற மானிய விலையில் பத்து மாவட்டங்களில் விநியோகிக்கும் திட்டம் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்ட நிர்வாகக் கட்டுப்பாட்டில் செயல்படும் ஊழியர்கள் மற்றும் கிராமச் சுகாதார செவிலியர்கள் மூலமாக மாநிலத்திலுள்ள கிராமப்புறங்களில் வாழும் அனைத்து இளம் பெண்களுக்கும் சானிடரி நாப்கின் இலவசமாகவே வழங்க மாநில அரசு முடிவு செய்து, 46 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. நாட்டிலேயே தமிழ்நாடு மட்டும்தான் மாநிலம் முழுவதும் மாநில நிதியிலிருந்து முன்னோடித் திட்டமாக செயல்படுத்துகிறது.

**1.10.** உலக வங்கி உதவியுடன் நடைபெறும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், பொது மக்களுக்கு வழங்கப்படும் சுகாதாரச் சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு அரசு மருத்துவமனைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. இரண்டாவது கட்டத்தில் இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியைக்கொண்டு ரூ.55 கோடி செலவில் கூடுதல் மருத்துவ உபகரணங்கள், விஷ முறிவு சிகிச்சைக்கான உயிர்காக்கும் உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டு, அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் நோய் கண்டறியும் சேவையின் தரம் உயர்த்தப்பட உள்ளது. அரசு—தனியார் கூட்டு முயற்சியில் கணினி வசதியுடன்கூடிய அதிநவீன ஆய்வக வசதிகள் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**1.11.** உணவுக் கலப்படத்தைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, இந்திய அரசு, தற்போதுள்ள 1954 ஆம் ஆண்டு உணவு கலப்பட தடுப்புச் சட்டத்திற்கு மாற்றாக உணவுப் பாதுகாப்பு மற்றும் தரச் சட்டம் 2006 இயற்றியுள்ளது. இப்புதிய சட்டம் ஆகஸ்ட் 5, 2011 முதல் செயல்முறைக்கு வந்துள்ளது. தமிழ்நாடு அரசும், உணவுப் பாதுகாப்பு மற்றும் தரச் சட்டம், 2006ஐ 2011 ஆகஸ்ட் 5 முதல் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. தரமான கலப்படமற்ற உணவு மற்றும் போலியில்லாத மருந்துகளை மக்களுக்கு விநியோகிப்பதை உறுதிப்படுத்த இந்த அரசு உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு நிர்வாகத்திற்கென தனியாக ஒரு ஆணையரகத்தை தொடங்கிட முடிவு செய்துள்ளது. தேவையான தொடர் நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டு, புதிய துறை

விரைவில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சந்தையில் தரமான மருந்து மற்றும் உணவுப் பொருட்கள் கிடைக்கச் செய்வதை உறுதி செய்ய தற்போதுள்ள உணவு மற்றும் மருந்துக் கட்டுப்பாடு சோதனைக் கூடங்கள் நவீனப்படுத்தப்பட்டு தரம் உயர்த்தப்படும்.

**1.12.** தற்போதுள்ள '108' ஆம்புலன்ஸ் சேவையின் மூலமாக வழங்கப்படும் அவசர கால போக்குவரத்து சேவை கூடுதல் வாகனங்களுடன் வலுப்படுத்தப்படும். அவசர காலங்களில் மருத்துவமனைகளுக்கு இடையேயான போக்குவரத்து வசதிகள் அனுமதிக்கப்படும். பழங்குடியினர் வசிக்கும் மலைப் பகுதிகளில் கூடுதல் வசதிகளுடன்கூடிய சிறப்பு ஊர்திகள்மூலம் இந்த சேவை அளிக்கப்படும். பச்சிளம் குழந்தைகளின் அவசரகால சேவைக்கென மாவட்டந்தோறும் ஊர்தி ஒன்று தனியாக வழங்கப்பட உள்ளது.

**1.13.** ஏழை மற்றும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களுக்கு தரமான உயர் நிலை மருத்துவ சிகிச்சை வழங்கப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது. சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் ஒரு சிறப்பு மருத்துவமனை நவீன தலைக்காய பிரிவுடன் மைய அரசு நிதி உதவியில் அமைக்கப்பட்டுள்ளது. இதே போன்ற சிறப்பு மருத்துவமனை ஒன்று மதுரையில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மாநில நிதியில் ரூ.100 கோடி செலவில், திருச்சி அண்ணல் காந்தி அரசு மருத்துவமனையில் சிறப்பு சிகிச்சை மையம் ஒன்று அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மருத்துவ மனைகளில் மாநிலம் முழுவதும் உள்ள மக்களின் சுகாதாரத் தேவைகளை அதிக தூரப் பயணமின்றி பெற இயலும். இவற்றை எல்லாம் விஞ்சும் அளவில், ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் பயன்படுத்தப்படாமல் உள்ள 'ஏ' பிளாக் கட்டடத்தில் அதிநவீன பல் துறை சிறப்பு மருத்துவமனை ஒன்றை அமைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. இந்த மருத்துவமனையில் புதுடெல்லி அனைத்து இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தில் உள்ள வசதிகளுக்கு இணையான வசதிகள் இருக்கும்.

**1.14.** தற்போது மருத்துவர்கள், செவிலியர், மருத்துவம் சாரா பணியாளர், மருத்துவமனை பணியாளர் போன்ற பல்வகை பதவிகளில் 15,683-க்கும் மேலான காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. தற்போதுள்ள காலிப் பணியிடங்கள் மற்றும் எதிர்காலத்தில் ஏற்பட உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக தாமதமின்றி நிரப்பவும், மக்களுக்குச் சுகாதாரச் சேவைகள் தங்கு தடையின்றி கிடைக்கவும் "மருத்துவ தேர்வாணைய வாரியம்" ஒன்றை நிறுவ அரசு முடிவு செய்துள்ளது.





இது போன்ற ஒரு வாரியம் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லை. இதனால் அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் குறிப்பாக பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள மருத்துவ நிலையங்களில் மருத்துவர்களும், மருத்துவம் சாரா பணியாளர்களும் எப்பொழுதும் பணியில் உள்ளனர் என்ற நிலையை உறுதி செய்யும்.

**1.15.** தரமான சுகாதார சேவைகளை இலவசமாக மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதே இந்த அரசின் நோக்கமாகும். தற்போது திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படவுள்ள பல்வேறு நடவடிக்கைகளால், அனைத்து மக்களுக்கும் தரமான இலவச சுகாதார சேவைகளை வழங்க வகை செய்து, இந்தியாவில் தமிழ்நாடு சிறந்த முன்னணி மாநிலமாக விளங்கும் என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. இந்த நடவடிக்கைகள் தற்போதுள்ள குழந்தை இறப்பு விகிதம் மற்றும் தாய் இறப்பு விகிதத்தை மேலும் குறைக்க உதவும்.

**1.16.** மானியக் கோரிக்கை எண் 19—மக்கள் நல் வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கு 2011-12 ஆம் ஆண்டுக்கு ரூ.4,761 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அது பற்றிய விவரம் வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| கோரிக்கை | திட்டத்தில் சேராதது | திட்டப்பணிகள் | | | | திட்டப் பணிகள் மற்றும் திட்டத் தில் சேராதது |
|---|---|---|---|---|---|---|
| | | மாநில திட்டம் | மைய அரசு பொறுப் பேற்பவை | மைய மற்றும் மாநில அரசுகள் பொறுப் பேற்பவை | மொத்தம் | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 19. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 2543.24 | 1530.10 | 410.79 | 21.56 | 1962.45 | 4505.69 |

இந்த ஒதுக்கீட்டில் வருவாய் கணக்கில் ரூ.4413.33 கோடியும், மூலதனக் கணக்கில் ரூ.92.36 கோடியும் அடங்கும். வருவாய் கணக்கில் உள்ள ஒதுக்கீடு, 2011-12 ஆம் ஆண்டுக்கான மாநில மொத்த வருவாய் செலவினக் கணக்கில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.78974.48 கோடியில் 5.71 விழுக்காடாகும்.

[2011 செப்டம்பர் 12

**குறிப்பு:**

மேற்சொன்ன நிதி ஒதுக்கீட்டுடன் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்படும் மருத்துவத் துறை சம்பந்தப்பட்ட கட்டடப் பணிகளுக்காக ரூ.254.52 கோடி மானியக் கோரிக்கை எண் 39-ன்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

**1.17.** மானியக் கோரிக்கை எண் 19—மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் 2011-12 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டில் இயக்ககம் வாரியான நிதி ஒதுக்கீடு வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | தலைமைச் செயலகம், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 853.07 |
| 2. | மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம் | 56927.43 |
| 3. | மருத்துவக் கல்வி இயக்ககம் | 118464.60 |
| 4. | பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம் | 166179.43 |
| 5. | குடும்ப நல இயக்ககம் | 12096.76 |
| 6. | மருந்துக் கட்டுப்பாட்டு இயக்ககம் | 1039.66 |
| 7. | இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம் | 15033.06 |
| 8. | தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை | 2247.22 |
| 9. | பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்ட இயக்ககம் | 13500.01 |
| 10. | தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டம் | 64227.62 |
| | **மொத்தம்** | **450568.86** |

**குறிப்பு:** தொழிலாளர் மாநில ஈட்டுறுதித் திட்ட மருத்துவமனைகளுக்காக மானியக் கோரிக்கை எண் 32 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின்கீழ் ரூ.160.53 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2011 செப்டம்பர் 12]

1.18. **2011–2012 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:**

2011-12 ஆம் ஆண்டில் 21 புதிய திட்டங்களை (பகுதி-II திட்டங்கள்) ரூ.500 இலட்சம் செலவில் செயல்படுத்த கருதப்பட்டுள்ளது. இயக்ககம் வாரியான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | இயக்ககம் | திட்டங் களின் எண்ணிக்கை | இறுதி நிலைச் செலவு | 2011-2012-ல் செலவு |
|---|---|---|---|---|
| 1. | மருத்துவக் கல்வி இயக்ககம் | 4 | 226.00 | 124.00 |
| 2. | மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் | 5 | 106.00 | 106.00 |
| 3. | இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம் | 4 | 348.90 | 144.90 |
| 4. | பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம் | 2 | 184.00 | 76.00 |
| 5. | மருந்துக் கட்டுப்பாட்டு இயக்ககம் | 3 | 42.70 | 42.70 |
| 6. | தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை | 3 | 6.40 | 6.40 |
| | மொத்தம் | 21 | 914.00 | 500.00 |

**1.19.** உத்தேசிக்கப்பட்ட திட்டப் பணிகள் மற்றும் இயக்ககங்களின் பணிகள் அடுத்துவரும் அத்தியாயங்களில் விரிவாகத் தரப்பட்டுள்ளன.

[2011 செப்டம்பர் 12

# அத்தியாயம்–2

## மருத்துவக் கல்வி

*2.1.* மருத்துவக் கல்வி இயக்ககம் 1966 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் செயல்பட்டு வருகிறது. மருத்துவத் துறையில் கல்வி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி திட்டங்களை மேம்படுத்துதல், மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவமனைகளை நிர்வகித்தல் மற்றும் மருத்துவம், மருத்துவம் சாராத மற்றும் செவிலியர் படிப்புகளுக்கான சேர்க்கைக்காக, தேர்வுக் குழுவை சீரிய முறையில் கண்காணித்தல் முதலியன இவ்வியக்ககத்தின் முதன்மை நோக்கங்களாகும்.

**2.2. மருத்துவ நிலையங்கள்:**

தற்போது 17 மருத்துவக் கல்லூரிகள், 1 பல் மருத்துவக் கல்லூரி, 2 பி.பார்மஸி கல்லூரிகள், 2 பிசியோதரபி மருத்துவக் கல்லூரிகள், 4 பி.எஸ்.ஸி. செவிலியர் கல்லூரிகள் மற்றும் 23 செவிலியர் பயிற்சிப் (பட்டயப் படிப்பு) பள்ளிகள் (15 மருத்துவக் கல்லூரிகள் மற்றும் 8 தலைமை மருத்துவமனைகளில்) அரசால் நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையங்களில் மருத்துவப் படிப்பு மற்றும் மேற்படிப்புக்கான இடங்களின் எண்ணிக்கை அட்டவனை 1-ல் உள்ளது. இது தவிர, தனியார் நிலையங்களும் மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா படிப்பை வழங்கி வருகின்றன. தனியார் நிறுவனங்களில் உள்ள இருக்கைகள் மற்றும் அரசுக்கு ஒப்புவிப்பு செய்த இடங்கள் அட்டவணை 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த இயக்ககத்தின்கீழ் இயங்கும் 63 மருத்துவமனைகளில் உள்ள மொத்த படுக்கை வசதிகளின் எண்ணிக்கை 24,612. நாளொன்றுக்கு பயன்பெறும் உள்நோயாளிகள் மற்றும் வெளி நோயாளிகளின் சராசரி எண்ணிக்கை முறையே 23,360 மற்றும் 74,679 ஆகும்.



2011 செப்டம்பர் 12]

### அட்டவணை–1 : அரசு மருத்துவக் கல்லூரிகளில் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள இடங்களின் எண்ணிக்கை:

**(அ) பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பில் உள்ள இடங்களின் விவரம்**

| படிப்பின் பெயர் | மொத்த இடங்கள் |
|---|---|
| மருத்துவ பட்டப் படிப்பு | 1945 |
| பல் மருத்துவ பட்டப் படிப்பு | 100 |
| பி.எஸ்.ஸி(செவிலியர்) | 175 |
| போஸ்ட் பேசிக் பி.எஸ்.சி நர்சிங் | 90 |
| பி.பி.டி | 50 |
| பி.பார்மஸி | 110 |
| செவிலியர் பட்டயப் படிப்பு | 1875 |

**செவிலியர் பட்டயப் படிப்பு**

| பயிற்சி உதவி பணம் பெறுபவர் | பயிற்சி உதவி பணம் பெறாதவர் | மொத்தம் |
|---|---|---|
| 645 | 1230 | 1875 |

[2011 செப்டம்பர் 12

**(ஆ) பட்ட மேற்படிப்பில் உள்ள சிறப்புப் படிப்பு மற்றும் அவற்றிற்கான இடங்கள் விவரம்:**

| பாடத்திட்டம் | சிறப்புப் படிப்பு எண்ணிக்கை | மொத்த சேர்க்கை இடங்கள் |
|---|---|---|
| பட்ட மேற்படிப்பு | 23 | 705 |
| பட்டய மேற்படிப்பு | 15 | 403 |
| எம்.டி.எஸ் | 8 | 37 |
| உயர் சிறப்பு மேற்படிப்புகள் | 16 | 187 |
| எம்.பார்மஸி | 4 | 64 |
| எம்.எஸ்ஸி. (செவிலியர்) | 5 | 47 |
| எம்.எஸ்ஸி (மருத்துவ இயற்பியல்) | 1 | 10 |



2011 செப்டம்பர் 12]

**அட்டவணை–2 : அரசுக்கு இருக்கைகளை ஒப்படைக்கும் தனியார் துறையில் இயங்கும் சுயநிதி மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா நிறுவனங்களின் விவரம்:**

| கல்லூரிகள் | மொத்த கல்லூரிகள் | மொத்த இருக்கைகள் | அரசுக்கு ஒப்புவிப்பு செய்யப்பட்ட இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| மருத்துவக் கல்லூரிகள் | 11 | 1460 | 839 |
| பல் மருத்துவக் கல்லூரிகள் | 17 | 1470 | 878 |
| மருந்தாக்கியல் கல்லூரிகள்(பி.பார்ம்) | 34 | 1930 | 1222 |
| இயன்முறை மருத்துவம் | 24 | 1180 | 736 |
| செவிலியர் பட்ட படிப்பு (பி.எஸ்சி) | 133 | 7070 | 4520 |
| தொழில் வழி சிகிச்சை-பட்டப்படிப்பு (பி.ஒ.டி) | 2 | 100 | 65 |
| பட்டய மருந்தாக்கியல் படிப்பு (பிற்சேர்க்கை 10 சதவீதம்) | 33 | 187 | 187 |
| போஸ்ட் பேசிக் பி.எஸ்சி (நர்சிங்) | 22 | 745 | 462 |

***2.3. தேர்வு முறை:***

***2.3.1.*** தொழில் படிப்புகளுக்கு, பள்ளி மேல்நிலை படிப்பில் தொடர்புடைய பாடங்களில் பெறும் மதிப்பெண் அடிப்படையில், மாணவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். மருத்துவப் படிப்பு / பல் மருத்துவப் படிப்பு / பிசியோதெரபி / பி.ஓ.டி/ மருந்தியல் பட்டப் படிப்பு மற்றும் செவிலியர் படிப்பில் பட்டயப் படிப்பு ஆகிய பிரிவுகளுக்கு மாணவர்கள் சேர்க்கை ஒற்றைச் சாளர முறையில் கலந்தாய்வு மற்றும் இட ஒதுக்கீடுமூலம் மருத்துவக்

[2011 செப்டம்பர் 12

கல்வி இயக்குநரின் தலைமையில் மருத்துவக் குழு அந்தந்த வருடங்களில் அரசு அறிவிக்கும் கொள்கையின்படி தெரிவு செய்து வருகிறது. பட்ட மேற்படிப்பு, பட்டயப் படிப்பு, உயர் சிறப்பு பட்டப் படிப்பு பிரிவுகளுக்கான சேர்க்கை பொது நுழைவுத் தேர்வு, கலந்தாய்வு மற்றும் இட ஒதுக்கீடு முறை பின்பற்றி தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகிறது.

*2.3.2.* இந்திய உச்ச நீதிமன்றம் பி.ஏ. இனாம்தார் வழக்கில் வழங்கிய தீர்ப்பில், தனியார் சுயநிதிக் கல்லூரிகளின் நிருவாகம், உச்ச நீதிமன்றம் வழங்கிய விதிமுறைகளின்படி அவர்களது கல்லூரிகளுக்கு உரிய இடங்களை நிரப்ப உரிமை அளித்துள்ளது. ஆனால் மாணவர்களின் நலன் கருதி தனியார் சுயநிதி கல்லூரி நிர்வாகிகளுடன்அரசு பேச்சுவார்த்தை நடத்தி, அரசு உதவி பெறாத சுயநிதி நிறுவனங்கள் 65 விழுக்காடு இடங்களையும், சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் 50 விழுக்காடு இடங்களையும் அரசு ஒதுக்கீட்டிற்கு ஒப்புவிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

### 2.4. மனநல மருத்துவம்:

*2.4.1.* மனநல நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க தமிழகத்தில் சென்னை அரசு மனநலக் காப்பகம் ஒன்று மட்டுமே செயல்பட்டு வருகிறது. அண்டை மாநிலங்களில் உள்ள நோயாளிகளுக்கும் இந்த மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. 1,800 படுக்கைகள் கொண்ட இம் மருத்துவமனையில் கடந்த ஆறு மாதங்களில் (01-01-2011 முதல் 30-06-2011 முடிய) 2,65,036 வெளி நோயாளிகளும், 4,830 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்றுள்ளனர். இம் மருத்துவமனை மனநல நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பது மட்டுமின்றி, அவர்களுக்கு மறு வாழ்வும் அளித்து வருகிறது.

*2.4.2.* மத்திய அரசு மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.1.51 கோடி செலவில் மனநல செவிலியர் படிப்பில் முதுகலை பட்டயப் படிப்பு மற்றும் மருத்துவமனை உளவியல் முதுகலை பட்டயப் படிப்பினை சென்னை அரசு மன நல காப்பகத்தில் தொடங்க அனுமதி அளித்துள்ளது. இதில் மைய அரசு முதல் கட்டமாக ரூ.90.38 இலட்சம் நிதியை தேசிய ஊரக நலவாழ்வு இயக்கம் மூலமாக விடுவித்துள்ளது. தேசிய மனநலத் திட்டத்தின் கீழ், சென்னை மன நலக் காப்பகத்தை, மிகப்பெரும் மையமாக ரூ.30 கோடி செலவில் மேம்படுத்த ஒரு கருத்துரு மைய அரசுக்கு அனுப்பப்பட்டு அதன் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.



2011 செப்டம்பர் 12]

*2.4.3.* தமிழ்நாட்டின் தென் பகுதியில் உள்ள மனநோய் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் நலன் கருதி, தேனியில் உள்ள என்.ஆர்.தியாகராஜா மருத்துவமனையில் ஒரு மனநல மருத்துவமனை தொடங்க முடிவு செய்யப்பட்டு, அங்குள்ள கட்டடத்தின் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. இம் மருத்துவமனை விரைவில் தொடங்கப்படும்.

### 2.5. விபத்து மற்றும் தலைக்காயப் பிரிவுகள்:

மைய அரசு பதினொன்றாவது திட்டக் காலத்தில் வடக்கு — தெற்கு, கிழக்கு — மேற்கு தங்க நாற்கர தேசிய நெடுஞ்சாலைகளின் இடையே உள்ள பகுதிகளில் விபத்து காய சிகிச்சை பிரிவுகளை தொடங்கும் திருத்திய திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவமனை, மதுரை இராஜாஜி மருத்துவமனை, வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இத்தகைய பிரிவுகள் ஏற்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் மதுரை இராஜாஜி மருத்துவமனைகளில் இந்த பிரிவுகளுக்கான கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. வேலூர் மற்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவமனைகளில் கட்டடம் கட்டும் பணி முடிந்து, இந்த மையங்களில் மருத்துவக் கருவிகள் வழங்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. நாகர்கோவில் ஆசாரிபள்ளம் மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.6. தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவமனைகளில் சிறப்பு சிகிச்சை அளிக்கும் வசதிகள்:

*2.6.1.* உயர் நிலை மருத்துவமனைகளை வலுப்படுத்தி பொது மக்களுக்கு உயர் சிகிச்சை வழங்க வேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. பிரதான் மந்திரி ஸ்வஸ்திய சுரக்ஷா யோஜனா திட்டத்தில் சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் உயர் சிறப்பு மருத்துவமனை ஒன்று விபத்து சிகிச்சைப் பிரிவுடன் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கான மொத்த செலவு ரூ.139.10 கோடியில், மைய அரசின் பங்கு ரூ.100 கோடி ஆகும்.

[2011 செப்டம்பர் 12

***2.6.2.*** அதேபோன்ற உயர் சிறப்பு மருத்துவமனையை பிரதான் மந்திரி ஸ்வஸ்திய சுரக்ஷா யோஜனா திட்டத்தின்கீழ் இராஜாஜி மருத்துவமனைக்கு மதுரைக்கு அருகாமையில் உள்ள தோப்பூரில் ரூ.150 கோடி செலவில் அமைக்க மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் மைய அரசின் பங்கு ரூ.125 கோடி ஆகும். மாநில அரசு ரூ.25 கோடி செலவை ஏற்கிறது. இதற்கான உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டு, இந்த திட்டத்தை உடனடியாக தொடங்க மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

***2.6.3.*** ஒரு சிறப்பு முயற்சியாக, திருச்சி அண்ணல் காந்தி அரசு மருத்துவமனையில் மாநில அரசின் நிதியிலிருந்து 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்பு சிகிச்சை மையம் ஒன்று அமைக்கப்படும்.

## 2.7. நோய்த் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி கிங் நிலையம்:

கிண்டியிலுள்ள நோய்த் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி கிங் நிலையம் நாட்டிலுள்ள தலைசிறந்த ஆய்வுக் கூடங்களில் ஒன்றாகும். இந்த நிலையத்தில் தடுப்பு ஊசி மருந்துகள் மற்றும் ஊநீர் தயாரிக்கப்படுகின்றன. இது ஒரு கற்பிக்கும் மற்றும் ஆராய்ச்சி நிலையமாகவும் திகழ்கிறது. நுண்ணுயிரியல் நஞ்சாய்வு பிரிவு, இந்திய அரசாங்கத்தாலும், உலக சுகாதார நிறுவனத்தாலும், தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான தேசிய இளம்பிள்ளை வாத நோய் தடுப்பு மற்றும் தேசிய அம்மை நோய் தடுப்பு ஆய்வகங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம், தென்னக இரயில்வே, காவல் துறை உட்பட மற்ற துறைகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மூலம் பெறப்படும் மாதிரிகள் இந்த நிலையத்தைச் சார்ந்த ஆய்வகத்தில் பகுத்தாய்வு செய்யப்படுகின்றன.

## 2.8. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்:

மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா படிப்பில் கல்வியின் தரம், ஆராய்ச்சி, அறிவு மேம்பாடு ஆகியவற்றை உயர்த்தும் நோக்கத்துடன் 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது. தற்போது மருத்துவம் மற்றும் தொடர்புடைய அறிவியலில் பல்வேறு படிப்புகளை நடத்தும் 328 கல்வி நிறுவனங்கள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்தின் நூலகம், மண்டல



2011 செப்டம்பர் 12]

மருத்துவ நூலகமாகவும், மருத்துவத் தகவல் மையமாகவும் செயல்படுகிறது.

## 2.9. 2011–2012 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:

1. சென்னை, மகப்பேறு மகளிர் நோயியல் நிலையம் மற்றும் அரசினர் தாய் சேய் நல மருத்துவமனையில் உள்ள லாலி (Lawley) சீமாட்டி விடுதியில் செவிலியர்களுக்கான தங்கும் விடுதி கட்டடம் ரூ.170.00 இலட்சம் செலவில் கட்டப்படும்.

2. சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில், முட நீக்கியல் துறைக்கு 26 நபர்களை ஏற்றிச் செல்லும் திறன் கொண்ட ஒரு மின் தூக்கி ரூ.26.00 இலட்சம் செலவில் மாற்றி அமைக்கப்படும்.

3. சென்னை மகப்பேறு மகளிர் நோயியல் நிலையம் மற்றும் அரசினர் தாய் சேய் நல மருத்துவமனையில் 150 படுக்கைகள் கொண்ட வார்டில் 26 நபர்களை ஏற்றிச் செல்லும் திறன் கொண்ட, ஒரு மின் தூக்கி ரூ.26.00 இலட்சம் செலவில் மாற்றி அமைக்கப்படும்.

4. ISDN டிஜிட்டல் EPABX சாதனம் மருத்துவக் கல்வி இயக்ககத்தில் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

5. சென்னை அரசு பல் மருத்துவமனையில் உள்ள முதுநிலை பட்ட மேற்படிப்பு மாணவர்கள் விடுதி கட்டடத்தில் ஆண்களுக்கான விடுதி கட்டடம் ரூ.2.40 கோடி செலவில் கட்டப்படும்.

6. சென்னை அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் சிறுநீரகவியல் துறையின் விபத்து மற்றும் இயற்பியல் பிரிவு கட்டடத்தில் கூடுதல் தளங்கள் ரூ.4.35 கோடி செலவில் கட்டுதல்.

7 மருத்துவக் கல்வி இயக்குநரகத்திற்கு அலுவலகக் கட்டடத்தில் இரண்டாவது தளம் ரூ.2.00 கோடி செலவில் கட்டுதல்.

[2011 செப்டம்பர் 12

## அத்தியாயம்—3

### மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்

*3.1.* தரமான வாழ்க்கைக்கு நல்ல ஆரோக்கியமே அடிப்படை தேவையாகும். இது சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கும் அடித்தளமாகும். ஏழை மற்றும் பின்தங்கிய மக்களுக்கு தரமான மருத்துவ சேவை வழங்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், 30 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள், 155 வட்ட மருத்துவமனைகள், 76 வட்டமல்லாத மருத்துவமனைகள், 11 மருந்தகங்கள், 10 நடமாடும் மருத்துவப் பிரிவு, 7 பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனைகள், 2 காசநோய் மருத்துவமனைகள், 2 காசநோய் மருந்தகங்கள் மற்றும் 7 தொழுநோய் மருத்துவமனைகளை நிர்வகித்து, கீழ்க்கண்ட சுகாதார வசதிகளை அளித்து வருகிறார்.

1. மருத்துவம், அறுவை சிகிச்சை, மகப்பேறு மருத்துவம், குழந்தைகள் மருத்துவம், கண் சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை நோய் சிகிச்சை, எலும்பு முறிவு சிகிச்சை, மனநல மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் பொது மக்கள் ஆரம்ப மற்றும் இரண்டாம் கட்ட உள் மற்றும் வெளி நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தல்.

2. கருவுற்ற பெண்கள் மற்றும் பிறந்த குழந்தைகளுக்கு விரிவான அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தைகளை கவனித்து பேணும் சேவை அளித்தல்.

3. குடும்ப நலச் சேவைகள்.

4. விபத்து மற்றும் அவசரகாலச் சேவைகள்.

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்தின்கீழ் மாவட்ட அளவில் பணியாற்றும் மருத்துவப் பணிகள் இணை இயக்குநர்கள், மக்களுக்கு மருத்துவ சேவைகளை வழங்கும் வகையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கான சிறப்புத் திட்டம் மற்றும் மலைப் பகுதி வளர்ச்சித் திட்டம் உட்பட பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து அரசு மருத்துவ நிலையங்கள் மூலம் வழங்கி வருகிறார். பார்வை இழப்பை கட்டுப்படுத்துதல், காசநோய் மற்றும் தொழுநோய் கட்டுப்படுத்துதல் போன்ற தேசிய திட்டங்களை இத்துறை செயல்படுத்துகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும், திருத்திய தேசிய காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம், துணை இயக்குநர் (காசநோய்) மற்றும் தொழுநோய் ஒழிப்புத் திட்டம், துணை இயக்குநர் (தொழுநோய்) ஆகியோரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழுநோய் ஒழிப்புத் திட்டம், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறையுடன் இணைக்கப்பட்டுள்ளது. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சட்டம், 1994 மற்றும் முன்நிர்ணயம் மற்றும் பிறப்பிற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வு தடை செய்யும்) சட்டம், 1994 ஆகியவற்றை அமல்படுத்தும் மாநில அமலாக்க அலுவலர் ஆவார்.



2011 செப்டம்பர் 12]

### 3.2. திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம்:

*3.2.1.* திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் தமிழகத்தில் 1999 முதல் படிப்படியாக அமல்படுத்தப்பட்டது. இத்திட்டம் தமிழகம் முழுவதும் 2002 ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்படுகிறது.

### 3.2.2. நோக்கம்:—

திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்புத் திட்டத்தின் முக்கிய நோக்கம் பெரும்பான்மையான காச நோயாளிகளை, குறிப்பாக சளியில் கிருமியுள்ள காச நோயாளிகளைக் கண்டறிந்து நேரடி குறுகியகால சிகிச்சையின்மூலம் (DOTS) முழுமையாக குணப்படுத்துவதே ஆகும்.

### 3.2.3. குறிக்கோள்:—

#### (அ) குணப்படுத்துதல்:

புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட சளியில் கிருமியுள்ள காசநோயாளிகளில் 85 விழுக்காடு நோயாளிகளை குணப்படுத்துவது இத்திட்டத்தின் முக்கியமான நோக்கமாகும்.

#### (ஆ) காசநோயாளிகளைக் கண்டுபிடித்தல்:

85% பூரண குணமடைந்த காசநோயாளிகள் தவிர, சமுதாயத்தில் எஞ்சியுள்ள காச நோயாளிகளில் 70% காச நோயாளிகளைக் கண்டுப்பிடிப்பது இத்திட்டத்தின் மற்றொரு முக்கிய நோக்கமாகும்.

[2011 செப்டம்பர் 12

### 3.2.4. நிர்வாக அமைப்பு:

*3.2.4.1.* மாநில அளவில் அரசுச் செயலர் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட மாநில நலச் சங்கம்—திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்புத் திட்டம், மாநில நலவாழ்வு சங்கத்துடன் ஒன்றாக்கப்பட்டு தேசிய ஊரக நலவாழ்வு இயக்கத்தின்கீழ் நிதி வழங்கப்படுகிறது. காசநோய் சிறப்பு மருத்துவரான கூடுதல் இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், மாநில காசநோய் அலுவலர் ஆவார். இவர் திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்புத் திட்டம் செயல்படுத்தும் அலுவலர் ஆவார். மாவட்ட அளவில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் அமைக்கப்பட்ட மாவட்ட நலச் சங்கம், தேசிய ஊரக நலவாழ்வு இயக்கத்தின்கீழ் அமைக்கப்பட்ட மாவட்ட நலவாழ்வு சங்கங்களுடன் ஒன்றாக்கப்பட்டது. இந்தத் திட்டம் பொது சுகாதாரத் துறை இயக்குநருடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படுகிறது.

*3.2.4.2.* தமிழகத்தில் தற்போது 144 காசநோய் அலகுகள் உள்ளன. ஒவ்வொரு காச நோய் அலகும் 5 இலட்சம் மக்கள் தொகையை உள்ளடக்கியது. ஒவ்வொரு காச நோய் அலகும், ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள ஒரு மருத்துவர் காச நோய் கட்டுப்பாட்டு மருத்துவ அலுவலராக நியமிக்கப்பட்டு அவரால் நிர்வகிக்கப்படுகிறது. முதுநிலை சிகிச்சை மேற்பார்வையாளர் ஒருவரும், முதுநிலை காச நோய் ஆய்வுக்கூட மேற்பார்வையாளர் ஒருவரும் அவருக்கு உதவி வருகின்றனர். காசநோய் கட்டுப்பாட்டு மருத்துவ அலுவலர் குறைந்தது மாதத்தில் 7 நாட்கள் ஒரு அலகின் காச நோய் திட்டப் பணிகளை கண்டிப்பாக மேற்பார்வையிட வேண்டும்.

### 3.2.5. தேர்ந்தெடுக்கப்பட்ட நுண்ணோக்கி மையங்கள்:

தமிழகத்தில் 791 காசநோய் நுண்ணோக்கி மையங்கள் உள்ளன. 1 இலட்சம் மக்கள் தொகைக்கு ஒரு நுண்ணோக்கி மையம் என்ற அளவில் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு காசநோய் அலகிலும் குறைந்தபட்சம் 5 நுண்ணோக்கி மையங்கள் செயல்படுகின்றன. ஒவ்வொரு நுண்ணோக்கி மையமும் ஒரு ஆய்வுக்கூட நுட்புனர் மற்றும் ஒரு பைனாகுலர் நுண்ணோக்கியுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.



2011 செப்டம்பர் 12]

### 3.2.6. டாட்ஸ் மையங்கள்:

தமிழகத்தில் சுமார் 11,000 டாட்ஸ் மையங்கள் கண்டறியப்பட்டு அதன்மூலம் பாதிக்கப்பட்ட காச நோயாளிகளுக்கு பரிசோதனைகளும், சிகிச்சையும் சிறந்த முறையில் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக கிராமப்புற செவிலியர்கள், பல்நோக்கு ஆண் சுகாதார பணியாளர்கள், சுய உதவிக் குழுக்கள் ஆகியோர்களுக்கு இத்திட்டத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள்மூலம் காச நோயாளிகளுக்கு நேரடி சிகிச்சை (டாட்ஸ்) வழங்கப்படுகிறது. டாட்ஸ் மையங்கள், அனைத்து அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், துணை சுகாதார நிலையங்களிலும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், சானடோரியங்களிலும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிலும் ஆரம்பிக்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன. அனைத்து மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும் காசநோய் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு மருத்துவ அலுவலரால் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஒரு ஆய்வுக்கூட நுட்புனர் மற்றும் ஒரு காசநோய் சுகாதார பார்வையாளர் உதவியுடன் நிர்வகிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் தற்போது 238 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், 103 தனியார் மருத்துவமனைகளும், 319 தனியார் மருத்துவர்களும் இந்தத் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### 3.2.7. காச நோய் மருந்துகள் விநியோகம்:

கண்டுபிடிக்கப்பட்ட காச நோயாளிகள் ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக மருந்துப் பெட்டிகள் வழங்கப்பட்டு சிகிச்சை வழங்கப்படுகிறது. 6 மாத மொத்த சிகிச்சை காலத்தில் இரண்டு அல்லது மூன்று சளி பரிசோதனைகள் ஒவ்வொரு நோயாளிக்கும் செய்யப்பட்டு சிகிச்சையின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்படுகிறது. காச நோயாளிகளின் நோய் தாக்கத்தைப் பொறுத்து அவர்கள் வீட்டுக்கு அருகிலேயே டாட்ஸ் மையங்கள்மூலம் சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குழந்தை காச நோயாளிகளுக்கும் இத்திட்டத்தில் தனித் தனி மருந்துப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. திருத்தியமைக்கப்பட்ட தேசிய காச நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் காசநோய் மருந்துகள் அனைத்தும் புதுடெல்லியில் உள்ள மத்திய காசநோய் பிரிவிலிருந்து நேரடியாக அரசு மருந்து இருப்புக் கிடங்கிற்கு

[2011 செப்டம்பர் 12

அனுப்பப்படுகின்றன. அரசு மருந்து இருப்புக் கிடங்கிலிருந்து தமிழ்நாட்டில் சென்னை மற்றும் திருச்சியில் உள்ள காச நோய் மருந்து கிடங்கிற்கு காசநோய் மருந்துகள் அனுப்பப்படுகின்றன. மாநில மருந்து கிடங்குகளிலிருந்து அனைத்து மாவட்டங்களுக்கும் மாநில திட்ட உபயோகிப்பாளர்களுக்கும் மருந்துகள் அனுப்பப்படுகின்றன.

**3.2.8. நிதி மேலாண்மை:**

மாவட்ட பணியாளர்களின் மொத்த நிர்வாகச் செலவினையும், மைய அரசு, தேசிய ஊரக நல வாழ்வு இயக்கம்மூலம் வழக்கமான 85 : 15 என்ற மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்கு விகிதாச்சாரத்தில் ஏற்கிறது. ஒவ்வொரு ஆண்டும் தேசிய திட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் அங்கீகரிக்கப்படும் தேசிய ஊரக நலவாழ்வு குழும திட்ட செயலாக்கப்படி நிதி விடுவிக்கப்படுகிறது. மாநில நலவாழ்வு சங்க திட்ட இயக்குநரின் ஒப்புதலுடன் இந்நிதி அனைத்து மாவட்ட நலவாழ்வு சங்கங்களுக்கும் விடுவிக்கப்படுகிறது.

**3.2.9. இடைநிலை பரிந்துரை ஆய்வுக் கூடம்:**

இடை நிலை பரிந்துரை ஆய்வுக்கூடம் உலக காசநோய் நாளான 2007 ஆம் ஆண்டு மார்ச் 24 அன்று தமிழகத்தில் துவங்கப்பட்டது. இவ்வாய்வுக் கூடத்தில் காச நோய் கூட்டு மருந்துகளுக்குக் கட்டுப்படாத புது வகை MDRTB காச நோயாளிகளுக்கான சளிக் கூராய்வு பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

**3.2.10. மாநில காச நோய் பயிற்சி (ம) விளக்க மையம்:**

சென்னை சேத்துப்பட்டில் உள்ள அரசு நெஞ்சக மருத்துவ நிலைய வளாகத்தில் (ITM Campus) மாநிலத்தில் பணிபுரியும் காச நோய் பணியாளர்களுக்கு காசநோய் குறித்து பயிற்சி வழங்க காசநோய் பயிற்சி மற்றும் விளக்க மையம் துவங்கப்பட்டது. இந்தக் கட்டடத்தை புதுப்பிப்பதற்காக மாநில அரசு ரூ.50 இலட்சம் நிதியை வழங்கியுள்ளது.

**3.2.11. டாட்ஸ் ப்ளஸ் நடவடிக்கைகள்:**

தமிழகத்தில் எம்.டி.ஆர்.டி.பி (MDRTB) நோயாளிகளுக்கான சிகிச்சை வழங்கும் திட்டம் 30-01-2010 அன்று ஆரம்பிக்கப்பட்டது.



2011 செப்டம்பர் 12]

தொடக்கத்தில் பரிட்சார்த்த முறையில் கடலூர், காஞ்சிபுரம், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 4 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. தமிழகத்தில் டாட்ஸ் ப்ளஸ் திட்டம் செயல்படுத்த அரசு நெஞ்சக நோய் மருத்துவமனை கண்டறியப்பட்டுள்ளது. தற்போது வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி. சேலம், நாமக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், ஈரோடு, தஞ்சாவூர், நாகப்பட்டினம், விருதுநகர், திருவள்ளூர், திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் இந்த டாட்ஸ் ப்ளஸ் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் விரைவில் விரிவுபடுத்தப்படும்.

**திருத்தியமைக்கப்பட்ட காச நோய் கட்டுப்பாடு திட்ட சாதனைகள்:**

| வருடம் | புற நோயாளிகளில் சளிப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டவர்களின் விகிதம் | புதிதாக பரிசோதிக்கப்பட்ட காச நோயாளிகளில் சளியில் கிருமியுள்ளவர்கள் | கண்டு பிடிக்கப்பட்ட மொத்த காசநோயாளிகளில் சளியில் கிருமியுள்ளவர்கள் | சளியில் கிருமியுள்ள கிருமியில்லாத நோயாளிகளின் விகிதம் | சிகிச்சைக்கு பின் கிருமியில்லாத நோயாளிகளின் விகிதம் | குணமடைந்தவர்கள் விகிதம் | சாதனை விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2002 | 1.8 | 132 | 51 | 1:1.0 | 91% | 84% | 84% |
| 2003 | 2.1 | 146 | 57 | 1:0.9 | 91% | 87% | 88% |
| 2004 | 2.3 | 144 | 58 | 1:0.8 | 93% | 89% | 89% |
| 2005 | 2.3 | 145 | 58 | 1:0.7 | 90% | 87% | 88% |
| 2006 | 2.3 | 145 | 58 | 1:0.8 | 90% | 82% | 85% |
| 2007 | 2.1 | 131 | 51 | 1:0.5 | 89% | 82% | 83% |

[2011 செப்டம்பர் 12

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2008 | 2.1 | 128 | 51 | 1:0.7 | 90% | 84% | 85% |
| 2009 | 2.2 | 123 | 50 | 1:0.6 | 90% | 85% | 86% |
| 2010 | 2.2 | 124 | 49 | 1:0.6 | 90% | 85% | 87% |

### 3.3. எச்.ஐ .வி – டி.பி (HIV-TB):

தமிழகத்தில் அனைத்து 30 மாவட்டங்களிலும் எச்.ஐ.வி. யுடன்கூடிய காசநோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கப்படுகிறது. தற்போது காசநோய் பிரிவிலிருந்து தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ள எச்.ஐ.வி. பரிசோதனை மையங்களுக்கு பரிந்துரை செய்து அனுப்பப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை 68% ஆகும். திருத்தியமைக்கப்பட்ட காச நோய் கட்டுப்பாட்டு திட்டத்தில் கண்டறியப்பட்ட 90% நோயாளிகள் பரிந்துரைக்கப்படுவதே தற்போதைய குறிக்கோளாக உள்ளது.

### 3.4. மாவட்ட மன நலத் திட்டம்:

#### 3.4.1. மாநிலத்தில் செயல்படுத்தப்படும் மாவட்ட மன நலத் திட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவன:

1. சமூகத்தில் மனநலம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
2. மனநல மருத்துவ பணிகளை சுகாதார துறையின் அனைத்து பிரிவுகளுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்துதல்.
3. சமுதாயத்தில் மனநலம் பாதிக்கப்பட்டவரை சமூகத்தில் விரைவில் இனம் கண்டு சிகிச்சை மேற்கொள்ளுதல்.
4. பொதுமக்களிடையே மன நலம் குறித்த விழிப்புணர்ச்சி மற்றும் மனநலம் குறித்து சமூகத்தினரின் பார்வையை பொதுக் கல்விமூலம் குறைத்தல்.
5. மருத்துவமனைகளில் சிகிச்சை அளித்து, குணமடைந்த மனநல நோயாளிகளுக்கு மறுவாழ்வு அளித்தல்.



2011 செப்டம்பர் 12]

**3.4.2.** மாவட்ட மனநலத் திட்டம் முதலில் 1997-ல் திருச்சி மாவட்டத்திலும், 2001-02-ல் மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களிலும், 2007-2008-ல் சென்னை, கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவாரூர், விருதுநகர், பெரம்பலூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களிலும், 2009-2010-ல் தேனி, கன்னியாகுமரி, ஈரோடு, தருமபுரி மற்றும் நாகபட்டினம் ஆகிய மாவட்டங்களிலும் செயல்படுத்த மைய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, இத்திட்டம் இந்த மாவட்டங்களில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் சிவகங்கை, திண்டுக்கல், விழுப்புரம், தூத்துக்குடி, புதுக்கோட்டை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டத்தினை விரிவுபடுத்தவும் கருத்துரு மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு நிலுவையிலுள்ளது.

#### 3.4.3. நிதியமைப்பு:

இத்திட்டம் முதல் ஐந்து ஆண்டுகளுக்கு முழுவதுமாக மைய அரசின் நிதி உதவியுடனும், அதன் பிறகு மாநில நிதி உதவியுடனும் செயல்படுத்தபட்டு வருகிறது.

### 3.5. தமிழ்நாடு மாநில நோயாளர் நிதி உதவி அமைப்பு:

**3.5.1.** தமிழ்நாடு மாநில நோயாளர் நிதி உதவி அமைப்பானது வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் ஆண்டு வருமானம் ரூ.24,000-க்குகீழ் உள்ள தமிழக மக்களுக்கு உயிர் காக்கும் அறுவை சிகிச்சைகளுக்கு நிதி உதவி வழங்கி வருகிறது. இந்தத் திட்டம் 1 : 2 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து நிதி உதவி வழங்கி செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமாகும். இந்த திட்டத்தில் கீழ் குறிப்பிடப்பட்டவாறு மூன்று விதமாக நிதி உதவி வழங்கப்படுகிறது:

1) அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு மருத்துவக் கருவிகள் (Cost of Consumables) வாங்கிட, சுழல் நிதி வழங்கப்படுகிறது.
2) மாவட்ட ஆட்சியாளருக்கு சுழல் நிதி (Revolving Fund) வழங்கப்பட்டு அரசால் அங்கீகரிக்கப்பட்ட 71 தனியார் மருத்துவமனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அறுவை சிகிச்சைகளுக்கென ரூ.25,000 நிதி உதவி வழங்கப்படுகிறது.

[2011 செப்டம்பர் 12

3) இளம் சிறார் இருதய அறுவை சிகிச்சை திட்டத்தில் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு குறைவாக உள்ள குடும்பங்களைச் சார்ந்த 12 வயதிற்கும் குறைவாக உள்ள குழந்தைகளுக்கு சென்னை அரசு குழந்தைகள் நல மருத்துவமனை, மதுரை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய மூன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் காத்திருப்போர் பட்டியலிலிருந்து அரசால் அங்கீகரிக்கப்பட்ட 28 தனியார் மருத்துவமனைகளில் இருதய அறுவை சிகிச்சை செய்வதற்கு தன்மைக்கேற்ப ரூ.20,000 முதல் ரூ.1,00,000 வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், அரசால் அங்கீகரிக்கப்பட்டு, ஆனால் காப்பீட்டுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்படாத தனியார் மருத்துவமனையில் இத்திட்டத்தினை மாநில நோயாளர் நிதியிலிருந்து செயல்படுத்தலாம் என முடிவெடுக்கப்பட்டது.

***3.5.2.*** இத்திட்டத்தின்கீழ் 31-3-2011 வரை வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள 13,682 பயனாளிகள் பயன்பெற்று உள்ளனர். ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.51.00 கோடி நிதியில் ரூ.44.00 கோடி நிதி உதவி வழங்கப்பட்டு உள்ளது.

### 3.6. தமிழகத்தில் மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சட்டம், 1994 செயலாக்கம்:

உடல் உறுப்பு வியாபாரத்தைத் தடுப்பதற்காக, "மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சட்டம், 1994" இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மாநில செயலாக்க அலுவலர் ஆவார். மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சட்டத்தின்கீழ் பதிவுரிமை கோரும் மருத்துவமனைகள், அருகிலுள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவ வல்லுநர்களால் ஆய்வு செய்யப்படுகிறது. ஆய்வறிக்கை அடிப்படையில் சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளுக்கு உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ள மாநில செயலாக்க அலுவலர் பதிவுரிமை வழங்குகிறார். இந்தச் சட்டத்தில் பதிவு செய்துள்ள மருத்துவமனைகள் மட்டுமே மாற்று அறுவை சிகிச்சை செய்யலாம். சிறுநீரகம், இருதயம், கல்லீரல், நுரையீரல், கணையம் மற்றும் கார்னியா போன்ற பல்வேறு



2011 செப்டம்பர் 12]

மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளுக்கு தமிழ்நாட்டில் தற்பொழுது 72 மருத்துவமனைகள் இச்சட்டத்தின்கீழ் பதிவுரிமை பெற்றுள்ளன. உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை வரன்முறை செய்ய, அரசு, மண்டல வாரியாக சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் அங்கீகாரக் குழுக்களை ஏற்படுத்தி உள்ளது. இக்குழுக்கள் உடல் உறுப்பை தானம் பெறுபவர் மற்றும் தானம் அளிப்பவர் ஆகிய இருவரையும் பரிசீலனை செய்து உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு அனுமதி வழங்குகின்றன.

### 3.7. இறந்தவர்களின் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை திட்டம்:

அக்டோபர் 2008—ல் தொடங்கப்பட்ட இறந்தவர்களின் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை திட்டம் மிகப் பெரிய வெற்றியை பெற்றுள்ளது. இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதில் இந்திய அளவில் தமிழகம் முதன்மை மாநிலமாக உள்ளது. வழிமுறைகள் மற்றும் படிவங்களை வடிவமைத்தல், செயல்முறைகள் நடைமுறைப் படுத்துதலை மேற்பார்வையிடுதல், திட்டம் தொடர்ந்து நல்ல முறையில் செயல்படுவதை உறுதி செய்தல், திட்டம் செம்மையான முறையில் செயல்படுத்தத் தேவையான எளிய நடைமுறைகள் உருவாக்க ஒரு அமைப்பை ஏற்படுத்த பரிந்துரைத்தல் போன்றவற்றை இந்தத் திட்டத்தில் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழு வழங்குகிறது. இந்தத் திட்டத்தில் தற்போது 38 மருத்துவமனைகள் இணைந்துள்ளன. ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை மற்றும் ஸ்டேன்லி மருத்துவமனை முழு ஈடுபாட்டுடன் இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளன. மாநிலத்தில் மாற்று அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவமனைகள் மூன்று மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, ஒரு மண்டலத்தில் நிகழும் உறுப்பு தானம் அந்த மண்டலத்தில் உள்ள மருத்துவமனைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் அளிக்கப்படுகிறது.

வடக்கு மண்டலம்—சென்னை மற்றும் சுற்றுப்புறம், வேலூர்

தெற்கு மண்டலம்—திருச்சி, மதுரை, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில்

மேற்கு மண்டலம்—கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் சேலம்

[2011 செப்டம்பர் 12

30-07-2011 வரை 205 உடல் உறுப்பு தானங்கள் பெறப்பட்டு, 1,182 உடல் உறுப்புகள் அறுவடை செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 598 முக்கிய உறுப்புகளாகும் (இதயம், நுரையீரல், கல்லீரல் மற்றும் சிறுநீரகம்).

**3.8. தமிழ்நாட்டில் முன் நிர்ணயம் மற்றும் பிறப்பிற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வை தடை செய்தல்) சட்டம், 1994 செயல்படுத்துதல்:**

மாநிலத்தில் சில பகுதிகளில் குழந்தை பிறப்பு விகிதம் காரணமாக பெண் பிறப்பு விகிதம் குறைந்து வருவது கவலைதரும் ஒன்றாகும். பெண் குழந்தைகளைப் பிறப்பிலிருந்து புறக்கணித்தல், சிசுக் கொலைகள் மற்றும் பெண் கருக் கொலைகள், போன்றவை பெண் பிறப்பு விகிதம் குறைய மிக முக்கிய காரணங்களாக உள்ளன. இத்தகைய தவறான போக்கைத் தடுக்க இந்திய அரசு "முன் நிர்ணயம் மற்றும் பிறப்பதற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வை தடை செய்தல்) சட்டம், 1994"-ஐ இயற்றியது. இச்சட்டத்தை செம்மையாக நடைமுறைப்படுத்த மாநில, மாவட்ட மற்றும் வட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாநில அளவில் உள்ள ஆலோசனை குழுவுக்கு மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் தலைவராவார். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரும், சார் மாவட்ட அளவில் வருவாய் கோட்டாட்சியரும் செயலாக்க அலுவலர்களாக செயல்படுகின்றனர். மேற்கண்ட சட்டப்படி, இத்தகைய தொழில்நுட்பத்தினை கையாளும் அனைத்து அமைப்புகளும் உரிய செயலாக்க அலுவலர்களிடம் பதிவுரிமை பெற வேண்டும். இச்சட்டப்படி பாலினம் தெரிவிக்கும் கருவிகளை தவறாக பயன்படுத்துதல், பதிவுரிமை பெறாமல் வைத்திருத்தல், கருவின் பாலினத்தை தெரிவித்தல் போன்றவை பிணையில் வர இயலாத, தங்களுக்குள் சமரசம் காண இயலாத மற்றும் மூன்றாண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கக்கூடிய குற்றச் செயலாகும். தவறிழைக்கும் மருத்துவர்கள் மருத்துவம்



2011 செப்டம்பர் 12]

செய்யும் பதிவுரிமையை இழக்க நேரிடும். இதுவரை இச்சட்டத்தில் 4,560 ஸ்கேன் மையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சட்ட விதிகளை மீறியமைக்காக 72 மையங்கள்மீது வழக்குத் தொடரப்பட்டு, அதில் 62 வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 10 வழக்குகள் நீதிமன்ற விசாரணையில் உள்ளன.

**3.9. விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு வலுப்படுத்தல் மற்றும் மேம்படுத்துதல்:**

**3.9.1.** 1. அரசு தலைமை மருத்துவமனை பெரம்பலூர், 2.விழுப்புரம், 3.பத்மநாபபுரம், கன்னியாகுமரி மாவட்டம், 4.நாமக்கல், 5.வாலாஜா, வேலூர் மாவட்டம், 6.தென்காசி, திருநெல்வேலி மாவட்டம், 7. கடலூர், 8. அரசு மருத்துவமனை ஓமலூர், சேலம் மாவட்டம், 9. மேலூர், மதுரை மாவட்டம் மற்றும் 10. தாம்பரம், காஞ்சிபுரம் மாவட்டம் ஆகிய 10 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் உள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவினை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும் ரூ.14.48 கோடி நிதி மைய அரசால் வழங்கப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு, அவைகள் பயன்பாட்டில் உள்ளன.

**3.9.2.** தற்சமயம் மைய அரசு பதினொன்றாவது திட்ட காலத்தில் வடக்கு—தெற்கு, கிழக்கு—மேற்கு தங்க நாற்கர தேசிய நெடுஞ்சாலைகளின் இடையே உள்ள பகுதிகளில் விபத்து கால சிகிச்சை மையங்களை தொடர்ச்சியாக ஏற்படுத்தும் ஒரு திருத்தப்பட்ட திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. கிருஷ்ணகிரி, திண்டுக்கல், கோவில்பட்டி மற்றும் கரூர் ஆகிய மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் விபத்து காய சிகிச்சைப் பிரிவு ரூ.24.05 கோடி செலவில் ஏற்படுத்த மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கிருஷ்ணகிரி, திண்டுக்கல், கோவில்பட்டி மற்றும் கரூர் ஆகிய மருத்துவமனைகளில் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.2.75 கோடி நிதியை மைய அரசு விடுவித்துள்ளது. கிருஷ்ணகிரியில் கட்டடம் கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. திண்டுக்கல் மற்றும் கோவில்பட்டி மருத்துவமனைகளில் கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கரூரில் விபத்துப் பிரிவு ஏற்படுத்துவதற்குத் தேவையான நிலம் தற்போது கண்டறியப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

*[2011 செப்டம்பர் 12*

**3.10. 2011–2012 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்:**

*1)* ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையை மேம்படுத்தத் தேவையான கட்டடம் கட்டவும், உபகரணங்கள் மற்றும் 3 குடிமை மருத்துவர் வழங்கியும் ரூ.374.44 இலட்சம் தொடரா செலவினத்திற்கும், ரூ. 18.47 இலட்சம் தொடர் செலவினத்திற்கும் நிதி வழங்கப்பட்டுள்ளது.

*2)* தேனி மாவட்டம், கம்பம் அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகள் பிரிவு கட்டடம் ரூ.20.00 இலட்சம் செலவில் கட்டப்படும்.

*3)* வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு அரசு மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடம் ரூ.40.00 இலட்சம் செலவில் கட்டப்படும்.

*4)* வேலூர் மாவட்டம், குடியாத்தம் அரசு மருத்துவமனையில் 30 படுக்கைகள் கொண்ட ஆண்கள் மருத்துவ பிரிவு கட்டடம் ரூ.10.00 இலட்சம் செலவில் கட்டப்படும்.

*5)* வேலூர் மாவட்டம், வாணியம்பாடி அரசு மருத்துவமனையில், அறுவை அரங்கம் கொண்ட பிரசவ அறை கட்டடம் ரூ.16.00 இலட்சம் செலவில் கட்டப்படும்.

*6)* நாகப்பட்டினம், காஞ்சிபுரம், தென்காசி மற்றும் உசிலம்பட்டி ஆகிய இடங்களில் உள்ள மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இணை இயக்குநர்களுக்கு பழைய சீருந்துகளுக்குப் பதிலாக புதிய சீருந்துகள் ரூ.20.00 இலட்சம் செலவில் வழங்குதல்.

## அத்தியாயம்–4

### தமிழ்நாடு மாநில கண் பார்வை இழப்பு தடுப்புச் சங்கம்

***4.1.*** நாட்டில் பார்வை இழப்பை தடுப்பதற்கும், கணிசமான அளவு குறைப்பதற்கும், தேசிய கண்ணொளி இழப்பு தடுப்புத் திட்டம் 1976 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம்



*2011 செப்டம்பர் 12]*

விரிவுபடுத்தப்பட்டு 30-06-2002 வரை உலக வங்கி நிதி உதவியில் "கண்புரை நோய் கட்டுப்பாட்டுத் திட்டமாக"செயல்பட்டது. இத்திட்டம் பிறகு மைய அரசு செயல்படுத்தும் திட்டமாக மாற்றப்பட்டு, 2007-08 ஆம் ஆண்டு முதல் தேசிய ஊரக நல வாழ்வு இயக்கத்தின் ஒரு பகுதியாக நிதி வழங்கப்படுகிறது.

***4.2.*** இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் பார்வை இழப்பை கணிசமாக குறைப்பதேயாகும். இத்திட்டத்தின் இலக்கை அடைய 01-04-1996 முதல் தமிழ்நாடு மாநில பார்வை இழப்பு தடுப்புச் சங்கம் தனி நிறுவனமாக அமைக்கப்பட்டது. மாநிலத்தில் தேசிய ஊரக நல வாழ்வு இயக்கம் தொடங்கப்பட்ட பின்னர் தமிழ்நாடு மாநில பார்வை இழப்பு தடுப்புச் சங்கம், மாநில நல வாழ்வு சங்கத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டது. கூடுதல் மருத்துவக் கல்வி இயக்குநர் தகுதியில் உள்ள ஒரு மூத்த கண் மருத்துவர், இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் திட்ட இயக்குநர் ஆவார். மக்கள் நல்வாழ்வுத் துறை அரசுச் செயலாளர் நிர்வாகக் கட்டுப்பாட்டிலும், மாநில நல வாழ்வு சங்கத்தின் குழும இயக்குநரின் நிதிக் கட்டுப்பாட்டிலும் இவர் பணியாற்றுகிறார். தேசிய பார்வை இழப்பு கட்டுப்பாட்டு திட்டச் செயல்களை செயல்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட மாவட்ட பார்வை இழப்பு தடுப்புச் சங்கங்கள், தேசிய ஊரக நல வாழ்வு இயக்கத்தின்கீழ் அமைக்கப்பட்ட மாவட்ட நல வாழ்வுச் சங்கத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மூத்த கண் மருத்துவர் மாவட்ட திட்ட அலுவலராக உள்ளார்.

***4.2.1.*** மாநிலத்திலும், நாட்டிலும் பார்வை இழப்பிற்கு கண்புரை ஒரு முக்கிய காரணமாக கண்டறியப்பட்டதால் கண்புரை அறுவை சிகிச்சைக்கு இந்தத் திட்டத்தில் முக்கியத்துவம் தரப்பட்டது. எனவே, பிரத்யேகக் கண் சிகிச்சைப் பிரிவு கட்டடம், இருட்டறை குறிப்பாக கண் அறுவைக்கான சிகிச்சை போன்ற பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகள் உலக வங்கி நிதி உதவியில் கட்டப்பட்டன. தற்போது கண் தானத்தை அதிகரிக்கவும் மற்றும் கண் அழுத்த நோய், சர்க்கரை நோயினால் கண்விழியின் பின்புற திரையில் ஏற்படும் நோய்கள் போன்ற கண்புரை அல்லாத காரணங்களால் ஏற்படும் பார்வை இழப்பை தடுக்கவும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தனியார் அமைப்பை ஈடுபடுத்தி, கண்புரை நோய் உள்ளவர்களைக் கண்டறிந்து அவர்களுக்குச் சிகிச்சை

[2011 செப்டம்பர் 12

அளிப்பதில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது. தேசிய ஊரக நலவாழ்வு இயக்க நிதியைப் பயன்படுத்தி, ஆறாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை படிக்கும் பள்ளி மாணவர்களுக்கு கண் பரிசோதனை செய்து, பார்வை குறைபாடு உள்ளோருக்கு இலவசமாக கண்ணாடி வழங்கும் முன்னோடி திட்டம் இம் மாநிலத்தில் தொடங்கப்பட்டுள்ளது. கண் தானம் மூலம் கண்களை சேகரித்து கருவிழி மாற்று அறுவை சிகிச்சை செய்து குணப்படுத்துவதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது.

***4.3.*** தேசிய ஊரக நலவாழ்வு இயக்கத்தின்கீழ் இத்திட்டத்திற்கு விடுவிக்கப்பட்ட நிதியிலிருந்து 2010-11 ஆம் (01-04-2010 முதல் 31-03-2011 வரை) ஆண்டில் கீழ்க்கண்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

| வ. எண் | | திட்ட விபரம் | 2010-11 ஆம் ஆண்டிற்கான இலக்கீடு | சாதனை | சாதனை விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| 1 | | கண்புரை அறுவைச் சிகிச்சை | 6,50,000 | 5,50,015 | 85% |
| 2 | | **பள்ளி சிறுவர்களுக்கு கண் பரிசோதனை செய்தல்** | | | |
| | அ | பரிசோதிக்கப்பட்ட பள்ளி சிறுவர்கள் | 60,000 | 19,82,727 | 330% |
| | ஆ | கண்பார்வை குறைபாடு உள்ள சிறார்களின் எண்ணிக்கை | 36,000 | 1,39,218 | 386% |
| | இ | ஏழை குழந்தைகளுக்கு இலவச கண் கண்ணாடி | 25,000 | 50,208 | 200% |
| 3 | | **கண் தானம் பெறுதல்**<br>சேகரிக்கப்பட்ட கண்கள் | 8,500 | 11,820 | 139% |



2011 செப்டம்பர் 12]

***4.4.*** அரசு மருத்துவமனைகளில் கண்புரை அறுவை சிகிச்சையை அதிகரிக்கும் நோக்கத்தில் தனியார் கண் அறுவை சிகிச்சை மருத்துவர்களை சிகிச்சை ஒன்றுக்கு ரூ.150 வீதமும், கண்புரை அறுவை சிகிச்சையில் பயிற்சி பெற்ற செவிலியர்களை சிகிச்சை ஒன்றுக்கு ரூ.50 வீதமும் அமர்த்திக்கொள்ள அரசு அனுமதித்துள்ளது.

**4.5. 2011–2012 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட உள்ளன:**

அ) கண்புரை அறுவை சிகிச்சையில் 95 விழுக்காட்டிற்கு மேல் விழி உள்ளாடி (I.O.L.) பொருத்துதல்.

ஆ) VI முதல் X வரை உள்ள பள்ளி மாணவர்களுக்கு பார்வைக் குறைபாடுகளைக் கண்டறிய ஏதுவாக அவர்களை கண் பரிசோதனைக்கு உட்படுத்தி, இலவச கண் கண்ணாடி வழங்குதல்.

இ) கண் வங்கி மற்றும் கண்தான மையங்களை கண்களைச் சேகரித்து கருவிழி மாற்று அறுவை சிகிச்சை செய்யும் வகையில் மேம்படுத்தல். அதன்மூலம் கருவிழி நோய்கள் மற்றும் காயங்களால் ஏற்படும் பார்வைக் குறைபாட்டை குறைத்தல்.

ஈ) நவீன முறையில் கண்புரை அறுவை சிகிச்சை, கண் அழுத்த நோய் சிகிச்சை, சர்க்கரை நோயினால் கண் விழி பின்புற திரையில் ஏற்படும் நோய்களுக்கு சிகிச்சை மற்றும் இதர சிறப்பு வழிமுறைகளை பின்பற்ற அரசு கண் மருத்துவர்களுக்குச் சிறப்பு பயிற்சி அளித்தல்.

உ) பொது நிறுவனங்களில் கட்டமைப்பு வசதிகளை வழங்கி கண் பாதுகாப்புச் சேவையினை மேம்படுத்துதல்.

ஊ) கண் அழுத்தநோய் மற்றும் சர்க்கரை நோயினால் கண் விழித்திரையில் ஏற்படும் நோய் போன்றவற்றை கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் வகையில் களப் பணியாளர்களின் திறமையை அதிகரிக்க கவனம் செலுத்துதல்.

## அத்தியாயம்–5

## பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம்

### 5.1. துறையின் பின்னணி:

தமிழகத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம் 1923 ஆம் ஆண்டில் கிராமம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் பரவும்வகை நோய்களை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தலை முக்கிய நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. பொது சுகாதாரச் சட்டம், 1939, நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பே இயற்றப்பட்டது. நல அலுவலர்களுக்கு அதிகாரமளிக்கும் சட்டப்பூர்வமான கருவியாக செயல்பட்டு, பொது சுகாதாரச் சட்டத்தை நிலைநாட்டி சுகாதார பாதுகாப்பினை மக்களுக்கு அளித்து வருகிறது. மாநிலத்தில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களையும் நிர்வகிப்பதும் மேற்பார்வையிடுவதும் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநரகத்தின் பொறுப்பாகும். ஆரம்ப சுகாதார நிலைய சேவைப் பணிகள் 1,589 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 8,706 துணை சுகாதார நிலையங்கள்மூலம் வழங்கப்படுகின்றன. 385 நடமாடும் மருத்துவக் குழுக்கள் மூலமாக தொலை தூரங்களில் வசிக்கும் மக்களுக்கு மருத்துவச் சேவைகள் வழங்கப்படுகின்றன. பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத் திட்டம், தேசிய ஊரக நல வாழ்வு திட்டத்தின் ஆதரவுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், தேசிய தடுப்பூசி திட்டம், தேசிய குடும்ப நலத் திட்டம், தேசிய வயிற்றுப்போக்கு நோய்கள் கட்டுப்பாட்டு திட்டம், பூச்சிகளால் பரவும் நோய்கள் தேசிய கட்டுப்பாட்டு திட்டம், பரவா வகை நோய்கள் கட்டுப்பாட்டு திட்டம், தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம், பள்ளி சிறார் நல்வாழ்வுத் திட்டம், தேசிய அயோடின் குறைபாடு கட்டுப்பாட்டுத் திட்டம், புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டம் போன்ற



திட்டங்களை ஆரம்ப சுகாதார கட்டமைப்புமூலம் செயல்படுத்தி வருகிறது. மேலும் பல்வேறு பொது சுகாதாரச் சட்டங்களான, உணவுக் கலப்பட தடுப்புச் சட்டம், தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம், புகையிலை பொருட்களை தடைசெய்யும் சட்டம் மற்றும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சட்டம் போன்ற சட்டங்களை நடைமுறைப்படுத்தலும் இந்த இயக்ககத்தின் பொறுப்பாகும். திருத்தப்பட்ட தேசிய காச நோய் கட்டுப்பாட்டுத் திட்டம், தேசிய எய்ட்ஸ் தடுப்பு கட்டுப்பாடு திட்டம், தேசிய கண் பார்வை இழப்பு கட்டுப்பாடு திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், ஊரக நீர் துப்புரவுத் திட்டங்கள் மற்றும் இதர சமுதாய நலத் திட்டங்களை செயல்படுத்த அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தீவிர ஒத்துழைப்பு அளித்து வருகின்றன. இந்த இயக்ககம் செயல்படுத்தும் பல்வேறு பொது சுகாதார திட்டப் பணிகளால் பிறப்பு வீதம், சிசு மரண வீதம், தாய் மரண வீதம், மொத்த கருவள விகிதம், பரவும் நோய்கள் கட்டுப்பாடு மற்றும் தடுப்பூசிகளால் தடுக்கக்கூடிய நோய்கள் கட்டுப்பாடு ஆகிய பல்வேறு சுகாதாரக் குறியீடுகளில் நல்ல முன்னேற்றம் பிரதிபலிக்கிறது. மக்களுக்கு பொது சுகாதார சேவைகளை வழங்குவதில் ஒரு முன்னோடி மாநிலமாக தமிழகம் உருவாகியுள்ளது.

### 5.2. ஆரம்ப சுகாதார நிலையங்கள்:

#### 5.2.1. ஆரம்ப சுகாதார நிலையக் கட்டமைப்பு:

தமிழ்நாட்டில் தற்போதுள்ள 1,589 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1,485 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. 56 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள 48 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இடம் தேர்வு, மற்றும் நில மாற்றம் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. நிலம் கிடைக்கப் பெற்றதும் இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

#### 5.2.2. ஆரம்ப சுகாதார நிலையப் பணிகள்:

2010-11 ஆம் ஆண்டில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 8,11,48,000 புறநோயாளிகளும், 11,27,655 உள்நோயாளிகளும் சிகிச்சை

[2011 செப்டம்பர் 12

பெற்றுள்ளனர். சராசரியாக ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையமும் நாளொன்றுக்கு 144 புறநோயாளிகளுக்கும், மாதமொன்றுக்கு 61 உள்நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்கின்றன. தேசிய ஊரக நல்வாழ்வு திட்டத்தின்கீழ் 1,539 ஆரம்ப சுகாதார நிலையங்களில் தலா 3 செவிலியர்கள் பணியமர்த்தப்பட்டு 24 மணிநேர பிரசவ சேவைகள் வழங்கப்படுகின்றன. 2010-11 ஆம் ஆண்டில் 2,76,371 பிரசவங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெற்றுள்ளன. இது மொத்த பிரசவ நிகழ்வுகளில் 26.8 சதவீதமாகும். சராசரியாக மாதமொன்றுக்கு 15 பிரசவங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிகழ்கின்றன. 1,589 ஆரம்ப சுகாதார நிலையங்களின் நிலையம் சார்ந்த சேவைகள் அனைத்தும் நிலையம்சார் பணிகளின் கண்காணிப்பு அறிக்கைமூலமாக கண்காணிக்கப்பட்டு அதன் பின்னூட்ட விளைவு மாவட்டங்களுக்கு மேலும் மேம்படுத்த அனுப்பப்படுகிறது.

### 5.2.3. ஆரம்ப சுகாதார நிலையங்களின் தரம் உயர்த்துதல்:

ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தபட்சம் 30 படுக்கைகள் வசதி கொண்ட ஒரு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தினை அத்தகைய சுகாதார வசதிகள் இல்லாத வட்டாரத்தில் படிப்படியாக அமைத்திட வேண்டும் என 2001ஆம் ஆண்டில் அரசு முடிவெடுத்தது. ஒவ்வொரு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திலும் 5 மருத்துவர்கள், அறுவை அரங்க வசதி நவீன கருவிகளான அல்ட்ரா சோனாகிராம், இ.சி.ஜி. செமி ஆட்டோ அனலைசர், ஊடுகதிர் இயந்திர சாதனம் மற்றும் நோயாளர் ஊர்தி போன்ற வசதிகள் உள்ளன. தற்போது தமிழ்நாட்டில் 283 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 252 வட்டாரங்களில் மேம்படுத்தப்பட்டுள்ளன. வரும் ஆண்டுகளில் எஞ்சியுள்ள 162 வட்டாரங்களில் 30 படுக்கைகள் கொண்ட வசதியை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

### 5.2.4. ஐ.எஸ்.ஓ. 9001 தரச் சான்று:

தரமான சுகாதார சேவைகளை மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற அரசின் நோக்கத்தின்படி, 12 சுகாதார மாவட்டங்களில் உள்ள 48 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ISO 9001 தரச் சான்று பெற தேசிய ஊரக நல வாழ்வு இயக்க நிதியினை பயன்படுத்தி சான்று பெறப்பட்டது. நடப்பு ஆண்டில் எஞ்சிய சுகாதார மாவட்டங்களில் மேலும் 30 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ISO 9001 தரச் சான்று பெற முயற்சிகள்



2011 செப்டம்பர் 12]

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையங்கள் மற்ற ஆரம்ப சுகாதார நிலையங்களின் மேம்பாட்டிற்குமுன் உதாரணமாக செயல்படும்.

### 5.2.5. உணவு:

கர்ப்பிணித் தாய்மார்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அல்ட்ரோசோனாகிராம் பரிசோதனைக்காக வரும்போது சத்தான உணவு மதிய வேளையில் வழங்கப்படுகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவத்திற்காகவும், பிரசவத்திற்கு பின் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்யவும் அனுமதிக்கப்படும் தாய்மார்களுக்கும் மூன்று நாட்களுக்கு மூன்று வேளை உணவு வழங்கப்படுகிறது. போக்குவரத்து வசதி குறைவானப் பகுதிகளில் 17 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவ காத்திருப்பு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதிக தூரம் மற்றும் எளிதில் சென்றுவர இயலாத தொலை தூரத்திலிருந்து வரும் தாய்மார்களுக்கும், அவர்களுடன் வரும் உடனாளுக்கும் 7 நாட்களுக்கு உணவும் வழங்கப்படுகிறது. தேசிய ஊரக நல வாழ்வுக் குழும நிதி, நோயாளர் நலச் சங்கம் மற்றும் கிராம நல வாழ்வு, குடிநீர் மற்றும் துப்புரவுக் குழுக்கள் நிதி உணவு வழங்க பயன்படுத்தப்படுகின்றன.

### 5.2.6. ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் சிகிச்சை வசதிகள்:

பல் மருத்துவ வசதிகள் 148 ஆரம்ப சுகாதார நிலையங்களில் வழங்கப்படுகின்றன. பள்ளி செல்லும் சிறார்களிடையே காணப்படும் பல் சொத்தை போன்ற பல் நோய் மற்றும் இதர நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. அனைத்து மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பல் சிகிச்சை வசதிகளை படிப்படியாக ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

### 5.3. துணை சுகாதார நிலையங்கள்:

தமிழகத்தில் தற்போது உள்ள 8,706 துணை சுகாதார நிலையங்களில் 6,510 துணை சுகாதார நிலையங்கள் அரசு கட்டடங்களிலும், 2,196 துணை சுகாதார நிலையங்கள் வாடகை மற்றும் வாடகை இல்லா கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. துணை சுகாதார நிலையங்கள் கட்டவும், தற்போது உள்ள கட்டடங்களை பழுது பார்க்கவும் தேசிய ஊரக நல வாழ்வு இயக்கத்தின்கீழ் நிதி கோரப்படும்.

[2011 செப்டம்பர் 12

### 5.4. தடுப்பூசித் திட்டம்:

*5.4.1.* குழந்தைகளைப் பாதிக்கும் தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இரணஜன்னி, தட்டம்மை, இளம்பிள்ளை வாதம் மற்றும் காசநோய் ஆகிய நோய்களிலிருந்து குழந்தைகளை காப்பாற்ற நாடு தழுவிய தடுப்பூசித் திட்டம் 1985ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் ஆண்டொன்றுக்கு 11 இலட்சம் குழந்தைகள் பயனடைகின்றனர். மேலும், 12 லட்சம் கருவுற்ற தாய்மார்களுக்கு டெட்டனஸ் டாக்ஸாயிடு தடுப்பூசி மருந்து ஒவ்வொரு ஆண்டும் அளிக்கப்பட்டு, பிரசவத்தின் போது டெட்டனஸ் தொற்று வராமல் தடுக்கப்படுகிறது. இந்த ஆண்டு முத்தடுப்பூசி, மஞ்சள்காமாலை ‘பி’ மற்றும் ஹீமொபிளஸ் இன்புளுசா-பி ஆகிய தடுப்பூசிகள் உள்ளடக்கிய பெண்டாவேலண்ட் என்ற ஒரே தடுப்பூசித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட நமது மாநிலம் சேர்க்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 18 மாத குழந்தைகளுக்கு இரண்டாவது தவணை தட்டம்மை தடுப்பூசி வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### 5.4.2. பல்ஸ் போலியோ சிறப்பு முகாம்:

போலியோ நோயை அறவே ஒழிக்க 1995-96 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் போலியோ சொட்டு மருந்து முகாம்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதனுடன் வழக்கமான தடுப்பூசியும் சேர்ந்து நமது மாநிலத்திலிருந்து இளம்பிள்ளை வாதம் என்ற நோய் அறவே ஒழிக்கப்பட்டுவிட்டது.

### 5.4.3. குடிபெயர்ந்தோர் குழந்தைககளின் பால் (Migrant Children) சிறப்புக் கவனம்:

தற்காலிக வாழ்விடங்கள் மற்றும் குடிபெயர்ந்து வாழ்வோரின் குழந்தைகளைத் தடுப்பூசிகளால் தடுக்கக்கூடிய நோய்களிலிருந்து காப்பாற்ற சிறப்பு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### 5.4.4. ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசித் திட்டம்:

பதினைந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு மூளைக் காய்ச்சல் வராமல் தடுப்பதற்காக ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசித் திட்டம், கடலூர், விழுப்புரம், விருதுநகர், மதுரை, திருவாரூர்,



2011 செப்டம்பர் 12]

திருச்சி, பெரம்பலூர், தஞ்சாவூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய நோய் அதிகமுள்ள மாவட்டங்களில் தொடங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.4.5. தடுப்பூசித் திட்டத்தின் தாக்கம்:

தடுப்பூசிப் பணிகள் தமிழகத்தில் வெற்றிகரமாக செயல்படுத்துவதனால் 2004 ஆம் ஆண்டு முதல் போலியோ நோயற்ற மாநிலமாக திகழ்ந்து வருகிறது. 2006 ஆம் ஆண்டில் உலக சுகாதார நிறுவனத்தால் இரணஜன்னி ஒழிப்பு நிலை சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இரணஜன்னி ஆகிய நோய்கள் முற்றிலும் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. தட்டம்மை நோய் ஒழிப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது.

### 5.5. டாக்டர் முத்துலெட்சுமி மகப்பேறு நிதி உதவித் திட்டம்:

தற்போது, வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள கருவுற்ற பெண்களின் ஊட்டச்சத்து உணவுக்காகவும், பேறு காலத்தில் அவர்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்டவும், குறைந்த எடையுள்ள குழந்தை பிறப்பினைத் தவிர்க்கவும், நலமான குழந்தைகளை ஈன்றெடுக்கவும், கருவுற்ற பெண்கள் ஒவ்வொருவருக்கும் மகப்பேறு நிதி உதவி ரூ.6,000/- தற்போது வழங்கப்படுகிறது. கர்ப்பிணி பெண்களின் ஊட்டச்சத்து நிலையை உயர்த்த, ஏழைப் பெண்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் மகப்பேறு நிதி உதவியை இரண்டு குழந்தை மகப்பேறு வரை ரூ.12,000/-ஆக உயர்த்தப்படும். இதில், முதல் தவணை ரூ.4,000/- அரசு சுகாதார நிலையங்களில் பிரசவ முன் கவனிப்பு முடிந்தவுடன் 7-வது மாதத்திலும், இரண்டாவது தவணை ரூ.4,000/- அரசு மருத்துவ நிலையத்தில் பிரசவித்தவுடனும் இறுதித் தவணை ரூ.4,000/- டி.பி.டி / ஓ.பி.வி மூன்றாவது தவணை தடுப்பூசி போட்டுக் கொள்ளும்போதும் வழங்கப்படும். இந்தத் திட்டத்தை செயல்படுத்த நடப்பாண்டில் ரூ.596 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 5.6. பள்ளி சிறார் நல்வாழ்வுத் திட்டம்:

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு முடிய பயிலும் அனைத்து மாணவர்களுக்கும்

[2011 செப்டம்பர் 12

ஒருங்கிணைந்த சுகாதார வசதியை அளிக்க பள்ளி சிறார் நல்வாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் மற்றும் இதர சுகாதார பணியாளர்கள் கொண்ட மருத்துவக் குழுக்கள் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பள்ளிகளை ஒவ்வொரு வியாழக்கிழமையும் முன்பயணத் திட்டத்தின்படி பார்வையிடுகின்றனர். ஒவ்வொரு மருத்துவக் குழுவும் சுமார் 200 முதல் 250 மாணவர்களைப் பரிசோதிக்கின்றனர். பள்ளி மாணவர்களிடையே காணப்படும் நோய்களின் தன்மையை முன்னரே கண்டறிந்து, அதனால் அவர்களின் கல்வி மற்றும் உடல்நலம் பாதிக்காமல் இருப்பதற்கு உரிய சிகிச்சை அளிக்க இத்திட்டம் வழிவகை செய்கிறது. மேல் சிகிச்சை தேவைப்படும் மாணவர்கள் உயர் சிசிக்சை மருத்துவ நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றனர்.

**5.7. தொற்று நோய் கட்டுப்பாடு :**

நோய்கள் கொள்ளை நோய்களாக உருவெடுக்கும் போது தொற்று நோய் கட்டுப்பாடு என்பது இந்த இயக்ககத்தின் மிகப் பெரிய பணிகளில் ஒன்றாக கருதப்படுகிறது. பெரும்பான்மையான மாவட்டங்களில் மழை மற்றும் கோடைக் காலங்களில் கடும் வயிற்று போக்கு நிகழ்வுகள், காலரா நோய்கள் ஆண்டு முழுவதும் காணப்படுகின்றன. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல், சுத்தமான உணவு மற்றும் துப்புரவான சூழ்நிலை நிலவ சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒருங்கிணைந்த நோய்கள் கண்காணிப்புத் திட்டத்தில் தினசரி மற்றும் வாரந்திர அடிப்படையில் தொற்றுநோய் நிகழ்வுகளையும், கொள்ளைநோய் நிகழ்வுகளையும் கண்காணிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**5.8. பன்றிக் காய்ச்சல்:**

தமிழகத்தில் பன்றிக் காய்ச்சல் நோய் முதன் முறையாக மே 2009 ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது. 2009 ஆம் ஆண்டில் 3,047 நோயாளிகள் நோய் பாதிப்புக்கு உள்ளானதுடன் 10 நபர்கள் இறந்துள்ளனர். 2010 ஆம் ஆண்டில், கண்டறியப்பட்ட 1,405 நோயாளிகளில் 24 நோயாளிகள் இந்நோயால் இறந்துள்ளனர்.



2011 செப்டம்பர் 12]

இந்நோயை முன்கூட்டியே கண்டறிதல், சிகிச்சை அளித்தல், தடுப்பூசி அளித்தல், பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற தடுப்பு நடவடிக்கைகளை இயக்ககம் முன்னதாகவே எடுத்ததால் நோய் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. 2011 ஆம் ஆண்டு (ஜூலை முடிய) 20 நோயாளிகள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளனர். இதில் இறப்புகள் ஏதும் இல்லை. தினசரி கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது. நோய் பாதிப்புள்ளோர்களுக்கு உடனடியாக தகுந்த சிகிச்சை அளித்து தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

**5.9. நீர் பகுப்பாய்வு ஆய்வகங்கள்:**

சென்னை மற்றும் கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டுள்ள நீர் பகுப்பாய்வகங்கள் நீர் மாதிரிகளை சேகரித்து பகுப்பாய்வு செய்து குடிதண்ணீரில் உள்ள மாசு மற்றும் தூய்மைக் கேட்டை கட்டுப்படுத்துகிறது. மேலும் இந்த ஆய்வுக் கூடங்கள் தொழிற்சாலைக் கழிவுகளை பரிசோதனை செய்து தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியத்துடன் இணைந்து கள ஆய்வுகள்மூலம் தொழிற்சாலை மாசு மற்றும் சுற்றுச்சூழல் மாசுகள் கண்காணிக்கப்பட்டு, தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க உதவி வருகின்றன.

**5.10. உணவு கலப்பட தடுப்புச் சட்டம்:**

உணவு கலப்பட தடுப்புச் சட்டம் 1954 மற்றும் அதன் விதிகள் 1955-ன்கீழ் உணவு கலப்படத்தைத் தடுக்கவும், தரமான உணவுப் பொருட்கள் கிடைக்கவும் இச்சட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உணவு ஆய்வாளர்களால் எடுக்கப்படும் உணவு மாதிரிகள் கிண்டி, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், பாளையங்கோட்டை, சேலம் மற்றும் சென்னை மாநகராட்சி உணவு பகுப்பாய்வுக் கூடங்களில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. கிண்டி, தஞ்சாவூர் மற்றும் பாளையங்கோட்டை உணவு பகுப்பாய்வுக் கூடங்கள், உலக வங்கி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 833.56 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடங்கள் மற்றும் நவீன உபகரணங்களுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன. மாநிலம்

[2011 செப்டம்பர் 12

முழுவதும் உணவு பாதுகாப்பை உறுதிபடுத்த சிறப்பு திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்திய அரசு கொண்டு வந்துள்ள உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம், 2006 மற்றும் விதிகள் 2011 ஆகஸ்டு 5, 2011 முதல் செயல்படுத்தப்படுகின்றன.

## 5.11. குடிமுறை பதிவு:

### 5.11. 1. பிறப்பு இறப்பு பதிவேடு:

1969 ஆம் ஆண்டு மத்திய பிறப்பு இறப்பு பதிவுச் சட்டம் மற்றும் திருத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிறப்பு இறப்பு விதிகளின்படி மாநிலத்தில் பிறப்புகள் மற்றும் இறப்புகள் நிகழ்ந்த இடத்திலேயே பதிவு செய்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பதிவாளர்களுக்கும் பிறப்பு இறப்பு பதிவு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இறப்பிற்கான காரணம் குறித்து மருத்துவச் சான்றிதழ் அளிப்பது தொடர்பாக மருத்துவர்களுக்கும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பிறப்பு இறப்பு பதிவு செய்யும் முறை தொடர்பாக திறனாய்வு செய்யப்பட்டு முறையாக கண்காணிக்கப்படுகிறது. 2009 ஆம் ஆண்டு மாதிரி புள்ளிவிவரங்களின்படி, தமிழ்நாட்டில் பிறப்பு விகிதம் 16.3 ஆகவும், இறப்பு விகிதம் 7.6 ஆகவும், சிசு இறப்பு விகிதம் 28 ஆகவும் உள்ளது.

### 5.11.2. கூடுதல் பிறப்பு இறப்பு நிலையங்கள் (ம) சுகாதார ஆய்வாளர்களை பிறப்பு இறப்பு பதிவாளர்களாக நியமித்தல்:

தமிழ்நாட்டிலுள்ள 1,589 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் கூடுதல் பிறப்பு இறப்பு பதிவு மையங்களாக அறிவித்து அங்கு பணிபுரியும் சுகாதார ஆய்வாளர்கள் பிறப்பு இறப்பு பதிவாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவம் முடிந்து வீட்டிற்கு செல்லும்போதே பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.



2011 செப்டம்பர் 12]

### 5.11.3. இணைய தளம் மூலமாக பிறப்பு மற்றும் இறப்பு பதிவு முறை:

தற்போது சென்னை மற்றும் மதுரை மாநகராட்சிகளில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சான்றிதழ்கள் ஆன்லைன் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன. இதே முறையை மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 5.12. பூச்சிகளால் பரவும் நோய் கட்டுப்பாடு:

### 5.12.1. மலேரியா:

மலேரியா நோய் ஒரு பொது சுகாதாரப் பிரச்சனையாக சென்னை, இராமநாதபுரம், தூத்துக்குடி தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் சில நகர மற்றும் கிராமப் பகுதிகளில் தொடர்ந்து இருந்து வருகிறது. 2010 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பதிவான 17,086 மொத்த மலேரியா நிகழ்வுகளில் 35.3 விழுக்காடு கிராமப்புறங்களிலும், 64.7 விழுக்காடு நகர்ப்புறங்களிலும் பதிவாகியுள்ளன. நகர்ப்புற மலேரியாவில் 88.5 விழுக்காடு நிகழ்வுகள் சென்னை மாநகரத்தில் நிகழ்ந்துள்ளன.

### 5.12.2. ஜப்பானிய மூளைக் காய்ச்சல்:

கடந்த பத்தாண்டுகளாக ஜப்பானிய மூளைக் காய்ச்சல் நோய் தமிழ்நாட்டில் முக்கிய சுகாதாரப் பிரச்சினையாக இருந்து வருகிறது. பொதுவாக இந்நோய் பெரம்பலூர், விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, விருதுநகர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் காணப்பட்டது. கடலூர், விழுப்புரம் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் உள்ள ஜப்பானிய மூளைக் காய்ச்சல் நோய் கட்டுப்பாட்டு மையங்கள் சென்னையில் உள்ள ஒருங்கிணைப்பு பிரிவுடன் இயங்கி வருகின்றன. மேற்குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் வழக்கமாக வழங்கப்படும் தடுப்பூசித் திட்டத்தின்போது அனைத்து 18 மாத குழந்தைகளுக்கும் இந்த தடுப்பூசி அளிக்கப்படுகிறது. நோய் பாதிப்புள்ள மாவட்டங்களில் மூளைக் காய்ச்சல் பரப்பும் நோய் பரப்பிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. புகை தெளிப்பான்கள்மூலம் சந்தேகத்திற்குரிய மூளைக் காய்ச்சல் நிகழ்வு

ஏற்படும் கிராமங்களில் கொசுக்களை அழிக்க புகை அடிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. மாவட்ட மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகள்மூலம் மூளைக் காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ள நபர்களைக் கண்டறிய ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்களிடமிருந்து இரத்த மாதிரி எடுக்கப்படுகிறது. இரத்த மாதிரிகள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், கிங் நிலையம் மற்றும் ஒன்பது மண்டல பூச்சியியல் குழுமங்களில் உள்ள ஆய்வகங்களில் ஆய்வு செய்யப்பட்டு, ஜப்பானிய மூளைக் காய்ச்சல் உள்ளவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

**5.12.3. யானைக்கால் நோய்:**

தமிழகத்தில் 1957 ஆம் ஆண்டு முதல் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 43 நகரப் பகுதிகளில் யானைக்கால் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நகர்புறங்களில் 25 இடங்களில் யானைக்கால் நோய் கட்டுப்பாடு மையங்கள் மற்றும் 44 இடங்களில் இரவு இரத்த பரிசோதனைகள் செய்யும் மையங்கள்மூலம் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதன் முறையாக கடலூர் மாவட்டத்தில் 1996-ல் அனைவருக்கும் டி.இ.சி. மாத்திரை வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 1997-1998 ஆம் ஆண்டில் இத்திட்டம் நோய் கண்டறியப்பட்டுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. டி.இ.சி மாத்திரைகள் மத்திய அரசால் வழங்கப்படுகின்றன. அனைத்து செயல்முறை செலவுகளையும் மாநில அரசு ஏற்கிறது. கால் வீக்கம் அடைந்தவர்களுக்குக் கால்களை பராமரிக்க பயிற்சியும், விரை வீக்கம் கொண்டவர்களுக்கு அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டு வருகிறது. 33,947 நபர்கள் யானைக்கால் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக இம்மாநிலத்தில் பதிவாகி உள்ளது. இத்தகைய நோயாளிகளின் கால்களை சுத்தமாக வைத்துக்கொள்ள, நோயை குணப்படுத்தும் மருந்துப் பைகள் வழங்கப்படுகின்றன.





**5.12.4. டெங்கு:**

டெங்கு காய்ச்சல் ஒருவகையான வைரஸினால் ஏற்படக்கூடிய நோயாகும். தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் டெங்கு காய்ச்சல் கண்டறியப்பட்டுள்ளது. மத்திய அரசு கண்டறிந்துள்ள 15 மருத்துவக் கல்லூரிகள், 9 மண்டல பூச்சியியல் குழுக்கள், பூச்சிகள் மற்றும் விலங்கின பரிவர்த்தனை நோய்கள் கட்டுப்பாடு மையம் ஓசூர் மற்றும் கிண்டி கிங் நோய்த் தடுப்பு மருந்து நிலையம் ஆகிய இடங்களில் டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய் கண்டறியும் வசதிகள் உள்ளன. இந்த நோயைப் பரப்பும் எடிஸ் கொசுவை, செயற்கையான நீர் நிலைத் தேக்கங்கள் போன்ற கொசு உற்பத்தியாகும் இடங்களில் அழிக்கப்படுகின்றன.

**5.12.5. சிக்குன்குனியா:**

1964 ஆம் ஆண்டில் தமிழகத்தில் சென்னை மாநகராட்சி பகுதிகளில் சிக்குன்குனியா காய்ச்சல் முதன்முறையாக கண்டறியப்பட்டது. சிக்குன்குனியா காய்ச்சல் 2006 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் மறுபடியும் கண்டறியப்பட்டது. இந்நோயால் இதுவரை 64,802 நபர்கள் பாதிக்கப்பட்டதாக கண்டறியப்பட்டுள்ளது. மாநில அரசு சிக்குன்குனியா மற்றும் பிற கொள்ளை நோய்த் தடுப்புக்காக ரூ.7.73 கோடி நிதி ஒதுக்கீடு செய்து கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை அழித்தல் மற்றும் கொசுப்புழுக்கொல்லி மருந்து தெளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. துறை மேற்கொண்டு வரும் தடுப்பு நடவடிக்கைகளால் இந்நோய் வீழ்ச்சி அடைந்து வருகிறது.

**5.12.6. லெப்டோஸ்பைரோஸிஸ்:**

லெப்டோஸ்பைரோஸிஸ் என்பது பாக்டீரியாவினால் ஏற்படும் ஒருவகையான கொடிய நோயாகும். இந்நோய் சரியான நேரத்தில் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு, கட்டுப்படுத்த வேண்டிய நோயாகும். தமிழகத்தில் திருவள்ளூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் ஏழு லெப்டோஸ்பைரோஸிஸ் சிகிச்சை மையங்கள் துவங்கப்பட்டு, நோய் கண்டறிந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. துரிதமாக நோய் கண்டறியும் பரிசோதனைப் பெட்டிகள், மேற்கண்ட ஏழு சிகிச்சை மையங்களுக்கும், 9 மண்டல பூச்சியியல் குழுக்களுக்கும்

வழங்கப்பட்டு இந்நோயை கண்டறிந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஓசூரிலுள்ள நோய் பரப்பிகள் கட்டுப்பாட்டு மையத்திற்கு சிறப்புக் குழுவின் உதவியுடன் இந்நோய் பரவுவதை ஆய்வு செய்யும் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது. இயக்குநரகத்தில் 2008 ஆம் ஆண்டு முதல் மாநில அளவிலான ஒரு பரிந்துரை பரிசோதனை மையம் செயல்பட்டு வருகிறது.

### 5.13. தேசிய புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டம்:

***5.13.1.*** தேசிய புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் 2003 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின்கீழ் மாநில புகையிலை கட்டுப்பாட்டு மையம் 2007 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டு மையம் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டு, அவை துணை இயக்குநர்கள் தலைமையில் இயங்கி வருகின்றன. தேசிய புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் விழுப்புரம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்கள் முன்மாதிரி மாவட்டங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்திய அரசு 2007-2011 ஆம் ஆண்டு வரை மைய அரசு ரூ.27.33 இலட்சம் நிதி ஒதுக்கீடு மாநில மையத்திற்கும் இரண்டு முன்னோடி மாவட்டங்களுக்கும் ஒதுக்கீடு செய்துள்ளது.

### 5.13.2. புகையிலையில்லா சென்னை:

2011-ல் சென்னையை புகையில்லா நகரமாக்க மாநில புகை கட்டுப்பாட்டு மையத்திற்கு புளூம்பெர்க்ளோபல் இனிஷியேட்டிவ்ஸ் உதவியுடன் புகை (யிலை) யில்லா சென்னை திட்டம் வழங்கப்பட்டுள்ளது. நான்கு புகையிலை தடுப்பு நடவடிக்கை வாகனங்கள்மூலம் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் புகையிலை தடுப்புச் சட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி செயல்படுத்தப்படுகிறது. பலதரப்பட்ட அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு பணி மேம்பாட்டு கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

### 5.14. பயிற்சி மற்றும் தொடர் கல்வி திட்டம்:

மதுரை, கடலூர், சேலம் மற்றும் காந்திகிராமம் ஆகிய இடங்களில் 18 மாதகால பல்நோக்கு சுகாதார பெண் பணியாளர் பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டது. ஒவ்வொரு பயிற்சி மையத்திலும் 30 நபர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். மேற்கண்ட பல்நோக்கு சுகாதார (பெண்) பணியாளர் பயிற்சி மையங்களில் பயிற்சிக்காக 100 மாணவர்கள் 2010-2011 ஆண்டில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அடுத்த பயிற்சி ஜனவரி 2012-ல் தொடங்க உள்ளது. 300 மாணவர்களுக்கு ஒரு ஆண்டு பலநோக்கு சுகாதார (ஆண்) பணியாளர் பயிற்சி, 6 பயிற்சி மையங்களில் வழங்கப்படுகிறது. பலநோக்கு சுகாதார பணியாளர் (ஆண்) பயிற்சிக்கு மாணவர் சேர்க்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆண் களப் பணியாளர்கள் காலியாக உள்ள இடங்கள் நிரப்பப்படும். 2011-2012-ல் பூவிருந்தவல்லி பொது சுகாதார நிறுவனத்தை தரம் உயர்த்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழக பொது சுகாதாரப் பணிகளில் உள்ள அலுவலர்கள், பயிற்சி பெறுவதற்காக பொது சுகாதார முதுநிலை பட்டப் படிப்புகளான எம்.டி சமுதாய மருத்துவம், பொது சுகாதார பட்ட மேற்படிப்பு ஆகிய படிப்புகள் தொடங்கப்படும்.





### 5.15. மகளிர் தன் சுத்தத்தை மேம்படுத்தல்:

இளம் பெண்களிடையே சுகாதாரத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது, எதிர்வரும் காலத்தில் தொற்று நோய்களையும், கருவுறாமையின் ஆபத்தையும் குறைப்பதற்குப் பெரும் உதவியாக இருக்கும். கிராமப்புறங்களில் வாழும் இத்தகையப் பெண்களுக்கு ஆறு சானிடரி நாப்கின் உள்ள ஒரு பேக்கெட் ஆறு ரூபாய் என்ற மானிய விலையில் பத்து மாவட்டங்களில் விநியோகிக்கும் திட்டம் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்ட நிர்வாகக் கட்டுப்பாட்டில் செயல்படும் ஊழியர்கள் மற்றும் கிராம சுகாதார செவிலியர்கள் மூலமாக மாநிலத்திலுள்ள 67 கிராமப்புறங்களில் வாழும் அனைத்து இளம் பெண்களுக்கும் சானிடரி நாப்கின் இலவசமாகவே வழங்க மாநில அரசு முடிவு செய்து, 46 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

### 5.16. 2011–2012 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:

1) நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, சிவகாசி மற்றும் திருச்சி ஆகிய நான்கு துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகக் கட்டடங்கள் ரூ.180.00 இலட்சம் செலவில் கட்டுதல்.

[2011 செப்டம்பர் 12

2) பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநரகத்துக்கு ரூ.4.00 இலட்சம் செலவில் 10 கணினிகள் மற்றும் மென்பொருட்கள் வாங்குதல்.

3) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.10.94 கோடி செலவில் 217 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

## அத்தியாயம்—6

## குடும்ப நலத் திட்டம்

**6.1.** தேசிய குடும்ப நலத் திட்டம் தமிழ்நாட்டில் 1956 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆரம்ப காலத்தில், மருத்துவம் மற்றும் பொது சுகாதார இயக்ககங்களின் ஒரு பிரிவாக குடும்ப நலத் துறை செயல்பட்டு வந்தது. பின்னர் 1983 முதல் குடும்ப நலப் பிரிவு தனி இயக்ககமாக மாற்றப்பட்டு, இத்திட்டம் சமுதாயம் பங்கு பெறும் மக்கள் திட்டமாக பிற துறைகளின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் தாய்சேய் நலத்தை மேம்படுத்துவதன்மூலம் தாய்—சிசு மரணத்தைக் குறைத்து மக்கள் தொகை பெருக்கத்தை நிலைநிறுத்துவதாகும். இன்று குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. மக்கள் தொகை பெருக்கத்தை குறைப்பதில் தமிழ்நாட்டின் பாராட்டுதலுக்குரிய சாதனையைக் கருத்தில் கொண்டு இத்திட்டம் "குறியீடு அடிப்படையிலான" செயல்பாட்டிலிருந்து "சமுதாய தேவைகளின் மதிப்பீட்டு முறையிலான" திட்டமாக மாற்றம் பெற்றது. தமிழ்நாட்டில் இத்திட்டம் வெற்றியடைய முக்கிய மைல் கல்லாக திகழ்வது நல்ல திடமான சமூக மற்றும் அரசியல் ஈடுபாட்டோடு இணைந்த பலமான நிருவாக பின்புலமே ஆகும்.

### 6.2. மக்கள் தொகையியல் அளவீடுகள்:

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள்தொகை 7.21 கோடியாகும். பத்தாண்டு மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 15.6 விழுக்காடு. தமிழ்நாடு, இந்தியாவில் ஏழாவது பெரிய மக்கள் தொகை கொண்ட மாநிலமாகும். தமிழக



2011 செப்டம்பர் 12]

மக்கள் தொகை எண்ணிக்கை நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 6 விழுக்காடு ஆகும். 2009 ஆம் ஆண்டின் மைய அரசின் மாதிரி பதிவு முறைப்படி தமிழக மக்கள் தொகை அமைப்பு கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | குறியீடுகள் | தற்போதைய நிலை |
|---|---|---|
| 1. | பிறப்பு விகிதம் | 16.3/ 1000 மக்கள் தொகைக்கு |
| 2. | இறப்பு விகிதம் | 7.6 / 1000 மக்கள் தொகைக்கு |
| 3. | மொத்த கருவுறு விகிதம் (2008) | 1.7 |
| 4. | சிசு மரண விகிதம் | 28/ 1000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு |
| 5. | மகப்பேறு தாய்மார்கள் இறப்பு விகிதம் * | 0.85 / 1000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு |
| 6. | இயற்கையான வளர்ச்சி விகிதம் | 0.86 சதவீதம் |

*தமிழ்நாட்டில் 2009-10-ல் மகப்பேறினால் இறந்த தாய்மார்களின் எண்ணிக்கை அடிப்படையில் கணக்கிடப்பட்டது.

### 6.3. இலக்குகள்:

பதினோராவது ஐந்தாண்டு திட்டம் முடிவதற்குள் அதாவது 2012-ல் கீழ்க்கண்ட மக்கள் தொகை அமைப்பின் இலக்கை அடைய அரசு முடிவு செய்தது:-

| | | |
|---|---|---|
| 1. | சிசு மரண விகிதம் | 20/1000 உயிருடன் பிறக்கும் குழந்தைகளுக்கு |
| 2. | பிறப்பு விகிதம் | 15/1000 மக்கள் தொகைக்கு |
| 3. | தாய்மார்கள் இறப்பு விகிதம் | 45/100000 உயிருடன் பிறக்கும் குழந்தைகளுக்கு |
| 4. | மொத்த கருவுறு விகிதம் | 1.4 |
| 5. | தம்பதியர் காப்பு விகிதம் | 65 சதவீதம் |
| 6. | உயர் பிறப்பு வரிசை குறைப்பு | 10 சதவீதம் |

[2011 செப்டம்பர் 12

## 6.4. குடும்ப நல மையங்கள்:

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின்கீழ் உள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்தக இயக்ககம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம், மருத்துவக் கல்வி இயக்ககம், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் தேசிய குடும்ப நலத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநில அளவில் குடும்ப நலத் திட்ட செயல்பாடுகளை குடும்ப நல இயக்ககம் கண்காணித்து வருகிறது. கிராமப்புறங்களில் குடும்ப நலத் திட்டம் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா அலுவலர்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள அறுவை அரங்குகள் சீர் செய்யப்பட்டு கிராமப்புறங்களில் உள்ள தகுதி வாய்ந்த தம்பதியருக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. நகர்ப்புறங்களில் பேறுகால பின் கவனிப்பு மையங்கள், நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் மற்றும் நகர்ப்புற குடும்ப நல மையங்கள்மூலம் குடும்ப நலத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் 27 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் 1863 அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவ நிலையங்கள்மூலம் குடும்ப நலத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 6.5. குடும்ப நலத் திட்ட செயல்திறன்:

***6.5.1.*** 2010-11 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 தேதி முடிய குடும்ப நலத் திட்டம்மூலம் அடைந்த செயல்திறன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| வ. | திட்டம் எண் | எதிர்பார்க்கப் படும் ஆண்டு (2010-11) | செய்த சாதனை விவரம் (2010-11) | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | அறுவை சிகிச்சை | 3,65,000 | 3,27,262 | 89.7% |
| 2 | கருத்தடை வளையம் | 3,90,000 | 3,49,654 | 89.7% |
| 3 | வாய்வழி மாத்திரை உட்கொள்வோர் | 1,50,000 | 1,19,469 | 79.6% |
| 4 | ஆணுறை உபயோகிப்போர் | 1,80,000 | 1,64,785 | 91.5% |



2011 செப்டம்பர் 12]

***6.5.2.*** பல்வேறு வகையான மருத்துவ நிலையங்களில் நடைபெற்ற அறுவை சிகிச்சைகளின் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | நிலையங்கள் | சாதனை விழுக்காடு |
|---|---|---|
| 1. | அரசு மருத்துவமனைகள் | 59.5% |
| 2. | தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் | 5.0% |
| 3. | அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகள் | 28.3% |
| 4. | உள்ளாட்சி அமைப்பு மருத்துவமனைகள் | 5.0% |
| 5. | அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகள் | 2.2% |

## 6.6. குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் முக்கிய அம்சங்களாக கருதப்படும் பகுதிகள்:

அ) தமிழ்நாட்டில் நடக்கும் 10.8 இலட்சம் பிறப்புகளில் 10.6 விழுக்காடு (2010) மிகைவரிசை பிறப்புகளாகும் (1.14 இலட்சம் பிறப்புகள்). 2012 ஆம் ஆண்டிற்கு வரையறுக்கப்பட்ட இலக்கினை அடைய அந்தந்த பகுதிகளுக்கு ஏற்ற ஒரு செயல் திட்டம் உருவாக்கப்பட்டு தாய்மார்கள் குடும்ப நல அறுவை சிகிச்சையை ஏற்க தெளிவுரை வழங்கி இந்த மிகைவரிசை பிறப்புகள் படிப்படியாக குறைத்து பிறப்பு விகிதத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆ) குடும்ப நலத் திட்டத்தில் மக்களின் விருப்பத்திற்கேற்ப பூர்த்தி செய்யப்படாத தேவைகள் 13.0 சதவிகிதத்திலிருந்து (தேசிய குடும்ப நல ஆய்வு-II 1998-99) 8.9 சதவிகிதமாக (தேசிய குடும்ப நல ஆய்வு-III 2005-06) குறைக்கப்பட்டுள்ளது. அதாவது இரண்டு குழந்தைகளுக்கு இடையே உள்ள இடைவெளியில் தற்காலிக குடும்ப நல தேவைகளின் பங்கு 4.1 சதவிகிதமாகவும், நிரந்தர குடும்ப நல தேவைகளின் பங்கு 4.8 சதவிகிதமாகவும் உள்ளது. குழந்தை பிறப்பு இடையே இடைவெளி ஏற்படுத்தும் முறைகளான கருத்தடை வளையம் பொருத்துதல், வாய் வழி மாத்திரை உட்கொள்ளுதல் முதலியனவற்றை குழந்தை பிறப்பிற்கான இடைவெளியை அதிகப்படுத்துவதற்காக மட்டுமின்றி நிரந்தர குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்ற முடியாத அல்லது விருப்பமற்ற தாய்மார்களுக்கு பாதி நிரந்தரக் குடும்பக் கட்டுப்பாட்டு முறை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

[2011 செப்டம்பர் 12

இ) குடும்ப நல கருத்தடை அறுவை சிகிச்சை திட்டத்தில் ஆண்களின் பங்களிப்பு 0.7 விழுக்காடாக உள்ளது. இதனை உயர்த்த தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குடும்ப நலத் திட்டத்தில் ஆண்களின் பங்களிப்பினை உயர்த்துவதற்கு, மாவட்டந்தோறும் நவீன ஆண் கருத்தடை அறுவை சிகிச்சை முகாம்கள் நடத்தப்படுகின்றன. இதனால் ஆண் கருத்தடை அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை கடந்த காலங்களைவிட உயர்ந்துள்ளது. வரும் காலங்களில் மொத்த குடும்ப நல கருத்தடை அறுவை சிகிச்சைகளில் ஆண் கருத்தடை அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கையை 10 விழுக்காடாக உயர்த்த தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். மாவட்டந்தோறும் நவீன ஆண் கருத்தடை அறுவை சிகிச்சை முறை பற்றிய விழிப்புணர்வு குடும்ப நல களப் பணியாளர்கள் மூலமாக ஏற்படுத்தப்படுகிறது. நவீன ஆண் கருத்தடை சேவை வழங்குவதில் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் மூலமாக மருத்துவமனைகளில் முறையான சேவை வழங்கப்படுகிறது.

ஈ) 2009 ஆம் ஆண்டின் மாதிரி பதிவு முறைப்படி சிசு மரண விகிதம் ஆயிரம் உயிருடன் பிறக்கும் குழந்தைகளுக்கு 28 என்ற எண்ணிக்கையில் உள்ளது. சிசு மரணத்தில், 75 சதவிகித சிசுக்கள் ஒரு மாதத்திற்குள் இறந்து விடுகின்றன. ஒரு மாதத்திற்குள் குழந்தைகள் இறப்பதை கட்டுப்படுத்தினால் சிசு மரணத்தை ஆயிரம் பிறப்புகளுக்கு 20 என்ற எண்ணிக்கையில் கட்டுப்படுத்த முடியும். சிசு மரணத்தைக் குறைக்க, பச்சிளங் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் அமைப்பது, பிறப்பின் போது குறைந்த எடையுள்ள குழந்தைகளின்மீது சிறப்புக் கவனம் செலுத்துவது போன்ற பல்வேறு வகையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாநில நல வாழ்வு சங்கம் என்ற அத்தியாயத்தில் இந்தத் திட்டங்கள் குறித்து விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

உ) தேசிய குடும்ப நல ஆய்வு-III (2005-06)-ன்படி, தமிழ் நாட்டில் 53.3 சதவிகித தாய்மார்களும், 72.5 சதவிகித குழந்தைகளும் இரத்த சோகை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மகப்பேறு தாய்மார்களின் இறப்பிற்கும், பிறந்த குழந்தை ஒரு மாதத்திற்குள் இறக்கும் நிகழ்விற்கும் முக்கிய காரணமாக இரத்த சோகைநோய் இருக்கிறது. வளரிளம் பெண்கள் மற்றும் கருவுற்ற தாய்மார்களிடையே இரத்த சோகையை குறைப்பதற்கான செயல்முறைகள் தேசிய ஊரக நலத் திட்டம் அத்தியாயம் 10-ல் விவரிக்கப்பட்டுள்ளது.



2011 செப்டம்பர் 12]

**6.7. குடும்ப நலத் திட்ட இலக்குகளை அடைவதற்கான அணுகுமுறைகள்:**

பதினொன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை அடைய கீழ்க்காணும் அணுகு முறைகள் பின்பற்றப்படவுள்ளன:—

1) கிராம வாரியாக மிகைபிறப்பு வரிசையிலுள்ள தாய்மார்களைக் கண்டறிந்து அவர்களை குடும்ப நல முறைகளை ஏற்றுக்கொள்ளச் செய்தல்.

2) தற்போது 335 ஆரம்ப சுகாதார நிலையங்களில் குடும்ப நல அறுவை சிகிச்சை அரங்குகள் செயல்படுகின்றன. படிப்படியாக அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் குடும்ப நல அறுவை சிகிச்சை அரங்குகள் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது

3) தற்சமயம் 1,863 அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகள் குடும்ப நல செயல்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அங்கீகரிக்கப்படாத தனியார் மருத்துவமனைகள் குடும்ப நல செயல்பாட்டில் ஈடுபட ஏதுவாக அவற்றை அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

4) தகுதி வாய்ந்த தம்பதியர்களுக்கு குடும்ப நல சேவைகளை வழங்குவதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள், மகளிர் மன்றம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அரசு சாராத அமைப்புகளை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

5) பயிற்சி பெறாத அனைத்து மகப்பேறு மற்றும் அறுவை சிகிச்சை மருத்துவர்களுக்கும் லேப்ராஸ்கோப்பிக் குடும்ப நல அறுவை சிகிச்சை பயிற்சி அளிக்கப்படும்.

[2011 செப்டம்பர் 12

6) ஒவ்வொரு நிலை உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திலும் (செயல்படும் அறுவை சிகிச்சை அரங்கு உள்ளவை) இளங்கலை மருத்துவப் பட்டப் படிப்பு படித்த மருத்துவருக்கு குடும்ப நலப் பெண் அறுவை சிகிச்சை தழும்பில்லாத ஆண் அறுவை சிகிச்சை மற்றும் மினி லேப் ஆகியவற்றில் பயிற்சி அளிக்க முயற்சி மேற்கொள்ளப்படும். ஆரம்ப சுகாதார நிலைய அளவில் பாதுகாப்பாக கருக்கலைப்பு செய்ய இந்த மருத்துவர்களுக்கு எம்.வி.ஏ. முறையில் கருக்கலைப்பு செய்ய பயிற்சி அளிக்கப்படும். அதிக வாய்ப்புள்ள தாய்மார்களுக்கு அவர்களின் ஒப்புதலுடன் கருத்தடை சாதனங்கள் பொருத்துவதை உறுதிசெய்ய கருத்தடை வளையம் பொருத்தும் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**6.8. குடும்ப நல அறுவை சிகிச்சை ஏற்றுக் கொள்பவர்களுக்கு குடும்ப நல காப்பீட்டுத் திட்டம் :**

இந்திய அரசு, ஐ.சி.ஐ.சி.ஐ. லொம்பார்டு காப்பீட்டு நிறுவனத்துடன், 1-1-2011 முதல் புதுப்பித்துக் கொண்ட காப்பீட்டுத் திட்டத்தில் குடும்ப நல கருத்தடை அறுவை சிகிச்சை ஏற்பாளர்கள் மற்றும் மருத்துவர்களுக்கு பின்வருமாறு காப்பீட்டு நிதி உதவி அளிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| குடும்ப நல கருத்தடை அறுவை சிகிச்சைக்குப் பின் மருத்துவமனையிலோ அல்லது மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட 7 நாட்களுக்குள் இறக்க நேரிட்டால் | ரூ.2,00,000/- |
| குடும்ப நல கருத்தடை அறுவை சிகிச்சைக்குப் பின் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்ட 8 ஆம் நாளிலிருந்து 30 நாட்களுக்குள் இறக்க நேரிட்டால் | ரூ.50,000/- |
| குடும்ப நல அறுவை சிகிச்சைக்குப் பின் மீண்டும் கருவுற்றால் | ரூ.30,000/- |
| குடும்ப நல அறுவை சிகிச்சையால் ஏற்படும் சிக்கல்கள் (மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட 60 நாட்களுக்குள்) | ரூ.25,000/-க்கு மிகாமல் (உள்ளபடியான செலவு) |
| மருத்துவர்களுக்கான ஈட்டுறுதிக் காப்பீடு (ஒரு ஆண்டிற்கு நான்கு முறைக்கு மிகாமல்) | ஒரு கோரிக்கைக்கு ரூ.2,00,000/- வரை |



2011 செப்டம்பர் 12]

**6.9. குடும்ப நல கருத்தடை அறுவை சிகிச்சை ஏற்பாளர்களுக்கு உயர்த்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை திட்டம்:**

குடும்ப நல கருத்தடை அறுவை சிகிச்சை ஏற்பாளர்களுக்கு இழப்பீட்டு நிதியுதவி பின்வருமாறு அளிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| ஆண் ஏற்பாளர்கள் (அரசு மருத்துவ நிலையங்களில் மட்டும்) | ரூ.1,100/- |
| வறுமைக் கோட்டின்கீழ் உள்ள பெண் ஏற்பாளர்கள் மற்றும் ஆதி திராவிடர் வகுப்பினர் மற்றும் பழங்குடியினரில் பெண் ஏற்பாளர்கள் (அரசு மருத்துவ நிலையங்களில் மட்டும்) | ரூ.600/- |
| வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள பெண் ஏற்பாளர்கள் (அரசு மருத்துவ நிலையங்களில் மட்டும்) | ரூ.250/- |

**6.10. ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலருக்கு மினிலாப் கருத்தடை அறுவை சிகிச்சை பயிற்சி:**

தமிழ்நாட்டில் 335 அறுவை அரங்குகள் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் கிராம மக்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை சேவையை வழங்கி வருகின்றன. போதிய அளவு பயிற்சி பெற்ற மருத்துவர்கள் இல்லாததால் அருகிலுள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகளிலிருந்தும் அழைக்கப்படும் மருத்துவர்களால் அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மினிலாப் கருத்தடை அறுவை

[2011 செப்டம்பர் 12

முறையில் பயிற்சி பெற்ற மருத்துவர்களை அதிக அளவில் உருவாக்க, 2011-2012 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையிலும், மருத்துவ அலுவலர்களுக்கு பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் 664 மருத்துவர்களுக்கு இப்பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**6.11. ஆண் கருத்தடை அறுவை சிகிச்சை பயிற்சி:**

ஆண் கருத்தடை அறுவையின் திறனை மேம்படுத்த ஏதுவாக சென்னை அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒரு திறன் மேம்பாட்டு மையம் கட்டப்பட்டு வருகிறது. இம்மையத்தில் மருத்துவர்களுக்கு நவீன ஆண் கருத்தடை அறுவை சிகிச்சை முறை குறித்து பயிற்சி அளிக்கப்படும். தமிழ்நாட்டில் ஆண் கருத்தடை சிகிச்சை பயிற்சி அளிக்க மாநில அளவில் ஒருவரும், மாவட்ட அளவில் 4 மருத்துவர்கள் மட்டுமே உள்ளனர். போதிய பயிற்சி பெற்ற மருத்துவர்கள் இல்லாமையால், ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு மருத்துவருக்கு இம்மையத்தில் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அவ்வகையில் 30 மருத்துவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சி பெற்ற மருத்துவர்கள் மாவட்டங்களிலுள்ள மற்ற மருத்துவர்களுக்கு பயிற்சி அளிப்பர்.

**6.12. நவீன ஆண் கருத்தடை முறையை மேம்படுத்த ஊக்குவிப்பாளர்களை உருவாக்குதல்:**

நவீன ஆண் கருத்தடை சிகிச்சை முறை செயல்பாட்டை மேம்படுத்திடும் வகையில், மேற்படி கருத்தடை செய்து கொண்ட ஆண்களில் 45 வயதுக்குட்பட்ட பொருளாதார தேவையில் பின்தங்கியவர்களை கண்டறிந்து, அவர்கள் தாங்கள் பெற்ற சாதகமான அனுபவங்களை தகுதியுடைய ஆண்களுக்கு எடுத்தியம்பி, நவீன ஆண் கருத்தடை அறுவை சிகிச்சையை ஏற்றுக் கொள்ளும் விதமாக ஊக்கப்படுத்திட, அவர்களுக்கு நவீன ஆண் கருத்தடை சிகிச்சை பற்றி போதிய பயிற்சி வழங்கப்பட்டு, ஊக்குவிப்பாளர்களாக செயல்படுவர். இதற்கென ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 முதல் 60 நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்களுக்கு மாவட்ட அளவில் விழிப்புணர்வு பட்டறைகள் நடத்தப்படும்.



2011 செப்டம்பர் 12]

**6.13. பேறுகால பின் பராமரிப்பு—பெண்களுக்கான கருத்தடை வளையம் பொருத்துதல் பயிற்சி:**

கருத்தடை முறைகளில் அடையப்படாமல் உள்ள தேவைகளை பூர்த்தி செய்யவும், தாய் சேய் நலனைப் பாதுகாக்கும் வகையில், மைய அரசால் பேறுகால பின் பராமரிப்பு காலத்தில், பெண்களுக்கான கருத்தடை வளையம் பொருத்துதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையில் பேறுகால பின் பராமரிப்பு சேவைகளை செம்மைப்படுத்தி, மருத்துவர்கள் மேம்படுத்தப்பட்ட கருத்தடை முறைகள் குறித்த அனைத்து விவரங்களையும் அறிந்திட வேண்டும். அதற்கு ஏதுவாக ஒவ்வொரு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையிலும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

*6.14* மிகைவரிசை பிறப்பைக் குறைக்க தாய்மார்களுக்கு பஞ்சாயத்து அளவில் விழிப்புணர்வு ஆலோசனை கூட்டங்கள் நடத்துதல்:

தமிழ்நாட்டில், 2010 ஆம் ஆண்டு குழந்தைகள் பிறப்பு அறிக்கைப்படி, மிகை வரிசை பிறப்பு 10.6 விழுக்காடு ஆகும். தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில் மிகை வரிசை பிறப்பு, மாநில சராசரி அளவைவிட அதிக அளவில் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இந்த 17 மாவட்டங்களில் மிகை வரிசை பிறப்புகள் அதிகம் உள்ள வட்டாரங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இங்கு மிகை வரிசை பிறப்பினை குறைக்க, சிறு குடும்ப நெறியை ஏற்பதினால் ஏற்படும் நன்மைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த அந்தந்த வட்டாரங்களில் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்படும். இந்த நடவடிக்கைகளில் அந்தந்த வட்டாரங்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள், வட்டார விரிவாக்க கல்வியாளர்கள், சுகாதார மேற்பார்வையாளர்கள் மற்றும் கிராம சுகாதார செவிலியர்கள் ஆகியோர் ஈடுபடுத்தப்படுவர்.

**6.15. தேர்ந்தெடுக்கப்பட்ட 8 மாவட்டங்களைச் சார்ந்த மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு நவீன கருக்கலைப்பு முறையில் (MVA Technique) பயிற்சி:**

காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார

[2011 செப்டம்பர் 12

நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் உள்ள மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனை, கஸ்தூரிபா மருத்துவமனை, எழும்பூர் மகப்பேறு மருத்துவமனை, குடியாத்தம் அரசு மருத்துவமனை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நவீன கருக்கலைப்பு முறை பயிற்சி 4-7-2011 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சிக்காக மாநில நலவாழ்வு சங்கம், ரூ.18.00 இலட்சம் வழங்கியுள்ளது. 137 மருத்துவர்கள் மற்றும் 208 செவிலியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

## அத்தியாயம்—7

### மருந்து கட்டுப்பாடு நிர்வாகம்

7.1. மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தி, விநியோகம், விற்பனை முதலியவற்றை முறைப்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்ட சில மத்திய சட்டங்களை செயல்படுத்துவதற்காக மருந்து கட்டுப்பாட்டு துறை உருவாக்கப்பட்டது. இத்துறை போலி மருந்துகள் தயாரித்தல், காலாவதியான மருந்துகள் மற்றும் தரமற்ற மருந்துகள் விற்பனைகளை கண்காணித்து, அவற்றை அறவே ஒழிக்க நடவடிக்கை மேற்கொள்கிறது. மேற்கூறிய குறிக்கோளை செயலாக்கும் பொருட்டு 1976 இல் மருந்து கட்டுப்பாடு அலுவலகம் தொடங்கப்பட்டு இணை இயக்குநர், பொது சுகாதாரம் அவர்களின்கீழ் இயங்கி வந்தது. 1981 ஆம் ஆண்டு முதல் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின்கீழ் மருந்து கட்டுப்பாடு இயக்ககம் தனித் துறையாக இயங்கி வருகிறது. 1940 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம் மற்றும் அதன் 1945 ஆம் ஆண்டு விதிகள், 1995 ஆம் ஆண்டு மருந்துகள் விலைக் கட்டுப்பாட்டு ஆணை மற்றும் 1954 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் மாயாஜால நிவாரணங்கள் (மறுக்கத்தக்க விளம்பரங்கள்) சட்டம் ஆகியவற்றின்படி மருந்து உற்பத்தி, அலோபதி மற்றும் ஓமியோபதி மருந்து, அழகு சாதனப் பொருட்கள் ஆகியவற்றின் சில்லரை விற்பனை மற்றும் மொத்த விற்பனைக்கு உரிமம் வழங்குதல் மற்றும் உரிமங்களைப் புதுப்பித்தல் ஆகிய பணிகளை மருந்து கட்டுப்பாடு இயக்குநர் மேற்கொள்கிறார்.



2011 செப்டம்பர் 12]

புதுடெல்லியிலுள்ள மத்திய உரிமம் வழங்கும் குழுமத்தின் ஒப்புதல் பெற்று தமிழ்நாட்டில் இரத்த சேமிப்பு வங்கிகளுக்கு உரிமம் வழங்கும் அலுவலரும் ஆவார்.

**7.2. நடமாடும் புலனாய்வுக் குழு மற்றும் சட்டம், புலனாய்வுப் பிரிவுகளின் பணிகள்:**

போலி மருந்து மற்றும் தரமற்ற மருந்துகள் குறித்து தென்மாவட்டங்களிலிருந்து வரும் குறிப்பான முறையீடுகளை ஆய்வு செய்து நடவடிக்கைகள் எடுக்க, மதுரையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு நடமாடும் புலனாய்வுக் குழுவும், சென்னையிலிருந்து வரும் முறையீடுகளை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க இயக்குநர் அலுவலகத்தில் ஒரு புலனாய்வுக் குழுவும் செயல்படுகின்றன. இதுதவிர, சென்னையிலுள்ள புலனாய்வுப் பிரிவு, சட்டம் தொடர்பான பணிகளையும், சிறப்பு ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகிறது.

**7.3. மருந்து ஆய்வுக் கூடம்:**

இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ், முழு திறன் கொண்ட, ஒரு மருந்து ஆய்வுக் கூடம் இயங்கி வருகிறது. இது அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், உற்பத்தி நிறுவனங்கள், மொத்த மற்றும் சில்லரை விற்பனை நிலையங்களிலிருந்து (ஊசி மருந்து தயாரிப்பு நீங்கலாக) மருந்து ஆய்வாளர்களால் சோதனைக்காக எடுக்கப்பட்ட மருந்து பொருட்கள், இந்த ஆய்வுக் கூடத்தில் ஆய்வு செய்யப்படுகின்றன.

**7.4. உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்துக் கட்டுப்பாடு நிருவாகத்திற்கான புதிய ஆணையரகம் அமைத்தல்:**

கூடுதலான எண்ணிக்கையிலான உணவுப் பொருட்கள் மருந்துகள் வரம்புக்குள்ளும் மற்றும் எதிரெதிர் மாறாகவும் வருவது பெரிய அளவில் மருந்துத் துறை மற்றும் உணவுத் துறையினரிடையே ஒருங்கிணைந்த ஒத்திசைவாக செயல்படவேண்டிய தேவையை சுட்டிக்காட்டுகிறது. உணவு நிருவாகம் மற்றும் மருந்து கட்டுப்பாடு ஆகிய இரு துறைகளின் பணிகளும் ஒன்றுக்கொன்று ஒத்த இயல்புடனும் ஒருங்கிணைக்கும் தன்மை கொண்டதாகவும் உள்ளது. உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாடு சட்டத்தை செயல்படுத்து வதற்காக அமைக்கப்படவுள்ள உணவுப் பாதுகாப்பு மற்றும்

[2011 செப்டம்பர் 12

மருந்துகட்டுப்பாடு நிருவாகத்தின்கீழ் மருந்து கட்டுப்பாடு இயக்ககத்தைக் கொண்டுவர அரசு கொள்கையளவில் முடிவு செய்துள்ளது.

## 7.5. சாதனைகள்:

### 7.5.1. போலி மருந்துகள் மீதான நடவடிக்கை:

போலி மருந்துகள் மற்றும் தரக் குறைவான மருந்துகளை கண்டுபிடிக்க இவ்வியக்ககம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இது தொடர்பாக இவ்வியக்ககம் பல திடீர் ஆய்வுகள் மற்றும் சோதனைகள் மேற்கொண்டும், ஒரு குறிப்பிட்ட நாளில் அனைத்து மருந்து ஆய்வாளர்கள் மூலமாக மருந்துகளை பகுப்பாய்விற்கு எடுத்தும் வருகிறது. இம்முறையினால் முக்கிய போலி மருந்து தயாரிப்புகளை இவ்வியக்ககம் கண்டறிந்தது. அதன் பேரில் ஆரம்ப கட்ட விசாரணைகளை முடித்து, மேல் விசாரனை செய்து வழக்குகள் தொடர, காவல் துறை குற்றப் பிரிவு புலனாய்வுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்மூலம் இந்தக் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட அனைவரின்மீதும் வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட வழக்குகள் இந்த இயக்ககத்திலிருந்து குற்றப் பிரிவு புலனாய்வு காவல் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**வழக்குகள் விவரம்:**

அ. போலி BENADRYL COUGH FORMULA, தொகுதி எண் 0911091 தயாரித்து மற்றும் விற்பனை செய்தது.

ஆ. போலி CARDACE 5 mg மாத்திரைகள், தொகுதி எண் 299026 விற்பனை செய்தது.

இ. போலி VOVERON SR 100 mg மாத்திரைகள், தொகுதி எண் 91002 விற்பனை செய்தது.

ஈ. போலி RENERVE கேப்சியூல், தொகுதி எண். 7205795 முகப்பு சீட்டினை மாற்றி மறு சுழற்சி மூலம் விற்பனை செய்தது.

உ. போலி Taxim - O- 200 Tablets B.No.TOTF-9123325 மற்றும்

ஊ. போலி Clucored Forte Tablets B.No.AD-90287 விற்பனை செய்தது.



2011 செப்டம்பர் 12]

இத்துறையின் அறிக்கையின்படி, 46 நபர்கள் குற்றப் பிரிவு புலனாய்வு காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு அவர்களில் 22 நபர்கள் குண்டர் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மேற்படி வழக்குகள் அனைத்தும் தற்போது குற்றப் பிரிவு புலனாய்வு காவல் துறையில் விசாரணையில் உள்ளது இவ்வியக்ககத்தின் அலுவலர்கள் குழு, சத்திரப்பட்டியிலுள்ள 5 சர்ஜிகல் உற்பத்தியாளர்களின் நிறுவனத்தை ஆய்வு செய்து, மருத்துவ உபயோகத்திற்கான போலியான கட்டுத் துணி தயாரித்ததைக் கண்டுபிடித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 7.5.2. இரத்த வங்கிகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:

இத்துறை இரத்த வங்கிகளின்மீது காலமுறைப்படி ஆய்வுகள் மேற்கொண்டு அதன் செயல்பாடுகளில் தொடர் கண்காணிப்பு செய்து வருகிறது. இத்துறையின் அனைத்து மருந்து ஆய்வாளர்களும் மாநிலத்தில் உள்ள அனைத்து தனியார் குருதி வங்கிகளை ஆய்வு செய்து இரத்த மாதிரிகளை பகுப்பாய்விற்காக எடுத்து அருகில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பரிசோதனை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன் பேரில், 132 குருதி வங்கிகள் ஆய்வு செய்யப்பட்டு அவற்றிலிருந்து 124 இரத்த மாதிரிகள் பெறப்பட்டு ஆய்விற்கு அனுப்பப்பட்டது. ஆய்வு அறிக்கையில் தரக் குறைபாடு இருந்ததாக அறிக்கை ஏதும் இல்லை. இரத்த வங்கிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் கீழ்க்கண்ட மூன்று இரத்த வங்கிகளுக்கு எதிராக மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம் மற்றும் விதிகள் மீறலுக்காக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(அ) விக்னேஷ் இரத்த வங்கி, மதுரை — 20

(ஆ) ஈரோடு இரத்த வங்கி, ஈரோடு.

(இ) திண்டுக்கல் இரத்த வங்கி, திண்டுக்கல்

### 7.5.3. கருத்தடை மாத்திரைகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை:

திருப்பூரில் கருத்தடை மாத்திரைகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதாக செய்திகள் வெளியானதை தொடர்ந்து

[2011 செப்டம்பர் 12

திருப்பூரில் 17 மருந்து கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் 16 மருந்து கடைகள் முறையான மருத்துவரின் மருந்து சீட்டு இல்லாமலும், விற்பனை ரசீது இல்லாமலும் "MT PILL" மற்றும் "UNWANTED' எனும் கருத்தடை மாத்திரைகளை விற்பனை செய்தது கண்டறியப்பட்டது. மேற்படி மாத்திரைகள் அந்த மருந்தின் முகப்பு சீட்டில் கண்ட எச்சரிக்கையையும் மீறி உரிய மருந்து குறிப்பு இல்லாமல் விற்பனை செய்யப்பட்டது கண்டறியப்பட்டது. இந்த சில்லரை வணிகர்களுக்கு எதிராக நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

**7.5.4. மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம் மற்றும் விதிகள் மீறல்களுக்கான எடுக்கப்பட்ட நடவடிக்கை:**

இவ்வியக்ககம் அருப்புக்கோட்டை, சிவகங்கை, உசிலம்பட்டி, ஈரோடு, அம்பத்தூர், சென்னை மற்றும் சேலம் ஆகிய இடங்களிலுள்ள மருந்துக் கடைகளில் கூட்டு ஆய்வு மற்றும் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதில், 52 மருந்துக் கடைகளுக்கு எதிராக மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம் மற்றும் விதிகள் மீறல்களுக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**7.5.5. வழக்கு தொடர அனுமதி அளித்தது:**

கடந்த ஆண்டில், சட்ட மீறல் சம்பந்தமாக மொத்தம் 392 வழக்குகள் தொடர அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு:

1. மருந்துகள் மற்றும் மந்திர தீர்வு (மறுக்கப்பட்ட விளம்பரங்கள்) சட்டம் 1954-ன்கீழ் — 1 வழக்கு
2. தரமற்ற, கலப்பட போலியான மருந்துகள் தயாரிப்பு / விற்பனை செய்தது மற்றும் போலி மருந்துகள் தயாரிப்பு / விற்பனை செய்தது சம்பந்தமாக — 96 வழக்குகள்
3. மருந்து மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம் 1940 விதிமுறைகள் மீறல் சம்பந்தமாக — 295 வழக்குகள்



2011 செப்டம்பர் 12]

**7.6. 2011 –2012 புதிய திட்டங்கள்:**

1. சென்னை மருந்துகள் ஆய்வுக்கூடத்திற்கு நவீன உபகரணங்கள் மற்றும் கருவிகள் ரூ.33.70 இலட்சம் செலவில் வாங்குதல்.
2. சென்னை மருந்து கட்டுப்பாடு இயக்ககத்திற்கு குறிப்புதவி நூல்கள் ரூ.5.00 இலட்சம் செலவில் வாங்குதல்.
3. சென்னை மருந்து கட்டுப்பாடு இயக்ககத்திற்கு கணினிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.4.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்தல்.

## அத்தியாயம்–8

### இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி

**8.1.** உலகமே தற்போது மரபுசார் மருத்துவ முறைகளை நோக்கி திரும்பிக் கொண்டிருக்கின்றது. உலக சுகாதார மைய மதிப்பீட்டின்படி இன்றளவும் உலக மக்கள் தொகையில் 70% தத்தமது பூகோள தன்மையின் அடிப்படையில் உருவான மரபுசார் மருத்துவ முறைகளை பயன்படுத்தி தமது நோய்களில் இருந்து குணமடைகின்றார்கள் என தெரிவித்துள்ளது. நவீன மருத்துவ சிகிச்சையில், நாள்தோறும் உயர்ந்து கொண்டே வரும் மருத்துவ செலவுகள் மற்றும் அதிகரித்து வரும் மருந்துகளின் நச்சுத்தன்மை ஆகிய காரணங்களே, இக்குறைபாடுகள் அறவே இல்லாத அந்தந்த மண்ணிற்குரிய தனித்தன்மை வாய்ந்த மருத்துவ முறைகளின்பால் பெருவாரியான மக்களின் கவனமும் நாட்டமும் ஈர்க்கப்படுவதற்கு முக்கிய காரணங்களாகும். பாதுகாப்பான இந்திய மருத்துவ முறைகளின் பலன்களை அனைத்து மக்களும் துய்த்துப் பயனுற வேண்டும் என்ற எண்ணத்தை ஈடேற்றும் வகையில் தமிழக அரசு இந்திய மருத்துவ முறையை செயல்படுத்திட 1970 ஆம் ஆண்டு இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை என தனியாக ஒரு துறை ஏற்படுத்தியது.

[2011 செப்டம்பர் 12

**8.2. முக்கிய குறிக்கோள்கள்:**

- மரபுசார் மருத்துவ முறையின் பயன்களை பொது மக்களுக்கு கொண்டுசெல்லும் வகையில் இந்திய மருத்துவமுறை பிரிவுகள் / மருத்துவமனைகள் பல்வேறு நிலைகளில் அனைத்து மாவட்டங்களிலும் திறக்கப்பட வேண்டும்.
- சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி, யோகா மற்றும் இயற்கை மருத்துவத்தில் கல்வி வளர்ச்சி கட்டமைப்புகளை அரசு மற்றும் தனியார் துறைகளில் உருவாக்குதல் மற்றும் ஊக்குவித்தல்.
- மூலிகைப் பயிர்களைப் பயிரிட்டு வளர்த்தல் மற்றும் பதப்படுத்தப்படாத மருந்துகளை பாதுகாத்தல்
- இந்திய முறை மருத்துவத்தின் உயர்தர மருந்து தயாரிப்பு மற்றும் விற்பனையை ஊக்கப்படுத்துதல்
- இந்திய மருத்துவ முறையில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துதல்

**8.3. இந்திய மருத்துவ முறைப் பிரிவுகளை அரசு மருத்துவ வசதிகள் அமைந்துள்ள இடத்தில் அமைத்திடல்:**

இந்திய மருத்துவ முறைகள் மற்றும் நவீன மருத்துவமும் ஒன்றுடன் ஒன்று கைகோர்த்து, இவ்விரு மருத்துவ முறைகளின் பலன்கள் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில், தமிழக அரசு, அரசு மருத்துவமனைகள் மற்றும் பெரிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய மருத்துவ முறைப் பிரிவுகளை துவக்கி வருகிறது. நோயாளிகளின் நலன்கருதி நவீன மருத்துவ முறைகளையும் இந்திய மருத்துவ முறைகளையும் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப பயன்படுத்திக்கொள்ள வகைசெய்துள்ளது. தற்பொழுது 30 மாவட்ட மருத்துவமனைகள், 231 வட்ட மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் மற்றும் 954 ஆரம்ப சுகாதார நிலையங்களில் (2009-2010 ஆம் ஆண்டில் தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் துவக்கப்பட்ட 300 பிரிவுகளும் 2010-11 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட 175 புதிய இந்திய மருத்துவப் பிரிவுகளும் அடங்கும்.) இந்திய மருத்துவ முறை மருத்துவர்கள், நோயாளிகளுக்கு சிகிச்சை செய்து வருகின்றனர்.



2011 செப்டம்பர் 12]

**8.4. மருத்துவக் கல்வி:**

நவீன மருத்துவ முறையின் வெற்றிக்கு அதனுடன் சார்ந்த அறிவியல் பூர்வமான அணுகுமுறையும் ஆராய்ச்சியும் காரணமாகும். மேம்பட்ட வளர்ச்சியை நாம் அடைவதற்கு அதே போன்று அறிவியல்சார் அணுகுமுறையும், முறையான ஆய்வுகளும் அவசியமாகும். அதைச் செயல்படுத்த மேம்படுத்தப்பட்ட மருத்துவக் கல்வி நிறுவனங்கள் அவசியமாகும். தமிழ்நாட்டில் மட்டுமே ஐந்துமுறை மருத்துவப் பிரிவுகளிலும் மருத்துவக் கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. இந்தியாவில் தமிழ்நாட்டில் மட்டும்தான் இந்திய மருத்துவ முறையில் உள்ள எல்லா பிரிவுகளுக்கும் மருத்துவக் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் ஒரு கல்லூரியை அரசே தொடங்கியுள்ளது என்பது குறிப்பிடப்படவேண்டிய அம்சமாகும். மாநிலத்தில் அரசு மற்றும் தனியார் கட்டுப்பாட்டில் உள்ள இந்திய மருத்துவ முறை கல்லூரிகளின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு.

| வ. எண் | மருத்துவ முறை | கல்லூரிகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | அரசு | தனியார் |
| 1. | சித்தா | 2 | 5 |
| 2. | ஆயுர்வேதா | 1 | 4 |
| 3. | யுனானி | 1 | — |
| 4. | ஓமியோபதி | 1 | 8 |
| 5. | யோகா மற்றும் இயற்கை மருத்துவம் | 1 | 4 |
| | மொத்தம் | 6 | 21 |

மேலும் மருத்துவம் சாரா சேவைகளில் மனித வளத்தை மேம்படுத்த நாட்டிலேயே முதன் முறையாக இந்திய மருத்துவ முறை வகைகளில் யோகா மற்றும் இயற்கை மருத்துவம் நீங்கலாக மற்ற அனைத்து முறைகளில் மருந்தக பயிற்சியும், மருந்துகள் செய்யும் பயிற்சியும் வழங்கும் வகையில் ஒருங்கிணைந்த மருந்தாளுநர் பட்டயப் படிப்பு நடத்தப்படுகிறது. ஓமியோபதி

[2011 செப்டம்பர் 12

நீங்கலாக மற்ற இந்திய முறை மருத்துவ முறைகளில் உள்ள தொக்கணப் பயிற்சி வழங்கும் நர்சிங் தெரபிஸ்ட் என்ற பட்டயப் படிப்புகள் அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவமனை, சென்னை மற்றும் அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி ஆகிய கல்லூரிகளில் நடத்தப்பட்டு வருகிறது. அரசு மற்றும் தனியார் துறைகளில் இந்திய மருத்துவ முறை கல்லூரிகளில் வழங்கப்படும் பட்டப் படிப்பு, பட்டமேற்படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு ஆகியவற்றில் மாணவர்கள் சேர்க்கைக்கான மொத்த இடங்களின் விவரம் வருமாறு:

கல்லூரிகளில் உள்ள இருக்கைகளின் எண்ணிக்கை

| வ எண் | மருத்துவ முறை | அரசினர் கல்லூரிகள் | | | தனியார் கல்லூரிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பட்டப் படிப்பு | பட்ட மேற் படிப்பு | பட்டயப் படிப்பு | பட்டப் படிப்பு | பட்ட மேற் படிப்பு | பட்டயப் படிப்பு |
| 1. | சித்தா | 150 | 80 | 300 | 200 | -- | -- |
| 2. | ஆயுர்வேதம் | 50 | -- | -- | 160 | -- | -- |
| 3. | ஓமியோபதி | 50 | -- | -- | 450 | 24 | -- |
| 4. | யோகா மற்றும் இயற்கை முறை | 20 | -- | -- | 200 | -- | -- |
| 5. | யுனானி | 26 | -- | -- | -- | -- | -- |
| | மொத்தம் (1710 இடங்கள்) | 296 | 80 | 300 | 1010 | 24 | -- |

அரசின்கீழ் செயல்படும் அனைத்து இந்திய மருத்துவ முறை கல்லுலீரிகள் மற்றும் மருத்துவமனைகள் மத்திய அரசின் நிதி உதவியுடன் மாநில மாதிரி கல்லூரிகளாக “நிறுவன வளர்ச்சி-மாதிரி கல்லூரிகள் ஏற்படுத்தும்” திட்டத்தின்கீழ் நிலை உயர்த்தப்பட்டுவருகிறது மைய அரசு ஒரு பகுதி மானியத்தை இந்திய மருத்துவ முறை மற்றும் ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகளுக்கு விடுவித்துள்ளது.



2011 செப்டம்பர் 12]

**8.5. மருத்துவ சிகிச்சை :**

தற்சமயம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவ முறைகளின்கீழ், உள் நோயாளிகளுக்காக 1,365 மருத்துவ நிலையங்கள் தேசிய ஊரக நலத்திட்டத்தின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட 475 இந்திய மருத்துவ முறை பிரிவுகளையும் சேர்த்து 1210 படுக்கை வசதிகள் உள்ளன. இதை மேலும் மேம்படுத்திப் பரவலாக்கும் வகையில் ரூ.555.00 இலட்சம் செலவில் 17 மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளில் சிறப்பு மருத்துவப் பிரிவுகளும் Speciality Clinics, ரூ.1510.00 இலட்சம் செலவில் 151 வட்ட மருத்துவமனைகளில் சிறப்பு மருத்துவப் பிரிவுகளும் Speciality Clinics மைய அரசின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், மைய அரசின் ரூ.1,340.00 இலட்சம் நிதி உதவியில் 134 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறப்பு மருத்துவப் பிரிவுகள் அமைக்கும் பணிகள் செயல்பாட்டில் உள்ளன. மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் 44 இந்திய மருத்துவப் பிரிவுகள், 92 வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் மற்றும் 345 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறப்பு மருத்துவப் பிரிவுகள் தொடங்குவதற்கு 85 விழுக்காடு மைய அரசு பங்காக ரூ.93.8 கோடி நிதியுதவி மைய அரசிடம் கோரப்பட்டுள்ளது.

**8.6. தேசிய ஊரக நல வாழ்வு இயக்கம்:**

8.6.1. தேசிய ஊரக நலவாழ்வு இயக்கத்தின்கீழ் 300 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.7.01 கோடி மதிப்பீட்டில் இந்திய மருத்துவ முறைப்பிரிவுகள் உருவாக்கப்பட்டன. இந்த 300 நிலையங்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை அளிக்க ரூ.46.66 கோடி மைய அரசிடமிருந்து நிதியுதவி பெறப்பட்டுள்ளது. 2010-2011 ஆம் ஆண்டில் தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் ரூ.3.37 கோடி செலவில் 144 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய மருத்துவ முறைப் பிரிவுகளும், ரூ.59.19 இலட்சம் செலவில் 31 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இயற்கை மகப்பேறு மருத்துவ பிரிவுகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

**8.6.2.** ஏற்கெனவே சித்தா பிரிவு உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பேறுகாலத்திற்கு முன்னும், பேறுகாலத்திற்குப் பின்னும் சிகிச்சை வழங்குவதற்காக இந்த மகப்பேறு மருந்தகங்கள் திறக்கப்பட்டன. இங்கு சித்தா—யோகா மற்றும் இயற்கை மருத்துவ முறைகளில் சிகிச்சை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மகப்பேறு

மருந்தகத்திலும் ஒரு யோகா மற்றும் இயற்கை மருத்துவர், நோய் நீக்க உதவியாளர், ஒரு பல நோக்கு சுகாதாரப் பணியாளர் நியமிக்கப்பட்டுள்ளனர். சித்தா பிரிவில் உள்ள மருத்துவர்கள், மருந்துகள் மற்றும் வெளிப்புற தொக்கணம் ஆகியவை வாயிலாக சிகிச்சையும், யோகா மற்றும் இயற்கை மருத்துவர் எளிமையான பாதுகாப்பான மகப்பேறுக்கு யோகா பயிற்சியும் அளிப்பார்.

**8.7. இந்திய மருத்துவத்திற்கு மாநில உரிமம் வழங்கும் அதிகாரி:**

இந்திய மருத்துவ முறையிலான மருந்துகள் தயாரிப்பதற்கு உரிமம் வழங்கும் பணி மாநில மருந்துகள் கட்டுப்பாட்டு துறையிடமிருந்து பிரிக்கப்பட்டு, இத்துறையின் கட்டுப்பாட்டில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மாநில உரிமம் வழங்கும் அதிகாரி (இந்திய மருத்துவம்) வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்துறையின் கட்டுப்பாட்டில் மாநில உரிமம் வழங்கும் அலுவலகம் (இந்திய மருத்துவம்) அலுவலகம் 29-11-07 முதல் செயல்பட தொடங்கியுள்ளது. இந்திய அரசின் மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம் 1940-ன்படி இத்துறையின் மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்கள் அனைவரும் மருந்துகள் தர ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்திய மருத்துவ மருந்துகள் தயாரிக்க உரிமம் வழங்குதல், மாதிரி மருந்துகள் சோதனை செய்தல், மருந்து தயாரிக்கும் நிறுவனங்களில் ஆய்வு மேற்கொள்ளுதல், சட்டத்திற்கு புறம்பாக செயல்படுபவர்களின்மீது நீதிமன்றங்களில் வழக்கு தொடர்தல் போன்ற பணிகள் தற்சமயம் மாநில மருந்துகள் உரிமம் வழங்கும் அதிகாரியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**8.8. தரப்படுத்துதல் மற்றும் மருந்து தர ஆய்வுக்கூடத்தை மேம்படுத்துதல்:**

பல்வேறு மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் மூலிகை மருந்துகளின் தரம் குறையாமல் பாதுகாப்பது இந்திய மருத்துவத்திற்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளது. மாநில மருந்துகள் ஆய்வுக் கூடம், இந்திய முறை மருந்துகளின் தன்மை மற்றும் தரம் ஆகியவற்றை உறுதி செய்ய சட்டப்பூர்வமான மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம் 1940-இன்கீழ் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த மாநில மருந்து ஆய்வுக் கூடத்திற்கு சட்டப்பூர்வ அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. மாநில மருந்து ஆய்வுக் கூடத்தின் முக்கியப் பணி மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம் விதி 33G-யின்படி மருந்து





ஆய்வாளர்களிடமிருந்து மருந்து மாதிரிகளைப் பெற்று சோதனை செய்து அவற்றின் தன்மை மற்றும் தரம் ஆகியவற்றை உறுதி செய்து, வழங்கும் வகையில் நவீன சோதனைக் கருவிகளை இந்த மாநில மருந்து ஆய்வுக்கூடம் கொண்டுள்ளது. இந்த ஆய்வுக்கூடத்தின் செயல்பாடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| ஆண்டு | சோதனை செய்தவைகள் | தரம் உறுதி செய்தவைகள் | தரம் உறுதி செய்யப் படாதவைகள் |
|---|---|---|---|
| 2009-10 | 203 | 141 | 62 |
| 2010-11 | 248 | 175 | 73 |

**8.9. தேசிய சித்த மருத்துவ நிறுவனம்:**

தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தை தாம்பரத்தில் அமைப்பதில் தமிழ்நாடு அரசு முக்கியப் பங்கு ஆற்றியுள்ளது. மாநில மற்றும் மத்திய அரசின் கூட்டு முயற்சியாக தேசிய சித்த மருத்துவ நிறுவனம் சென்னை, தாம்பரத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தை ஏற்படுத்த மைய அரசு 60% தொடரா செலவினத்தையும், 75% தொடரும் செலவினத்தையும் வழங்கியுள்ளது. தேசிய சித்த மருத்துவ நிறுவனம் 2005 ஆம் ஆண்டு, செப்டம்பர் மூன்றாம் நாள் தொடங்கப்பட்டது. சித்த மருத்துவத்தில் முதுநிலை பட்டக் கல்வியை வழங்குவதோடு, நோயாளிகளுக்கு சித்த மருத்துவ சிகிச்சை அளிப்பதையும் இந்த நிறுவனம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்நிறுவனம் சித்த மருத்துவத்தின் அறிவியல் மற்றும் கலை சார்ந்த உண்மைகளை வெளிப்படுத்தவும் சித்த மருத்துவத்தைப் பரப்புவதற்கும் உறுதி பூண்டுள்ளது.

**8.10. தமிழ்நாடு மருத்துவ மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம் (டாம்ப்கால்):**

தமிழ்நாடு மருத்துவ மூலிகைப் பண்ணை மற்றும் மூலிகை மருந்துக் கழகம் 1983 ஆம் ஆண்டு எற்படுத்தப்பட்டது. இந்தக் கழகம், சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருந்துகளைத் தயாரித்து அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இயங்கும் இந்திய மருத்துவ முறை பிரிவுகளுக்கு

விநியோகிக்கிறது. டாம்ப்கால் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.125.00 இலட்சமாகும். இதன் தற்போதைய செலுத்தப்பட்ட பங்கு மூலதனம், மிகை மூலதனம் உட்பட ரூ.100.00 இலட்சமாகும். இந்தக் கழகம் படிப்படியாக வளர்ந்து தற்போதைய நிலையை எட்டியுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டு 10.15 கோடியாக இருந்த இந்தக் கழகத்தின் மொத்த வருமானம் 2010-11 நிதியாண்டில் ரூ.16.90 கோடியாக அதிகரித்துள்ளது. கடந்த நிதியாண்டில் இக்கழகம் ரூ.74.79 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது. 1998-99 முதல் அரசுக்கு ஆதாயப் பங்கு செலுத்தி வருகிறது. டாம்ப்கால் நிறுவனம் தொடர்ந்து 3 ஆண்டுகளாக 100 விழுக்காடு ஆதாயப்பங்கை வழங்கி வருகிறது. இதன் கூட்டாண்மை அலுவலகம் சென்னை, அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ளது. டாம்ப்கால் உற்பத்திப் பொருட்களின் தரத்தை மேம்படுத்த ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இம்மையத்திற்கு 5 விழுக்காடு இலாபத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு புதிய தனி வகை மருந்தினை உருவாக்கவும், தற்போதுள்ள பொருட்களை விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 8.11. 2011–2012 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:

1. சென்னை, அரசு சித்த மருத்துவ கல்லூரியில் பயிலும் பட்ட மேற்படிப்பு மாணவியருக்கு ரூ.170.00 இலட்சம் செலவில் விடுதி கட்டடம் கட்டுதல்.
2. திருமங்கலம், ஓமியோபதி அரசு மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு ரூ.170.00 இலட்சம் செலவில் விடுதி கட்டடம் கட்டுதல்.
3. இந்திய முறை மருத்துவக் கல்லூரிகளில் ஆன்லைன்மூலம் வினாத்தாள்கள் வழங்கும் வசதி ரூ.3.90 இலட்சம் செலவில் ஏற்படுத்துதல்.
4. இந்திய மருந்து தரக்கட்டுப்பாடு ஆய்வகத்திற்கு ப்ளூரஸ்சன்ஸ் டிடெக்டெர் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்குதல்.





# அத்தியாயம்–9

## தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்

**9.1.** தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் சனவரி 2005 முதல் உலக வங்கி கடனுதவியுடன் ரூ.597.15 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்ட காலம் 5 ஆண்டுகள் ஆகும். இத்திட்ட நடவடிக்கைகள் 2010 மார்ச் மாதத்துடன் முடிவடைந்தது. தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் உலக வங்கியிடமிருந்து பெற்ற நிதியை திட்ட காலத்திற்குள் முழுவதுமாக பயன்படுத்தியுள்ளதுடன், அனைத்துத் திட்டங்களையும் வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளதால் தற்போது உலக வங்கி ரூ.627.72 கோடி மதிப்பீட்டில், இத்திட்டத்தை 30 செப்டம்பர் 2013 வரை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து செயல்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்தொகையில் உலக வங்கி ரூ.564.95 கோடி கடனாக வழங்கும். எஞ்சிய ரூ.62.77 கோடி தமிழக அரசு வழங்கும்.

### 9.2. மகப்பேறு மற்றும் சிசு நலம்:

தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் 24 மணி நேரமும் செயல்படும் பேறு கால அவசர சிகிச்சை மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு திட்டத்தை 125 அரசு மருத்துவமனைகளில் செயல்படுத்தி வருகிறது. இதனால் கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் இளம் சிசுக்களின் இறப்பு விகிதம் மற்றும் நோய் நிலை வீதம் குறைந்துள்ளது. இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ள திட்ட காலத்திலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மேலும், கீழ்க்கண்ட 8 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் மகப்பேறு மற்றும் சிசு நலத் துறைகளுக்கு, ரூ.48 கோடி செலவில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டு, ரூ.8 கோடிக்கு கூடுதல் மருத்துவக் கருவிகள் வழங்கப்பட உள்ளன.

1. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை
2. தஞ்சாவூர் இராஜா மிராசுதார் மருத்துவமனை
3. திருச்சி அண்ணல் காந்தி மருத்துவமனை
4. வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை
5. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை
6. தேனி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை
7. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை
8. தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை

[2011 செப்டம்பர் 12

**9.3. கருப்பைவாய் புற்றுநோய் தடுப்பு மற்றும் சிகிச்சை திட்டம்:**

இத்திட்டம் முன்னோடித் திட்டமாக பிப்ரவரி 2007 முதல் ஜனவரி 2010 வரை தேனி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 30 முதல் 60 வயது வரை உள்ள 4.75 இலட்சம் தாய்மார்களுக்கு கருப்பைவாய் புற்றுநோய் பரிசோதனை செய்யப்பட்டு, அவர்களில் 37,400 பெண்களுக்கு நோய் இருப்பது கண்டறியப்பட்டு, அவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. இந்த நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளித்ததினால் இப்பெண்களுக்கு பிற்காலத்தில் முழு வளர்ச்சியுற்ற புற்றுநோய் வருவது தடுக்கப்பட்டது. தற்போது, இத்திட்டம் மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு 30 வயதும் அதற்கு மேற்பட்ட அனைத்துப் பெண்களுக்கும் பரிசோதனை செய்யப்பட்டு தேவைப்படுவோருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும். இதன்மூலம் கருப்பைவாய் புற்றுநோய் ஏற்படுவது பெருமளவில் குறைக்கப்படும்.

**9.4. மார்பகப் புற்றுநோய் தடுப்பு மற்றும் சிகிச்சை திட்டம்:**

மார்பகப் புற்று நோய் பல பெண்களை பாதிக்கிறது. பெண்களுக்கு ஏற்படும் மார்பகப் புற்றுநோயை உரிய நேரத்தில் கண்டறிந்தால் குணப்படுத்தலாம். இதனைத் தடுக்கும் நோக்கத்துடன் மார்பகப் புற்றுநோய் தடுப்பு மற்றும் சிகிச்சை திட்டம் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் படிப்படியாக செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின்மூலம் 30 வயதும் அதற்கு மேற்பட்ட அனைத்து மகளிருக்கும் சுய மார்பகப் பரிசோதனை செய்வதற்கான பயிற்சி அளிக்கப்படும். இந்தச் சோதனையில் கட்டி உள்ளது எனச் சந்தேகப்படுபவர்களுக்கு, ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசு மருத்துவமனைகளில் உரிய பரிசோதனைகள் செய்யப்படும். மாமோகிராம் மற்றும் பயாப்சி போன்ற பரிசோதனைகள் செய்ய மாவட்ட அரசு மருத்துவமனைகளில் வழி வகை செய்யப்படும், இத்திட்டத்தின்கீழ் மூன்றாண்டு காலத்தில் சுமார் 1.7 கோடி பெண்களுக்கு இத்தகைய பரிசோதனை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.



2011 செப்டம்பர் 12]

**9.5. இதய நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு திட்டம்:**

இத்திட்டம் முன்னோடித் திட்டமாக விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 12 இலட்சத்திற்கும் மேற்பட்ட நபர்கள் பரிசோதனை செய்யப்பட்டு, அவர்களில் 77,757 நபர்களுக்கு உயர் இரத்த அழுத்த நோய் இருப்பது கண்டறியப்பட்டு, இவர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதனால் இவர்களுக்கு இதய நோய் வருவது தடுக்கப்பட்டுள்ளது. மேலும், சுகாதார மேம்பாட்டு செயல்பாடாக, பொதுமக்களுக்கு இதய நோய் தடுப்புக்கான விழிப்புணர்வு பிரசாரம் நடைபெற்று வருகிறது. இதன்மூலம் இதய நோய் ஏற்படுவதற்கான முக்கிய காரணங்களை தடுப்பதற்காக, வாழ்க்கை முறையில் சில மாற்றங்களைச் செய்து, நோயின்றி நலமாக வாழ்வது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். அதிக எண்ணெய்யுடன் வறுக்கப்பட்ட உணவுகளைத் தவிர்த்தல், உணவில் குறைவாக உப்பு பயன்படுத்துதல், உயரத்திற்கு ஏற்ற சரியான உடல் எடையை பராமரித்தல், உடல் உழைப்பினை அதிகரித்தல், புகைப்பிடித்தலை நிறுத்துதல், புதிதாக புகைப்பிடிக்கப் பழகாமல் இருத்தல் மற்றும் மனஅழுத்தத்தைத் தவிர்த்தல் போன்ற சுகாதார மேம்பாட்டு செயல்பாடுகள் இதில் அடங்கும். இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் மூன்றாண்டு காலத்தில் படிப்படியாக செயல்படுத்தப்படும். இந்த சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் பள்ளிகள், பணியிடங்கள் மற்றும் சமுதாயத்தினரிடையே மேற்கொள்ளப்படும். ஊரக வளர்ச்சி, கல்வி, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் நகராட்சி நிருவாகம் ஆகிய இதர துறைகளுடன் இணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**9.6. சர்க்கரை நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை திட்டம்:**

சர்க்கரை நோய் தடுப்பு, கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சைத் திட்டம் மாநில அளவில் அனைத்து மாவட்டங்களிலும் இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்படும். சர்க்கரை நோய் மற்றும் இதய நோய் ஏற்படுவதற்கான காரணிகள் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் பெரிய அளவில் மேற்கொள்ளப்படும். 30 வயதும் அதற்கு மேற்பட்ட அனைவருக்கும் சர்க்கரை நோய் கண்டறியும் பரிசோதனை செய்யப்பட்டு, நோய் உள்ளவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும்.

[2011 செப்டம்பர் 12

**9.7. அரசு மருத்துவமனைகளில் இணையதள வழி மருத்துவ தகவல் மேலாண்மைத் திட்டம்:**

இணைய தள வழி தகவல் மேலாண்மைத் திட்டம் மற்றும் மருத்துவ தகவல் மேலாண்மை திட்டம் 43 அரசு மருத்துவமனைகளில் தற்போது செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் ரூ.60 கோடி செலவில் எஞ்சியுள்ள 222 மருத்துவமனைகளில் விரிவுபடுத்தப்படும். மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இத்திட்டம் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்படும். மாநில சுகாதார தகவல் ஆதார மையம் ஒன்று தொடங்கப்பட உள்ளது. இந்த மையம் சுகாதாரம் தொடர்பான அனைத்து தகவல்களையும் சேகரித்து, கணினியில் பதிவு செய்து, பராமரிக்கும். இது ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்விற்கும் பயன்படும்.

**9.8. அரசு மருத்துவமனைகளுக்கு நவீன உபகரணங்கள் வழங்குதல்:**

இரத்த சுத்திகரிப்பு அலகு, மின் ஒலி இதய வரைவு, டிஜிட்டல் எக்ஸ்ரே, மார்பக ஊடுகதிர் பட பரிசோதனை, மோடுலர் வகை மல்டிபேரா மானிட்டர்கள், வெண்டிலேட்டர்ஸ், விஷ முறிவு சிகிச்சைக்கான உயிர் காக்கும் கருவிகள் ஆகியவை தமிழ்நாடு சுகாதார நலத் திட்டத்தின்கீழ் 55 கோடி ரூபாய் செலவில் மாவட்ட மருத்துவமனைகளுக்குக் கூடுதலாக அளிக்கப்பட்டு நோய் கண்டறியும் மருத்துவப் பரிசோதனை சேவைகளின் தரம் உயர்த்தப்படும்.

**9.9. நச்சு முறிவு மையங்கள் அமைத்தல்:**

ஏற்கெனவே செயல்படுத்தப்பட்ட திட்டத்தில், 34 இரண்டாம் நிலை அரசு மருத்துவமனைகளில் நச்சு முறிவு மையங்கள் அமைக்கப்பட்டன. இதனால் பாம்புக்கடி மற்றும் இதர விஷம் அருந்தியதால் பாதிக்கப்பட்டவர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. இந்த மையங்களில் கடந்த ஓராண்டில் 45,123 நபர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, அவர்களில் 44,347 நபர்களின் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது. இது 98.3 சதவீதமாகும். இந்த சேவை மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருப்பதால், மேலும் 32 அரசு மருத்துவமனைகளில் நச்சு முறிவு மையங்கள் அமைக்கப்படும்.



2011 செப்டம்பர் 12]

**9.10. 108 அவசர கால ஆம்புலன்ஸ் சேவை:**

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, காவல் துறை, தீயணைப்புத் துறை ஆகிய மூன்றையும் ஒருங்கிணைந்த அவசரகால நிர்வாக சேவை வழங்குவதற்காக தமிழ்நாடு அரசு ஹைதராபாத் இ.எம்.ஆர்.ஐ. நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. 15-09-2008 முதல் 108 அவசரகால ஆம்புலன்ஸ் சேவை செயல்படுகிறது. சென்னை அரசினர் கஸ்தூரிபாய் காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனையில் அவசரகால உதவி சேவை மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்சமயம் தமிழக அரசின் 108 அவசர கால ஆம்புலன்ஸ் சேவை 434 ஆம்புலன்ஸ் ஊர்திகளுடன் செயல்பட்டு வருகிறது. இத்துடன் மேலும், இரண்டு வாகனங்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சுகாதார திட்டத்தில் மேலும் 200 ஆம்புலன்ஸ் ஊர்திகள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் தேசிய ஊரக நல வாழ்வுத் திட்டத்தின்கீழ் 24 ஊர்திகள் வாங்கி இந்த ஆண்டு இறுதிக்குள் 660 ஊர்திகள் இயக்கப்படும். 15-9-2008 முதல் 31-08-2011 வரை 10,94,761 நோயாளிகள் இந்த ஆம்புலன்ஸ் சேவைமூலம் மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இந்தத் திட்டத்திற்கான மொத்த தொடரும் செலவு ரூ.78.71 கோடி ஆகும். அதில் ரூ.15.74 கோடி தேசிய ஊரக நலவாழ்வு திட்டத்தில் வழங்கப்படுகிறது.

**9.11. பழங்குடியினர் மருத்துவ மேம்பாடு:**

எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளில் வாழும் பழங்குடியினருக்கு மருத்துவ சேவை அளிப்பதற்காக கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- 10 மாவட்டங்களில் எளிதில் சென்றடைய முடியாத 12 பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளுக்கு நடமாடும் மருத்துவ ஊர்திமூலம் சிகிச்சை அளித்தல் (தேசிய கிராம சுகாதார திட்ட நிதி உதவி)
- சிகிச்சைக்கு வரும் பழங்குடியினருக்கு உதவுவதற்காக 30 அரசு மருத்துவமனைகளில் பழங்குடியின நோயாளி ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் மருத்துவமனைகளில் பழங்குடியினருக்கு உள் நோயாளியாக சிகிச்சை அளிப்பதற்கு படுக்கை மானிய நிதியுதவி வழங்குதல்.

[2011 செப்டம்பர் 12

- பழங்குடியின மக்களுக்கு சிக்கிள் செல் அனீமியா நோய் உள்ளதா என்பதைக் கண்டறியும் பரிசோதனைகள் செய்து, அவர்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை அளித்தல் மற்றும் நோய் தடுப்பு மருந்து வழங்குதல், திருமணத்திற்கு முந்தைய ஆலோசனை போன்ற ஆலோசனைகள் வழங்குதல்.

- திட்ட நீட்டிப்புக் காலத்தில் மேற்குறிப்பிட்ட திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இது தவிர கூடுதலாக 8 நடமாடும் சுகாதார சேவை ஊர்திகள் வழங்கப்படும். இதில் நான்கு ஊர்திகள் மூன்று புதிய மாவட்டத்திற்கும், நான்கு ஊர்திகள் ஏற்கெனவே உள்ள மாவட்டங்களுக்கும் வழங்கப்படும். மேலும், படுக்கை மானிய திட்டத்தின்கீழ் சேவை வழங்கிவரும் இரண்டு தொண்டு நிறுவன மருத்துவமனைகளுடன் நீட்டிக்கப்பட்ட காலத்தில், மேலும் இரண்டு தொண்டு நிறுவனங்கள் சேவை வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

### 9.12. அமரர் ஊர்தி சேவை:

மாநிலம் முழுவதும் 42 இடங்களில் குறைந்த கட்டணத்தில் அமரர் ஊர்தி சேவை தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வருகிறது. இந்த சேவை ஏழை எளிய மக்களுக்கு மிகவும் உதவியாக இருப்பதால், அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் மரணமடைபவர்களின் உடலை அவர்களது சொந்த ஊருக்கோ அல்லது மயானத்திற்கோ தமிழ்நாடு முழுவதும் இலவசமாகக் கொண்டு செல்ல இதனுடன் 21 வாகனங்கள் சேர்க்கப்படும். இவர்களுக்கு உதவுவதற்காக 108 அவசர கால ஆம்புலன்ஸ் சேவை வழங்கப்படுவது போன்று, ஒரு மையக் கட்டுப்பாட்டு அமைப்பு மூலம் இச்சேவை செயல்படுத்தப்படும். தற்போது சென்னையில் 16 ஊர்திகள் இயங்கி வருகின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள் 180 ஊர்திகள் இந்த சேவையில் ஈடுபடுத்தப்படும்.

### 9.13. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்:

தமிழக மக்கள் அனைவருக்கும் சிறந்த சுகாதார வசதிகள் வழங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் முதலமைச்சரின்



2011 செப்டம்பர் 12]

ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்த 11-07-2011 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்திட்டம் "முதலமைச்சரின் விரிவான பொது மருத்துவக் காப்பீட்டு திட்டம்" எனப்படும். ஆண்டு வருமானம் ரூ.72,000 மற்றும் அதற்கு குறைவாக உள்ளவர்கள் இத்திட்டத்தில் காப்பீடு பெற தகுதியுடையவர்கள். இத்திட்டத்தின்கீழ் ஒரு குடும்பத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.1.00 இலட்சம் வரையிலும், சில குறிப்பிட்ட சிகிச்சைகளுக்கு ரூ.1.50 இலட்சம் வரையிலும் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும். இப்புதிய திட்டத்தின்கீழ் 950 சிகிச்சைகளுக்கு காப்பீடு வழங்கப்படும். நோயாளிகளுக்கு பொது வார்டில் படுக்கைக் கட்டணம், செவிலியர் கட்டணம், தங்கும் வசதி, அறுவை மருத்துவர், மயக்க மருந்து மருத்துவர், ஆலோசனை மருத்துவர் ஆகியோருக்கான கட்டணம், அறுவை சிகிச்சைக்குத் தேவையான பொருட்கள், மருந்துகள், பிற உபகரணங்கள், எக்ஸ்ரே மற்றும் பரிசோதனைகளுக்கான செலவினம், நோயாளிகளுக்கான உணவு, போக்குவரத்து செலவு ஆகிய அனைத்து செலவினங்களும் காப்பீட்டுத் தொகையின்கீழ் வழங்கப்படும். மருத்துவமனைகளில் சேர்வதற்கு ஒரு நாள் முன்னதாக செய்யப்படும் பரிசோதனைகள் மற்றும் மருந்துகளுக்கான செலவும், மருத்துவமனையிலிருந்து சிகிச்சை முடிந்து வீட்டுக்கு அனுப்பபட்ட பிறகு 5 நாட்கள் வரை அதே சிகிச்சைக்காக மேற்கொள்ளப்படும் பரிசோதனை மற்றும் மருந்துகளுக்கான செலவும் காப்பீட்டுத் தொகையின்கீழ் வழங்கப்படும். ஒருவேளை நோயாளி இறக்க நேர்ந்தால், மருத்துவமனையிலிருந்து அவரது உடலை அவரது சொந்த கிராமம் / நகரத்திற்குக் கொண்டு செல்வதற்கான செலவும் காப்பீட்டுத் தொகையின்கீழ் வழங்கப்படும். மேலும் குறிப்பிட்ட 120 சிகிச்சைகளுக்குத் தேவைப்படும் மருந்துகள் தொடர்ந்து நீட்டிக்கப்பட்ட காலம் வரை வழங்கப்படும். அரசு மருத்துவமனைகளை வலுப்படுத்தும் பொருட்டு தனியார் மருத்துவமனைகளுக்கு நிகராக அரசு மருத்துவமனைகளுக்கும் சிகிச்சைக்கான முழு கட்டணம் வழங்கப்படும். சில குறிப்பிட்ட சிகிச்சைகள் அரசு மருத்துவமனைகளில் மட்டுமே அனுமதிக்கப்படும். அரசு மருத்துவமனைகளில் அனைத்து வசதிகளுடனான சிறப்பு காப்பீட்டு வார்டுகள் உருவாக்கப்படும். இதனால் புதிய காப்பீட்டுத் திட்டத்தில் பொதுமக்கள் அதிக எண்ணிக்கையில் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற நாடி வருவார்கள்.

[2011 செப்டம்பர் 12

# அத்தியாயம்–10

## மாநில நல வாழ்வு சங்கம்

**10.1.** பொருளாதாரம் மற்றும் சமூகவியல் முன்னேற்றத்தின் காரணிகளில் ஒன்றாக சுகாதாரம் விளங்குகிறது. இதனைக் கருத்தில்கொண்டு, சுகாதாரத் துறையில் உள்ள கட்டமைப்பு வளர்ச்சியில் உள்ள தடைகளைச் சரி செய்யவும், மக்களின் தரமான வாழ்க்கை முன்னேற்றத்திற்காகவும் தேசிய ஊரக நல்வாழ்வு இயக்கத்தை (NRHN) அரசு அமல்படுத்தியது. சுகாதாரத்திற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் செலவினை உயர்த்துவது மற்றும் மண்டலங்களிடையேயுள்ள சுகாதார கட்டமைப்பு வித்தியாசங்களை குறைப்பதும் இந்த இயக்கத்தின் நோக்கமாகும். சுகாதாரத் துறையில் தற்போதுள்ள மனித வளத்தின் உபயோகத்தினை உயர்த்த பல்முனை பயிற்சிகளும், நிருவாகம் மற்றும் நிதி சம்மந்தமான அமைப்பினை பலப்படுத்துவதும் இதன் பிற நோக்கங்கள் ஆகும். ஒருங்கிணைத்தல், அதிகார பகிர்ந்தளித்தல், நலத்திட்டத்தில் பொதுமக்களை பங்குபெறச்செய்தல், மாவட்ட அளவிலான மக்களின் நலத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள், குறிப்பாக கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு அளிக்கப்படுகின்ற சேவையை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய கோட்பாடுகளாகும். மக்களுக்குத் தேவைப்படும் அனைத்து மருத்துவ சேவைகளை, தரமானதாகவும், அனைவருக்கும் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுப்பதும் இவ்வியக்கத்தின் தொலைநோக்குப் பார்வையாகும். சுகாதாரத்துடன் சம்பந்தப்பட்ட மற்ற துறைகளான ஊட்டச்சத்து, குடிநீர், துப்புரவு ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். மக்கள் நல்வாழ்வை மேம்படுத்த இந்திய மருத்துவமுறையை உயர்த்தவும் இத்திட்டத்தில் வழிவகுக்கப்பட்டுள்ளது.

### 10.2. மாநில நலவாழ்வு சங்கத்தின் தொலைநோக்குப் பார்வை, இலக்கு மற்றும் நோக்கங்கள்:

#### 10.2.1. தொலைநோக்கு பார்வை:

- நலமான மக்கள்—இன்றும், எதிர்காலத்திலும்



2011 செப்டம்பர் 12]

#### 10.2.2. இலக்கு:

- மக்களின் தேவைக்கேற்ப எளிமையான மற்றும் சுகாதார சேவைகள் அளித்தல்
- நல்ல தரமான சுகாதார சேவைகளை அளித்தல்
- மக்களின் நீண்டகால நல்வாழ்வை வளப்படுத்துதல்
- சுகாதார சேவையின் நிருவாகத்தை மக்களுக்கு பொறுப்புடன் சேவை செய்வதற்கு ஏற்ற வகையில் மேம்படுத்துதல்.

#### 10.2.3. நோக்கங்கள்:

- பச்சிளம் குழந்தை மரணம் மற்றும் பேறு கால இறப்பினைக் குறைத்தல்.
- உலகளாவிய அளவில் அனைவருக்கும் பொது சுகாதார சேவைகளான மகளிர் நலம், குழந்தைகள் நலம், குடிநீர், சுகாதாரம், ஊட்டச்சத்து, நாடு தழுவிய தடுப்பூசித் திட்டம் கிடைக்க வழி செய்தல்.
- தொற்றுநோய், தொற்று அல்லாத நோய்களை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்.
- மக்கள்தொகையை நிலைப்படுத்துதல்—பாலினம் மற்றும் மக்கள்தொகையியல் காரணிகளை நிறைவேற்றுதல்.
- ஒருங்கிணைந்த ஆரம்ப சுகாதார சேவையை அனைவரும் பெறும் வண்ணம் நடவடிக்கை எடுத்தல்.
- சித்த மருத்துவம் மற்றும் இந்திய வழி மருத்துவ முறைகளுக்குப் புத்துயிர் அளித்தல்.
- ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை ஊக்குவித்தல்.

### 10.3. மாநில நல வாழ்வு சங்கம்:

**10.3.1.** மேற்கண்ட நோக்கங்களை சிறந்த முறையில் செயல்படுத்துவதற்காக மாநில அரசு மத்திய அரசுடன் இயக்கத்தின் வடிவமைப்பு, கொள்கை, காலவரையறை, மற்றும் குறிப்பிடப்பட்ட செயல்களுக்கு சிறந்த இலக்கு இவற்றின் அடிப்படையில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக மாநில மற்றும் மாவட்ட சுகாதார நலவாழ்வு

சங்கங்கள் உருவாக்கப்பட்டன. தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச்சட்டம் 1975-ன்கீழ் 15.3.2006 அன்று மாநில நலவாழ்வு சங்கம் பதிவு செய்யப்பட்டது. இதே போன்று தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் 30 மாவட்டங்களிலும் மாவட்ட நலவாழ்வு சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**10.3.2.** மைய அரசின் வழிகாட்டுதலின்படி தயாரிக்கப்பட்ட 2011-12 ஆம் ஆண்டிற்கான மாநிலத்தின் செயலாக்கச் செயல் திட்டத்திற்கு தேசிய ஊரக நலத் திட்டத்தின், தேசிய திட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 2011-2012 ஆம் ஆண்டிற்கான தேசிய ஊரக நலத் திட்டங்களுக்கான நிதி, திட்ட கருத்துருவில் உள்ள ஒவ்வொரு திட்டத்திற்கும் மாநில நலவாழ்வு சங்கத்தின் மூலமாக ஒதுக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| வ. எண் | தேசிய ஊரக நலத் திட்டத்தின் கீழ் செயல்படும் திட்டங்கள் | ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம் | 282.26 |
| 2. | தேசிய ஊரக நலவாழ்வு இயக்கம் | 306.93 |
| 3. | தடுப்பூசி திட்டம் (பல்ஸ் போலியோ உட்பட) | 13.25 |
| 4. | தேசிய நோய் பரப்பிகளால் பரவும் நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் | 7.65 |
| 5. | திருத்தி அமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்புத் திட்டம் | 12.83 |
| 6. | தேசிய பார்வையிழப்புத் தடுப்புத் திட்டம் | 23.55 |
| 7. | தேசிய தொழுநோய்த் தடுப்புத் திட்டம் | 1.81 |
| 8. | தேசிய அயோடின் குறைபாடு தடுப்புத் திட்டம் | 0.24 |
| 9. | ஒருங்கிணைக்கப்பட்ட நோய் கண்காணிப்புத் திட்டம் | 2.71 |
| 10. | உள்ளமைப்பு பராமரிப்பு (கருவூல மூலம்) | 249.54 |
| **மொத்தம்** | | **900.77** |



**10.3.3.** பல்வேறுபட்ட செயல்பாடுகளுக்காக மேலே கொடுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு, மாநில அரசின் பங்குத் தொகையான 15 சதவீதத்தையும் உள்ளடக்கிய நிதி ஒதுக்கீடு ஆகும். அனைத்துத் திட்டங்களுக்கும் ஒதுக்கப்படும் நிதி, மாநில நல வாழ்வு சங்கத்தின்மூலம் மாநில அளவிலான திட்டங்களுக்கும், மாவட்ட நலவாழ்வு சங்கங்களின்மூலம் மாவட்ட அளவிலான திட்டங்களுக்கும் வழங்கப்படுகிறது. இந்த நடைமுறை, அனைத்து நிதிகளும் களப்பணிக்கு சென்றடைய எளிதாக உள்ளது. பல்வேறு பணிகளுக்குத் திட்டமிடுவதற்கும், கொள்கை முடிவெடுப்பதற்கும் மாநில நலவாழ்வு சங்கத்திற்கு உறுதுணையாக பல்வேறு துணை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

*10.3.4.* பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம் மற்றும் தேசிய ஊரக நலவாழ்வு இயக்கம் ஆகிய முதலிரண்டு திட்டங்களின்கீழ் செயல்படுத்தப்பட உள்ள முக்கிய திட்டங்களைப்பற்றிய சிறு விவரிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற திட்டங்களின்கீழ் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மற்றும் நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் செயல்பாடுகள் அனைத்தும் அந்தந்தத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்புப் பகுதிகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

**10.4. பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம் – II:**

**10.4.1.** சிசு மற்றும் பேறுகால மரணத்தைக் குறைப்பதற்காக பெரிய அளவில் தரமான பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டங்களான மருத்துவ நிலையத்தில் பிரசவம் நடைபெறுதல், அவசரகால பிரசவ பாதுகாப்பு, பாதுகாப்பான கருக்கலைப்பு, குடும்ப நல அறுவை சிகிச்சைப் பணிகள், கிராமப்புற மற்றும் சிறு நகர்ப்புறங்களில் செயல்படும் வளர் இளம் பருவத்தினரின் நலவாழ்வு சேவைகள் போன்றவை செயல்படுத்தப்படுகின்றன. பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின்மூலம் ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டமைப்பு பணி மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவை உயர்த்தப்பட்டுள்ளன. இதன்மூலம் குறிப்பிடத்தக்க அளவில் பேறுகால இறப்பு விகிதம் மற்றும் சிசு மரண விகிதம் குறைந்துள்ளது மிகப்பெரிய சாதனையாகும். இந்த ஆண்டில் பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்திற்காக ரூ.282.26 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. “பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தில்” செயல்படுத்தப்படவுள்ள முக்கியமான திட்டங்கள் கீழ் வருமாறு:

[2011 செப்டம்பர் 12

**10.4.2. அனைத்து 1539 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 X 7 மணி நேர பிரசவ சேவை:**

ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிகழும் பிரசவங்களின் எண்ணிக்கை கடந்த மூன்று வருடங்களில் பல மடங்கு உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க சாதனையாகும். விகிதாச்சாரப்படி 2005 ஆம் ஆண்டில் 5 சதவீதமாக இருந்த நிலை நடப்பாண்டில் 28 சதவீதமாக உயர்ந்து, ஏப்ரல் 2010 முதல் மார்ச் 2011 வரையில் 2,76,399 பிரசவங்கள் நடைபெற்றுள்ளன. வாரத்தில் ஏழு நாட்களும் 24 மணி நேர பிரசவ சேவையை கடிகார சுற்று அடிப்படையில் மூன்று செவிலியர்கள் பணி அமைப்புடன் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் வழங்குவதால், மேலே சொல்லப்பட்டவை சாத்தியமாகிறது. பயிற்சி அளிக்கப்பட்டுள்ள பணியாளர்கள் எந்த நேரத்திலும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருப்பார்கள் என்ற நம்பிக்கையினால், மகப்பேறு எண்ணிக்கை மட்டுமன்றி, தினசரி புறநோயாளிகள் வருகை மற்றும் உள்நோயாளிகள் வருகையும் அதிகரித்துள்ளது. 2011–12 ஆம் ஆண்டு செயல் திட்டத்தில் இத்திட்டம் 1539 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு தொடர்ந்து நடைபெறுகிறது. இதற்காக ரூ.3281.76 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**10.4.3. ஜனனி சுரக்ஷா யோஜனா வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள தாய்மார்களுக்கான பிரசவ சேவையை உயர்த்துதல்:**

ஜனனி சுரக்ஷா யோஜனா, பேறுசார் மற்றும் குழந்தை நலத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் முக்கியமான திட்டங்களில் ஒன்றாகும். இத்திட்டத்தின்மூலம் மருத்துவமனையில் நிகழும் பிரசவ சேவை அதிகரிப்பதால், பேறுகால தாய்மார்கள் மற்றும் சிசுக்களின் இறப்பு பெருவாரியாகக் குறைக்கப்படுகிறது. நகர்ப்புறப் பகுதிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மருத்துவமனையில் பிரசவிக்கும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள கிராமப்புறத் தாய்மார்களுக்கு தலா ரூ.700/- வீதமும், நகர்ப்புறத் தாய்மார்களுக்கு தலா ரூ.600/- வீதமும் இரண்டு குழந்தைகள் பிறப்பு வரை வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்காக 2011-12 ஆம் ஆண்டில் ரூ.3215.58 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



2011 செப்டம்பர் 12]

**10.4.4. நடமாடும் மருத்துவக் குழுக்கள்:**

தேசிய ஊரக நலத் திட்டம் மூலமாக அனைத்து 385 வட்டங்களுக்கும் நடமாடும் மருத்துவக் குழுக்கள் வழங்கப்பட்டு, பிப்ரவரி 2009 முதல் ஆரம்ப சுகாதார நிலைய நோயாளிகள் நலச் சங்கத்தினால் செயல்படுத்தப்படுகிறது. இந்த மருத்துவக் குழுக்களை தற்போது அரசு அறிவித்துள்ள "நடமாடும் மருத்துவமனை" என்ற புதிய திட்டத்திற்கு தொலைதூரப் பகுதிகளில் சுகாதார வசதிகள் அளிப்பதற்குப் பயன்படுத்தப்பட உள்ளது. இந்த நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஆய்வுக்கூட வசதிகளுடனும், கூடுதல் பணியாளர்களுடனும் அறிவிக்கப்பட்ட பயணத் திட்டப்படி, எளிதில் சென்றடைய முடியாத தொலைதூர கிராமங்களுக்குச் சென்று சிகிச்சைகள் அளிக்கும்.

**10.4.5. ஒரு மருத்துவர் மட்டுமே உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதலாக ஒரு மருத்துவரை நியமனம் செய்தல்:**

பஞ்சாயத்து யூனியன் மருந்தகங்களாக இருந்து பிறகு மாற்றப்பட்ட 213 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒரு மருத்துவ அலுவலர்தான் உள்ளார். மற்ற ஆரம்ப சுகாதார நிலையங்களைப் போன்று இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களும் சிறப்பாகச் செயல்படுவதற்காக, கூடுதலாக ஒரு மருத்துவ அலுவலர் தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் கோரப்பட்டு, 2010/-11 செயலாக்க செயல்திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. முதல் கட்ட நடவடிக்கையாக 166 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்பாடுகளுக்கு ஏற்ப மருத்துவ அலுவலர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர். 2011-12 ஆம் ஆண்டிலும் இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்பட, ரூபாய் 728.46 இலட்சம் நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

**10.4.6. வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின்கீழ் அமைக்கப்பட்ட 399 ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் சிகிச்சை மற்றும் பராமரிப்பு சேவைகள் ஒருங்கிணைத்தல்:**

797 ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் சிகிச்சை மற்றும் பராமரிப்பு சேவை மையங்கள் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள்,

[2011 செப்டம்பர் 12

வட்ட மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், சிறைச்சாலைகள், மாநகராட்சி மற்றும் நகராட்சி சுகாதார மையங்கள், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகளில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தினால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. 399 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இயங்கும் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் சிகிச்சை மற்றும் பராமரிப்பு சேவை மையங்களில் பணிபுரியும் ஆலோசகர்கள், ஆய்வக நுட்புணர்களின் ஊதிய வீதங்களில் 25 சதவீதம், மற்றும் பயிற்சி செலவினம், ஆய்வக மருந்துகள் கொள்முதல் போன்றவற்றிற்களுக்காக 2010-11 ஆம் ஆண்டு செயலாக்க செயல் திட்டத்தில் கேட்கப்பட்டிருந்த செலவினத்திற்கு மைய அரசின் திட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி பெறப்பட்டிருந்தது. நடப்பாண்டில் இத்திட்டம் தொடருவதற்கு தேசிய ஊரக நலத் திட்டத்தில் 100 சதவீத நிதியாக ரூபாய் 1394 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

### 10.4.7. பிரசவித்த தாய்மார்களுக்கு உணவு வழங்குதல்:

ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வரும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு பிரசவ காலத்திற்கு முன் பரிசோதனைகளுக்காக தங்கியிருக்கையில் உணவு வழங்கப்படுகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதலாக வரும் தாய்மார்களின் எண்ணிக்கையை உத்தேசித்தும், கூடுதல் வசதிகள் செய்து கொடுப்பதற்காகவும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெறும் பிரசவங்களின் அடிப்படையில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் தொகை அளிக்கப்பட்டுள்ளது. பிரசவித்த தாய்மார்களுக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2 நாட்களுக்கு உணவு வழங்கப்படுகிறது. பிரசவித்த தாய்மார்களுக்கு உணவு வழங்குதல் எனும் சிறப்பான திட்டம் அவர்கள் 2 நாட்கள் பிறந்த குழந்தையுடன் ஆரம்ப சகாதார நிலையத்தில் தங்கிச் செல்லுதலை உறுதிப்படுத்துகிறது. ஆரம்ப சுகாதார நிலையத்தில் தங்குவதால் குழந்தைகளுக்கு உடனே தாய்ப்பால் வழங்குவதை ஊக்குவிக்க உதவி செய்கிறது. ஆரம்ப சுகாதார நிலையத்தில் தங்கும் காலத்தில், அவர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு பற்றி விளக்கிக் கூறவும், பிரசவ காலத்திற்குப் பின் ஏற்படக்கூடிய நோய்கள், அதன் அறிகுறிகள் ஆகியன குறித்து ஆலோசனை கூறவும், நலத் திட்டப் பணியில் உள்ளவர்களுக்கு ஏதுவாகிறது. 2011-12 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.574.63 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.



2011 செப்டம்பர் 12]

### 10.4.8. அவசர பேறுகால சேவைகளுக்காக மயக்கவியல் மற்றும் பெண்கள் நல சிறப்பு மருத்துவர்களின் சேவைகளைப் பயன்படுத்துதல்:

***10.4.8.1.*** முதன்மை பரிந்துரை மையங்களில் சிறப்பு மருத்துவர்கள் அதிக அளவில் இல்லாத நிலையை குடும்ப நலம் மற்றும் பேறுகால அவசர சிகிச்சை அளிக்கும் பணிக்காக தனியார் மயக்கவியல் மருத்துவர் மற்றும் பெண்கள் நல சிறப்பு மருத்துவர்களை அமர்த்தி சமாளிக்கப்படுகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் அரசு அல்லது தனியார் அல்லது ஓய்வுபெற்ற மருத்துவர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில் பயன்படுத்தப்படுகிறார்கள். பேறுசார் மகப்பேறு திட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவத்தின்போது சிசேரியன் அறுவை சிகிச்சைக்காக பெண்கள் நல சிறப்பு மருத்துவர்கள் வரவழைக்கப்படுகிறார்கள். மயக்கவியல் மற்றும் பெண்கள் நல சிறப்பு மருத்துவர்களுக்கு ஒரு அழைப்புக்கு ரூ.1000/- வழங்கப்படுகிறது. 2011-2012 ஆம் ஆண்டின் செயல் திட்டத்தில் ரூ.433.43 இலட்சம் இத்திட்டத்திற்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

***10.4.8.2.*** ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும், இரண்டாம் நிலை மருத்துவ மையங்களில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கும், உயிர் காக்கும் மயக்கவியல் திறன் வளர்ச்சிக்காகவும் மற்றும் அவசர பேறுகால சேவையில் பெண் மருத்துவர்களுக்கான அவசர பேறு கால திறன் வளர்ச்சிக்காகவும் குறுகிய கால பயிற்சி வகுப்புகள் 24 வாரங்களுக்கு வழங்க மைய அரசு அனுமதித்துள்ளது. இதுவரையில் உயிர் காக்கும் மயக்கவியல் திறன் வளர்ச்சி பயிற்சி 223 மருத்துவர்களுக்கும் அவசர பேறுகால திறன் வளர்ச்சி பயிற்சி முதல் கட்டமாக 23 மருத்துவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது 19 மருத்துவர்கள் உயிர் காக்கும் மயக்கவியல் திறன் வளர்ச்சி பயிற்சியும், 17 மருத்துவர்கள் அவசர பேறு கால திறன் வளர்ச்சி பயிற்சியும் பெற்று வருகிறார்கள்.

### 10.4.9. மகப்பேறு இரத்த சோகை நோய் தடுப்புத் திட்டம்:

மகப்பேறு காலத்தில் ஏற்படும் இரத்த சோகை நோயை தடுப்பதும், கட்டுப்படுத்துவதும் தற்போதுள்ள முக்கியமான பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினையைப் போக்குவதற்காக 2010-2011 ஆம் ஆண்டில் மகப்பேறு காலத்தில் ஏற்படும் மிதமான

[2011 செப்டம்பர் 12

மற்றும் தீவிர இரத்த சோகை நோய் தடுப்புத் திட்டத்தில் சிகிச்சைக்கான வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கர்ப்பிணிகளுக்கு வயிற்றுப் பூச்சிக்கொல்லி மருந்து அளித்தல் மற்றும் அதிகமான அளவில் இரத்த சோகையுள்ள நோயாளிகளுக்கு இரும்பு சத்து ஊசி அளித்தல் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். இரத்த சோகை ஆரம்ப நிலை மற்றும் அதிக இரத்த சோகையுள்ளவர்களுக்கு சிகிச்சையளிக்க 2011-12ஆம் ஆண்டில் ரூ.235.57 இலட்சம் நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

### 10.4.10. கர்ப்ப காலத்தில் ஏற்படும் நீரிழிவு நோய் கட்டுப்பாட்டு திட்டம்:

பேறுசார் திட்டத்தின்கீழ் வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்பட்ட செமி ஆட்டோ அனலைசர் கருவியினை பயன்படுத்தி கர்ப்ப காலத்தில் முன்கூட்டியே நீரிழிவு நோயை எளிதில் கண்டறியும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை ரூ.153.90 இலட்சம் செலவில், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் அல்லது அவர்கள் இல்லாத இடங்களில் பயிற்சி பெற்ற செவிலியர்களின் சேவையை பயன்படுத்தி விரிவுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 10.4.11. பாதுகாப்பான இரத்தம் கிடைக்க உறுதி செய்தல்—சமுதாய இரத்த தான முகாம்கள், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரத்த சேமிப்பு மையங்கள் தோற்றுவித்தல்:

பிரசவத்திற்குப்பின் அதிக உதிரப் போக்கினால் ஏற்படக்கூடிய தாய் மரணத்தைக் குறைப்பதற்கு, முதன்மை மருத்துவ பரிந்துரை மையங்களில் பிரசவித்த தாய்க்குத் தேவையான பாதுகாப்பான இரத்தம் வழங்குவதற்காக இரத்த சேமிப்பு வசதி ஏற்படுத்துவது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் படிப்படியாக 2010-11 வரையில் 255 சமூக நல மையங்களில் இரத்த சேமிப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, முதன்மை பரிந்துரை மையமாக செயல்பட வகை செய்யப்பட்டுள்ளது. 2011-12-ல் மேலும் 13 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரத்த சேமிப்பு மையங்கள் நிறுவப்பட உள்ளன. ஒரு வட்டாரத்திற்கு இரண்டு முகாம்கள் வீதம் இரத்த தான முகாம்கள் நடத்துதல் தொடரப்படும். இதன்மூலம் இரத்த சேமிப்பு மையங்களுக்குத் தேவையான தரமுள்ள அனைத்து வகை



2011 செப்டம்பர் 12]

இரத்தம் கிடைப்பதற்கு வழிவகை செய்யும். ரூபாய் 20.70 இலட்சம் இரத்த தான முகாம் நடத்துவதற்கும், இரத்த சேமிப்பு மைய பராமரிப்பிற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## 10.5. குழந்தை நலம்:

### 10.5.1. சிசு இறப்பு அதிகமுள்ள மாவட்டங்களில் இளஞ்சிசுக்களின் இறப்பை குறைப்பதற்கு, விரிவான திட்டம்:

சிசு இறப்பு விகிதம் சுகாதார மேம்பாட்டின் அலகீடாகவும், ஒருங்கிணைந்த சுகாதார திட்டம் மற்றும் சமூக பண்பாட்டு சூழலை பிரதிபலிப்பதாகவும் விளங்குகிறது. மாநிலத்தில், பிறந்த குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பரிந்துரை பணிகள், தேசிய ஊரக நலத் திட்டத்தின் துணையுடன் மாவட்டம் தோறும் படிப்படியாக முனைப்பு சிசு கவனிப்பு மையங்கள் நிறுவியதன் விளைவாக வலுவடைந்துள்ளன. மாநிலத்தில் முனைப்பு சிசு கவனிப்பு மையங்கள் நிறுவி பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு அதிகப்படுத்தப்பட்டுள்ளதால், இளம் சிசு மரணம் அடைவது குறிப்பிடத்தக்க வகையில் குறைந்துள்ளது. 2008-09 ஆம் ஆண்டில் சிசு இறப்பு அதிகமுள்ள 5 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு முனைப்பு சிசு கவனிப்பு மையங்கள் நிறுவப்பட்டன. 24 மணிநேரமும் இளஞ்சிசுக்களுக்குத் தேவையான சிகிச்சை கிடைக்கச் செய்ய, ஒவ்வொரு பிரிவிற்கும் ஒன்பது செவிலியர்கள், மூன்று குழந்தை நல சிறப்பு மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டு சிசு கவனிப்பு மையங்கள் இயங்க ஆவன செய்யப்பட்டுள்ளது. உத்தேசிக்கப்பட்ட இடங்களில் இளஞ்சிசு முனைப்பு மையங்கள் நிறுவுவதிலும், இயக்குவதிலும் பெரிய அளவில் இடர்பாடுகள் அனுபவரீதியாகக் கண்டறியப்பட்டன. நிர்வாகக் காரணங்களினால் ஏற்பட்ட காலதாமதத்தினால், 2010 ஆம் ஆண்டில் 10 மையங்கள் நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன. இளஞ்சிசு மையம் இயங்குவதை துரிதப்படுத்தலுக்காக, மீதமுள்ள மாவட்டங்களுக்கும் மாவட்டத்திற்கு ஒரு இளஞ்சிசு மையம் வீதம் அமைக்கப்படவுள்ளது. தரமான கட்டுமானப் பணிகள் மற்றும் மையத்தை நன்றாக பராமரிப்பதற்காகவும், பாதுகாப்புப் பணிகளுக்காகவும் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. திட்டமிடப்பட்ட 41 இளஞ்சிசு மையங்களில், 31 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் 2 இளஞ்சிசு மையங்கள்

அமைக்கப்படவுள்ளன. அனைத்து முனைப்பு சிசு கவனிப்பு மையங்களுக்கும் செவிலியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, நியமனம் செய்யும் பணி முடிவடைந்துள்ளது. இந்த செவிலியர்களுக்கு குழந்தைகள் நல மருத்துவமனையில் 6 வாரங்களுக்கு பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பிற்கான பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. குழந்தைகள் நல சிறப்பு மருத்துவர்கள் பற்றாக்குறை காரணமாக எம்.பி.பி.எஸ். கல்வித் தகுதியுடைய மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் பணியமர்த்தப்படுவதற்கு முன்னர் 1 முதல் 3 மாதங்களுக்கு பச்சிளம் குழந்தைகள் பராமரிப்புப் பயிற்சியளிக்கப்படுகிறது. நடப்பாண்டில் இத்திட்டம் தொடர்வதற்கு ரூ.796.56 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**10.5.2. ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிறந்த குழந்தைகளுக்கான அவசர சிகிச்சை:**

மைய அரசு வெவ்வேறு நிலை சுகாதார நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள புதிதாகப் பிறந்த குழந்தைகள் பராமரிப்புப் பகுதிகளுக்கு (New Born Baby corner) புதியதாக பிறந்த குழந்தைகளுக்கான ஸ்டெபிலைசேசன் பிரிவு, புதிதாக பிறந்த குழந்தைகள் நோய் பிரிவு, நான்கு வாரங்களுக்குட்பட்ட குழந்தைகளுக்கான நோய் பராமரிப்புப் பிரிவு வழிகாட்டுதல் (இந்திய பொது சுகாதார நிலை) வழங்கியுள்ளது. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பிறந்த குழந்தைகள் பராமரிப்புப் பகுதி அமைக்கப்பட வேண்டும். 1,421 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் புதிதாக பிறந்த குழந்தைகள் பராமரிப்புப் பகுதி அமைக்கப்பட்டு, அதனுடைய இயக்கத்திற்குத் தேவையான உபகரணங்கள், சுகாதார அலுவலர்களுக்கான பயிற்சி ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. மேலும் புதிதாக பிறந்த குழந்தைகள் பராமரிப்பு மையங்களை புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் அமைப்பதற்கும், நான்கு மாவட்டங்களில் ஏற்கெனவே உள்ள மையங்களை வலுப்படுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2011-12 ஆம் ஆண்டில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு உபகரணங்கள் வாங்குவதற்கு ரூபாய் 260.80 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. சுகாதார மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 42 மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையங்கள் அமைக்கப்பட உள்ளன. இந்த மையங்களில் பிறந்த குழந்தைகளுக்கான ஸ்டெபிலைசேசன் பிரிவு நடப்பாண்டில் நிறுவப்படும்.





**10.5.3. புதியதாக பிறந்த குழந்தைகளுக்கு அவசர சிகிச்சையளிப்பதற்காக வாடகை முறையில் தனியார் குழந்தை நல மருத்துவர்களை அமர்த்துதல்:**

1421 ஆரம்ப சுகாதார நிலையங்களில், மாதத்திற்கு ஒரு முறை புதன்கிழமைகளில் சிறப்பு சிகிச்சை அளிக்க குழந்தைகள் நல மருத்துவர்களை ஒப்பந்த அடிப்படையில் பார்வையிடும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. சிகிச்சைக்கு வரும் அனைத்து குழந்தைகளையும் குழந்தை நல மருத்துவர்கள் பரிசோதனை செய்வார்கள். நோய் கண்டறிந்து தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்து குழந்தைகளுக்கும் சிறந்த பராமரிப்பு அளிக்கப்படுகிறது, இதனால் குழந்தைகள் இறப்பு, குறிப்பாக குறைந்த எடையுடைய குழந்தைகளில் இறப்பு குறைக்கப்படுகிறது. 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.188.68 இலட்சம் இத்திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

**10.5.4. அவசர காலத்தில் தாய் மற்றும் குழந்தைகளை அழைத்துச் செல்ல நோயாளர் ஊர்தி சேவை:**

சுனாமியின்போது அவசர சிகிச்சை தேவைப்பட்ட குழந்தைகளை மேல் சிகிச்சை பெறுவதற்காக மாவட்ட அளவில் உள்ள மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்ல, 6 நோயாளர் ஊர்திகள், நாகப்பட்டினம், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு யுனிசெப் என்னும் அமைப்பால் வழங்கப்பட்டன. இந்த நோயாளர் ஊர்திகளை அதிக அளவில் பயன்படுத்தும் நோக்கில் அதன் பணியாளர்களுடன், மாவட்டத்தில் உள்ள இளஞ்சிசு பராமரிப்பு மையங்களில் (மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள், துணை மாவட்ட மருத்துவமனைகள்) நிறுத்த சமீபத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. பணியாளர் ஊதியம் மற்றும் வாகன பராமரிப்பிற்காக தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் ரூ.38.04 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**10.6. வளரிளம் பருவத்தினருக்கான நலத் திட்டம்:**

வளரிளம் பருவத்தினருக்கு உள்ள இரத்த சோகை நோயினை தடுத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்பது பேறுசார் நலத் திட்டத்தின் மிக முக்கியமான குறிக்கோளாகும். இத்திட்டத்தில் பள்ளி செல்லும் மற்றும் பள்ளி செல்லாத

[2011 செப்டம்பர் 12

வளரிளம் பெண்களுக்கு வருடத்திற்கு இரண்டுமுறை பூச்சி மருந்தும் இரும்பு சத்து மாத்திரை வாரம் ஒரு முறையும் அளிக்கப்படுகிறது. நடைமுறையில் உள்ள பள்ளி சுகாதாரத் திட்டத்தில் பள்ளி செல்லும் பெண்களுக்கு இரும்புச்சத்து மாத்திரையும், வயிற்றுப் பூச்சிக்கொல்லி மருந்தும், அளிக்கப்படுகிறது. பள்ளி செல்லாத வளரிளம் பெண்களுக்கு அந்தப் பகுதி நலப் பணியாளர்மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இரத்த சோகை நோயை தடுப்பது மட்டுமல்லாமல், மருத்துவக் கல்லூரிகளில் உள்ள சமுதாய நல மருத்துவப் பிரிவு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவில் உள்ள மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா மாணவர்களுக்கு வளரிளம் பருவத்தினருக்காக நலத் திட்டம் பற்றி பயிற்சியளித்து, தொலைதூர சேவைகளுக்கான முகாம்கள் நடத்தப்படுகின்றன. 2011-2012 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.312.26 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

### 10.7. நகர்ப்புற நல வாழ்வுத் திட்டம்:

சிறிய நகர்ப்புறங்களில் பொதுவாக நலசேவைகள் மிக நலிவடைந்த நிலையில் உள்ளதை கருத்தில் கொண்டு ஒரு இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட 60 நகராட்சிகளில் நகர்ப்புற சுகாதார நிலையங்கள் அமைக்க விரிவான திட்ட செயற்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில், கிராமப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களைப் போன்றே வாரத்தில் ஏழு நாட்களிலும் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் மூன்று செவிலியர்கள் நியமிக்கப்படுவார்கள். தேசிய ஊரக சுகாதார நலத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள 60 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களை பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு இயக்குநரின் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து, அவற்றுக்குத் தேவையான பணியாளர்களும், உபகரணங்களும் வழங்கப்படும். ஆரம்ப சுகாதார வசதிகள் இல்லாத ஒரு இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகையுள்ள 75 சிறிய நகரங்களில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு இயக்குநரின் கட்டுப்பாட்டில் புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.



2011 செப்டம்பர் 12]

## 10.8. மலைவாழ் நலம்:

### 10.8.1. 12 மலைவாழ் மாவட்டங்களில் கிராம சுகாதார தன்னார்வ சேவகிகள் நியமனம் :

மலைவாழ் மக்களுக்குத் தேவையான நலவாழ்வு சேவைகளை மேம்படுத்தி சிறந்த சேவை கிடைக்கும் வகையில் 12 மலை வாழ் மாவட்டங்களுக்கு தொலைதூர சேவைகள் அளிக்க 1639 கிராம சுகாதார தன்னார்வ சேவகிகள் (அங்கீகரிக்கப்பட்ட சமுதாய நலவாழ்வு ஊக்குநர் — ஆஷா) தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். மாநில அளவில் ஏற்கெனவே பயிற்சி பெற்ற 2 முதன்மை பயிற்சியாளர்களுடன் சோச்சரா என்ற தொண்டு நிறுவனத்துடன் இணைந்து கிராம சுகாதார தன்னார்வ சேவகிகளுக்கு ஐந்து ஆஷா பயிற்சி கையேடுகள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 1011 கிராம சுகாதார தன்னார்வ சேவகிகள் நடப்பாண்டில் நியமிக்கப்பட உள்ளனர். அவர்களுக்கு, செயல்பாடுகளின் அடிப்படையில் ஊக்கத்தொகை வழங்கவும், மருந்துப் பெட்டிகள் வழங்கவும், அவர்களின் பயிற்சிக்காகவும் 2011—12 ஆம் ஆண்டு செயல் திட்டத்தில் ரூபாய் 358.14 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 10.8.2. பிரசவ காலத்தில் காத்திருக்கும் அறை உருவாக்குதல்:

மலைவாழ் இடங்களிலிருந்து வரும் கர்ப்பிணி தாய்மார்களுக்கும் அவர்களுக்குத் துணையாக வருபவர்களுக்கும் பிரசவத்திற்கு குறிக்கப்பட்ட நாட்களுக்கு முன்னதாக ஒரு வாரம் மருத்துவமனையில் தங்கிச் செல்ல ஏதுவாக அவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் 35 மலைவாழ் பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்படுகிறது. இதற்கென ரூபாய் 98 இலட்சம் நடப்பாண்டில் அனுமதிக்கப்பட்டுள்ளது. மலைப் பகுதியில் உள்ள 35 ஆரம்ப சுகாதார நிலையங்களில், மலையடிவாரத்தில் உள்ள 15 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிலும் பிரசவ கால காத்திருப்பு அறை அமைக்கப்பட்டுள்ளது. கர்ப்பிணி தாய்மார்கள் குறிப்பாக மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளவர்கள், உத்தேச பிரசவ தேதிக்கு முன் இந்த காத்திருப்பு அறைக்கு வந்து அடிப்படை அவசர பேறுகால சிகிச்சை சேவைகள் பெறமுடிகிறது. பிரசவ கால காத்திருப்பு அறைகள் பராமரிப்பிற்காக ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

[2011 செப்டம்பர் 12

**10.8.3. பழங்குடியினா் பகுதியில் நடமாடும் மருத்துவப் பிரிவு:**

எளிதில் சென்றடைய முடியாத பகுதிகள் உள்ள 10 மாவட்டங்களில், அங்குள்ள மக்களுக்கு சுகாதார சேவை தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு சுகாதார திட்ட நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட திட்டம், தற்போது தேசிய ஊரக நலவாழ்வு குழு நிதியில் செயல்படுத்தப்படுகிறது. நடப்பாண்டில் மேலும் 3 மாவட்டங்களுக்கு 8 நடமாடும் மருத்துவ பிரிவுகள் அளிக்கப்படவுள்ளன. எளிதில் சென்றடைய முடியாத மலைவாழ் கிராம மக்கள் சேவைக்காக ரூ.151.92 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**10.9. பிரசவ காலத்திற்கு முன்/பின் பராமரிப்பு பிரிவு, பிரசவ அறை மற்றும் அறுவை அரங்கம் இவைகளில் பழுது பார்ப்புகள், புதுப்பித்தல் மற்றும் விரிவுபடுத்துதல்:**

நிலையங்களில் நடைபெறும் பிரசவங்கள் அதிகரித்து வருவதால், ஆரம்ப சுகாதார நிலையங்களில், பிரசவத்திற்கு வரும் தாய்மார்கள் பிரசவித்த பின் 48 மணி நேரம் தங்கி சுகாதார சேவைகளை பெறும் வகையில், ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதலாக இடவசதி செய்து தரவேண்டியது அவசியமாகிறது. அவர்களுக்கு வசதிகள் அளிக்கும் வகையில் பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தின்கீழ் ஆரம்ப சுகாதார நிலையங்களை பழுது பார்த்தல், புதுப்பித்தல் மற்றும் விரிவுபடுத்தல் போன்ற கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. சிறப்பு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல சேவைகளுடன் இதர சேவைகளும் அதிக அளவில் மக்களைச் சென்றடையும் வகையில் பிரசவ வார்டுகள், அறுவை அரங்கம், கர்ப்பகால முன் பராமரிப்புப் பிரிவு, பிரசவத்திற்கு பின் கவனிப்பு பிரிவு போன்ற பிரிவுகளை விரிவுபடுத்துதல், புதுப்பித்தல் மற்றும் பழுது பார்த்தல் போன்ற பணிகளை செய்ய 2011-2012 ஆம் ஆண்டில் ரூபாய் 2100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**10.10. மனித வள மேம்பாடு மற்றும் பயிற்சி:**

மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி 2011-2012 வருடத்திற்கு ஒருங்கிணைந்த கல்வி மற்றும் பணித்திறன் வளர்த்தல் பயிற்சிகளை, தேவையான இடங்களில் செயல்படுத்துவதற்காக மாநில அளவில்



2011 செப்டம்பர் 12]

பயிற்சியளிப்பதற்கு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அனைத்து நிலைகளிலும் சீரிய முறையிலான நல சேவைகளின் தரம் மற்றும் கால முறையிலான பயிற்சி தர 2009—2010-ல் மாவட்ட சுகாதார பயிற்சிக் குழு மற்றும் வட்டார பயிற்சிக் குழு தோற்றுவிக்கப்பட்டன. கண்டறியப்பட்ட மையங்களில் அரசு ஆய்வகங்களை நிறுவுவதன்மூலம் பல வேறுபட்ட பயிற்சிகள்மூலம் பெறப்பட்ட கல்வி, திறன் மற்றும் அதனை செயல்படுத்தும் அளவு முதலியவற்றினைத் தொடர்ந்து கண்காணிப்பதற்காக இந்தக் குழுக்கள் பலப்படுத்தப்பட்டு, தகுந்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 2011-2012 ஆம் ஆண்டில் பல்வேறு பயிற்சிகள் வழங்க ரூபாய் 21.66 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10.11. பேறுசார் மற்றும் குழந்தைகள் நல திட்டத்தில் 2011-2012 ஆம் வருடத்திற்கான புதிய திட்டங்கள்:**

**10.11.1. மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையம்:**

மாவட்ட சுகாதார பிரிவிற்கு ஒரு மையம் வீதம், 42 சமூக நல மையங்கள் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல பராமரிப்பு அளிக்கும் இரண்டாம் நிலை மகப்பேறு குழந்தை நல மையங்களாக செயல்பட கண்டறியப்பட்டுள்ளது. இந்த மையங்கள் கர்ப்பகால முன் பின் பராமரிப்பு, அவசர கால பிரசவ சேவை, பாதுகாப்பான கரு கலைப்பு, அறுவை சிகிச்சை சேவைகள், வளரிளம் பருவத்தினருக்கான தனி மருத்துவமனை, இனப்பெருக்க உறுப்பு நோய் மற்றும் பாலியல் சம்பந்தமான நோய் சரிசெய்தல் போன்ற பேறுசார் குழந்தைகள் நல சேவையினை மொத்தமாக வழங்கும் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையமாக மேம்படுத்தப்படும். தொலை தூரத்தில் எளிதில் சென்றடைய முடியாத இடங்களில் உள்ள 31 துணை சுகாதார மையங்கள் நாள் முழுவதும் பிரசவ சேவை வழங்க கண்டறியப்பட்டுள்ளன. இந்த மையங்களில் தரமான மருத்துவ சேவையை வழங்கவும் தரத்தை மேம்படுத்தவும் மேற்பார்வை செய்யப்படும். நடப்பாண்டில் ரூபாய் 18.97 கோடி செலவில் கூடுதலான பணியாளர்கள் மற்றும் உள்கட்டமைப்பு, மருந்துகள் மற்றும் பயிற்சி போன்றவற்றுடன் மகப்பேறு குழந்தைகள் நல மையங்கள் (31 துணை சுகாதார நிலையங்கள் + 42 சமூக நல மையங்கள்) வலுப்படுத்தப்படும்.

[2011 செப்டம்பர் 12

### 10.11.2. 108 அவசர கால நோயாளர் ஊர்தி:

மலைவாழ் பகுதியிலுள்ள உட்கிராமங்களுக்கு, தற்போதுள்ள '108' அவசர கால நோயாளர் ஊர்தி வாகனங்கள், வாகனத்தின் அளவு மற்றும் சாலைகள் அமைப்பின் காரணமாக சென்றடைய முடியாத நிலை உள்ளது. ரூ.2.76 கோடி செலவில் பழங்குடியினர் வாழும் மலைப் பகுதிகளில் கூடுதல் வசதிகளுடன்கூடிய 24 சிறப்பு ஊர்திகள்மூலம் இந்தச் சேவை வழங்கப்படும். பச்சிளம் குழந்தைகள் அவசர கால சேவை பெற ரூ.87 இலட்சம் செலவில் மாவட்டந்தோறும் ஊர்தி ஒன்று வழங்கப்படும்.

## 10.12. தேசிய ஊரக நலவாழ்வு இயக்கத்தின்கீழ் திட்டங்கள்:

### 10.12.1. நோயாளர் நலச் சங்கங்கள்:

ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகளின் சேவைகளை மேம்படுத்தும் வகையில் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்டம்/ வட்டம் அல்லாத மருத்துவமனைகளில் நோயாளர் நலச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அனைத்து சங்கங்களும் பதிவு செய்யப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றன. இச்சங்கம் அம்மருத்துவமனையில் பணிபுரியும் அலுவலர்கள்/ பணியாளர்களுடன் இணைந்து மக்களுக்கு சிறந்த சேவை அளிப்பதற்கான நடவடிக்கைகளையும், குறிக்கோள்களையும் அடைய வழிவகை செய்யும். இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனை சங்கங்களுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதமும், வட்டம் மற்றும் வட்டம் அல்லாத பிற அரசு மருத்துவமனை சங்கங்களுக்கு தலா ரூ. 1 இலட்சம் வீதமும் அனைத்து ஆரம்ப சுகாதார நிலைய சங்கங்களுக்கு தலா ரூ. 1 இலட்சம் வீதமும், நகர நல மையங்களுக்கு ரூ.1 இலட்சம் வீதமும் வழங்கப்பட்டு வருகிறது. 2011-2012 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.2215.00 இலட்சம் திட்டமிடப்பட்டுள்ளது.

### 10.12.2. ஆரம்ப சுகாதார நிலையங்கள் / துணை சுகாதார நிலையங்களுக்கு ஆண்டு பராமரிப்பு மானியம்:

அடிப்படை அவசர பேறுகால சிகிச்சை மற்றும் இளஞ்சிசு கவனிப்புப் பணிகள் வழங்கும் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சமூக நல மையங்களுக்கு, இயற்பியல் உட்கட்டமைப்பு வசதிகளின்மூலம் தரமான பணிகள்



2011 செப்டம்பர் 12]

வழங்குவதை உறுதி செய்யும் வகையில் வருடாந்திர பராமரிப்பு செலவினத்திற்கு ரூபாய் 1.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அது போன்றே இதர ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் சுகாதார மையங்களின் நல்ல செயல்பாட்டிற்காகவும், குடிநீர் வழங்குதல், கழிவறை கட்டுதல் அவற்றின் பயன்பாடு மற்றும் பராமரிப்பிற்காக ஆண்டுதோறும் ரூ.50,000/- வழங்கப்படுகிறது. சொந்தக் கட்டடத்தில் இயங்கும் துணை சுகாதார நிலையங்களுக்கு அதனை பராமரிப்பதற்காக ஆண்டு பராமரிப்பு நிதியாக ரூ.10,000/- வழங்கப்படுகிறது. 2011-2012 ஆம் நிதியாண்டில் ரூ.1645 இலட்சம் இத்திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

### 10.12.3. ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களுக்கு நிபந்தனையற்ற நிதி வழங்குதல்:

ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், துணை சுகாதார நிலையங்களிலும் அன்றாட, தவிர்க்க இயலாத திடீர் செலவினங்களை சமாளிப்பதற்காக, நிபந்தனையற்ற நிதி வழங்கப்படுகிறது. இந்த நிதியை செலவிடுவதற்கு, நோயாளர் நலச் சங்கங்களுக்கே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. துணை சுகாதார நிலையங்களுக்கு, ஆண்டொன்றுக்கு, ரூ.10000/- ஒதுக்கப்படுகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு, ஆண்டொன்றுக்கு ரூ.25000/- ஒதுக்கப்படுகிறது. வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.50000/-மும், மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சமும் ஒதுக்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக தேவைப்படும் நிதி ரூ.1528 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 10.12.4. கிராம நலவாழ்வு, நீர் மற்றும் துப்புரவுக் குழு:

மக்களின் நல வாழ்வுத் தேவைகளை அளவிடுவதற்கும், திட்டங்களைத் தீட்டுவதற்கும், கிராமங்களே அடிப்படையாகும். இதனை மனதில் கொண்டு, தமிழகத்தில் உள்ள 12618 கிராமப் பஞ்சாயத்துகளில் 12618 கிராம நலவாழ்வு மற்றும் துப்புரவு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களில், பஞ்சாயத்ராஜ் அமைப்பைச் சார்ந்த பிரதிநிதிகள், மகளிர் குழுக்கள் மற்றும் சுகாதாரம், குடிநீர் மற்றும் துப்புரவு முதலிய சுகாதாரத் துறையுடன் சம்பந்தமுடைய கிராம அளவிலான அலுவலர்கள் இடம் பெற்றுள்ளனர். இது போல் 561 நகர பஞ்சாயத்துகளில், 3000 மக்கள் தொகைக்கு ஒரு குழு வீதம் 2540 கிராம சுகாதார மற்றும்

[2011 செப்டம்பர் 12

துப்புரவு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களுக்கு, ஆண்டொன்று ரூ.10000/- நிபந்தனையற்ற நிதியாக வழங்கப்படுகிறது. கிராமத்தின் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்நிதி செலவிடப்படுகிறது. இக்குழு உறுப்பினர்களுக்கு, கிராம சுகாதாரத் தேவைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு அவர்களுக்கு மறு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூ.1515.80 இலட்சமாகும்.

**10.12.5. கிராம சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நாள்:**

கிராம சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நாள் ஒவ்வொரு மாதமும், கிராம சுகாதார துப்புரவுக் குழுவால், அங்கன்வாடி மையங்களில் சுழற்சி முறையில், நடைமுறைப்படுத்தப்படுகிறது. இவ்விழாவில் கிராம சுகாதார செவிலியரும், அங்கன்வாடி பணியாளரும் இணைந்து மக்களுக்கு நலவாழ்வு சேவைகளை வழங்குகின்றனர். இந்த நாளில் கர்ப்பிணி பெண்களுக்கான பரிசோதனைகள் உட்பட ஏனைய மருத்துவப் பணிகள் முற்பகலிலும், சுகாதாரம் சார்ந்த தகவல் தொடர்புப் பணிகள் பிற்பகலிலும் மேற்கொள்ளப்படுகின்றன. கிராம நலவாழ்வு மற்றும் ஊட்டச்சத்து நாள் கொண்டாடப்படுவதால், அங்கன்வாடி பணியாளர் மற்றும் மக்கள் நல்வாழ்வுப் பணியாளர் ஒருங்கிணைந்து சமுதாயத்திற்குத் தேவைப்படும் நல்வாழ்வு தேவைகளை பூர்த்தி செய்கின்றனர்.

**10.12.6. ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் முதன்மை பரிந்துரை மையங்களில் கட்டுமான மேம்பாடு:**

நோயாளர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், மாவட்ட திட்டமிடுதலின் ஒரு பகுதியாக, ஆரம்ப சுகாதார நிலையங்களின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுதல் தேவையாக உள்ளது. உள் நோயாளர் பிரிவுகள், பிரசவ அறைகள், அறுவை அரங்குகள் ஆகியவை கட்டுதல் மட்டுமல்லாது, இருபத்து நான்கு மணி நேரமும் செவிலியர்கள் தங்கி சேவைகளை செய்வதற்காக செவிலியர் குடியிருப்புகள் அவசியமாகும். 2011-2012 ஆம் ஆண்டில் மக்களின் தேவைகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதி தேவைகளை கருத்தில் கொண்டு, ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேர்வு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் துவக்கப்பட உள்ளன. இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை, ரூ.2010 இலட்சமாகும். முதன்மை பரிந்துரை மையங்களில் தேவைப்படும்



2011 செப்டம்பர் 12]

கட்டுமானப் பணிகள், 2010-11-ல் கணக்கெடுக்கப்பட்டு Facility Survey, 2010-2011 மற்றும் 2011-2012-ல் இரண்டு கட்டமாக மேற்கொள்ளப் படுவதற்காக ரூ.2902 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வொதுக்கீட்டின்படி கட்டுமானப் பணிகள் 2010-11-ல் ஆரம்பிக்கப்பட்டு, நடப்பாண்டில் ரூ.1800.00 இலட்சம் செலவில் தொடரப்படும்.

**10.12.7. ISO–தர சான்றிதழ் பெறுதல்:**

ஆரம்ப சுகாதார நிலையங்களின் தரத்தை மேம்படுத்தும் முயற்சியாக சுகாதார மாவட்டம் ஒன்றுக்கு 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேர்வு செய்யப்பட்டு, 12 சுகாதார மாவட்டங்களில் 48 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு, ISO தரச் சான்றிதழ் 2010-2011-ல் பெறப்பட்டுள்ளது. இதற்காக NHSRC மற்றும் அது அங்கீகரித்துள்ள தரச்சான்றிதழ் நிறுவனத்துடன், மூவர் ஒப்பந்த உடன்பாடு செய்யப்பட்டுள்ளது. அதே தரச் சான்று நிறுவனத்துடன் இணைந்து சுகாதார சேவைகளை வரும் ஆண்டுகளிலும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதர 30 சுகாதார மாவட்டங்களில், தலா ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ISO தரச் சான்றிதழ் பெறுவதற்காக ரூ.230 இலட்சம் 2011-2012-ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் ஆரம்ப சுகாதார நிலையங்களில் வழங்கப்படும் சிகிச்சையின் தரம் உயர்ந்து, தனியார் மருத்துவமனைகளுக்கு இணையான சேவை, ஏழை மக்களுக்குக் கிடைக்க ஏதுவாகிறது.

**10.12.8. ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய முறை மருத்துவ (AYUSH) மையங்கள்:**

தற்போதுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் சேவைகளுடன், இந்திய மருத்துவ முறை சேவைகளையும் ஒருங்கிணைத்து மக்களுக்கு கிடைக்கும் வண்ணம் தேசிய ஊரக நலவாழ்வு சங்கத்தால் இந்திய முறை மருத்துவ (AYUSH) மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்கள் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளன. தமிழ்நாட்டில் ஆரம்ப நல்வாழ்வு சேவை வழங்குவதில் இந்திய முறை மருத்துவம் (AYUSH) ஓர் முக்கியமான அங்கமாக விளங்குகிறது. ஏற்கெனவே நடைமுறையிலிருந்த 479 இந்திய முறை மருத்துவ (AYUSH) மையங்களுடன் சேர்த்து, 2009-10 ஆம் ஆண்டில் 300 மையங்களும்,

[2011 செப்டம்பர் 12

2010-11 ஆம் ஆண்டில் மேலும் 175 மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதனால், 60% ஆரம்ப சுகாதார நிலையங்களில், இந்திய முறை மருத்துவ (AYUSH) மையங்கள் செயல்படுகின்றன. இத்திட்டங்கள் நடப்பாண்டில் தொடர்வதற்கு ரூ.1230.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10.12.9. மாற்றியமைக்கப்பட்ட பள்ளி சிறார் நலவாழ்வுத் திட்டம்:**

2009-2010 ஆம் ஆண்டில் கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் ஆகிய ஆறு மாவட்டங்களும், 2010—11-ல் சேலம், தருமபுரி, திருவண்ணாமலை மற்றும் திருவாரூர் ஆகிய நான்கு மாவட்டங்களும் தேர்வு செய்யப்பட்டு, மாற்றியமைக்கப்பட்ட பள்ளி சிறார் நலவாழ்வுத் திட்டம் மைய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் வழங்கப்பட்ட மாதிரியை அடிப்படையாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. 2011-2012 ஆம் ஆண்டில் இதர 20 மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ளது. 20 மாவட்டங்களுக்கு மாற்றியமைக்கப்பட்ட பள்ளி சிறார் நலவாழ்வுத் திட்டம் செயல்படுத்த ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.1194 இலட்சமாகும்.

**10.12.10. கண்ணொளி காப்போம் திட்டம்:**

ஐந்து முதல் பதினைந்து வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஏற்படும் பார்வைக் குறைபாட்டிற்கு முதன்மைக் காரணமாகக் கருதப்படுவது சரி செய்யப்படாத ஒளிக்கற்றை விலகல் குறைபாடேயாகும். குழந்தைகளிடத்தில் கிட்டப்பார்வை குறைபாடானது நாளுக்குநாள் அதிகரித்து கொண்டே வருகிறது. 2009-10 ஆம் ஆண்டில் நடுநிலைப் பள்ளிகளில் ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரையில் உள்ள மாணவ மாணவியருக்கு இவ்வொளிக்கற்றை விலகல் குறைபாட்டினை கண்டறிவதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கு ஏற்ற கண்ணாடியை வழங்க திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில் மொத்தம் 1,60,983 கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. 2010-2011 ஆம் ஆண்டில் ஆறு மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தை செயல்படுத்த ரூ.387 இலட்சம் வழங்கப்பட்டுள்ளன. 1,61,072 கண்ணாடிகள் மாணவர்கட்கு



2011 செப்டம்பர் 12]

வழங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் குழந்தைகளை பரிசோதனை செய்யும் இந்தத் திட்டத்தை செயல்படுத்த ரூபாய் 2.52 கோடி கோரப்பட்டு இந்திய அரசின் ஒப்புதலுக்காக உள்ளது.

**10.12.11. பள்ளி மாணவருக்கான பல் பாதுகாப்புத் திட்டம்:**

**10.12.11.1.** கிராமப்புறங்களில் பல் மருத்துவ மையங்களை அமைத்தல்மூலம் பல் மருத்துவ விழிப்புணர்வை கிராமப்புறங்களில் ஏற்படுத்த இயலும். இதன்மூலம் பல் சார்ந்த நோய்களை தடுத்தலையும் அந்நோய்களுக்கு அளிக்கப்படும் மருத்துவ சிகிச்சைகளையும் ஒருங்கிணைத்து அளிக்க இயலும். தற்பொழுது 148 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 22 வட்டம் / வட்டம் சாரா மருத்துவமனைகளிலும் பல் மருத்துவ சேவைகள் வாரத்திற்கு மூன்று நாட்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தினை மேலும் 60 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.219.6 இலட்சம் செலவில் விரிவுபடுத்தப்படவுள்ளது. இதன்மூலம் 208 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

**10.12.11.2.** பள்ளிச் சுகாதாரத் திட்டப் பரிசோதனையில் சுமார் 45 சதவிகித குழந்தைகளுக்கு பல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உள்ளதாகத் தெரிகின்றது. சொத்தை பல், பற்காரை, ஈறு நோய், சீரற்ற பல் ஆகியவை பள்ளி குழந்தைகளிடத்தில் காணப்படும் பொதுவான நோய்கள். இப்பல் பிரச்சனைகளை ஆரம்பத்திலேயே கண்டறிதல்மூலம் அவற்றை முற்றிலுமாக தடுக்க இயலும். தற்பொழுது 148 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இச்சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2010-11 ஆம் ஆண்டில் எல்லா அரசு மற்றும் அரசு சாரா பள்ளிகளில் மூன்று முதல் எட்டாம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு இப்பல் மருத்துவ சேவை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு ரூ.244.94 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2011-12 ஆம் ஆண்டில் இத்திட்டம் இம்மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படவுள்ளது.

**10.12.12. நோய் தணிப்பு சிகிச்சை (சமூக அடிப்படை மாதிரி):**

நோய் தணிப்பு சிகிச்சை என்பது நோயாளியின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்தம் குடும்பங்கள் புற்றுநோய் போன்ற

[2011 செப்டம்பர் 12

நோய்களுக்கு தகுந்த சிகிச்சை அளிக்கவும் தனியார் நிறுவன பங்களிப்பு உதவியுடன் ஆரம்பத்திலேயே கண்டறிந்து தடுத்து நிவாரணம் அளிக்கும் ஓர் முயற்சியாகும். இதற்கான மாதிரித் திட்டம் 2009-2010 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டம் திருப்புட்குழி ஆரம்ப சுகாதார நிலையத்தில் செயல்படுத்தப்பட்டது. இங்கு பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் விழுப்புரம், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் இந்தத் திட்டத்தை செயல்படுத்த தலா ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்காக 2010-2011 இல் ரூ.150 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் உத்தேசமாக செப்டம்பர் 2011 இல் நடைமுறைப்படுத்தபடவுள்ளது.

**10.12.13. அவசரகால நோயாளர் ஊர்தி:**

சுகாதாரம் மற்றும் குடும்ப நல்வாழ்வு துறை, காவல் துறை, தீயணைப்புத் துறை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் அவசர கால சிகிச்சை சேவைகள் அளிப்பதற்கு ஹைதராபாத் இ.எம்.ஆர்.ஐ. நிறுவனத்துடன் தமிழ்நாடு அரசு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது. அவசரகால நோயாளர் ஊர்தி சேவை 15-09-2008 முதல் செயல்பாட்டில் உள்ளது. அவசர கால மேலாண்மை உதவி மையம், சென்னை அரசு கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனையில் உள்ளது. '108' ஆம்புலன்ஸ் சேவையின் மூலமாக வழங்கப்படும் அவசரகால போக்குவரத்து சேவையை மருத்துவமனைகளுக்கு இடையேயான போக்குவரத்து வசதிகளையும் அனுமதிப்பது போன்ற கூடுதல் சேவைகளுடன் இத்திட்ட செயல்பாடு மேம்படுத்தப்படும். நடப்பு ஆண்டுக்கான தேசிய ஊரக நல வாழ்வு இயக்க நிதியில் 20 விழுக்காடு தொடர் செலவினம் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மைய அரசு வரையறுத்ததால் 2011-12 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் தொடரும் செலவினம் மற்றும் தொடரா செலவினத்திற்காக ரூ.1574.26 இலட்சம் மனிதவள செலவினம், பயிற்சி, எரிபொருள், பழுதுபார்ப்புகள் மற்றும் பராமரிப்பு மற்றும் இதர தேவைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய செலவினம் மாநில நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

**10.12.14. மனித வளம்:**

சமவெளிகளில் 30,000 மக்கள் தொகைக்கு, ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதிகளில் 20,000 மக்கள் தொகைக்கு



2011 செப்டம்பர் 12]

ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற நெறிமுறைகளின்படி, 166 ஆரம்ப சுகாதார நிலையங்கள் (2009-10-ல் 116 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மற்றும் 2010-11-ல் 50 ஆரம்ப சுகாதார நிலையங்களில்) அமைக்கப்பட்டுள்ளன. இதனால், கிராமப்புற ஏழை மக்கள், தங்கள் நல்வாழ்வுத் தேவைகளை அருகிலேயே நிறைவேற்றிக்கொள்ள இயலுகிறது. இதேபோல் 2008-10 ஆம் ஆண்டுகளில், 30 படுக்கைகள், அறுவை அரங்குகள், ஸ்கேன் வசதி, ஊடுகதிர் பிரிவு, ஈ.சி.ஜி. பிரிவுகள் முதலியவற்றுடன் 125 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான பணியாளர் செலவினத்தை தேசிய ஊரக நலத் திட்டம் ஏற்றுக்கொள்கிறது. 2011-12 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தில் பணியாளர்கள் செலவினத்திற்காக ரூ.4049.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10.12.15. புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்படும்:**

கிராமப்புற மக்களின் நலவாழ்வு தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக, மணப்பாறை வட்டாரத்தில் மறவனூர் ஊராட்சியிலும், மணிகண்டம் வட்டாரத்தில் சோமரசம்பேட்டை ஊராட்சியிலும், அண்டநல்லூர் வட்டாரத்தில் பெட்டவாய்த்தலை ஊராட்சியிலும் மூன்று புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூ.114.27 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

## 10.13. தேசிய நலத் திட்டத்தின்கீழ் 2011-2012-ல் நடைமுறைப்படுத்தப்பட உள்ள திட்டங்கள்:

**10.13.1. பெண்கள் நலமுடன்:**

தமிழ்நாட்டு கிராமப்புற மக்களிடையே தொற்றா நோய்களின் முதற் காரணிகளை குறைத்து மக்களின் நலத்தினை மேம்படுத்த "நலமான தமிழகம்" திட்டம் 2010-2011-ல் தொடங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக பெண்களுக்கு மார்பக மற்றும் கருப்பைவாய் புற்று நோய்களைக் கண்டறிய "பெண்கள் நலமுடன்" திட்டம் நடப்பாண்டில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில் கிராமப்புறங்களில் 30 வயதுக்கு மேல் உள்ள பெண்கள் அனைவரும் பரிசோதிக்கப்படுவார்கள். பெண்களிடையே மார்பக மற்றும் கர்ப்பப்பைவாய் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் இதன் நோக்கமாகும். இதற்காக மருத்துவ அலுவலர்,

[2011 செப்டம்பர் 12

செவிலியர் மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்களைக் கொண்ட நடமாடும் மருத்துவக் குழுவால் மூன்று முதல் நான்கு முகாம்கள் வரை நடத்தப்படும். இம்முகாம்களில் கண்டறியப்படும் நோயாளிகள் சிறப்பு மருத்துவ பராமரிப்பிற்கு பரிந்துரை செய்யப்படுவர். துணை சுகாதார நிலையங்களில் நடத்தப்படும் முகாம்கள் கிராம சுகாதாரம் மற்றும் குடிநீர் தூய்மை செயற் குழுக்கள்மூலம் நடத்தப்படும். பெண்கள் நலமுடன் என்ற பரிசோதனை முகாம்கள் நடத்த ரூ.2.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 10.13.2. மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் – முதியோர் சிகிச்சை மையங்கள் மற்றும் உடற்பயிற்சி மருத்துவமனைகள் அமைத்தல்:

2011-2012 ஆம் ஆண்டில் முன்னோடித் திட்டமாக முதியோர்களுக்கு உடற்பயிற்சி மற்றும் மறுவாழ்வு சேவைகள் வழங்கும் ஒரு புதிய திட்டம் வேலூர், திருச்சி, சிவகங்கை, கன்னியாகுமரி, சேலம் ஆகிய ஐந்து மாவட்டங்களில், செயல்படுத்தப்பட உள்ளது. முன்னோடி மருந்தகங்கள் அமைக்கப்பட்டு அரசு — தனியார் கூட்டு முயற்சி முறையில் பணியாளர் நியமிக்கப்படுவர். இத்திட்டத்தில் தற்போதுள்ள உடற்பயிற்சி மருத்துவ பயிற்சி கல்லூரிகளின் சேவைகளும், ஆயுஷ் மையங்களின் சேவைகளும், ஒருங்கிணைக்கப்பட்டு இம்மையங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. அடிப்படை உபகரணங்கள் மற்றும் சிகிச்சை மையங்கள் நடைபெறும் செலவினமாக, மையம் ஒன்றுக்கு ரூ.2 இலட்சம் வீதம், மொத்தம் ஓராண்டுக்கு ரூ.30 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

### 10.13.3. பயிற்சி மையங்களை மேம்படுத்துதல்:

தமிழ்நாட்டில், எட்டு பொது சுகாதார பயிற்சி மையங்களும் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கிராம சுகாதார செவிலியர்களுக்கான பயிற்சிக்காக 10 கிராம சுகாதார பயிற்சி மையங்களும் உள்ளன. பெருகி வரும் தேவைக்கேற்ப பேறுசார் மற்றும் குழந்தைகள் நலம் மற்றும் தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் நடைபெறும் திட்டங்கள் பற்றி பயிற்சிகள் வழங்குவதற்கு இந்தப் பயிற்சி மையங்களின் வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது. பயிற்சி மையங்களின் வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் பயிற்சிக்கான தரமான ஆய்வகம், களப் பணியாளர்களை பணி மதிப்பீடு செய்தல் போன்றவைகளுக்காக ரூபாய் 500 இலட்சம் நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது.



2011 செப்டம்பர் 12]

### 10.13.4. குழந்தைகளிடையே காணப்படும் பிறவிக் குறைபாடுகள் கண்டறிதல்:

2004-2005 ஆம் ஆண்டில் 15 வயதுக்குக் குறைவாக உள்ள குழந்தைகளில் பிறவிக் குறைபாடு உள்ளவர்கள் கண்டறியப்பட்டு, அவர்களில் உதடுபிளவு மற்றும் அண்ணப் பிளவு நோய் உள்ளவர்க்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு தமிழ்நாடு உதடு பிளவு — அண்ணப் பிளவு இல்லாத மாநிலமாக்கப்பட்டது. தற்பொழுது மீண்டும் இத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 15 வயதுக்குக் கீழுள்ள பார்வைக்குப் புலப்படும் பிறவிக் கோளாறு குறைபாடுகள் உள்ள குழந்தைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, அறுவை சிகிச்சை தேவைப்படும், குழந்தைகளுக்கு இலவசமாக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செய்யப்படும். மேற்கண்ட குறைபாடுகளுடன் கண்டறியப்படும் குழந்தைகள் பற்றிய பதிவேடு ஒன்று பராமரிக்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

## அத்தியாயம்–11

## தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

### 11.1. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் – ஓர் அறிமுகம்:

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின்கீழ் இயங்கும் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயைத் தடுப்பது மற்றும் கட்டுப்படுத்துவது போன்ற பணிகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டது. கடந்த 2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்று 1.13 விழுக்காடாக இருந்தது. திட்டம் சிறப்பாக செயல்படுத்தியதன் காரணமாக 2007 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட நோய் கண்காணிப்பு அறிக்கையின்படி, தொற்று 0.25 விழுக்காடாக குறைந்துள்ளது. நடப்பாண்டில் எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்றினை மேலும் குறைத்திட மாநில அரசு ஒத்துழைப்புடன் அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள்மூலம் பல திட்டங்களை செயல்படுத்த தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்திற்கு ரூ.8,532.89 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டுக்குள், தமிழகத்தை "எய்ட்ஸ் இல்லா" மற்றும் "புதிய எச்.ஐ.வி. தொற்றில்லா மாநிலமாக" உருவாக்குவதே தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் உடனடி குறிக்கோளாகும்.

[2011 செப்டம்பர் 12

**11.2. மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு பிரிவு:**

தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனம் தனது சேவையை மாவட்ட அளவில் தீவிரப்படுத்த மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு பிரிவை நிறுவியுள்ளது. இது தமிழ்நாட்டில் எச்.ஐ.வி.-யின் தாக்கம் அதிகம் உள்ள 27 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில், திருப்பூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் புதியதாக மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு பிரிவை ஏற்படுத்த ரூ.348.78 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**11.3. எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான அறக்கட்டளை:**

எய்ட்ஸ் நோயினால் பெற்றோரை இழந்த குழந்தைகள் எவ்வித ஆதரவுமின்றி அல்லலுறும் நிலையைப் போக்கிட அரசு சார்ந்த அறக்கட்டளை ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நோயினால் தந்தை அல்லது தாய் அல்லது பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு அவர்களின் பராமரிப்பு, படிப்பு மற்றும் மருத்துவ உதவித் தொகை இந்த அறக்கட்டளை மூலம், வழங்கப்படுகிறது. இந்த அறக்கட்டளைக்கு ரூபாய் 5.00 கோடி நிதி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த 5.00 கோடி ஒதுக்கீட்டில் ரூ.4.50 கோடி தமிழ்நாடு பவர் பைனான்ஸ் நிதி நிறுவனத்தில் வைப்புத் தொகையாக முதலீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.50.00 இலட்சத்தில் ரூ.44.50 இலட்சம் பாதிக்கப்பட்ட 1549 குழந்தைகளுக்கு படிப்பு மற்றும் உணவுக்கு உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து பெறப்படும் வட்டியிலிருந்து பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு 2010-11 ஆம் ஆண்டில் ரூ.45.90 இலட்சம் அவர்களது கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**11.4.தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் திட்டங்களை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்:**

1. தொற்றை தடுக்கும் திட்டங்கள்
2. சிகிச்சை சேவைகள்
3. பராமரிப்பு மற்றும் ஆதரவுச் சேவைகள்
4. நோய் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பயிற்சி நடவடிக்கைகள்



2011 செப்டம்பர் 12]

**11.5. எளிதில் நோய் தொற்றக்கூடிய மக்களுக்கான இலக்கு:**

இத்திட்டம் எளிதில் நோய் தொற்றக்கூடிய மக்களிடையே பால்வினை நோய் மற்றும் எச்.ஐ.வி. தொற்று நோய் பரவாமல் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்தொண்டு நிறுவனங்களை மையக் குழு (பெண் பாலியல் தொழிலாளர்கள், ஓரினச் சேர்க்கையாளர்கள், ஊசிமூலம் போதை மருந்து பயன்படுத்துபவர்களுக்கான பணி) மற்றும் இணைப்புக் குழு (ஓட்டுநர்கள் மற்றும் இடம்பெயரும் தொழிலாளர்களுக்கான பணி) என வகைப்படுத்தப்பட்டிருக்கிறது.

**11.6. ஆணுறை பயன்பாடு:**

**11.6.1.** பொது மக்கள் மற்றும் அதிக ஆபத்துள்ளானவர்களிடம் எச்.ஐ.வி. தொற்று பரவாமல் தடுக்க அதிக பயனுள்ள வழி ஆணுறையாகும். சிறந்த வழிமுறைகள்மூலம் ஒவ்வொரு குழுவினரையும் சென்றடைய பல்வேறு வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

- மக்கள் நல பராமரிப்பு நிறுவனங்கள், பால்வினை நோய் பிரிவுகள், வெளி முகாம்கள், ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்தல் மற்றும் பரிசோதனை மையங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள்மூலம் இலவச ஆணுறை விநியோகித்தல்.

- ஆணுறை தயாரிப்பாளர்கள் மற்றும் சமூக விற்பனை நிறுவனங்களின் உதவியுடன் மானிய விலையில் ஆணுறைகளை விற்பனை செய்தல்.

- ஆணுறை பயன்பாட்டை மக்களிடையே கொண்டு செல்லவும், பாதுகாப்பான உடலுறவு பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்கான நடத்தை மாற்ற தொடர்புகள்.

[2011 செப்டம்பர் 12

- பாலியல் தொழிலாளர்களுக்கு பெண்ணுறை வழங்குவதை மேம்படுத்துவதன்மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், மானிய விலையில் பெண்ணுறை விநியோகத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஒத்த கல்வியாளர்களை ஈடுபடச் செய்து அதன்மூலம் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், தேவையில்லா கர்ப்பம் மற்றும் தொற்றைத் தடுப்பதற்கான தடுப்புத் திட்டங்களை மேற்கொள்ளவும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**11.6.2. இலவச ஆணுறை விநியோகம்:**

ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்தல் மற்றும் பரிசோதனை மையங்கள், கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள், பால்வினை நோய் பிரிவுகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் 2010-11 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 4.43 கோடி ஆணுறைகள் இலவசமாக விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

**11.6.3. ஆணுறை தானியங்கி இயந்திரம் (CVM):**

சென்னையில் மட்டும் 1000 ஆணுறைகள் பொருத்தப்பட்டு 5.54 இலட்சம் இயந்திரங்கள் விற்கப்பட்டுள்ளன.

**11.6.4. பெண்ணுறை விநியோகம்:**

பாலியல் தொழிலாளர்களிடையே பெண்ணுறை உபயோகத்தை ஊக்குவிக்கும் செயல்களில் ஈடுபட்டுள்ள 33 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு 1,94,130 பெண்ணுறைகள் கொள்முதல் செய்யப்பட்டு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன.

**11.7. இணைப்புப் பணியாளர் திட்டம் (LWS):**

தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு ஒப்புதல் வழங்கிய இணைப்புப் பணியாளர்களுக்கு விழிப்புணர்வு வழங்கும் திட்டம் 2008-2009 ஆம் ஆண்டு முதல் நோய் தாக்கம் அதிகம் உள்ள நான்கு மாவட்டங்களில் எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு (APAC) என்ற தன்னார்வ அமைப்புடன் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் மேலும் 17 மாவட்டங்களுக்கு பின்னர் விரிவுபடுத்தப்பட்டது. நடப்பு ஆண்டில் ரூ.5.67 கோடி இத்திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.



2011 செப்டம்பர் 12]

**11.8. கிராமப்புற மகளிர் எச்.ஐ.வி. / எய்ட்ஸை எதிர்கொள்வதற்கான சுய உரிமை:**

இந்தியாவில், முடிவெடுப்பதில் மகளிருக்கு அதிக முக்கியத்துவம் இல்லாததாலும், பாலியல் மற்றும் பாலுணர்வு சம்பந்தமான நிகழ்வுகளை பற்றி விவாதிப்பதில் குறைந்த அளவு வாய்ப்பு உள்ளதாலும், எச்.ஐ.வி. தொற்றை பெற அதிக அளவு வாய்ப்புள்ளது. UNAIDS மதிப்பீட்டின்படி 50 சதவிகித புதிய தொற்றுகள் பெண்களிடம் ஏற்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையில், பெண்களுக்கு பாலியல் உடல்நலம், அவர்களுக்கு முடிவெடுப்பதற்கான உரிமை மற்றும் அவர்களின் வாழ்க்கைத் துணையுடன் ஆணுறை பயன்பாடு பற்றி பேசுவது அவசியமாகிறது. தமிழ்நாட்டில் மகளிர் நல மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக 16 மாவட்டங்களில் உள்ள 1,02,500 மகளிர் சுய உதவிக் குழுக்களின் 16 இலட்சம் மகளிருக்கு எச்.ஐ.வி./எய்ட்ஸ் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு பயிற்சி தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் மூலமாக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து அளிக்கப்பட்டுள்ளது.

**11.8.1. இத்திட்டத்தின் நோக்கங்கள்:**

- எளிதாக ஆட்கொள்ளக்கூடிய எச்.ஐ.வி./எய்ட்ஸ் பற்றிய விஷயங்களில், பெண்களின் தாக்கத்தைக் குறைப்பது.
- பாலியல் மற்றும் இனப்பெருக்க நல உரிமை பற்றிய முடிவு எடுப்பதில் பெண்களுக்கான சுய அதிகாரம்
- பால்வினை நோய் தொற்று மற்றும் எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்று தொடர்பான அறிவை மேம்படுத்துதல்
- பரிசோதனை மற்றும் சிகிச்சை சேவைகள் அளித்தல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- பெண்களிடையே எச்.ஐ.வி.-யுடன் வாழ்பவர்களிடம் காட்டும் மனப்பான்மையை மாற்றுதல்

**11.9. தமிழ்நாட்டில் காவல் துறையினருக்கான ஆதரவு கோரும் திட்டங்கள்:**

எச்.ஐ.வி./எய்ட்ஸ் தடுப்பு செயல் திட்டத்தில், அதனுடன் இணைந்து பணியாற்றுபவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவது ஒரு முக்கியமான கூறாகும். அதிக ஆபத்தை விளைவிக்கும்

[2011 செப்டம்பர் 12

நடத்தையுடைய குழுவினரின் பிரச்சினைகளைக் கையாள்வதில் காவல் துறை ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. பாலியல் தொழிலாளர்கள், ஓரினச் சேர்க்கையாளர்கள், ஊசி மூலம் போதை மருந்து பயன்படுத்துவோர் மற்றும் அரவாணிகளிடத்தில் காவல் துறையினரின் அணுகுமுறை போன்ற பல சவால்களை திட்ட மேலாளர்கள் சந்திக்க வேண்டியுள்ளது. ஆகையால், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தால் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து காவல் துறையினருக்கும் எச்.ஐ.வி./எய்ட்ஸ் பற்றி ஒரு நாள் விழிப்புணர்வு பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. கடந்த 3 வருடங்களாக (2008-2011) காவல் துறையில் 129 உயர் அதிகாரிகள், 5372 ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள், 12714 தலைமைக் காவலர்கள், 11000 பயிற்சிக் காவலர்கள் மற்றும் 30464 காவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்கு ரூ.120.74 இலட்சம் இந்த முக்கிய நடவடிக்கைக்காக வழங்கப்பட்டுள்ளது.

**11.10. தகவல், கல்வி மற்றும் தொடர்பு:**

***11.10.1.*** தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் விழிப்புணர்வை பரப்புவதற்காக வடிவமைக்கப்பட்ட தொடர்பு யுத்திகள் சிறப்பாக பொதுமக்களிடையே சென்றடைவதில் பெரிய வெற்றியை கண்டுள்ளன. இதன் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட இலக்கு அடையப்பட்டுள்ளது. மேலும், தற்சமயம் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் அதனுடைய தொடர்பு யுத்திகளை, மக்களின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் செயல்படுத்த திட்டமிட்டு வருகிறது.

***11.10.2.*** சமூக பார்வையில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக தகவல், கல்வி மற்றும் தொடர்பு செயல்பாடுகள், தனிநபர் தொடர்பினை உறுதிப்படுத்தும் வகையில் அதிகரிக்கப்பட்டு, வலுப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கையினால் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் சேவைகளின் தேவை அதிகரித்துள்ளது. அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு தற்போது எச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றிய சுகாதார சேவைகள் சென்றடைகின்றன. இச்சங்கம், சமுதாயத்தில் எச்.ஐ.வி./எய்ட்ஸ் பற்றி நிலவி வரும் தவறான கருத்துகள் மற்றும் எண்ணங்களை கணிசமான அளவில் குறைப்பதில் பெருமளவில் வெற்றி பெற்றுள்ளது. தகவல், கல்வி



2011 செப்டம்பர் 12]

மற்றும் தொடர்பு செயல் திட்டங்களால் எச்.ஐ.வி./எய்ட்ஸினால் ஏற்படும் ஒதுக்குதல் மற்றும் புறக்கணித்தல் அதிகப்படியாக குறைக்கப்பட்டு எச்.ஐ.வி./எய்ட்ஸுடன் வாழும் மக்களுக்கு மனித உரிமை முழுவதும் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

***11.10.3.*** தமிழ்நாட்டில் 90 சதவிகிதத்திற்கும் அதிகமானவர்களுக்கு எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. ஆயினும், எச்.ஐ.வி. நோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமூக பாதுகாப்பு மற்றும் அரசின் உதவிகள்/சலுகைகள்/திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு தேவைப்படுகிறது. பொது மக்களிடம் எச்.ஐ.வி.-யால் பாதிக்கப்பட்ட மக்களை சமூகத்தில் அங்கீகரிக்கக்கூடிய மனப்பக்குவத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**11.11.1. எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளோருக்கான விழிப்புணர்வு திட்டங்கள்:**

எச்.ஐ.வி./எய்ட்ஸ் பாதிப்பு ஏற்பட அதிக வாய்ப்புள்ளவர்கள் வளரிளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்கள் ஆவர். இந்தியாவில் 15-லிருந்து 29 வயதிற்குட்பட்டவர்களில் ஏறத்தாழ 31 விழுக்காட்டினர் எச்.ஐ.வி.யின் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.

**11.11.2. வளரிளம் பருவத்தினருக்கான பள்ளிக் கல்வித் திட்டம்:**

பள்ளிக் குழந்தைகளிடையே எச்.ஐ.வி./எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 10,000 மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் விழிப்புணர்வு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் சுமார் 15 இலட்சம் மாணவர்கள் விழிப்புணர்வு பெற்றுள்ளனர். முதன்மை பயிற்சியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் உயர் கல்வியாளர்களின் பயிற்சிக்காக ரூ.100 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**11.12. கல்லூரிகளில் செஞ்சுருள் சங்கம்:**

**11.12.1.** கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரி கல்வியில் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் எச்.ஐ.வி./எய்ட்ஸ் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 2,337 செஞ்சுருள் சங்கங்கள் (RRC)

[2011 செப்டம்பர் 12

அமைக்கப்பட்டுள்ளன. ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் செஞ்சுருள் சங்கங்களில் தன்னார்வ இரத்தக் கொடையாளர்களாக பதிவு செய்துள்ளனர். இதைச் செயல்படுத்த ரூ.110.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**11.12.2. நோக்கங்கள்:**

- நடத்தை மாற்றத் தகவல் தொடர்பு மூலமாக இளைஞர்களிடையே எச்ஐவி. தொற்றைக் குறைப்பதற்கான அபாயம் குறித்த புலனுணர்வை அதிகரித்தல்.
- இளைஞர்களை எளிதில் கவரக்கூடிய தகவல், தொடர்பு அணுகுமுறைகளை அறிமுகப்படுத்துதல்.
- இளைஞர்களை, சக மாணவர்களுக்கு அறிவுறுத்துபவர்களாகவும், ஒத்த கல்வியாளர்களாகவும், மாற்றத்தை ஏற்படுத்தும் முகவராகவும் உருவாக்குதல்.

**11.12.3. செயல் யுத்திகள்:**

செஞ்சுருள் சங்கம் பின்வரும் செயல் யுத்திகளை நடைமுறைப்படுத்துகிறது:

- "வாழ்வை கொண்டாடுவோம்" என்ற புத்தகம் பற்றி 10 மணிநேர வகுப்பு
- விழிப்புணர்வு முகாம்கள்
- தொற்றுக்குள்ளானவர்கள், ஆலோசனை வழங்குபவர்கள், அரவாணிகள் மற்றும் ஊசிமூலம் போதை மருந்து பயன்படுத்துவோருடன் கலந்துரையாடல்.

இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதால், இதனை பல்கலைக்கழக அளவில் பாடத் திட்டத்தில் சேர்க்க முடிவு செய்து, பாரதிதாசன் மற்றும் காமராஜர் பல்கலைக்கழகங்களில் பாடத் திட்டமாக தற்பொழுது சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், வருங்காலங்களில் தமிழகத்தில் உள்ள பிற பல்கலைக்கழகங்களிலும் இத்திட்டம் பாடத் திட்டத்தில் சேர்க்கப்படும்.



2011 செப்டம்பர் 12]

**11.13. நடமாடும் தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு ஊர்திகள்:**

வெவ்வேறு திட்ட இலக்கு குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மக்களுக்கு சிறந்த அணுகுமுறை கிடைக்கச் செய்வதை உறுதி செய்வதற்காகவும், மலைவாழ் மற்றும் குக்கிராமங்களில் வாழும் மக்களிடம் விழிப்புணர்வு தகவல்களை கொண்டு செல்வதற்காகவும், நடமாடும் தகவல், கல்வி, தொடர்பு ஊர்திகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வூர்தியில் ஒளி—ஒலி வசதிகள், தகவல், கல்வி மற்றும் தொடர்பு அட்டைகள், சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள் மற்றும் ஆணுறை விற்பனை இயந்திரங்கள் ஆகியவை உள்ளன. இது மக்களைக் கவர்ந்து, மேற்சொன்ன இந்த புதுமையான பொருட்கள் மற்றும் கலந்துரையாடல்மூலம் தகவல்களை அளிக்கும். இந்தத் தகவல், கல்வி, தொடர்பு ஊர்திகள் முன்மாதிரி திட்டமாக மதுரை மாவட்டத்தில் ஒன்றும், சென்னை மாவட்டத்தில் ஒன்றும் ஓராண்டு காலத்திற்கு இயக்கப்படுகிறது. இந்த ஊர்திகளை முனைப்புடன் இயக்கிட மாவட்ட செஞ்சிலுவை சங்கம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. செஞ்சிலுவை சங்கம் இந்த ஊர்திகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களின் வழிகாட்டுதலின்படி இயக்குகிறது.

**11.14. ஆலோசனை மற்றும் பரிசோதனை ஊர்திகள்:**

***11.14.1.*** தமிழ்நாட்டில், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், 786 ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்களை நடத்தி வருகிறது. மலைவாழ் மக்கள் மற்றும் நெடுந்தொலைவிலுள்ள மக்களுக்கு வழங்கவும், பரிசோதனை செய்யவும் 16 நடமாடும் ஊர்திகள் செயல்படுகின்றன.

***11.14.2.*** ஒவ்வொரு ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மைய ஊர்தியிலும், தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் டிவிடி, சென்ட்ரிப்யூஜ், ஊசி அழிப்பான், குளிர்சாதனப்பெட்டி, வண்ண குப்பைத் தொட்டிகள், மின் ஆக்கி சாதனம் ஆகியவை உள்ளன. ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மைய நடமாடும் ஊர்தி ஒவ்வொன்றிலும் ஆலோசனை மற்றும் பரிசோதனை சேவைகளை சிறந்த முறையில் அளிப்பதற்காக ஒரு ஆலோசகர், ஒரு ஆய்வக நுட்புணர் ஆகியோர் உள்ளனர். இந்த ஊர்திகள் அந்தந்த மாவட்டத்திலுள்ள

[2011 செப்டம்பர் 12

செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாடு அலகு வாயிலாக மாவட்ட ஆட்சித் தலைவர்களின் வழிகாட்டுதலின்படி இயக்கப்படுகின்றன. எச்.ஐ.வி. தொற்று கண்டறியப்படும் நபர்களை அருகிலுள்ள அரசு மருத்துவமனைகளுக்கு அனுப்பி, தொடர் சிகிச்சை செய்திட, செஞ்சிலுவை சங்கம் மாவட்ட திட்ட நிர்வாகிகளுடன் இணைந்து செயல்படுகிறது.

**11.15. ஆற்றுப்படுத்துதல், சிகிச்சை மற்றும் பராமரிப்பு:**

ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்களில் ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை சேவைகள், பாதுகாப்பான இரத்தம் கிடைத்தல் மற்றும் சேமிப்பை உறுதி செய்தல், பால்வினை நோய் தொற்று மற்றும் பிறப்புறுப்பு வழித் தொற்றுக்கான மருத்துவச் சிகிச்சை ஆகியவை கிடைக்கின்றன. பெற்றோரிடமிருந்து குழந்தைகளுக்கு நோய்த் தொற்று பரவுவதை தடுக்கும் வகையில், நாட்டிலுள்ள கருவுற்ற தாய்மார்களுக்கு தாய்—சேய் மேவா திட்டம் விரிவாக கிடைப்பதற்காக, இத்திட்டத்தை அதன் தொடர்பான சேவைகளுடன் இணைத்து தற்போதுள்ள மருத்துவ வசதிகளுடன் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து தொடர்புடைய சேவைகளை முழுமையாக ஒருங்கிணைப்பதால் ஒற்றைச் சாளர முறையில் அனைத்து வசதிகளை பெறுதல் அதிகரித்துள்ளது. ரூ.1735.62 இலட்சம் இத்திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

**11.16. தாயையும், சேயையும் பாதுகாத்தல் பெற்றோரிடமிருந்து குழந்தைக்கு தொற்று பரவுதலைத் தடுத்தல்:**

தாயிடமிருந்து குழந்தைக்கு தொற்று பரவுதல் வாயிலாக எச்.ஐ.வி. தொற்று பெருமளவில் பரவுகிறது. ஒட்டுமொத்த நோயின் தொற்று நிலையை கண்டறிவதற்கு கருவுற்ற தாய்மார்களிடையே காணப்படும் தொற்று நிலை விகிதத்தை நம்பத்தகுந்த குறியீடாக எடுத்துக்கொள்ளப்படுகிறது என்ற உண்மை வாயிலாக, இதன் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தப்பட்டது. ஜி.எஃப்.ஏ.டி.எம். சுற்று-II-ன்கீழ், தமிழ்நாட்டில் தாய்-சேய் மேவா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நோக்கமானது குழந்தை பெறும் வயதுள்ள பெண்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்கு ஆரம்பக் கட்டத் தடுப்பு, குடும்ப நலம், தன்னார்வ ஆலோசனை மற்றும் இரகசிய பரிசோதனை,



2011 செப்டம்பர் 12]

எச்.ஐ.வி-க்கான கூட்டு மருத்துவச் சிகிச்சை, தாய்ப்பாலுக்கான ஆலோசனை போன்ற வசதிகளை ஒட்டுமொத்தமாக அளித்து அவர்களுக்கு தடுப்பு மற்றும் பராமரிப்புத் திட்டத்தை அளித்தலாகும். இத்திட்டத்தை தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் அரசு சாரா அமைப்புகள் மற்றும் சமூகம் சார்ந்த நிறுவனங்களின் கூட்டாண்மையுடன் செயல்படுத்தி வருகிறது.

**11.17. நெவரப்பினுடன் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல்:**

தாய்-சேய் மேவா திட்டத்தின் செயல்முறையில் முக்கியமானது கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பிரசவத்திற்கு முன்பும், பிரசவத்திற்கு பின்பு செய்க்கும், நெவரப்பின் மருந்து அளித்தலாகும். இத்திட்டத்தின்கீழ் தேவையான அளவு மருந்துகள் வழங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது. மாநிலத்தில் ஒட்டுமொத்த செயலாக்கம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. பொதுவாக 18 மாதங்களுக்கு பிறகு மேற்கொள்ளப்படும் எச்.ஐ.வி. பரிசோதனைகளே 100 சதவீதம் துல்லியமானவை. இருப்பினும் பச்சிளம் குழந்தைகளை (6 வாரம் முதல் 18 மாதம் வரை) பாதுகாப்பதற்காக முன்கூட்டியே குழந்தை பரிசோதனை (Early Infant Diagnosis) திட்டம் தமிழ்நாட்டில் 122 மையங்களில் செயல்படுத்தப்படுகிறது. இதனால், எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்ட பெற்றோருக்கு பிறக்கும் பச்சிளம் குழந்தைகளுக்கு தொற்று ஏற்படுவது குறைக்கப்பட்டுள்ளது.

**11.18. இரத்தப் பாதுகாப்பு:**

*11.18.1.* நோயாளிகளின் தேவைகளை நிறைவு செய்ய பாதுகாப்பான போதுமான பயனுள்ள இரத்தம் மற்றும் இரத்தம் தொடர்பான பொருட்களை வழங்க இரத்தம் ஏற்றும் பணி, வகைசெய்ய வேண்டும். இரத்தப் பாதுகாப்பிற்காக ரூ.749.31 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இது நோயாளிகளின் நலத்தை பாதுகாப்பதற்கு இன்றியமையாததாகும். சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை குழந்தைகள் நல மருத்துவமனை, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, கோவை மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி

[2011 செப்டம்பர் 12

மற்றும் மதுரை மருத்துவக் கல்லூரி ஆகிய இடங்களில் 8 இரத்தக் கூறுகளை பிரிக்கும் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த ஆண்டு மேலும் 7 மருத்துவமனைகளின் இரத்த வங்கிகள் இரத்த பகுப்பாய்வு மையங்களாக நிலையுயர்த்தப்படும் (தேனி, தூத்துக்குடி, வேலூர், கன்னியாகுமரி, செங்கல்பட்டு, சேலம் மற்றும் திருச்சி).

*11.18.2.* தன்னார்வ இரத்த தானத்தில் இந்தியாவில் முன்மாதிரி மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு எப்பொழுதும் திகழ்கிறது. 2010-2011 ஆம் ஆண்டில் தன்னார்வ இரத்த தானம்மூலம் 6,43,593 அலகு இரத்தமும், ஏப்ரல் 2011 முதல் ஜுன் 2011 வரை 15,884 அலகு இரத்தமும் பெறப்பட்டுள்ளது. இத்தகைய முயற்சிகளின் காரணமாக தன்னார்வ இரத்த தானம் 2002 ஆம் ஆண்டு 57 விழுக்காடாக இருந்து 2010-இல் 94 விழுக்காடாக உயர்ந்துள்ளது. இரத்த தொடர்புடைய பொருட்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. நம் மாநிலத்தில் நன்கு அமைக்கப்பட்ட கட்டமைப்புடன்கூடிய இரத்த வங்கிகள் மற்றும் இரத்த சேமிப்பு நிலையங்கள், இரத்தம் மற்றும் இரத்தத் தொடர்புடைய பொருட்கள் வழங்கல் மற்றும் விநியோகத்தை உறுதிப்படுத்துகிறது.

கீழ்க்கண்ட அட்டவணையில் அரசு மற்றும் தனியார் இரத்த வங்கிகள் மற்றும் இரத்த சேமிப்பு நிலையங்கள் பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | இரத்த வங்கி, இரத்த சேகரிப்பு மையம் பற்றிய விவரங்கள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உரிமம் பெற்ற அரசு இரத்த வங்கிகள் | 85 |
| 2. | உரிமம் பெற்ற தனியார் இரத்த வங்கிகள் | 174 |
| 3. | மத்திய அரசுச் சார்பின் கீழ் உள்ள இரத்த வங்கிகள் | 10 |
| 4. | அரசு பகுப்பாய்வு மையங்கள் | 08 |
| 5. | தனியார் பகுப்பாய்வு மையங்கள் | 65 |
| 6. | மத்திய அரசு பகுப்பாய்வு மையம் | 1 |
| 7. | டாக்டர். எம்.ஜி.ஆர். பல்கலைக்கழக பகுப்பாய்வு மையம் | 1 |
| 8. | இரத்ததான முகாம்கள் நடத்துவதற்கு என அனுமதிக்கப்பட்ட தனியார் இரத்த வங்கிகள் | 71 |
| 9. | அரசு இரத்த சேமிப்பு மையங்கள் | 149 |
| 10. | தனியார் இரத்த சேமிப்பு மையங்கள் | 44 |



2011 செப்டம்பர் 12]

**11.19. ஆய்வக பரிசோதனை தர உறுதி திட்டம்:**

ஒவ்வொரு மருத்துவமனையிலும் தர ஆய்வக பரிசோதனை என்பது முக்கியமானது. ஆகவே, ஆய்வக பரிசோதனை தரத்தை மேம்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகிறது. தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனம் இரத்தம் மற்றும் சளி பரிசோதனைகளின் தரத்தை மேம்படுத்த போதிய நிதியுதவியும், பயிற்சியும் அளிக்கிறது. பரிசோதனைகளின் தரத்தை உறுதிப்படுத்த மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், கன்னியாகுமரி, ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை, அரசு நெஞ்சக மருத்துவமனை, தாம்பரம், தேனி, தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர், செங்கல்பட்டு மற்றும் தூத்துக்குடி ஆகிய 12 அரசு மருத்துவக் கல்லூரி பரிந்துரை ஆய்வுக் கூடங்களுக்கு ஆய்வகங்களுக்கான தேசிய தர நிர்ணய வாரியத்தின் (National Accreditation Board for Laboratory) தரச் சான்று பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

**11.20. பால்வினை நோய் சிகிச்சை சேவைகள்:**

பால்வினை தொற்று உள்ளவர்களுக்கு எச்.ஐ.வி. தொற்றும் வாய்ப்பு மூன்று மடங்கு அதிகம் உள்ளது. பால்வினை தொற்றினை குணப்படுத்துவதன்மூலம் எச்.ஐ.வி. தாக்கத்தினை குறைக்க முடியும். பால்வினை நோய் தொற்றுள்ளோரும் அவர்களின் துணைவர்களும் முழுமையாக கூட்டு சிகிச்சை முறை பெறுவதன்மூலம் பால்வினை தொற்றினை முழுமையாக குணப்படுத்த இயலும். இதற்காக பால்வினை நோய் அறிகுறிகள் சார்ந்த கூட்டு சிகிச்சை முறை (Syndromic Care Management) நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. இந்த சிகிச்சை முறை 156 அரசு மற்றும் குறிப்பிட்ட தனியார் மருத்துவமனைகளில் செயல்படுத்தப்படுகிறது. அனைத்து பால்வினை நோய் பிரிவு மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும், ஆய்வக

[2011 செப்டம்பர் 12

நுட்புணர்களுக்கும், ஆலோசகர்களுக்கும் பால்வினைத் தொற்று உள்ளவர்களுக்கு கூட்டு சிகிச்சை முறைமூலம் குணப்படுத்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பால்வினை நோய், சமுதாய மருத்துவம், நுண்ணுயிரியல் மற்றும் மகப்பேறு மருத்துவம் ஆகிய சிறப்பு மருத்துவர்களால் கூட்டு சிகிச்சை முறை மருத்துவம் (SCM) கண்காணிக்கப்படுகிறது. இதற்காக, 2011-2012 ஆம் ஆண்டில் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவன செயல் திட்டப்படி 156 பால்வினை நோய் சிகிச்சை மையங்களில் 3,00,463 நபர்களுக்கு சிகிச்சையளிக்க திட்டமிட்டுள்ளது. சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அமைந்துள்ள மண்டல பால்வினை நோய் ஆய்வுக் கூடத்தில் சிப்லிஸ் நோய்க்கான சிகிச்சை வழங்கவும், ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளவும் 5 மாநில ஆலோசனை மையங்களிலுள்ள மைக்ரோபயாலஜிஸ்ட் மற்றும் ஆய்வுக்கூட நுட்புணர்களுக்கு பயிற்சி வழங்கவும் வசதிகள் உள்ளன. இம்மண்டல பால்வினை நோய் பிரிவு ஆய்வுக் கூடத்தின்கீழ், 5 மாநில ஆலோசனை மையங்கள் சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, மதுரை மருத்துவக் கல்லூரி மற்றும் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி ஆகிய இடங்களில் செயல்படுகிறது. இத்திட்டத்தை செயல்படுத்த ரூ.239.92 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 11.21. கூட்டு மருத்துவ சிகிச்சை:

*11.21.1.* எச்.ஐ.வி./எய்ட்ஸுடன் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், அவர்களது வாழ்நாளை நீட்டிக்கவும் கூட்டு மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது. சிறப்பான கூட்டு மருத்துவச் சிகிச்சை செய்வதன்மூலம் எச்.ஐ.வி. வைரஸ் பெருகுவது தடை செய்வதுடன் நோயின் பாதிப்பு நிலையை கண்டறிய முடியாத அளவிற்குக் குறைக்க முடியும். சந்தர்ப்பவாத நோய்கள் அடிக்கடி உண்டாவது குறைக்கப்படுவதால் எச்.ஐ.வி.-யை நிர்வகிக்கும் செலவு குறிப்பிடத்தக்க அளவு குறைகிறது.

### 11.21.2. இலவச கூட்டு மருத்துவ சிகிச்சைக்கான தொடக்க முயற்சி:

1-4-2004 முதல் இந்திய அரசு, இலவச கூட்டு மருத்துவச் சிகிச்சையை 6 அதிக தொற்று நிலை உள்ள மாநிலங்களில் உள்ள 8 அரசு மருத்துவமனைகளில் புதிய முயற்சியாக துவக்கியது. இலவச கூட்டு மருத்துவ சிகிச்சையை செயல்படுத்த, துவக்கப்பட்ட மையங்களில் தமிழகத்தில் சென்னை அருகிலுள்ள, தாம்பரம்



2011 செப்டம்பர் 12]

சானடோரியத்தில் உள்ள அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையும் ஒன்றாகும். 7 ஆண்டிற்குள் இந்த மையங்களின் எண்ணிக்கை 41 ஆக உயர்ந்துள்ளது. எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்பவர்களில் தேவைப்படுபவர்களுக்கு இம்மையங்கள் இலவசமாக கூட்டு மருத்துவச் சிகிச்சை அளித்து வருகிறது. பதிவு செய்யப்பட்ட எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்பவர்கள் மற்றும் அதிகரிக்கப்பட்ட கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்களின் எண்ணிக்கை இவற்றின் இடையே நேரிடையான தொடர்பு உள்ளது வெளிப்படையாக தெரிகிறது. மாநிலத்தில் ஏறத்தாழ 1.84 இலட்சம் எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்பவர்கள் உள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டதில் தற்போது 41 மையங்களில் 1,76,055 நபர்கள் பதிவு செய்துள்ளனர். இம்மையங்களில் பாதிக்கப்பட்ட 82,883 நபர்களுக்கு இலவசமாக ஏ.ஆர்.டி. சிகிச்சை செய்யப்பட்டது. 51,924 நபர்களுக்கு முதல்நிலை ஏ.ஆர்.டி. சிகிச்சையும், 613 நபர்களுக்கு இரண்டாம் நிலை ஏ.ஆர்.டி. சிகிச்சையும் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.673.45 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 11.21.3. நோக்கங்கள்:

கூட்டு மருத்துவ சிகிச்சையின் முக்கிய நோக்கம் எச்.ஐ.வி./எய்ட்ஸுடன் வாழும் தகுதி வாய்ந்த நபர்களுக்கு முழுமையான சேவைகளை அளிப்பதே ஆகும். கூட்டு மருத்துவச் சிகிச்சை மையத்தின் குறிப்பிட்ட நோக்கங்கள்:

- ஆய்வக சேவைகள்மூலம் எச்.ஐ.வி./எய்ட்ஸுடன் வாழும் கூட்டு மருத்துவச் சிகிச்சை தேவைப்படுபவர்களில் தகுதி வாய்ந்த நபர்களை கண்டறிதல்.
- தொடர்ந்து எச்.ஐ.வி.-யுடன் வாழும், தகுதி வாய்ந்த நபர்களுக்கு இலவச கூட்டு மருத்துவச் சிகிச்சைக்கான மருந்துகளை வழங்குதல்.
- மருந்தை தொடர்ந்து பயன்படுத்துவதை உறுதி செய்ய சிகிச்சைக்கு முன்பும், சிகிச்சையின் போதும் ஆற்றுப்படுத்துதல் சேவையை அளித்தல்.
- நோயாளிகளுக்கும், அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுக்கும் ஊட்டச்சத்து தேவையையும், தொற்று பரவுதலை தடுக்கும் வழிகளையும் மற்றும் சுகாதாரத்தையும் போதித்தல்.

[2011 செப்டம்பர் 12

- தேவைப்படும் நோயாளிகளுக்கு சிறப்பான சேவைகள் அல்லது சேர்ந்து சிகிச்சை பெற மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தல்.
- ஆணுறை, தடுப்பு கல்வி உட்பட ஒட்டுமொத்த முழுமையான சேவையை வழங்குதல்.

**11.21.4. தொடர் கவனிப்பு:**

தகுதி வாய்ந்த எச்.ஐ.வி./எய்ட்ஸுடன் வாழ்பவர்களுக்கும், ஏற்கெனவே கூட்டு மருத்துவ சிகிச்சை தொடங்கப்பட்டவர்களுக்கும் சமூக நல மையங்கள்மூலம் ஆலோசனையும் உதவியும் அளிக்கப்படுகிறது. கூட்டு மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொள்பவர்கள் வாரத்திற்கு ஒருமுறை கண்காணிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு கூட்டு மருந்தினை உட்கொள்ளவில்லை எனில் அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றி களப் பணியாளர்கள்மூலம் எடுத்து சொல்லப்படுகிறது. மேலும் அவர்களுக்கு கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்களால் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை 100 சதவிகிதம் முழுமையாக உட்கொள்வதன் முக்கியத்துவம் பற்றி கூறப்படுகிறது. கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்களுக்கு மாதம் ஒரு முறையாவது செல்வது அவசியம் என ஆலோசனை வழங்கப்படுகிறது.

**11.22. சமுதாய நல மையங்கள்:**

எச்.ஐ.வி.-யுடன் வாழும் மக்களுக்கு, குடும்பத்தினர், சமூகம் மற்றும் சக எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்பவர்களின் ஆதரவு அவசியமாகவும், பயனுள்ளதாகவும் உள்ளது. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்பவர்களுக்காக சமுதாய நல மையங்கள் மற்றும் நல வாழ்வு மையங்கள் ஆகியவற்றின் மூலமாக பராமரிப்பு மற்றும் ஆதரவு வழங்க தன்னார்வத் தொண்டு அமைப்புகள் மற்றும் எச்.ஐ.வி. உள்ளோர் கூட்டமைப்புகளுக்கு உதவி செய்கிறது. தமிழ்நாட்டில் தற்சமயம் வயது வந்தவர்களுக்காக 35 சமுதாய நல மையங்களும், குழந்தைகளுக்கென 7 சமுதாய நல மையங்களும், செயல்படுகின்றன. எச்.ஐ.வி. நோயாளிகளுக்கு ஏற்படும் சந்தர்ப்பவாத நோய்களுக்கு இந்த மையங்களில் சுமார் 5 நாட்கள்



2011 செப்டம்பர் 12]

முதல் அதிகபட்சமாக 15 நாட்கள் வரை சிகிச்சை அளிக்கப்படுகிறது. அதன்பின், வீட்டிற்கு அனுப்பப்பட்டு அவர்களுக்கு தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. மருத்துவ கவனிப்பு மேலும் தேவைப்படுவோர் மருத்துவமனைகளுக்கு மேல் சிகிச்சைக்கு அனுப்பப்படுகின்றனர். இத்திட்டத்திற்காக ரூ.629.36 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**11.23. நலவாழ்வு மையங்கள்:**

தற்பொழுது 38 நலவாழ்வு மையங்கள் எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்வோரின் நலனுக்காக செயல்பட்டு வருகின்றன. இதில் 5 மையங்கள் பெண்களுக்கான சிறப்பு மையங்களாகும். இந்த வருடம் புதியதாக ஒரு நலவாழ்வு மையம் துவங்கபட உள்ளது. இந் நல வாழ்வு மையங்களின் முக்கிய நோக்கமாவது நல்ல தரமான ஆலோசனைமூலம் எச்.ஐ.வி-யுடன் வாழ்வோரின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவது, அவர்களின் திறன்களை கண்டறிந்து திறமையை வெளிக்கொணர்வது, அரசு சலுகைகளை பெற்றுத் தருவது, மருந்துகளை சரிவர உட்கொள்ள ஆலோசனை வழங்குவது, தன்னார்வ குழுக் கூட்டங்களை நடத்தி தன்னம்பிக்கையை வளர்ப்பது மற்றும் அவசர கால நேரங்களில் உடனடி உதவி செய்வது ஆகியனவாகும். நலவாழ்வு மையங்களில் பெரும்பாலான பணியாளர்கள் எச்.ஐ.வி.-யுடன் வாழ்பவர்களாக இருப்பதால் மற்றவர்களின் தன்னம்பிக்கை வளர இது பெரிதும் உதவியாக இருக்கும். சுமார் 31,747 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். இந்நிதியாண்டில் 38 நலவாழ்வு மையங்களுக்கு ரூ.202.54 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**11.24. கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலகு:**

***11.24.1.*** ஒரு புதிய இணைய அடிப்படையிலான அமைப்பு 'உத்தியியல் மேலாண்மை தகவல் அமைப்பு (SIMS)," கணினி அறிக்கையை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது. இது மையப்படுத்தப்பட்ட தரவுமூலம் போதுமான தரம் கொண்ட கணினி கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறை திறனை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மாநில அளவில் ஒருங்கிணைந்த உயிரியல் மற்றும் நடத்தை ஆய்வு IBBA மாவட்ட அளவில் எச்.ஐ.வி. நோய் கண்காணிப்பும் (HSS) நடத்த தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு ரூபாய் 85.64 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

### 11.24.2. நோய் கண்காணிப்பு:

தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பின் மூலமாக, மத்திய அரசின் நலவாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, எச்.ஐ.வி. நோய் கண்காணிப்பு திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. இத்திட்டமானது இரத்த பரிசோதனையின்மூலம் இடம், குழு, காலம் ஆகியவற்றின் பொருட்டு, எச்.ஐ.வி. தொற்றின் போக்கை கண்காணிக்கிறது. இந்தக் கணக்கெடுப்பு, சமூகம் சார்ந்த அமைப்புகள் அல்லது மருத்துவமனை சார்ந்த அமைப்புகளால் நடத்தப்படுகிறது. இப்பரிசோதனையானது ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத, தெரியாத வகையில் நடத்தப்படுகிறது. தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பு பரிசோதனைக்கான இடங்களின் எண்ணிக்கைகளுக்கு ஒப்புதல் வழங்குகிறது. 2010 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நோய் கண்காணிப்பு நடத்த ஒப்புதல் பெறப்பட்ட 121 இடங்களில் நடத்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டில், கூடுதலாக 7 இடங்கள் சேர்க்கப்பட உள்ளன. 2011-2012 ஆம் ஆண்டில் நோய் கண்காணிப்பு பணி செய்ய ரூ.75.84 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம்—12

## தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

### 12.1. அமைப்பு:

தமிழகத்தில் மருத்துவ வசதிகளை மேம்படுத்திடும் பொருட்டு தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் இந்திய கம்பெனிகள் சட்டம், 1956-ன்கீழ் ஓர் அரசு நிறுவனமாக 1-7-1994 அன்று பதிவு செய்யப்பட்டது. பல்வேறு அரசு மருத்துவமனைகளுக்கு மருந்துகளைக் கொள்முதல் செய்து விநியோகம் செய்வது இக்கழகத்தின் முதன்மையான குறிக்கோள் ஆகும். நாளடைவில் மருத்துவக் கருவிகளுடன் மருத்துவமனைக்கான மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்கள் கொள்முதல் செய்வதில் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் முக்கிய பங்கு வகிக்கிறது. சி.டி. மற்றும் எம்.ஆர்.ஐ. கருவிகளை பல்வேறு மருத்துவமனைகளில் நிறுவி கட்டண முறையில் பராமரித்து மருத்துவ வசதி வழங்கி வருகிறது. தற்போது இது ஒரு உலகத் தரச் சான்று 9001:2008 பெற்ற நிறுவனமாக வளர்ந்துள்ளது.





### 12.2. கொள்முதல், சேமிப்பு மற்றும் விநியோகம்:

*12.2.1.* தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், நம் மாநிலத்திலுள்ள அரசு மருத்துவமனைகளுக்கான அத்தியாவசிய மருந்துகள், புதிய வகை சிறப்பின மருந்துகள் மற்றும் அறுவை தையல் பொருட்கள் ஆகியவற்றை சிறந்த நிறுவனங்களிடமிருந்து திறந்த வெளி ஒப்பந்தம்மூலம் கொள்முதல் செய்கிறது. இதுபோலவே, இக்கழகம் மருந்துகள் மற்றும் இரசாயனப் பொருட்கள் ஆகியவற்றை கால்நடைத் துறைக்காகவும் கொள்முதல் செய்கிறது. அறிவியல் ரீதியாக மருந்துகளை மருந்துக் கிடங்குகளில் சேமித்து வைப்பதற்கு மாவட்ட அளவில் மருந்து கிடங்குகளுடன் தொடர்பு கொண்டுள்ளது. மேலும் இக்கழகம், மருத்துவக் கிடங்குகளின் தேவைக்கேற்பவும், மருந்துகளின் தேவைப் பட்டியலுக்கேற்பவும் கொள்முதல் ஆணைகளை வழங்கி கணினிமூலம் விநியோகத்தை கண்காணித்து வருகிறது. ஒவ்வொரு அரசு மருத்துவ நிலையத்திற்கும் அதன் துறையால் நிதி ஒதுக்கப்பட்டு வரவு-செலவு புத்தகம்மூலம் அதனுடன் இணைக்கப்பட்ட மருந்து கிடங்கிலிருந்து மருந்துகள், அறுவை சிகிச்சை கருவிகள் மற்றும் தையல் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அரசு மருத்துவமனைகளுக்குத் தடையில்லாமல் மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, இக்கழகம் ஒவ்வொரு மருந்துக் கிடங்கிலும் 4 மாதங்களுக்குத் தேவையான இருப்பையும், வழி நடையில் Pipeline இரு மாதத் தேவைக்கான கையிருப்பையும் எப்போதும் சேமித்து வைப்பதை நடைமுறைப்படுத்தி வருகிறது.

### 12.2.2. தர உத்தரவாதம்:

அரசு மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் மருந்து பொருட்களின் தரத்தை பொறுத்தமட்டில் தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம் சமரசமில்லா கொள்கையைக் கடைப்பிடிப்பதில் உறுதியாக உள்ளது. கொள்முதல் செய்யும் மருந்தின் தரத்தை உறுதி செய்ய தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் ஒரு தரக் கட்டுப்பாடு பிரிவை ஏற்படுத்தியுள்ளது. அதன் அடிப்படையில் விநியோகஸ்தர்களிடமிருந்து கொள்முதல் செய்யும் மருந்திலிருந்து ஒவ்வொரு முறையும் மாதிரி எடுத்து, இக்கழகத்தால்

[2011 செப்டம்பர் 12

அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனைக் கூடங்களுக்கு அனுப்பி பகுப்பாய்வு செய்து தரச் சான்று பெற்று அதன் பிறகே அரசு மருத்துவமனைகளுக்கு அனுப்பப்படுகின்றன. புதிய சவால்களை சந்திக்கும் வகையில் தரக் கட்டுப்பாட்டை மேம்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 12.2.3. மருந்துக் கிடங்குகள்:

ஒவ்வொரு மாவட்டத்திலும் மருந்துக் கிடங்கு நிறுவப்பட வேண்டும் என்பது இந்நிறுவனத்தின் பெரும் முயற்சி ஆகும். அதனடிப்படையில் இதுவரை 24 மாவட்டங்களில் 25 மருந்து சேமிப்புக் கிடங்குகளைக் கட்டி நிர்வகித்து வருகிறது. நடப்பாண்டில் நான்கு மருந்துக் கிடங்குகளை மொத்தம் சுமார் ரூ.6.40 கோடி மதிப்பீட்டில் பெரம்பலூர், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மீதமுள்ள நான்கு மாவட்டங்களில், அதாவது அரியலூர், கரூர், திருவள்ளூர் மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் தகுந்த இடம் தெரிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 12.3. சேவை செயல்பாடுகள்:

### 12.3.1. சி.டி. ஸ்கேன்/எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மற்றும் லித்தோட்ரிப்சி கருவிகள்:

மருத்துவமனைகளுக்கு வரும் ஏழை மக்களுக்கு சி.டி./ எம்.ஆர்.ஐ. ஸ்கேன் சேவைகளை இந்நிறுவனம் வழங்கி வருகிறது. தற்போது தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் அரசு மருத்துவ மனைகளில் ஒரு 128 கூறு சி.டி. ஸ்கேன் மற்றும் இரண்டு 64 கூறு சி.டி. ஸ்கேன்கள் உட்பட மொத்தம் 48 சி.டி. ஸ்கேன்களை 41 மையங்களில் நிறுவி பராமரித்து வருகிறது. இக்கழகம் 10 எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகளை நிறுவி அதன்மூலம் பொதுமக்களுக்கு குறைந்த கட்டணத்தில் ஸ்கேன் வசதியை செய்து தருகிறது. மேலும் இந்நிறுவனம் இரண்டு சிறுநீரக கல் உடைக்கும் கருவிகளை "லித்தோட்ரிப்சி", கொள்முதல் செய்து, ஒன்றை சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையிலும், மற்றொன்றை மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையிலும் நிறுவி பராமரித்து வருகிறது.



2011 செப்டம்பர் 12]

### 12.3.2. கட்டண பிரிவுக்கு நடைமுறை ஒத்துழைப்பு:

இக்கழகம் நிதிப் பாதுகாவலனாக இருப்பதுடன் பின்வரும் மையங்களில் நிறுவப்பட்டுள்ள கட்டண பிரிவுகளுக்கு நடைமுறை ஒத்துழைப்பு வழங்கி வருகிறது.

அ) ஐ.எஸ்.ஓ.9001 தரச் சான்றிதழ் பெற்ற கல்லீரல், கணையம், பித்தநீர்ப்பை, குடல்சார்ந்த ரத்தக்கசிவுப் பிரிவு மையம் மற்றும் சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் இரைப்பை குடல் சார்ந்த அறுவை சிகிச்சைத் துறை தற்போது கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

ஆ) பிப்ரவரி 2003-ல் சென்னை, எழும்பூர் மகளிர் மற்றும் மகப்பேறு குழந்தைகள் நல மருத்துவமனையில், நிறுவப்பட்டுள்ள மகப்பேறு கட்டணப் பிரிவு.

இ) மே 2004-ல் சென்னை கஸ்தூரிபா காந்தி மகளிர் மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ள மகப்பேறு கட்டணப் பிரிவு.

ஈ) சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் 206 படுக்கை வசதிகளுடன்கூடிய கட்டணப் பிரிவு.

உ) சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் முழு உடற் பரிசோதனைத் திட்டம்.

### 12.3.3. மருத்துவக் கருவிகள் கொள்முதல் மற்றும் விநியோகம்:

அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான விலை உயர்ந்த, நவீன மருத்துவக் கருவிகளை அரசின் ஆணைகளுக்கேற்ப தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் கொள்முதல் செய்து விநியோகித்து வருகிறது. மேலும், உலக வங்கியின் உதவி பெறும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்திற்குத் தேவையான உபகரணங்களைத் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் கொள்முதல் செய்து வழங்கி வருகிறது.

[2011 செப்டம்பர் 12

**12.3.4. ஆலோசனைப் பணிகள்:**

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் மருந்தாளுமை மற்றும் மருந்துக் கிடங்குகள் பராமரிப்பு நாட்டிலேயே முன்மாதிரியாக திகழ்கிறது. பல மாநிலங்கள் இக்கழகத்தின் செயல்பாட்டை பின்பற்றி வருகின்றன. இக்கழகம் ஆந்திரப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் அரசுகளின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைகளுக்கு மருந்து மற்றும் மாத்திரைகள் கொள்முதல் செய்வதில் ஆலோசனை வழங்கி வருகிறது.

**12.4. மருந்துப் பொருட்கள் கொள்முதல் மற்றும் விநியோகம் ஆகியவற்றில் தகவல் தொழில் நுட்பத்தின் உபயோகம்:**

i) நவீன தொழில்நுட்ப உத்திகள்மூலம், மருந்துப் பொருள்களின் கொள்முதல், சேமிப்பு, மருத்துவமனைகளுக்கு விநியோகித்தல், விநியோகஸ்தர்களுக்குப் பணப்பட்டுவாடா செய்தல் ஆகிய செயல்பாடுகள் சீரிய முறையில் கையாளப்பட்டு வருகின்றன. இக்கழகத்தின் அனைத்து மருந்துக் கிடங்குகளும் கணினிவழியாக தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்பட்டு, அனைத்து செயல்பாடுகளும் கணினி நேரடி தொடர்பு (On Line) மூலம் கண்காணிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

ii) மருந்துப் பொருட்களின் கொள்முதல் மற்றும் விநியோகம் ஆகியவற்றைத் துல்லியமாகவும், விரைவாகவும் செயல்படுத்துவதற்கு “பார்கோடிங்” முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நடைமுறைத் தவறுகள் நிகழாவண்ணமும், செயல்பாடுகளை அவ்வப்போது உடனுக்குடன் பதிவு செய்யும் வகையிலும் திட்டங்களில் “பாஸ் புத்தகம்” மற்றும் “பின்கார்டு” வழங்கும் நடவடிக்கைகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

iii) இந்நிறுவனம் சார்பாக www.tnmsc.com என்ற வலைத்தளம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இது இந்நிறுவனம் பற்றித் தேவையான விவரங்கள் பெறும் வகையில் உபயோகிப்பாளர் பெயர், இரகசியக் குறியீடு விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதுடன், நிறுவனத்தைப் பற்றி சிறப்பு தகவல்கள் தரப்பட்டுள்ளன.



2011 செப்டம்பர் 12]

**12.5. முக்கிய திட்டங்கள் மற்றும் செயல் திட்டங்கள்:**

i) கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, அரசு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை சென்னை, விழுப்புரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை ஆகிய இடங்களில் மொத்தம் ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் 6 பழைய சி.டி. ஸ்கேனர்களுக்குப் பதிலாக புதிய சி.டி. ஸ்கேனர்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

ii) பெரம்பலூர், கிருஷ்ணகிரி, திருப்பூர் மற்றும் நாகபட்டினம் ஆகிய நான்கு மாவட்டங்களில் மொத்தம் சுமார் ரூ.6.40 கோடி செலவில் மருந்துக் கிடங்குகளைக் கட்டுவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

iii) நடப்பாண்டில் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் உதவியுடன் மருந்துப் பொருட்களின் கொள்முதல் விவரப்பட்டியல் மேலாண்மையை இந்நிறுவனம் மேம்படுத்தும். அப்பொழுது மருத்துவ நிறுவனங்களின் தேவைகளுக்குச் சிறப்பு கவனம் செலுத்தப்படும்.

## அத்தியாயம்–13

### தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்து துறை

***13.1.*** 1959 ஆம் ஆண்டில் யுனிசெப் உதவியுடன் செயல்பட ஆரம்பித்த தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்து நிறுவனம் 1981 வருடம் வரை பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டது. 1971 ஆம் ஆண்டில் மாநில சுகாதார போக்குவரத்து நிறுவனத்தின் தலைமை அலுவலகம் சென்னையிலும், மத்திய பணிமனை திருச்சியிலும், மண்டல பணிமனை சென்னை, சேலம், மதுரையிலும், நடமாடும் பணிமனைகளை 15 ஆக உயர்த்தவும் இந்திய அரசு ஒப்புதல் அளித்தது. 1981 ஆம் ஆண்டில் சுகாதாரத் துறையின் அனைத்து வாகனங்களையும் ஒருமுகப்படுத்தி பராமரிக்கவும் தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்து நிறுவனம், தமிழ்நாடு சுகாதார போக்குவரத்துத் துறையாக மாற்றப்பட்டு, போக்குவரத்து

[2011 செப்டம்பர் 12

பொறியாளரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது. பணிகளை மேம்படுத்தி கூடுதலாக மண்டல பணிமனை, மாவட்ட பணிமனை, நடமாடும் பணிமனை என ஆரம்பிக்கப்பட்டு தனி இயக்ககமாக செயல்பட்டது. பிறகு பழைய மாடல் பெட்ரோல் ஊர்திகள் கழிவு செய்யப்பட்டு புதிய டீசல் ஊர்திகளாக மாற்றப்பட்டன. மேலும், 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை, தமிழ்நாடு மாநில காவல் போக்குவரத்துப் பணிமனையாக மாற்றியமைத்து, தமிழ்நாடு முழுவதும் உள்ள காவல் துறை வாகனங்கள் இவ்வியக்ககத்திலும், சுகாதார துறை சம்பந்தப்பட்ட வாகனங்கள் மோட்டார் வாகன பராமரிப்புத் துறையிலும் பராமரிக்கப்பட்டன. மீண்டும் 1997-ல் தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துப் பணிமனை, தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறையாக மாற்றப்பட்டது. தற்போது மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் வெவ்வேறு இயக்ககங்களை சார்ந்த 2717 ஊர்திகளை பராமரிக்கும் பணியினை இத்துறை மேற்கொண்டுள்ளது.

**13.2. செயல்பாடுகள்:**

சென்னையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறையின்கீழ் 7 மண்டலப் பணிமனைகள், 9 மாவட்ட தலைமைப் பணிமனைகள், ஒரு மறுசீர் மற்றும் மைய பழுது நீக்கப் பிரிவு மற்றும் 29 நடமாடும் பணிமனைகள் இயங்குகின்றன. வாகனம் உபயோகிக்கும் மருத்துவ அலுவலர்களுக்கு வாகனங்கள் தடங்கலின்றி இயக்குவது தொடர்பாக எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு இத்துறை தொழில்நுட்ப தீர்வுகளை வழங்குகிறது. வாகனத்தின் பயன்பாடு, ஓடிய தூரம் மற்றும் தற்போதைய நிலையின் அடிப்படையில் கழிவு செய்யத் தகுதியான ஊர்திகளை அடையாளம் கண்டு அவற்றை கழித்தொதுக்க மருத்துவ அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. செயல்மிக்க, சிக்கனமான பராமரிப்புக்காக மூன்று அடுக்கு பராமரிப்பு பணிமுறை மேற்கொள்ளப்படுவதால், நல்ல முறையில் இயங்கும் வாகனங்களின் எண்ணிக்கை 96 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. தொழிற் பயிற்சி நிலைய சான்று, பட்டயப் படிப்பு மற்றும் பொறியியல் பட்டப் படிப்பு முடித்தவர்களுக்கு தொழில்நுட்ப பழகுநர் பயிற்சி அளிக்கப்படுகிறது.



2011 செப்டம்பர் 12]

**13.3. 2011–2012 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:**

1) தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறைக்காக ரூ.1.40 இலட்சம் செலவில் ஒரு அஞ்சல் வில்லை பதியும் இயந்திரம் வாங்குதல்.

2) தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறையின் பயன்பாட்டிற்கு ரூ.4.00 இலட்சம் செலவில் 10 கணினிகள் கொள்முதல் செய்தல்.

3) தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்து இயக்குநரக பயன்பாட்டிற்கு ரூ.1.00 இலட்சம் செலவில் ஒரு நகல் எடுக்கும் இயந்திரம் கொள்முதல் செய்தல்.